தமிழ்
வரலாற்றிலக்கணம்

டாக்டர் ஆ. வேலுப்பிள்ளை

பாரி நிலையம்
59, பிராட்வே • சென்னை-1.

தமிழ் வரலாற்றிலக்கணம்

Dr. ஆ. வேலுப்பிள்ளை B. A. (Hons.),
Ph. D. (Cey.), D. Phil. (Oxon.)

விற்பனை உரிமை :

பாரி நிலையம்
59, பிராட்வே, சென்னை-1.

முதற் பதிப்பு: டிசம்பர் 1966

விலை ரூ. 6-00

PAARI NILAYAM
59, BROADWAY,
MADRAS-1.

அச்சிட்டது:

ஸ்ரீ கலை அச்சகம்
17, நமச்சிவாய முதலி தெரு, சென்னை-5

சில குறிப்புகள்

மொழியியல் இன்று விரைவாக வளர்ந்து வருகிறது. மொழி வரலாறு மொழியியலில் ஒரு முக்கிய பகுதி.

இலக்கணம் என்று நீண்டகாலமாக வழங்கப்பட்ட துறையே, காலத்துக்கேற்பப் பல புதிய கருத்துக்களையும் புதிய கலைச்சொற்களையும் பெற்று மொழியியலாக வளர்கின்றதெனலாம்.

தமிழ் மொழியில், பல்வேறு காலங்களில் எழுந்த இலக்கண நூல்களும் இலக்கண உரைகளும் காணப்படுகின்றன. அவை யாவும் அவ்வக் காலத் தமிழ் மொழியின் நிலையை முழுவதாகத் தெரிவிப்பன என்று கொள்ள இடமில்லாத போதிலும், அவை அத்திசையில் ஓரளவு பயன் தருகின்றன என்பது இந் நூலிலிருந்து புலனாகும்.

பழைய இலக்கணங்கள் பெரும்பாலும் இலக்கியங்களையே தழுவிச் செல்கின்றன. தொல்காப்பியர் காலத்திற்கு முன்பு பேச்சு வழக்கு எப்படி இருந்ததென ஆராய, இன்று தக்க சான்றில்லை. இடைக்காலத் தமிழில், சாசனங்கள் பேச்சுவழக்கை ஓரளவு தழுவியுள்ளன. இலக்கண நூல்களையும் இலக்கண உரைகளையும் கால அடைவில் வைத்து ஆராயப்பட்ட இந் நூலில், சாசன வழக்குகள் எடுத்தாளப் படுவது அதனாற்றான்.

இன்றைய தமிழின் இலக்கணம் என்று சுட்டக்கூடிய நூல் எதுவும் இன்று இல்லை. ஆயினும், மேனாட்டில் வளர்ந்து வரும் மொழியியலின் பாதிப்பினால், தமிழிலும் நூல்கள் சில எழுந்துள்ளன. இவற்றின் உதவியுடன், பழைய தமிழிலக்கணம் புதிய மொழியியற் பார்வையிற் பெறும் மாற்றங்கள் சுட்டப்பட்டுள்ளன.

டாக்டர் P. S. சுப்பிரமணிய சாஸ்திரி அவர்கள் ஆங்கிலத்தில் வெளியிட்ட 'History of Grammatical Theories in Tamil' என்ற நூல், இந்த நூலாக்கத்திற்குப் பெரிதும் பயன் பட்டது. பேராசிரியர் வரதராசன் எழுதிய 'மொழிநூல்', சீனிவாசன் வெளியிட்ட 'மொழியியல்' என்பவற்றுக்கும், இந் நூலாக்கத்தில், நான் கடமைப்பட்டுள்ளேன். ஆனல் இவர்களில் எவரின் கருத்துக்களேயும், இந்நூல் முற்றுகத் தழுவிச்செல்லவில்லே. இவர்களுடைய கருத்துக்களுக்கு ஆதாரமான மூல நூல்களைத் திருப்பி ஆராய்ந்ததாலும், இரு வேறுகாலத் தமிழ்ச்சாசனங்களை மொழியியல் அடிப்படையில் ஆராய்ந்ததாலும், கருத்து வேறுபாடுகள் சில ஏற்பட்டன. அவ் வேறுபாடுகள், இந்நூலில் ஆங்காங்கே குறிப்பிடப்படுகின்றன.

இந்நூல்—முகவுரை, தமிழிற் பிறமொழி, எழுத்தியல், சொல்லியல், பெயரியல், வினையியல், இடையியல், தொடரியல், சொற்பொருளியல் என –ஒன்பது இயல்களாக அமைந்துள்ளது. பழந்தமிழிலக்கண ஆசிரியர் தொடரிய (syntax) லுக்கும் சொற்பொருளிய (semantics) லுக்கும் சிறப்பிடம் வழங்கவில்லே. மொழி வரலாறு பற்றிய இக்காலக் கண்ணேட்டத்தில், இவை முக்கியம் பெறுதலால், இவையும் ஓரளவு ஆராயப்பட்டுள்ளன.

தமிழ் மொழியின் வரலாற்றிலக்கணத்தை ஆராய்ந்து கூறும் தனி நூல் இதுவரை ஒன்றும் வெளிவரவில்லே. எனவே, இந்நூலே, இத்துறையில் முதன்முதல் வெளிவருகின்றதெனலாம்.

தமிழ்த்துறை,
இலங்கைப் பல்கலேக்கழகம்
பேராதனே, இலங்கை.
20-11-66

ஆ. வேலுப்பிள்ளே

பொருளடக்கம்

VI வினையியல்

VII இடையியல் ... 244

VIII தொடரியல்

IX பொருளிலக்கணம்

பிழை-திருத்தம்

பக். 1. வரி 1. வழங்குகின்றன, - வழங்குகின்றன.
,, வரி 5. வகுக்கபடுதலுண்டு-வகுக்கப்படுதலுண்டு.
,, வரி 10 கற்க்கப்போயே. – கற்கப்போயே,
,, 2. வரி 11. எனப்படும்-எனப்படும்.
,, 6. வரி 7. என்பதாகும்-என்பதாகும்.
,, 7. வரி 8. ஐரோப்பியர். – ஐரோப்பியர்,
,, 8. வரி கடைசி. வடிவங்சுகளை-வடிவங்களை
,, ஆராய்வதற்-ஆராய்வதற்கு
,, பேச்-பேச்சு
,, 10. வரி 21. கமல் சுவெலியில்-கமில் சுவெலியில்
,, 11. வரி 23. பொருட்டு-பொருட்டு
,, 12. வரி 19. கருநடதேயத்து-கருநாடதேயத்து
,, 13. வரி 8. சாஸ்திரங்களை-சாத்திரங்களை
,, வரி 28. கற்கபித்து-கற்பித்து
,, 14. வரி 9. அஃதென்ன? - அஃதென்னை,
,, வரி 26. பொரு,ளுணர்தற்கு-பொருளுணர்தற்கு
,, 16. வரி 20. இலக்கணுசிரியர்-இலக்கண வாசிரியர்
,, 21. வரி 19. யெருமையை-பெருமையை
,, வரி கடைசி. தென்கர' என்பர்-தென்பர்.
,, 23. வரி 27. மேம்நிற்க-மேம்பட்டு நிற்க
,, 24. வரி 5. Aoden for Arden
,, வரி 10. சஇலக்கக ணதங்மும்-சங்கத இலக்கணமும்
,, 28. வரி 13. கருத்'தோடு-கருத்தோடு
,, உரிச்சொல்லேயாம். - உரிச்சொல்லேயாம்
,, 29. வரி 2. தாது-இ பின்-,தாது-ன்
,, வரி 21. இடங்களிலும்' – இடங்களிலும்,
,, 30. வரி 7. 'சங்கத-சங்கத
,, வரி 30. அறிவுடையோரே, - அறிவுடையோரே'
,, வரி 31. தீட்சதர்–தீட்சிதர்
,, வரி 32. விஞவினர்-விஞவினர்.

பக். 31. வரி 2. சங்கசுள் அகராதி-சங்க அகராதி
,, 35. வரி 16. உரொமரின்-உரோமரின்
,, வரி 6. பற்றிற்-பற்றிச்
,, 37. வரி 19. நாட்டான்-நாட்டார்
,, 44. வரி கடைசி. ஜரோப்பியர்-ஐரோப்பியர்
,, 47. வரி 17. கலாசாரம் தினரும் கலாசாரத்தினரும்
,, 48. வரி 10. காணப்படும். - காணப்படும்
,, 50. வரி 11. எமுத்து-எழுத்து
,, 51. வரி 12. Palarography for Palaeography
,, 52. வரி 21. ஸ, ஷ, ஸ, - ஸ, ஷ, ஜ,
,, 53. வரி 16. சாசனங்களில்-சாசனங்களின்
,, 56. வரி 15. மெம்யொலிகளின்-மெய்யொலிகளின்
,, 58. வரி 15. கொள்ளப்படுகின்றது. - கொள்ளப் படுகின்றன.
,, 61. வரி 6. படுமாகளின்-படுமாகலின்
,, வரி 28. பொல-போல
,, வரி 29. ஜகாரம்-ஐகாரம்
,, 62. வரி 14. மொழிந்தாலும்-மொழிந்ததாலும்
,, 65. வரி 16. இலக்கனம்-இலக்கணம்
,, 66. வரி 13. மாறுனது-மாறுனது
,, 67. வரி 10. தொல்காப்பியர், - தொல்காப்பியர்.
,, 73. வரி 2. ட, ற, வ, ள-ட, ற, ல, ள
,, வரி 12. தொலகாப்பியர்-தொல்காப்பியர்
,, வரி 31. தோன்றும். நெறி-தோன்றும் நெறி
,, 76. வரி 7. சணபதிபிள்ளை-கணபதிப்பிள்ளை
,, 78. வரி 20. நடுப்பகுதிவரை. - நடுப்பகுதிவரை,
,, 80. வரி 7. கண்ணி நல்லூர்பற்று-கண்ணி நல்லூர்ப் பற்று
,, 85. வரி 15. 'எனவுங் கொள்க' – எனவுங்கொள்க'
,, 88. வரி 23. மாறுகிறது, - மாறுகிறது.
,, வரி 25. னகாரமும்-ணகாரமும்
,, 90. வரி 5. பெரும் பாலும்-பெரும்பாலும்
,, 91. வரி 6. யிடத்துங்-யிடத்தும்

பக். 91. வரி 11. நன்னூவாரை-நன்னூலாரை
,, 93. வரி 20. சொவ்லாவது-சொல்லாவது
,, வரி 29. ஒதுதலான்-ஓதுதலான்
,, வரி 30. அவையையும்-அவையும்
,, 94. வரி 2. குறித்தனவேயாம்'' – குறித்தனவேயாம்.''
,, வரி 20. பிரித்தறய-பிரித்தறிய
,, 100. வரி 8. விரவுத்தினே-விரவுத்திணை
,, வரி 27. செய்த னெச்சத்-செய்தெனெச்சத்
,, 108. வரி 25. உண்மார்-உண்மார்
,, 109. வரி 22. பெயரில்-பெயரியல்
., 111. வரி 3. காணப்படுறது-காணப்படுகிறது
,, வரி 27. வழச் காதற்கு-வழக்காதற்கு
,, 118. வரி 14. உச்சொல்-உரிச்சொல்
,, 122. வரி 3. உணர்த்துவன :— - உணர்த்துவன.
,, வரி 27. தெரிகிறது-திரிகிறது
,, 140. வரி 1. தேவையல்லாத-தேவையில்லாத
,, 142. வரி 6. விரவுத்திணைப்பெயராயிருந்தன. -
இருதிணையிலும் வந்தன.
,, 144. வரி 23. பெயர்களௌ்று-பெயர்களென்று
,, 153. வரி 27. வழங்கியிருக்கலாம், – வழங்கியிருக்கலாம்.
,, 154. வரி 17. அடைக்காய்ப்பத்து-அடைக்காய் பத்து
,, 158. வரி 9. சொல்லுமாதலானும்–செல்லுமாதலானும்
,, 162. வரி 13. வீணே-விணே.
,, 165. வரி 20. யுடையதாய்-வுடையதாய்
,, 172. வரி 23. ஆணும்-ஆனும்
,, 178. வரி 11. பாடினவள். – செய்தவள்.
,, ,, வரி 12. பாட்டுப்பாடினவள்-முயற்சி செய்தவள்
,, 185. வரி 31. தொழிற்கு-தொழிற்கு
,, 188. வரி 12. நிகழ்காலத்தின் கண்–நிகழ்காலத்தின்கண்
,. 192. வரி 4. வெளவி-வவ்வி
,, 194. வரி 10. பொருந்தானே-பெருந்தானே
,, 195. வரி 7. நிகழ்கால-இந்த நிகழ்கால.
,, 208. வரி 7. செய்யிள்–செய்யில்

பக். 210. வரி 1. லகர-லகரம்
,, ,, வரி 2. ரகமாக-றகரமாக
,, ,, வரி 24. நிற்கின்றன-நிற்கின்றது
,, 214. வரி 16. லினைகளுக்கு-வினைகளுக்கு
,, 229. வரி 22. செயப்படுபொருள்-குன்று-
செயப்படுபொருள்குன்று
,, 236. வரி 5. நோக்கம். - நோக்கம்
,, 240. வரி 21. இடப்பெறுதை-இடப்பெறுவது
,, 241. வரி 21. இருப்பென்-இருப்பேன்
,, 244. வரி 10. எரிக்கப்போமாளுேம்-எரிப்போமாளுேம்
,, 245. வரி 7. கொள்ளும். சாரியைகளை-
கொள்ளும்சாரியைகளை
,, 252. வரி 7. லிஷ்ணு-விஷ்ணு
,, 256. வரி 17. பெருமான், - பெருமான்.
,, 259. வரி 5 பலுக்கும்-பாலுக்கும்
,, 260. வரி 25. சொல்முற்பட- சொல்லில் வண்ணம்
முற்பட.
,, 263. வரி 15. தென்பது, - தென்பது.
,, 267. வரி 27. வேற்றுமையாய-வேற்றுமையாய்
,, 268. வரி 2. தருகின்றன. - தருகின்றன,
,, ,, வரி 10. உருபு, - உருபு.
,, 269. வரி 10. இன்றையவரையில்-இயன்றவரையில்
,, ,, வரி 17. இலக்கணுசிரியர்-இலக்கணவாசிரியர்
,, 270. வரி 7. ,, ,, ,,
,, 270. வரி 14. ,, ,, ,,
,, 276. வரி 11. ,, ,, ,,
,, 277. வரி 19. ,, ,, ,,
,, 276. வரி 13. கூடியனவே, – கூடியனவே.
,, 279. வரி 15. வெறும். உருபுகளாக-வெறும்உருபுகளாக
,, 280. வரி 5. Jules Block-Jules Bloch
,, 281. வரி 15. Education-Evolution
,, 282. வரி 3 இலக்கணுசிரியர்-இலக்கணவாசிரியர்
,, 283. வரி 21. பெயரடைகனின்-பெயரடைகளில்
,, 292. வரி 6. தருமாறு-வருமாறு
,, 293. வரி 5. தொடர்சொல்-தொடர்ச்சொல்லால்
,, 304. வரி 7. மற்றும்-மட்டும்

தமிழ் வரலாற்றிலக்கணம்

I முகவுரை

1. மொழியியல் - திராவிட மொழிகள்

உலகில் எத்தனையோ மொழிகள் வழங்குகின்றன, திருந்திய மொழிகள்—திருந்தாத மொழிகள் அல்லது பண்பட்ட மொழிகள்—பண்படாத மொழிகள் அல்லது இலக்கிய வளமுள்ள மொழிகள்—இலக்கிய வளமில்லாத மொழிகள் என அவை வகுக்கபடுதலுண்டு. மொழிகளின் தொகை, இன்னும் கணக்கெடுக்கப்படவில்லை. பலநாடுகளிலுள்ள பின்தங்கிய ஒதுக்குப்புறப் பிரதேசங்களில், வெவ்வேறு மொழிபேசும் மக்கட் கூட்டங்கள் காணப்படுகின்றன. அமெரிக்காவில் பூர்வகுடிகள் பேசிய மொழிகள் பல நூற்றுக்கணக்கின. பூர்வகுடிகளின் பண்படாத மொழிகளைக் கற்கப்போயே. ஐக்கிய அமெரிக்க நாடுகளில் மொழியியல் சிறப்பாக வளர்ச்சியடைந்தது. ஆப்பிரிக்காவிலும் மக்கள் பேசும் மொழிகள் பல. இன்று அவை கற்கப்படுகின்றன; மொழிக் குடும்பங்களாக வகுக்கப்படுகின்றன. ஐரோப்பியர் தொடர்பினுல், ஆப்பிரிக்க மொழிகள் பல எழுத்துவடிவம் பெற்றன; இலக்கிய வளமும் அடைந்தன. அவற்றுள் சில இன்று வேகமாக வளர்ச்சியடைகின்றன.

வரலாற்றுப் போக்கிலே, மொழிகளின் தொகை பெருகுகின்றதா அல்லது குறைகின்றதா என்பது ஒரு வினு. இரண்டும் நடைபெறுகின்றன என்று கூறலாம். அமெரிக்கா, அவுஸ்திரேலியா முதலிய கண்டங்களில் பூர்வீக மொழிகள், குடியேறி ஆதிக்கம்பெற்ற ஐரோப்பியர் மொழிகளின் செல்வாக்குக்கு எதிர்நிற்கலாற்ருது அழிகின்றன. பலமொழிகள்

அழியச் சிலமொழிகள் செல்வாக்குப் பெறுவதற்கு, இது எடுத்துக்காட்டு. போக்குவரத்து வசதிகள் மிகக் குறைந்து காணப்பட்ட பண்டைக் காலத்தில், ஒருமொழி பேசும் மக்கள் பல இடங்களில் பிரிந்து வதிந்தால் அல்லது பல இடங்களுக்குப் பிரிந்து சென்றல், ஒருமொழி பலமொழிகளாக விருத்தியடைதலுமுண்டு.

இத்தகைய விருத்திதான், மொழிக் குடும்பத்திற்குத் தோற்றுவாயாகின்றது. ஒரு மூலமொழி பல தனிப்பட்ட மொழிகளாகப் பிரிந்த நிலையிலும், அம்மொழிகளில் பொதுப் பண்புகள் பல காணப்படுமாயின், அவை ஒருமொழிக் குடும்பத்தைச் சேர்ந்தன வெனப்படும் மொழிக் குடும்பம் எவ்வாறு தோன்றியது, அதாவது ஒரு மூலமொழி பேசும் மக்கள் எவ்வாறு பிரிந்து நின்று பல மொழிகளைத் தோற்றுவித்தனர் என்ற வரலாறு முன்பு எங்குங் குறிப்பிட்டு வைக்கப் படவில்லை. இன்றுள்ள சான்றுகளைக் கொண்டே, இத்தகைய மொழிவரலாறு இன்று கணிக்கப்படுகிறது. சொற்களில் ஒற்றுமை, இலக்கண அமைப்பில் ஒற்றுமை, எண்ணுப்பெயர் மூவிடப் பெயர்களில் ஒற்றுமை என்பன ஆராய்ந்தறியப் பட்டுப் பின்பு மொழிக் குடும்பம் வகுக்கப்படுகிறது.

இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பமே இன்றைய உலகில் மிகச் செல்வாக்குப் பெற்று விளங்குவது. பின்லாந்து, அங்கேரி என்னும் சிலநாடுகளில் தவிர, ஐரோப்பாவில் பேசப்படு முக்கிய மொழிகள் யாவும் இந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவையே. ஆங்கிலம், பிரெஞ்சு, செர்மானிய மொழி, உருசிய மொழி—யாவும் இந்தோ-ஐரோப்பிய மொழிகளே. ஆசியாவில், வடஇந்திய மொழிகளும் ஈரானிய மொழியும் இதே குடும்பத்தைச் சேர்ந்தன. இந்தோ-ஐரோப்பிய மொழி பேசுவாரே, மொழியியல் துறையில் ஈடுபட்டு வந்ததால், இந்தியாவைப் பொறுத்த வரை, வடஇந்திய மொழிகள் சிறப்பாக ஆராயப்பட்டன. இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் முதன்முதல் இலக்கிய வளம்பெற்ற மொழி சங்கதமே.

வேதந்தான், இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் தோன்றிய மிகப்பழைய இலக்கியம். இத்தகைய காரணங்களால் முக்கியத்துவம் பெற்ற வடஇந்திய மொழிகளோடு ஒப்பிடும் பொழுது, தென்னிந்திய மொழிகளை யுள்ளடக்கிய திராவிட மொழிக் குடும்பம், ஒரு நூற்றாண்டுக்கு முன்புவரை புறக்கணிக்கப்பட்டு வந்ததெனலாம்.

திராவிடமொழி யாராய்ச்சிக்கு அடிகோலியவர் கால்டுவெல்லாவர். தென்னிந்தியாவில், தமிழ்நாடு, ஆந்திர பிரதேசம், மைசூர், கேரளம் என்னும் மாநிலங்களில் பேசப்படும் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்னும் நான்கு இலக்கிய வளமுள்ள மொழிகளும்,எட்டு இலக்கிய வளமில்லாத மொழிகளும் திராவிடமொழிக் குடும்பம்என்ற ஒன்றைச் சேர்ந்தன என நிறுவியவர் இவரே.இவருக்குப் பின்வந்த அறிஞர்கள், இலக்கிய வளமில்லாத இன்னும் ஏழு மொழிகளையும் திராவிடமொழிக் குடும்பத்தில் சேர்ப்பர்.பாகிஸ்தானில், பெலுகிஸ்தானத்திலுள்ள பிராகுய் திராவிடமொழி யெனப்படுகிறது. வட இந்தியா, மத்திய இந்தியா ஆகிய பிரதேசங்களிலும் திராவிட மொழிகள் காணப்படுகின்றன.

இந்திய உபகண்டமும் இலங்கையும் ஒருகாலத்தில் திராவிடநாடாக இருந்திருக்கலாம் என்று கருதுவர் அறிஞர் சிலர். சிந்துநதி நாகரிகத்திற்கும் திராவிட மக்களின் நாகரிகத்திற்கும் பல ஒற்றுமைகளைப் பல அறிஞரும் காட்டுகின்றனர். ஆனால், அங்கு வழங்கிய மொழி திராவிடமா என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. அங்கு வழங்கிய மொழி எது என்பது பற்றி அறிஞரிடையே பலத்த கருத்து வேறுபாடு காணப்படுகிறது. திராவிடமொழிக் குடும்பம் இந்தோ—ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்ததல்ல என்பதைக் கால்டுவெல் தெளிவாக நிறுவியுள்ளார். திராவிட மொழிக் குடும்பத்திற்கு, இந்திய உபகண்டத்துக்கு வெளியில் தொடர்பிருக்குமா, அது வேறெந்தக் குடும்பத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்பன ஆராய்ச்சிக்குரிய விடயங்கள். மத்திய ஆசியா, தூரகிழக்கு, பின்லாந்து, அங்கேரி என்னும் பிர

தேசங்களில் வழக்கிலுள்ள சீத்திய மொழிக் குடும்பத்தோடு திராவிட மொழிக் குடும்பத்தைத் தொடர்புபடுத்தக் கால்டுவெல் முயன்ருர். சீத்தியமொழிக் குடும்பத்தில் ஒரு பிரிவோடு திராவிட மொழிக் குடும்பத்தைத் தொடர்பு படுத்தப் பேராசிரியர் பரோவும் (Burrow) முயன்ருர். ஆனால், இத்தகைய முயற்சிகள், அறிஞர்களின் பொது அங்கீ காரத்தை இன்னும் பெறவில்லை.

திராவிடரல்லாத பூர்வகுடிகளும், இந்திய உபகண்டத் தில் காணப்படுகின்றனர். ஆசியாவிலும் அவுஸ்திரேலியா விலும் பூர்வகுடிகள் பேசிய மொழிகள் அவுஸ்திரோ—ஆசிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவையென்பர். மத்திய இந்தியாவில், இந்தக் குடும்ப மொழிகளும் காணப்படுகின் றன. இந்த மொழிகளைப் பேசுவோரே, இந்தியாவின் பூர்வ குடிகளென்றும், தொடர்ந்து திராவிடரும் தொடர்ந்து ஆரிய ரும் வந்திருக்கவேண்டுமென்பதே, இன்று பலர் கருத்து. திராவிட மொழிகளின் தாயகமென்று கூறப்படக்கூடிய ஒன்று, இந்தியாவுக்கு வெளியில் காணப்படாததால், திராவிடரும், அவுஸ்திரோ—ஆசியப் பூர்வகுடிகளில் ஒரு பகுதியினரைப்போல, இந்தியாவின் பூர்வகுடிகளேயென்பர் ஒரு சாரார். தென்னிந்தியா தவிர, ஏனைய இந்திய—பாகிஸ் தான் பகுதிகளில், இரண்டினப் பூர்வ குடிகளும் ஆரிய மொழிகள் பேசுவோராலும் முஸ்லீம்களாலும் சூழப்பட்டு ஒதுக்கிடங்களில் வாழ்வதால், இவர்கள் பின்னவர்களுக்கு முன்பே இந்திய உபகண்டத்தில் வசித்தவராகவே இருத்தல் வேண்டும்.

அராபியர், யூதரை யுள்ளடக்கிய செமிதிக் நாகரிகத் திற்கு முந்திய மேற்காசிய கலாசாரங்களோடு, திராவிட மக்கள் தொடர்பு படுத்தப்படுவதுண்டு. அராபியர், யூதர் மேற்காசியாவுக்கும் ஆரியர் இந்தியாவுக்கும் வருமுன்பு, இப்பகுதிகளில் விளங்கிய நாகரிகம் பல ஒற்றுமைகளை யுடையதாயிருந்தது. மேற்காசியாவின் சுமேரிய நாகரிகம்

முதலியன ஆரியருக்கோ, அராபியருக்கோ, யூதருக்கோ உரித்தானதல்ல என்பது இன்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஆயின் பழைய மேற்காசிய மக்களும் பழைய இந்திய மக்களும் ஒரு இனத்தவரேயென்பதிலும் அவர்கள் திராவிடர்களேயென்பதிலும் அவ்வளவு கருத்தொற்றுமை அறிஞர்களிடையே ஏற்படவில்லை.

திராவிட மக்கள் தாம் வாழும் எல்லா நாடுகளிலும் சிறுபான்மையினராக இருப்பதால், அவர்கள் குரல் உலக அரங்கில் உரிமையோடு ஒலிக்க இடமில்லாததால், திராவிட மொழிகள் போதிய கவனமெடுத்து ஆராயப்படவில்லை. இலக்கியவளமில்லாத திராவிட மொழிகள் இதுவரை அறியப்படாதவை இன்னும் சில, மத்திய இந்தியாவில் இருக்கலாம் என்று பேராசிரியர் பரோ கூறுகிறார். மத்திய இந்தியாவிலுள்ள திருந்தாத திராவிட மொழிகள் சில, தம்மைச் சூழவுள்ள தெலுங்கு, மராத்தி, இந்தி என்னும் திருந்திய மொழிகளின் போட்டி காரணமாக அழிகின்றன.

தென்னிந்தியா, இலங்கை, மலாயா முதலிய நாடுகளிலுள்ள பல்கலைக் கழகங்கள், திராவிட மொழியியற் கல்விக்கு முக்கியத்துவம் வழங்குகின்றன. இங்கிலாந்து, பிரான்சு, செக்கோசிலாவேக்கியா ஆகிய நாடுகளில், திராவிட மொழி ஆராய்ச்சி சிலகாலமாக நடைபெற்று வருகிறது. சோவியத் உருசியா, செர்மனி ஆகிய நாடுகள் இத்துறையில் இன்று கவனம் செலுத்துகின்றன. அமெரிக்கப் பல்கலைக் கழகங்கள் பலவற்றில் திராவிட மொழியியல் ஆராய்ச்சி ஆரம்பிக்கப்படுகிறது.

தென்னிந்தியா என்ற சொற்றொடர் தமிழ்நாட்டை மாத்திரம் குறிக்கச் சில சந்தர்ப்பங்களில் வழங்குகிறது. திராவிட மொழி வழங்கும் மத்திய இந்தியாவையும் அதற்குத் தெற்கிலுள்ள பகுதியையும் குறிக்கவும் இத்தொடர் வழங்குவதுண்டு. தென்னிந்தியா, மிகப்பரந்த பொருளில், விந்திய மலை—நர்மதையாற்றுக்குத் தெற்கிலுள்ள பகுதி முழுவதை

யும் குறிக்கும். ஒரியா, மராத்தி, குசராத்தி என்னும் இந்தோ—ஐரோப்பிய மொழிகள் பேசும் பகுதிகளைத் தவிர, விந்தியமலைக்கும் கன்னியாகுமரிக்கும் இடைப்பட்ட நாடு திராவிட நாடெனலாம்.

திராவிட மொழிக் குடும்பத்திற்கு ஐரோப்பிய அறிஞர்கள் ஆரம்பத்தில் வழங்கிய பெயர் தமிழ்மொழிக் குடும்பம்என்பதாகும் கால்டுவெல்லே திராவிடமொழிக் குடும்பம் என்ற பெயரை வழக்கிற்குக் கொண்டு வந்தார். ஒரு மொழிக்குரிய பெயரை அம்மொழியோடு உறவுடைய ஏனைய மொழிகளையும் உள்ளடக்கிய மொழிக் குடும்பத்திற்கு வழங்கினால், கருத்து மயக்கமேற்பட இடமுண்டு. திராவிட மொழிகளுக்கு வடமொழியில் குமாரிலபட்டர் என்பவர், ஏழாம் நூற்றாண்டு முடிவில், ஆந்திர -திராவிட பாஷை என்ற பெயரை வழங்கினார். ஆந்திரம் தெலுங்கையும், திராவிடம் தமிழையும் குறித்திருக்க வேண்டும். இவை இரண்டுமே திராவிட மக்களில் பெருந்தொகையினர் பேசும் மொழிகள். கன்னடம் தெலுங்கிலும் மலையாளம் தமிழிலும் அடக்கப்பட்டிருக்கலாம். எனினும், இந்த நான்கு மொழிகளும் சேர்ந்து ஒரு பிரத்தியேக மொழியெனக் கணிக்கப்பட்டது கவனிக்கத் தக்கது. வடமொழி இலக்கண ஆசிரியர் திராவிடம் என்ற பதத்தைத் தென்னிந்திய மக்களையும் அவர்கள் மொழியையும் குறிப்பதற்கும் வழங்கியுள்ளனர். ஆயின் திராவிடம் என்ற சொல் தமிழரையும் தமிழ் மொழியையும் குறிப்பதற்கும் வழங்கியுள்ளது. எனினும் திராவிடம் என்பது தமிழைக்குறித்துப்பரவலாக வழங்கவில்லை. தென்னிந்திய மக்கள் அல்லது மொழிகள் பலவற்றையும் பொதுவாகக் குறிக்கும் வேறு பதமெதுவும் வழக்கிலிருக்கவுமில்லை. எனவே கால்டுவெல், திராவிட மொழிக் குடும்பம் என்ற பெயரை வழக்கிற்குக் கொண்டு வந்தார்.

திருந்திய திராவிட மொழிகளில் முதலாவதாகக் குறிப்பிடத்தக்கது தமிழ். அது திராவிட மொழிகளில் மிகப் பழைய இலக்கியச் செல்வமுடையது; பழைய மொழி வடிவங்கள்

மிகப்பல உடையது; பாண்டிய நாடு, சோழ நாடு. கொங்கு நாடு. தொண்டை மண்டலம் என்னும் பகுதிகளில் பேசப்படு கிறது. காவிரி, தென்பெண்ணை, பாலாறு, வையை, பொருநை என்னும் நதிகளால் தமிழ் நாடு வளம்படுத்தப்படுகிறது. இலக்கிய வழக்குத் தமிழ் செந்தமிழெனவும் பேச்சு வழக்குத் தமிழ் கொடுந்தமிழெனவும் வழங்கப்படுகின்றன. சில நூற்றுண்டுகளுக்கு முன்பு, தமிழ் நாட்டுக்கு வந்த ஐரோப் பியர். தமிழை 'மலபார்' என்றழைத்தனர். தமிழ் நாட்டிற்கு மேற்கிலுள்ள மலையாளத்துடனேயே அவர்களுக்கு முதல் தொடர்பு ஏற்பட்டதாலும், மலையாள மொழியும் தமிழ் மொழி யும் நெருங்கிய ஒற்றுமையுடையன வாயிருந்ததாலும், தமிழை அவர்கள் 'மலபார்' என்றழைத்திருக்க வேண்டும்.

கேரள மாநிலத்தின் மொழி மலையாளமாகும். பண்டைத் தமிழகத்தின் சேரநாடே இன்றைய கேரளம். இப்பகுதி தமிழ் நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து மலைகளாலும் குன்று களாலும் பிரிக்கப்பட்டது. காலப்போக்கில்சேர நாட்டுத் தமிழ் மலையாளமாக வளர்ந்து விட்டது. மலையாளமொழியிலக்கியம் பதினைந்தாம் நூற்றுண்டளவில் தொடங்குகிறது. இந்தியா விலேயே, ஜன நெருக்கமும், படித்தவர் விகிதாசாரமுங் கூடிய மாநிலம் கேரளம். இங்கு உணவுப் பற்றுக்குறை ஒரு பெரும் பிரச்சினை.

தமிழுக்கு அடுத்ததாக வள முள்ள திராவிடமொழி தெலுங் காகும். திராவிட மொழிகளில் இதுவே மிகவும் இனிமையான தென்பர். திராவிடமொழிகளைத் தாய் மொழியாகக் கொண்ட வர்களில், தெலுங்குமொழி பேசுவோரே அதிக தொகையினர். பதினோராம் நூற்றுண்டிலிருந்து தெலுங்கு இலக்கியங்கள் காணப்படுகின்றன. கோதாவரியும் கிருஷ்ணவும் ஆந்திரப் பிரதேசத்தை வளம்படுத்துகின்றன. தென்னிந்தியாவில் உணவு ஏற்றுமதி செய்யும் மாநிலமாக இப்பிரதேசம் வழங்கு கிறது.

தமிழ் நாட்டிற்கு வடக்கில் ஆந்திரப் பிரதேசம் அமைந் திருக்க, ஆந்திர பிரதேசத்திற்கு மேற்கிலும் தமிழ் நாட்டிற்கு

வடமேற்கிலும் மைசூர் அமைந்திருக்கிறது. மைசூர் மாநிலம் கன்னடமொழி பேசும் பிரதேசம். தெலுங்குக்கும் தமிழுக்கும் அடுத்ததாக, திராவிட மொழிகளைப் பேசுவோரில், அநேகர் பேசும் மொழி இது. செந்தமிழ்-கொடுந்தமிழ் என்பது போலக் கன்னடத்திலும் பழங்கன்னடம் புதியகன்னடம் என்ற பிரிவு காணப்படுகிறது. இலக்கிய வழக்கு மொழியான பழங் கன்னடம் தமிழோடு நெருங்கிய தொடர்புடையது.

இலக்கிய வளமில்லாத திராவிட மொழிகளை, இந்திய உப கண்டத்தில், வழங்கும் இடங்களைக் கொண்டு, வடதிராவிட மொழிகள், மத்திய திராவிட மொழிகள், தென் திராவிட மொழிகள் என வகைப்படுத்துவர். பிராகுய், கூர்க் **(Kuurkh)**, மால்ரோ என்பவை வட திராவிட மொழிகளென்றும், கொலாமி—நாய்கி, பார்ஜி, ஒல்லரி, பொய, கொண்டி, கொண்ட, குய்—கூவி என்பன மத்திய திராவிட மொழிக ளென்றும், துளு, கூர்க் **(Coorg)**, துத, கொத என்பன தென் திராவிட மொழிகளென்றும் பேராசிரியர் பரோ கூறுவர்.

திராவிட மொழியின் பழைய வடிவங்களை எவ்வாறு கண்டுபிடிக்கலாம் என்பது ஒரு பிரச்சினை. திராவிட மொழி யின் பழைய நிலையைத் தெரிவிக்கவல்லது செந்தமிழே என் பர் சிலர். செந்தமிழின் முக்கியத்துவம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். ஆனால், எந்த ஒரு மொழியும் மாத்திரம் போதியது என்று கூற முடியாது. திராவிட மொழிகள் யாவற்றையும் ஒப்பிட்டுப்பார்த்தாலே, பழைய மொழி வடி வங்களை நிச்சயமாகக் காணலாம். பழங் கன்னட மொழியின் அறிவின்றித் தமிழ்த் தன்மை முன்னிலைப் பெயர்களை விளங் கிக்கொள்ள முடியாது. கோந்த் என்ற திருந்தாத திராவிட மொழிதான் திராவிடமொழிப் படர்க்கைப் பெயர்களின் ஆண்பால் பெண்பால் விகுதிகளை விளக்க உதவுகிறது. எனி னும் தமிழின் தொன்மை காரணமாக, தமிழ்மொழி அதிலும் சிறப்பாகச் செந்தமிழே திராவிட மொழியின் பழைய வடிவங் களை ஆராய்வதற் அதிகம் உதவக்கூடியது. பேச்

வழக்கு மொழி, எழுத்து வழக்கு மொழிக்கிடையிலான வேறு பாடு தமிழிலுள்ள அளவு, வேறு திராவிட மொழிகளிலில்லை. இந்த வேறுபாடு, காலப்போக்கில், நீண்ட காலமாக வளர்ந்து வந்திருக்கவேணடும். பழம் மலையாளம், புது மலையாளம் என்பவற்றிற்கிடையேயுள்ள வேறுபாடுகளிலொன்று பழம் மலையாளம் வழக்கிறந்த மொழி வடிவங்கள் பலவற்றை உடையதாயிருத்தல். ஆனால், அவற்றுக்கிடையேயுள்ள முக்கிய வேறுபாடு பழம் மலையாளத்தில் தமிழின் செல்வாக்கு அதிகமாக இருக்கப் புதிய மலையாளத்தில், சங்கதத்தின் செல்வாக்கு அதிகமாகக் காணப்படுகிறது. வெவ்வேறு திராவிட மொழிகளுக்குச் சிறப்பாக உரிய சொற்களும் செந்தமிழில் இடம் பெறுகின்றன. ஏனைய திராவிடமொழிகள் பிரிந்துபோகு முன்பே, செந்தமிழ் விருத்தியடையத் தொடங்கியிருக்கலாம். தமிழ்ச்சொல்—வீடு; தெலுங்குக்குரியது இல் (இல்லு); கன்னடத்துக்குரியது மனை (மனை). பழங் கன்னடம், பழம் மலையாளம், துளு, துத, கோந்த், குய் என்னும் மொழிகள் தமிழுடன் பல ஒற்றுமைகளுடையன. புதுக் கன்னடம், தெலுங்கு என்பன தமிழிலிருந்து அவ்விடங்களில் வேறுபடுகின்றன. தமிழ் பழைய திராவிட மொழி வடிவங்களைப் பேணி வருகிறதென்பதற்கு இதுவும் சான்று.

மொழியாராய்ச்சி வளர்ச்சியடையாத காலத்தில், தமிழ் மொழியின் உதரத்திலிருந்து மற்றைத் திராவிட மொழிகள் பிறந்தனவென்றும் தமிழ்தான் மூலத் திராவிட மொழியென்றும் சிலர் நம்பி வந்தார்கள். ஆனால், தமிழின் வேறுபட்ட தாய், அதைக்காட்டிலும் மிக்க தொன்மைவாய்ந்ததாயுள்ள ஒரு பண்டைமொழி இருக்க வேண்டும் என்று கொள்ளல் மொழி நூல் ஆராய்ச்சிக்கு அவசியமாயிற்று. அவ்வாறு கொள்ளவே, மூலத்திராவிட மொழியின் குழந்தைகளாகிய திராவிட மொழிகளில் எது முற்படப் பிறந்ததென்பது பற்றித் திராவிடமொழியறிஞரிடையே கருத்து வேறுபாடு தோன்றியது. ஆனால், தமிழின் முற்பிறப்பும் தொன்மையும் தக்க காரணங்களால் நிறுவப்பட்டுள்ளன.

'திராவிட மொழிகளில் ஆராய்ச்சி' என்ற நூலில் வையாபுரிப்பிள்ளை சில விடயங்கள் கூறுவர். திராவிடமொழி ஆராய்ச்சியை எடுத்துக்கொண்டால், அதன் குடும்பத்தின் மூலம், அதன் குடும்பத்தைச் சார்ந்த மொழிகள், ஒப்பு நோக்கு மொழியாராய்ச்சி, ஒப்புநோக்கு இலக்கணம், மூலத் திராவிட மொழியின் புனர் நிர்மாணம் முதலிய பல திறப்பட்ட பொருள்களும் அடங்கும். திராவிட மொழிகளில் ஏதாவது ஒன்றை எடுத்துக்கொண்டால், அதன் இலக்கிய வழக்கு மொழி, அதன் சிதைவு மொழிகள், அதன் வழக்காற்றுவடிவங்கள், அதன் பல திறப்பட்ட நிலைவேறுபாடுகள், அதன் அயல்நாட்டுச் செலவு, அயலினத்தார் முதலியோர்களால் அதற்கு ஏற்பட்ட விளைவுகள் என்பன முதலாகப் பல பொருள் பற்றி ஆராய்ச்சி நிகழும், இலக்கிய வழக்கு மொழி என்ற ஒரு துறையிலே, இலக்கணம், சொல் வரலாறு, வாக்கிய அமைதி வரலாறு, ஒலியியல் வரலாறு, நெடுங்கணக்கு வரலாறு, எழுத்து வடிவ வரலாறு முதலியனவாக ஆராய்ச்சி பலதிறப்படும். திராவிட மொழிகளில் ஆராய்ச்சி செய்து தம் பெயர் நிறுவிய மேனாட்டறிஞர்களுள், கால்டுவெல், குண்டர்ட், பிரௌன், கிற்றல் என்பவர்களைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். இன்றைய மேனாட்டறிஞர்களுள் பரோ, எமெனோ, (Emeneau) கமல்சுவெலிபில் (Kamil Zvelebil) என்போர் குறிப்பிடத்தக்கோர். இவர்கள் கையாண்டுவரும் முறையும், இவர்களது பரந்த அறிவும், விடயங்களை நுட்பமாகக் கவனிக்கும் ஆற்றலும் பெரிதும் பாராட்டத்தக்கன.

திராவிட மொழி அறிஞர்கள் உழைக்க வேண்டிய துறைகளிலொன்று இலக்கணத்துறை. இலக்கணம் என்பது சொற்களின் ஒழுங்கு முறையையும் பேச்சு வழக்கிலுள்ள நெறியமைதியையும் உணர்த்துவதாகும். இதில் வரலாற்று முறையிலக்கணம், ஒப்புநோக்கு இலக்கணம் என்ற இரண்டும் அடங்கும். வரலாற்று முறையிலக்கணம் காண்பதற்கு, பற்பல காலங்களில் எழுதிய இலக்கணங்களை மட்டும் கற்றல் போதாது. பண்டைத் தமிழிலக்கணங்கள் வடமொழியிலக்

கணங்களைப் பின்பற்றியுள்ளன. தமிழ்மொழியிலுள்ள இயல்புகள் அனைத்தையும் கண்டு இலக்கணம் வகுத்துள்ளார்கள் என்று கூற முடியவில்லை. தமிழ்மொழியின் அமைப்பினையும் முற்றக்கண்டு இலக்கணம் செய்யப்பட்டுள்ளது என்றும் நினைக்கக்கூடவில்லை. பல்வேறு காலத்தில் தோன்றிய சாசனங்களையும் இலக்கியங்களையும் வரலாற்று முறையில் வைத்துக் கற்றல்வேண்டும். அவற்றிலே காணப்படும் மொழி வழக்கின் விதிகளைக் கண்டுகொள்ளுதல் வேண்டும். பின் ஒவ்வொரு காலத்திற்குமுரிய விவரண இலக்கணம் இயற்ற முற்படுதல் வேண்டும். விவரண இலக்கணங்களைக் கால அடைவில் வைத்துக் கற்று, அக்கல்வியின் விளைவாக, வரலாற்று முறையிலக்கணம் இயற்றுதல் வேண்டும். இலக்கணத்துறையின் மற்றொரு பகுதி ஒப்புநோக்கு இலக்கணமாகும். இதில் வரலாற்று முறையிற் கிடைத்த சான்றுகள், மூலமொழியிலிருந்து கிளைத்த பல்வேறு மொழிகளையும் இணைத்து நோக்கிப் பெற்ற ஆதாரங்களால் நிறைவுறுகின்றன.

2. தமிழ்மொழி வளர்ச்சியின் காரணங்கள்

தமிழ்மொழி வளர்ச்சியின் காரணங்களை வையாபுரிப் பிள்ளை அவர்கள் 'இலக்கணச் சிந்தனைகள்' என்ற நூலில் ஆராய்வர். பண்டைக்காலந்தொட்டு, தமிழ்நாடு வாணிகத்தில் சிறந்திருந்தது. மேற்குத்திசையிலிருந்து கிரேக்கர்களும் உரோமாபுரியினரும் அராபியரும் கிழக்குத்திசையிலிருந்து சீனதேசத்தவரும் வாணிகத்தின் பொருட்டுத் தமிழ்நாடு வந்து, தங்கள் பண்டங்களை விற்று முத்து, மிளகு, முதலிய தமிழ்நாட்டுப் பண்டங்களைக் கொண்டு தங்கள் தங்கள் தேசத்திற்குச் சென்று வருவாராயினர். இவ்வயல்நாட்டினருள் ஒருசிலர் தமிழ்நாட்டிற் பல இடங்களிலும் நிலையாய்க் குடியிருந்தனர். இவர்கள் வாழ்வதற்கெனத் தனியே

அமைக்கப்பட்ட குடியிருப்புகளும் காவிரிப்பூம்பட்டினம் முதலிய நகரங்களில் இருந்தன. யவனர் முதலிய அயல்நாட்டு வணிகர்கள் கூட்டுறவினால் தமிழ்மொழி நல்ல பயனையடைந்திருத்தல் வேண்டும். திரைச்சீலையென்று பொருள்படும் எழினி என்ற சொல் 'யவனிகா' என்ற கிரேக்கச் சொல்லின் திரிபாகும். ஓரை, சுருங்கை, என்னும் சொற்களும் கிரேக்கச் சொற்களின் திரிபுகளே.

தமிழ்மக்கள் தம் நாட்டிற் குடியேறிய அந்நியர்களோடு பயின்றுவந்தமையாலும், அடுத்துள்ள பிறநாடுகளுக்குச் சென்று வாழ்ந்து பின் திரும்பித் தம்மவரோடு சேர்ந்திருந்தமையாலும், மொழி வளர்ச்சி இன்னொரு பக்கம் ஏற்பட்டது. இங்ஙனம் புகுந்த சொற்களுள் பெரும்பாலான திசைச்சொற்களென இடைக்கால இலக்கண ஆசிரியர்களாற் பெயரிடப் பட்டுள்ளன.

அரசியல் மாற்றம், படையெடுப்பு முதலியவற்றாலும் மொழி வளர்ச்சி ஏற்படுதலுண்டு. இவற்றாற் சொற்கள் வழக்கிற் புகுந்தமையைக் கலிங்கத்துப்பரணியிலிருந்து அறியலாம். போரிலே சிறைப்பிடிக்கப்பட்டு வேளம் புகுந்த கருநடதேயத்துப் பெண்கள் சில வடுகுச் சொற்களையும் சில தமிழ்ச் சொற்களையும் தம் பேச்சிற் கலந்து வழங்கினரென்பது கூறப்படுகிறது. இந்நூலின் காலத்திற்கு முன்னரும் பற்பல காலங்களில் அரசியல் மாற்றங்கள் நேர்ந்திருத்தல் வேண்டும். அவ்வக்காலங்களில், பல சொற்கள் வழக்கிற் புகுந்திருத்தல் வேண்டும். எடுத்துக்காட்டாக, நாயக்க மன்னர் தமிழ்நாட்டை ஆண்டபொழுது தெலுங்குச் சொற்கள் பல தமிழிற் புகுந்தன.

இன்னொரு காரணமாக, 'அறிவுக் கூட்டுறவு' என்று ஒன்று கொள்ளலாம். இரண்டு சமுதாயங்கள் ஒன்றுகூடுமிடத்து ஒன்றன் பழக்க வழக்கங்கள் பிறிதொன்றன் பழக்க வழக்கங்களைச் சிறிதேனும் வேறுபடுத்தாமற் போகா. இது

போன்றே அறிவுக் கூட்டுறவும் முற்காலத்து நிகழ்ந்துவந்தது. இக்கூட்டுறவிற்கு வழி வகுத்தது சமயமாம். கிறீத்துவ ஆண்டுக்குச் சில நூற்றுண்டுகளுக்கு முன்னர் சமணசமயமும் பௌத்த சமயமும் வடஇந்தியாவில் தோன்றிப் பாரத தேச முழுமையும் பரந்து சமய உணர்ச்சியை நிலைபெறச் செய்தமை வரலாற்று நிகழ்ச்சி. சமய உணர்ச்சியைப் பரவச்செய்தலில் முன்னின்றவர் இவ்விரு சமயங்களையும் சார்ந்த துறவிகளாவர். இத்துறவிகள், தங்கள் சமய சாஸ்திரங்களையும் பிற நூல்களையும் நன்கு கற்றுப் பின்பு அவற்றைப் போதித்தற் பொருட்டுத் தங்கள் தேசங்களை விடுத்து அந்நியநாடு புகுந்து, அந்நாடுகளே தமக்குரிய தாயகமாகக் கருதி வாழ்ந்து, ஆங்குள்ள மக்களுக்குத் தங்கள் சமயசாத்திர முதலியவற்றைப் போதித்து, தங்கள் சமயங்களை மேற்கொள்ளச் செய்து, சமய அறிவோடு உலகியல் அறிவினையும் தமிழ்நாட்டிற்குதவினர். இத்துறவிகளின் செயலைச் சிலகாலத்திற்கு முன்பு தமிழ்நாட்டிற்கு வந்து கிறீத்தவ சமயத்தையும் மேல்நாட்டு விஞ்ஞான சாத்திர முதலியவற்றையும் ஒருங்குணர்த்திவந்த பாதிரிமார்களுக்கு ஒப்பிடலாம். பாதிரிமார்கள் தங்கள் மதங்களைப் பரப்புதலையே முதற்பெருநோக்கமாகக் கொண்டிருந்த போதினும், முடிவிலே பலவகைக் கல்வித் துறைகளையும் நாட்டில் நிலையிடுவதற்குக் காரணமாயிருந்தார்கள். சமயப் பிரசாரம் எவ்வாருயினும், அதன் பிற்பயனுய்த் தோன்றிய கல்வியுணர்ச்சி நிலைபெற்றுவிட்டது. இதுபோன்றதொரு பயனே, சமண முதலிய சமயங்கள் பரவத் தொடங்கிய முற்காலத்திலும் விளைந்திருத்தல் வேண்டும். இத்துறவிகள் தங்கள் தேசங்களிற் கற்றுவந்த மொழியைத் தாங்கள் சென்ற தேசங்ளிலும் பயின்றதோடு அவ்வத் தேசத்து மக்களுக்கும் கற்கபித்துவந்தனர். இம்மொழிகள் பெரும்பாலும் சங்கத மொழியாகவும் பாகத மொழியாகவுமிருந்தன. யாதொரு வரையறையுமின்றி இந்தியாவிலுள்ள எல்லா நாடுகளுக்கும் இத் துறவிகள் சென்று சமயவளர்ச்சியின் பொருட்டு உழைத்து வந்தமையால், இம்மொழிகளும் இந்தியா முழுவதும் பரவி இந்தியப்

பொதுமொழிகளாக நிலவத் தலைப்பட்டன. இவற்றுள் பாகத மொழிகள் வடமொழியின் சிதைவு எனக் கருதப்பட்டமையால், பொதுமொழியாக முடிவிற்கொள்ளப்பட்டது சங்கதமேயாம். பின் பற்பல காரணச் செறிவால் இம்மொழி பொதுமொழியாக நிலைபெற்றுவிட்டது. மயிலைநாதர் தமது நன்னூல் விருத்தியில் 'இஃது ஒரு நிலத்திற்கேயுரியதன்றிப் பதினெண் பூமிக்கும் விண்ணிற்கும் புவனுதிகட்கும் பொதுவாய் வருதலின், திசைச் சொல்லின் அடக்காது வேருேதினுர் என்க. அஃதென்ன? வடக்கண் மொழியென்ருராலோவெனின் ஆண்டு வழக்குப் பயிற்சியை நோக்கி அவ்வாறு கூறினுர் என்க' என்றெழுதினர். இதன்கண் 'பொதுமொழி' என்ற கருத்து வற்புறுத்தப்படுதலோடு, 'விண்ணிற்கும் புவனுதிகட்கும் பொதுவாய்வருதலின்' என்றுங் கூறப்படுகின்றது. எனவே, தேவர்களுக்குரிய மொழி என்றுங் கருதப்பட்டமை தெளிவாம். இக் கருத்தினையே, கம்பராமாயணமும் 'தேவ பாடையின் இக்கதை செய்தவர்' என்ற அடியில் வைத்துள்ளது. பிரயோக விவேக நூலாரும் தமது நூலில் 'சாற்றிய தெய்வப் புலவோர் மொழிக்கும்' என்று கூறினர்.

மொழி வளர்ச்சியில், அறிவுக் கூட்டுறவு ஏனைய காரணங்களிலும் பார்க்க முக்கியத்துவம் பெறுகிறதென்லாம். வாணிகம் முதலிய காரணங்களால் வந்த சொற்கள் சாதாரண மக்களிடை வழக்கிற் புகுந்து பின் இலக்கியங்களில் இடம்பெறுவன; இச் சொற்களிலே, இலக்கிய வழக்கிற் புகுமுன்பு தானும் மறைந்தொழிவனவும் பலவாதல் வேண்டும்; அன்றியும் இவற்றிற்பெரும்பாலன, தோன்றிய அவ்வக் காலத்திற் பொருளுணர்தற்கு எளியவாய்ப் பின்பு உணர்தற்கு அரியவாயிருக்கும். அறிவுக் கூட்டுறவினுல் விளைந்த சொற்கள் அறிஞர்களிடையே புகுவன; தாழ்த்தலின்றி இலக்கிய வழக்கில் உடன் இடம்பெறுவன; பொருள் வரையறுத்துணர்தற்கு இயல்வன; மொழியின் வாழ்வில் நீடித்து நிற்பன.

3. தமிழிலக்கண நூல்கள் வரலாறு

இலக்கியம் பலவாய்ப் பல்கிப் பெருகி வளரத் தலைப்படுங் காலத்தில் மொழியினை ஒழுங்குபடுத்த எண்ணும் அறிஞர் கண்ட முறையே பழைய மரபு இலக்கணமாகும். தொல்காப்பியர் முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணி இலக்கணம் வகுத்தார் எனச் சிறப்புப்பாயிரம் கூறுகின்றது. இலக்கணம் இலக்கியத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டதன்று; வழக்கு மொழியின் வாழ்வையும் வளத்தையும் மதித்து, அதனையும் தழுவி ஒழுகும் உயர்வுடையது. இதனாற்றான், தொல்காப்பியச் சிறப்புப்பாயிரம் 'வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின் எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடி'த் தொல்காப்பியம் இயற்றப்பட்ட தென்கிறது. இலக்கணம் என்னும் சொல் லக்ஷணம் என்னும் வடமொழிச் சொல்லின் சிதைவு என்பர். ஆனால், இலக்கணம் என்று தமிழில் கூறுவதனை, லக்ஷணம் என்று வடமொழியில் சொல்வதில்லை. வியாகரணம், சப்த சாஸ்திரம் என்று கூறுவார்கள். இலக்கணம் என்ற சொல்லினை முதன்முதல் வழங்கியவர் தொல்காப்பியரே.

தமிழ் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என மூன்று பாகுபாடுகளையுடைய தென்றும், இம் முத்தமிழுக்கும் முன்னோர் இலக்கணம் கண்டன ரென்றும்,இன்றுகிடைக்காத அகத்தியம் முத்தமிழ் இலக்கணமென்றும் சிலர் கூறுவர். ஆனால் இயற்றமிழிலக்கணமே, இலக்கணம் என்னும் பெயருக்குத் தனியுரிமை பூண்டதாய் விளங்குகிறது. தொல்காப்பியர் இத்தமிழுக்கே இலக்கணம் கண்டார். தொல்காப்பியர் எழுத்து, சொல், பொருள் என மூன்று பிரிவில் இலக்கணங்களைக் கூறியுள்ளார். தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் பொருள், உவமை, யாப்பு என்பன பற்றிக் கூறுகின்றார். இம் மூன்றையும் பொருளிலக்கணம், அணியிலக்கணம், யாப்பிலக்கணம் என மூன்று தனியிலக்கணங்களாகக் கொண்டால், எழுத்துஞ் சொல்லு மியையத் தொல்காப்பியம் ஐந்தி

லக்கண நூலாகும். வீர சோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம் என்பனவும் ஐந்திலக்கண நூல்களா கும். நன்னூலும் ஐந்திலக்கண நூலாயிருந்ததென்பர் சிலர். தொல்காப்பியர் எழுத்தும் சொல்லும் ஆய்ந்தார்; பொருளும் ஆய்ந்தார். ஆனல் பின்வந்தோர் எழுத்தும் சொல்லுமே சிறப்பாகக் கருதத் தக்கன என எண்ணினர். இந்நிலையில் எழுத்தும் சொல்லும் பற்றி மட்டும் இலக்கணங்கள் தோன் றின. கி. பி. பன்னிரண்டாம் நூற்றுண்டளவில், எழுத்தும் சொல்லும் உணர்த்தும் நேமிநாதம் தோன்றியது. நன்னூல் கி. பி. பதின்மூன்ரும் நூற்றுண்டில் எழுந்தது. இந் நன்னூல் ஐந்திலக்கணமும் உணர்த்துவதெனக் கொண்டாலும், எழுத் தும் சொல்லுமே நிலைத்தன. எழுத்தும் சொல்லும் இலக்கண மேயாயினும் சொல்லிலக்கணமே இலக்கணம் எனக் கரு தினர். வடமொழி இலக்கண ஆசிரியர் சொல்லிலக்கணத் தையே வியாகரணமெனக் கொண்டனர். வீர சோழியம், நேமிநாதம், நன்னூல் ஆகிய இலக்கண நூல்கள் சொல்லிலக் கணத்தையே பெரிதும் ஆராய்ந்தன. கி. பி. பதினேழாம் நூற்றுண்டிலெழுந்த பிரயோக விவேகமும், இலக்கணக் கொத்தும் சொல்லிலக்கணம் பற்றியே விரிவாக விளக்கின. பழைய இலக்கணுசிரியர் கூறிய சொல்லிலக்கணமும் எழுத்திலக்கணமுமே இன்றைய இலக்கண வாராய்ச்சி யாளர் எடுத்துக்கொள்ளும் விடயங்கள்.

அகத்தியரைப் பற்றியும் அகத்தியத்தைப் பற்றியும் இறையனுர் களவியலுரை கூறுகின்றது. இவ்வுரை அகத்தியம் தலைச்சங்கத்திலும் இடைச் சங்கத் திலும் இலக்கண நூலாக விளங்கியதெனவும் கூறு கிறது. அகத்தியரிடம் பயின்ற மாணவர் பன்னிருவரெனவும் அவருள் தொல்காப்பியரே தலைமைவாய்ந்தவரெனவும் கரு தினர். தொல்காப்பியரோடு ஒருங்கு கற்றவரெனப்படும் பனம்பாரனுர், தாம் பாடிய தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத் தில் அகத்தியரைப் பற்றியும் அவர் மாணவர் தொல்காப்பியர் என்பது பற்றியும் ஏதும் கூருதது ஆச்சரியமாயிருக்கிறது.

தொல்காப்பியரை அகத்தியர்க்கு மாணவரெனக் கொள்வாரை, ' நான்கு வருணத்தோடு பட்ட சான்றோர் ' எனவும் மாணவரல்லர் என்று கூறுவாரை 'வேத வழக்கோடு மாறு கொள்வார்' எனவும் பேராசிரியர் குறித்துள்ளார். முச்சங்கங்களும் அகத்தியரும் பற்றிய கதை, சைவ சமயத்திற்குப் பெருமையும் தொன்மையும் வழங்கி, அது, சமண, பௌத்த சமயங்களை எதிர்த்து நிற்கத்தக்க வலுவுள்ளதாக்கப் பிற்காலத்தோர் கட்டிய கதையென்ற கருத்துக்குப் பேராசிரியர் கூற்று அரண் செய்கிறது. பல்லவர் காலத்திற்கு முன்பு தமிழிலக்கியம் வளம்பெற்றதற்குச் சமண பௌத்த சமயங்களே பெருமளவு காரணமாதலால், பல்லவர்காலச் சைவ சமய மறுமலர்ச்சியின்போது, சிவபெருமானும் முருகப் பெருமானும் சங்கமிருந்து தமிழ் வளர்த்த கதையும் அகத்தியருக்குத் தமிழைக் கற்பித்த கதையும் தோன்றின. தொல்காப்பியரும் தொல்காப்பியமும் யாவராலும் போற்றப்படுதலைக் கண்டு, தொல்காப்பியர் அகத்தியரின் மாணுக்கரெனவும் தொல்காப்பியத்தின் முதனூல் அகத்திய மெனவும் கதை எழுந்தது. இந்துக்களிடமிருந்தே இக்கதை பரவத்தொடங்கக் கூடுமாதலால் இக்கதையை ஏற்பவர் 'நான்குவருணத்தோடுபட்ட சான்ரோர்' ஆகின்றனர். புறச்சமயத்தவரான சமண பௌத்தர் இக்கதையை ஏற்க மறுப்பது இயல்பேயாதலால், அவரை 'வேத வழக்கோடு மாறுகொள்வா' ரெனப் பேராசிரியர் குறித்துள்ளார். பல்லவர் காலத்தில் இந்துமதம் பெற்ற பெருவெற்றியினுற்போலும், இக்கதை தமிழ்நாட்டில் நிலைபெற்றுவிட்டது. அதனுல், புறச்சமயங்கள் அகத்தியரைத் தம்மவராக்க முயன்றன. பௌத்தர் நூலான வீர சோழியம், போதிசத்துவராகிய அவலோகிதரிடத்தில் அகத்தியர் தமிழ் கற்ருரென்கிறது. சமணர், கண்ணனேடு தொடர்புகொண்ட அகத்தியர் ஒரு சமண முனிவரென்பர்.

தொல்காப்பியர் என்ற பெயர் காரணப் பெயராளுல், அந்தக் காரணம் என்ன ? அவருடைய காலம் எது? அவருடைய சமயம் என்ன? என்பன பற்றியெல்லாம் பலவித

மான கருத்துக்களும் தெரிவிக்கப்பட்டுள்ளன. புலவர் சோம. இளவரசு, ‘இலக்கண வரலாறு’ என்ற நூலில் இக்கருத்துக் களையெல்லாம் தொகுத்துக் கூறுகிறார். வையாபுரிப்பிள்ளை அவர்கள் தமிழ்ச்சுடர்மணிகள் என்ற நூலில் தொல்காப்பியர் என்ற பகுதியில் பிறப்பகம், சமயம், காலம் என்ற தலைப்புக் களில் ஆராய்ந்து கூறும் முடிவுகள் மிகவும்பொருத்தமானவை போலக் காணப்படுகின்றன. தொல்காப்பியச் சிறப்புப்பாயி ரத்தில், நூல் அரங்கேற்றப்பட்டது அதங்கோட்டாசானின் முன் என வருதலினால், தொல்காப்பியர் நாடும் அதங்கோடு அதாவது திருவிதாங்கோடு ஆகலாம் என்பர். வையாபுரிப் பிள்ளை தொல்காப்பியரைச் சமணரென்பர். தொல்காப்பியர் காலம் பற்றித் தமிழறிஞரிடையே இன்றும் பலத்த கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. தொல்காப்பியர் சங்க நூல்கள் காலத்திற்கு முந்தியவரா, பிந்தியவரா என்று இன் றும் அறிஞர் வாதிக்கின்றனர். பேராசிரியர் வரதராசன் கலைக்களஞ்சியம்–தொகுதி 5–பக்கம் 479-இல்,தொல்காப்பியர் காலம் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டென்பர். தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் சமணத் தமிழிலக்கிய வரலாற்றில், தொல்காப்பியர் கி.பி. இரண்டாம் நூற்றாண்டை யொட்டிய சங்க நூல்களுக்கு முற்பட்டவரென்பர். வையாபுரிப்பிள்ளை, சங்க நூல்கள் காலத்திற்கு இவர் பிற்பட்டவரென்று கொண்டு, இவர் காலம் கி.பி. நான்காம் அல்லது ஐந்தாம் நூற்றாண்டென்பர். இவை எவ்வாறாயினும் இன்று காணப்படுந் தமிழிலக்கணங்களுள் தொல்காப்பியம் காலத்தால் முந்திய தென்பதில் அறிஞரி டையே அபிப்பிராய பேதமில்லை. தொல்காப்பிய எழுத்ததி காரம் எழுத்துக்களின் பிறப்பும்இயல்பும் திரிபும்பேசுகின்றது. இப்பகுதியில் தொல்காப்பியர் கூறும்எழுத்துக்களின் பிறப்புப் பற்றிய கருத்துக்களை இன்றைய மொழி நூலறிஞர் பாராட்டு கின்றனர்.

சோழப் பேரரசர் காலம் தமிழிலக்கிய வரலாற்றின் பொற் காலம் என்று சிலர் கூறத்தக்க அளவுக்கு, இலக்கிய வளம் மிகுந்திருந்த காலமாகும். இக்காலத்தில் தோன்றிய இலக் கண ஆசிரியர்களுள், சிலர் தொல்காப்பியத்திற்கு உரை

யெழுதினர்; வேறுசிலர் புதிய இலக்கண நூல்கள் இயற்றினர். சோழப் பேரரசர் காலத்திற்குப் பின்னும் ஐரோப்பியர் காலம் வரை, பழைய மரபுத் தமிழிலக்கணங்களும் உரைகளும் தோன்றிக் கொண்டிருந்தன. இவ்வாறு தோன்றிய இலக்கணங்களையும் உரைகளையும் மூவழியினவாக வகுக்கலாம். தொல்காப்பியர் வகுத்ததே தமிழ்மரபு எனக் கொண்டு, அந்த இலக்கணத்தையே அடிப்படையாக வைத்து, இன்றியமையாத இடங்களில் மாத்திரம் புதுமைகளை ஏற்றவர்கள் ஒருசாரார். சோழப் பெருமன்னர் காலத்தில் தமிழ் இலக்கணத் துறையில் உழைத்த சமணர் இவ்வழியையே பின்பற்றினரெனலாம். இளம்பூரணர், குணவீர பண்டிதர், பவணந்தியார், மயிலைநாதர் என்போர் தொல்காப்பிய நெறியையே உள்ளபடி ஏற்கின்றனர். இவர்கள் காலத்தின் பின், சமணர் இலக்கண நூல்களியற்றவில்லை. சைவர்களில் ஒரு சாரார் இவ்வழியைப் பின்பற்றுகின்றனர். தமிழுடன் நெருங்கிய தொடர்புகொண்ட மதுரையில் வாழ்ந்ததாற்போலும் நச்சினார்க்கினியர் பழைய தமிழ் மரபை ஒட்டியே உரை வகுத்துள்ளார். தமிழின் இனிமையில் தன்னைப் பறிகொடுத்த குமரகுருபரர் தாபித்த தருமபுர ஆதீனத்தில் ஆதரவு பெற்றிருந்ததனாற்போலும் வைத்தியநாத நாவலரும் இவ்வழியில் நின்றுள்ளார்.

தொல்காப்பியத்திற்கு உரைகண்டோருள் காலத்தாலும், நூலாசிரியர் உளமறிந்து உரைவகுக்கும் நுட்பத்தாலும் முதல்வராக விளங்கிய இளம்பூரணர் உரையாசிரியர் என்ற சிறப்புப் பெயர் பெற்றார். 'தமிழ்நூல் ஒன்றே வல்ல உரையாசிரியர்' என்று சிவஞான முனிவர் இவரைக் குறைகூறுவர். இவர் காலம் கி. பி. பத்தாம் நூற்றாண்டாகலாம். கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் குணவீர பண்டிதர் தொல்காப்பியத்தின் சுருக்கம் என்று கூறத்தக்க வகையில் நேமிநாதத்தை எழுதினார். தொல்காப்பியர் காலத்தின் பின் தமிழில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு இவர் போதிய இடம் கொடுக்கவில்லை. இந்தக் குறையைத் தீர்ப்பதற்காகப் பவணந்தி முனிவர்

கி. பி. பதின்மூன்ரும் நூற்ருண்டில் நன்னூலை இயற்றினர். மயிலைநாதர் நன்னூலுக்கு ஒரு சிறந்த உரை வகுத்துள்ளார். தொல்காப்பியத்திற்குப் பிறகு நன்னூலே தலை சிறந்த இலக்கணமென அறிஞரால் மதிக்கப்பட்டு வந்தது. பண்டைக்காலத் தமிழுக்குத் தொல்காப்பியம் எப்படி இலக்கணமோ, இடைக்காலத் தமிழுக்கு நன்னூல் அப்படி இலக்கணமெனப்படுகிறது. தொல்காப்பியர் விரித்துக் கூறிய தனைத் தொகுத்து வகைப்படுத்திக் கூறியுள்ளார். புதிதாகப் பதவியல் அமைத்துக் கொண்டார். மயிலைநாதருரை பெரும்பாலும் இளம்பூரண ருரையினையே பின்பற்றிச் செல்கின்றது. நச்சினர்க்கினியரையும் வடமொழி யறியாதவரென்பர் சிவ ஞான முனிவர். ஆனல், இவருரையை நோக்கும்போது, இவர் வடமொழி வல்லாரென்பது பெறப்படும். தொல்காப்பியச் சூத்திரங்கள் சிலவற்றைப் பிரித்தும், சிதைத்தும், கூட்டியும் முன்னும் பின்னும் மாட்டேற்றியும் தன் கருத்துக்களை நிறுவுவார். கி.பி. பதினேழாம் நூற்ருண்டினரான வைத்திய நாத தேசிகர், நன்னூலும் மயிலைநாதருரையும் பல இடங்களில் தொல்காப்பியர் கருத்துக்கு மாறுபடுவது கண்டு, இயன்றவரை நன்னூல் சூத்திரங்களை வைத்துக்கொண்டு, வேண்டிய இடங்களில் திருத்தியும் புத்துரை வகுத்தும் இலக்கண விளக்கமாக்கினர். நூலைப்போலவே, உரையும் முன்ஞேர் மொழி பொருளைப் பொன்னே போற் போற்றுகின்றது. இந்நூல் பல நூல்களின் தொகுப்பாயினும் சில மாற்றங்களும் காணப்படுகின்றன.

தொல்காப்பியர், நன்னூலார் ஆகியோர்கூறிய இலக்கணத்தைப் பொதுவாக ஏற்று, வடமொழி இலக்கணக் கொள்கைகளை இயன்றவரை அதனுள் புகுத்த முயற்சி செய்தனர் சைவ சமயத்தவரெனலாம். இன்றுள்ள தமிழிலக்கண ஆசிரியர்களையும் இலக்கண உரையாசிரியர்களையும் வரலாற்று முறையில் வைத்துப்பார்க்கும் பொழுது, தமிழிலக்கணத்துறையில் பிரவேசித்த முதற்சைவர் சேனவரையரே. சோழப் பெருமன்னர் காலத்தில், கி. பி. பன்னிரண்டாம் நூற்ருண்டு வரை

இவர் வாழ்ந்தவரெனலாம். 'வடநூற்கடலை நிலை கண்டுணர்ந்த சேனவரையர்' என்பர் சிவஞான முனிவர். வடநூல் முடிபுகளையும் கொள்கைகளையும் தமிழ்மொழிக்குரிய இலக்கணங்களில் புகுத்தி அமைதி கூறியவர் சேனவரையர். சைவசமய முதனூல்கள் சங்கதத்திலேயே இருந்ததனாற்போலும், தமிழ்ச் சைவப் பேரறிஞர் சங்கத இலக்கணக் கொள்கைகளைத் தமிழிற் புகுத்தித் தமிழிலக்கணத் துறையில் தனிவழியமைக்க முயன்றது. வடமொழியையும் தமிழையும் ஒருங்கே பேணிவந்த திருவாவடுதுறை யாதீனத்தோடு தொடர்புடைய சங்கர நமச்சிவாயர், சுவாமிநாத தேசிகர், சிவஞான முனிவர் என்போர், சேனவரையர் காட்டிய வழியிலேயே செல்கின்றனரெனலாம்.

வைத்தியநாத தேசிகரும் சுவாமிநாத தேசிகரும் வாழ்ந்த காலமே சங்கர நமச்சிவாயரின் காலமாகும். அவர்கள் நூல் மக்கள் மனத்தில் பெறாத இடத்தை, இவர் நன்னூல் விருத்தி உரை பெற்றது. சிவஞான முனிவர் தனியே ஒருரை செய்யாமல், இவர் உரையோடு தன்னுரையையும் வேண்டிய இடத்தில் சேர்த்துவைத்த செயலே, சங்கர நமச்சிவாயரின் பெருமையைக் காட்டுவதோடு இருவருக்கு மிடையேயிருந்த கருத்தொற்றுமையையும் சுட்டும். சிவஞானமுனிவர் தொல்காப்பிய முதற் சூத்திரவிருத்தி, இலக்கண விளக்கச் சூறாவளி யென்பனவும் இயற்றியுள்ளார். பல இடங்களில் உரையாசிரியரையும் நச்சினார்க்கினியரையும் மறுத்துச் செல்கின்றார். சில இடங்களில் இலக்கண விளக்க ஆசிரியரையும் மறுக்கின்றார். 'வடநூல் உணர்ந்தார்க்கன்றித் தமிழியல்பு விளங்காது' என்பர் சிவஞானமுனிவர். சங்கர நமச்சிவாயர் உரையிலும் சில குறைபாடுகளிருத்தலைக் கண்டு, அதனைத் திருத்தியும் கூட்டியும் விளக்கியும் புதுக்கினார்கள். அப்படிப் புதுக்கிய உரை 'புத்தம்புத்துரை' என வழங்கலாயிற்று. 'பலர் நூல்களினும் பலர் உரைகளினும் சிதறிக்கிடந்த சில விதிகளை ஒவ்வொரு சூத்திரத்தால் ஒருங்கே அறியக்கிடத்தலின் இலக்கணக்கொத்து என்று காரணப்பெயர் பெற்ற தென்கர'

என்பர் இலக்கணக்கொத்து ஆசிரியராகிய சுவாமிநாத தேசிகர். இவர் வடமொழி இலக்கணக் குறியீடுகளேயும் பிற வற்றையும் தமிழாக்கித் தருகின்ருர். இவ்வகையில் இவர் நூல், சேனுவரையர் கருத்தினைத் தழுவிச் செல்கின்றதெனலாம்.

தொல்காப்பிய இலக்கணத்தை மறுத்து, சங்கத மொழி யிலக்கணமும் தமிழிலக்கணமும் ஒன்றேயென்று கொண்டு, சங்கத இலக்கணத்தை அப்படியே தமிழுக்குக்கொண்டுவர நடந்த முயற்சியே தமிழிலக்கணத் துறையில் மூன்ருவது வழியெனலாம். கி. பி. பதினேராம் நூற்ருண்டில் தோன்றிய வீரசோழியம் இந்தக் குறைபாட்டுக்கு இடந்தருகிறது. பண் டிதர்கள் இந்நூலைப் போற்ருததற்கு இது ஒரு காரணம். இன்னெரு காரணம் இது பேச்சு வழக்கிலும் எழுத்து வழக் கிலும் காணப்பட்ட மொழிவழக்குகள் பலவற்றுக்கு இலக்க ணம் கூறுவது. தமிழிலக்கணத்தில், தொல்காப்பியர் வழி, வீரசோழியத்தார்வழியென இருமரபுகளுண்டெனக்கூறலாம். சைவர்களும் சமணர்களும் தொல்காப்பியர்மேல் உரிமை பாராட்டியதால்,பௌத்தராகியதான் தொல்காப்பியர் வகுத்த வழியை விட்டுப் புதுவழியில் செல்லவேண்டும் என்று இந்நா லாசிரியராகிய புத்தமித்திரனுர் கருதியிருக்கலாம். வீரசோழி யத்தார் காலத்திற்கு முன்பே, தமிழில் மணிப்பிரவாள நடை தோன்றிவிட்டது. சில சாசனங்களில் வடமொழி அளவுமீறி இடம்பெற்றது.தமிழ்நாட்டில் பல்லவர்காலத்தொடக்கமிருந்து வந்த வடமொழிக் கல்லூரிகளால் சங்கதக் கல்வி பரவிக் காணப்பட்டது. மேலும் புத்தமித்திரனுர் மகாஞான பௌத்த சமயத்தைச் சேர்ந்தவராக இருக்கவேண்டும். மகாஞான பௌத்தர் சங்கத மொழியையே தம் சமயமொழியாகப் போற்றினர். இக்காரணங்களாற் போலும், வீரசோழியத்தில் வடமொழிச் செல்வாக்கு மிகுந்து காணப்படுகிறது. பெருந் தேவனுர் வீரசோழியத்திற்குச் சிறந்த உரைவகுத்து மொழி நிலையை உணர்த்தும் உதாரணங்கள் தந்துள்ளார். கி. பி. பதினேழாம் நூற்ருண்டின் இறுதியில் வாழ்ந்த சுப்பிரமணிய தீட்சிதர்என்ற சைவ அந்தணரும் பிரயோகவிவேகம்என்னும்

றூலே, சங்கத இலக்கணத்தை எடுத்தாள்வதில் வீரசோழியம் காட்டிய வழியிற் சென்று, இயற்றியுள்ளார். வடமொழிக்கும் தென்மொழிக்கும் உரிய இலக்கண ஒற்றுமையை எடுத்துக் காட்ட முயன்ற நூல் பிரயோக விவேகம். மேலும் வடமொழி வியாகரணத்திற்கு ஏற்பத் தமிழிலக்கணம் இல்லாமையைக் கண்டு வடமொழி வியாகரணத்தைத் தமிழில் நுழைக்க நினைத்த நூலும் ஆகும். பிரயோக விவேகம் என்ருல் சொல்லாட்சியைத் தெரிந்துகொள்வது என்று பொருள்படும்

கி. பி. பதினெட்டாம் நூற்றூண்டிலிருந்து, ஐரோப்பிய மொழியிலக்கணங்களின் செல்வாக்கும் தமிழிலக்கணத் துறையில் காணப்படுகிறது. சங்கத மொழியிலக்கணத்தின் பிடி தளர்கிறது. இத்தாலி நாட்டுக் கிறித்தவரான வீரமாமுனிவர் தொன்னூல் விளக்கம் என்ற தம்முடைய இலக்கண நூலில், பெரும்பாலும் நன்னூலாரையே தழுவிச் செல்கின்ருர். காலத்துக்கேற்ற மாற்றங்களையும் தழுவியுள்ளார். தனக்குக் கிடைத்த இலக்கியங்களிலிருந்து புதிய உதாரணங்கள் தருகிருர். மேலும் வீரமாமுனிவர் இலத்தீன் மொழியில் இலக்கிய வழக்குத் தமிழிலக்கணமும் பேச்சுவழக்குத் தமிழிலக்கணமும் எழுதினுர். இந்நூல்கள் பின்பு ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டன. நன்னூல் காண்டிகையுரையை, ஆறுமுக நாவலர் கி. பி. பத்தொன்பதாம் நூற்றூண்டில் வெளியிட்டார். அதே நூற்றூண்டைச் சேர்ந்த வீர சைவராகிய விசாகப் பெருமாளையர் நன்னூலுக்குக் கருத்துரை, பதப்பொருள், உதாரணம் என்பன உடைய முக்காண்டிகை செய்தாரென்றும், ஆறுமுக நாவலர் வினு, விடை என்னும் இரண்டனையும் அதனேடு சேர்த்து,ஐங்காண்டிகை யாகிய காண்டிகையுரை செய்தாரென்றும்கூறுவர் சிலர். நூல்முழுவதும் தெளிவு மேம் நிற்கத் தொடரிலக்கணத்துக்கு உரிய முக்கியத்துவம் வழங்கி இவர் இயற்றியுள்ள நூல் இலக்கணச்சுருக்கமாகும். சடகோப ராமாநுசாச்சாரியாரும் நன்னூலுக்கு ஒரு காண்டிகையுரை எழுதியுள்ளார். இக்கால முறைப்படி உதாரணங்களைப் பிரித்துக்காட்டிப் புணர்ச்சிவிதி அமைத்துள்ளார். மிக எளிய

முறையில் உரைகூறிச் சென்றுள்ளார். போப்பையர் பள்ளிக்கூட மாணவருக்கேற்ற இலக்கண நூல்கள் எழுதி, ஆங்கிலத்திலும் A Handbook of Tamil Language என்ற நூல் எழுதியுள்ளார். பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த ஆடன் என்பவர் (A. H. Aoden) A Progressive Grammar of Common Tamil என்னும் இலக்கண நூலை, அக்காலத் தமிழ் மொழியின் அமைப்பினை விளக்க எழுதினர். திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்(A Comparative Grammar of the Dravidian Languages) என்ற நூலை ஆங்கிலத்தில் வெளியிட்டவர் கால்டுவெல். சஇலக்கக ணதங்மும் திராவிடமொழிகளின் இலக்கணமும் வேறுபட்டவையென இவர் தமது ஒப்பிலக்கண நூலில் சான்றுகாட்டி நிறுவியுள்ளார். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய தென்னுட்டு மொழிகளின் அடிப்படையான இலக்கணம் ஒன்றே யென்பதை இவரே தெளிவாக உணர்த்தினர். திராவிடமொழியியற் கல்விக்கும் ஆராய்ச்சிக்கும் அத்திவாரமிட்ட இவர் 'திராவிட மொழியியலின் தந்தை' என அழைக்கப்படுதலுண்டு.

———

II தமிழில் பிறமொழி

1. தமிழில் வடமொழி

தமிழோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்ட பிறமொழி வடமொழியே. தமிழுக்கும் வடமொழிக்கும் இடையிலான தொடர்புபற்றி வையாபுரிப்பிள்ளை அவர்கள் இலக்கணச் சிந்தனைகள் என்ற நூலில் ஆராய்ந்து சிறந்த முறையில் தன் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

சங்கத மொழியை 'வடமொழி', 'ஆரியம்', 'தேவ பாஷை' எனப் பலவாருகத் தமிழ்நாட்டில் வழங்குவர். இம் மொழி இன்று இறந்துபோன மொழிகளில் ஒன்றெனக் கணிக்கப்படுகிற போதிலும், இந்திய மொழிகள் அனைவற்றுக்கும் தாய்மொழி என்று கூறத்தக்க முறையில் இருந்து வந்தது. ஆனுல், தமிழ்மொழிக்கு மாத்திரம் வடமொழி செவிலித்தாய் போன்ற உறவுடையது என்று கூறும் வையாபுரிப்பிள்ளை, தன் கூற்றுக்குச் சான்ருகப் பின்வரும் காரணங்கள் காட்டுவர். இலக்கிய வழக்கிலும் பேச்சுவழக்கிலுமாகத் தமிழிலுள்ள சொற்களில் ஒரு பெரும்பகுதி வட மொழிச் சொற்களாம். தமிழ்மொழியில், எக்காலத்து முதன் முதல் இலக்கியங்கள் தோன்றத் தொடங்கினவோ, அக் காலத்துத்தானே வடசொற்களும் தமிழிற் பயின்று வந்திருக்கின்றன. நூற்குரிய விடயங்களெனத் தமிழில் எடுத்தாளப் பட்டவற்றுள், பெரும்பாலன வடமொழியிலுள்ள நூல்விட யங்களாம். கம்பர் இராமாயணக் கதையை வடமொழியி லிருந்தே பெற்ருர். திருக்குறளிலுள்ள கருத்துக்கள் பல வடமொழி நூல்களிலிருந்து பெறப்பட்டன. செய்யுட்குரிய கவிமரபு முதலியவற்றை நோக்கினும் இருமொழிகளும் பெரும்பாலும் ஒத்தியல்கின்றன. மொழியின் வரம்பினை

வருத்துக்கூறும் இலக்கணவிடயத்திலும் வடமொழிக்குத் தமிழ்மொழி பெரிதும் கடமைப்பட்டிருக்கின்றது. வடமொழியிலுள்ள புராதன வியாகரணங்களுக்குத் தொல்காப்பிய முதலிய தமிழிலக்கணங்கள் கடப்பட்டுள்ளன வென்பது பொதுவாக ஏற்கப்படுகிறது. சிவஞானசுவாமிகள் 'வடமொழி யுணர்ந்தார்க்கன்றித் தமிழியல்பு விளங்காது' என்று கூறியது நோக்கத்தக்கது.

பாணினியார் காலத்திலேயே, சங்கத மொழியில் இரு பெரும் பிரிவுகளிருந்தன. வேதத்தில் மட்டும் பயின்று வந்த வைதிக வழக்கும், இதிகாசம் காவிய முதலிய வடமொழி நூல்களனைத்தினும் பயின்றுவரும் இலௌகிக வழக்குமே அவை. பாணினி, வைதிகம் என்றதனை 'வேதம்', 'சந்தஸ்' என்றும், இலௌகிகம் என்றதனை 'லோகம்' 'பாஷை' என்றும் வழங்குவர். இது போன்றதொரு வழக்குவேறுபாடே, தொல்காப்பியப்பாயிரத்தில் 'வழக்குஞ் செய்யுளுமாயிரு முதலின்' என்பதனுல் கூறப்படுகிறது. பாணினியாசிரியர், 'சந்தஸ்' என்று கூறியதற்கு நேராகத் தொல்காப்பியத்தில் 'செய்யுள்' எனப்பட்டது. பிரயோக விவேக உரையிலே 'வழக்காவது உலகவழக்கும் செய்யுள் வழக்குமென இருவகைப்படும். அவற்றை வடநூலார், 'லௌகிகப் பிரக்கிரியை' 'வைதிகப் பிரக்கிரியை என்பர்' என்று சுப்பிரமணிய தீட்சிதரும் கூறுவர்.

தமிழிலக்கண ஆசிரியர் கருதிய சூத்திர இலக்கணமும் வடமொழியாளர் தந்துள்ள சூத்திர இலக்கணமும் தம்முள் முக்கியாம்சங்களில் வேறு படுவனவல்ல. 'சூத்திரம்' என்ற கருத்தும் சொல்லும் வடமொழியினின்று தமிழுக்கு வந்தனவேயாம்.

தொல்காப்பியப்பாயிரத்திலே, 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' எனப்படுகிறது. ஐந்திரம் என்பது வடமொழி வியாகரணங்களுள் ஒன்று. எனவே, தொல்காப்பியர் வடமொழியை நன்கு கற்று அதன்கணுள்ள ஐந்திர வியாகரணத்திலே புலமை பெற்றிருந்தாரென்பது புலனுகிறது.

ஒலிமரபை நன்குணர்ந்த தொல்காப்பியர் வடமொழி முதலிய பிறமொழிச் சொற்களைத் தமிழில் வழங்குமிடத்து, அவ்வொலி மரபோடு இயையவே விதிகளை யமைத்திருக்கின்றனர். எடுத்துக்காட்டாக,

வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும் மே
(தொல். சொல். 395)

சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்
(தொல். சொல். 396)

என்ற சூத்திரங்களைக் காணலாம். வடசொற்கள் தமிழிலே வழங்குமிடத்து, சில சொற்கள் இருமொழிக்கும் பொதுவாயுள்ள எழுத்துக்களால் இயன்றுவரும். கமலம், விமலம் என்பன இவ்வாறு வந்தன. சில சொற்கள் சிதைந்துவரும். ஆணை. நட்டம், கண்ணன் முதலிய பாகதச் சிதைவுகளும் உரைகாரர்களால் அமைக்கப்படுகின்றன. பிறமொழிச் சொற்கள் திரிந்து வருதல் தமிழ் ஒலிமரபுக்கு ஒத்ததாதல் வேண்டும். தான் அமைத்த விதிகட்குத்தானே உதாரணம் காட்டுவார் போன்று, தனது பேரிலக்கணத்திலே பிறமொழிச் சொற்கள் பலவற்றைத் திரித்துத் தொல்காப்பியர் வழங்கியுள்ளார். இவ்வாறு வழங்கிய சொற்கள் இருவகையின. ஒன்று, வடமொழிக்கும் தமிழுக்கும் பொதுவாயுள்ள எழுத்துக்களாலியன்ற வடசொற்களாம். இவற்றைத் தொல்காப்பியர் பெரும்பாலும் திரிக்காமலே வழங்கினர். பிறிதொருவகை பாகதச் சொற்களாகும். பாகதத்தின் ஒலிமரபு பெரும்பாலும் தமிழ் ஒலிமரபோடு ஒத்திருத்தலால், பாகதச் சொற்களை வடிவு சிதையாது, தொல்காப்பியர் வழங்குகிறார். ஒலிமரபிலே சங்கதமுந் தமிழும் வேறுபட்டும், பாகதமுந் தமிழும் நெருங்கித் தொடர்பு பட்டும் இருத்தலினால், பழைய தமிழ் நூலாசிரியர்கள் சங்கத வடிவங்களைக் காட்டிலும் பாகத வடிவங்களையே எடுத்தாண்டுவந்தனர். தொல்காப்பியரும் இவ்

வண்ணமே செய்தனர். சங்கதச் சொற்களைச் சிறிதளவு திரித்துத் தொல்காப்பியர் வழங்கியதற்கு உதாரணம்:- அந்தம், அமரர், அமுதம், அவி, உவமம், உவமை, ஏது, கரணம், கருமம், காரணம், குணம் முதலியன. சங்கதச் சொற்களைப் பாகதத்தின் வழியாகத் திரித்துத் தமிழ்மொழி யோடு வேற்றுமை தோன்றுவண்ணம் தொல்காப்பியர் வழங் கியுள்ள சொற்களுக்கு உதாரணம்:- அரசர், அரணம், அவை, ஆசான், ஆசிரியர், ஆணை; இமை; உரு; ஏமம்; கவரி; பார்ப்பனர் முதலியன.

சங்கதமொழிக் கல்வி இந்திய உபகண்டம் முழுவதும் பரவியிருந்தது. கன்னடம் முதலிய மொழிகளின் இலக்கண நூலார் தத்தம் மொழியைத் தேசியம் என்பர். இக்கருத் 'தோடு பொருந்தவே, 'சொல்லெல்லாம் உரிச்சொல்லேயாம். என்றும், உரிச்சொல் என்பது பதினெண் தேசிகச் சொல் வடசொல்லெனத் தொகையாற் பத்தொன்பதாம்' என்றும் 'தமிழுந்திசைச் சொல்லேயாம்' என்றும் பிரயோக விவேக நூலார் கூறினர். வடசொல்லினின்றும்வேறுபிரித்துத் தேசியச் சொல்லெனக் கூறுவதனுலே, தமிழ் தெலுங்கு முதலிய மொழிகளைப் போலன்றி, அவ்வட சொல் இந்தியா முழு வதுக்கும் பொதுவாகக் கருதப்பட்டது புலப்படுகிறது. இந்திய உபகண்டத்தைச் சேர்ந்த பல்வேறு நாடுகளிலும் பல நூற்றுண்டுகளாக,வடமொழி நூல்வழக்கிலிருந்துவருதலினுல் இந்த நிலை ஏற்பட்டது.

கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலிய ஏனைய இலக்கிய வளமுள்ள திராவிடமொழிகளுக்குரிய இலக்கணங் கள் தாமும் வடமொழியில் எழுதப்பட்டன. சங்கதமொழியின் உயர்வினையும் பொது நிலையையும் முடிந்த முடிவாகக் கொண்டதாலேயே இச்செயல் நிகழ்ந்திருத்தல் வேண்டும் மேலும் இம் மொழிகளின் இலக்கணம் சங்கத மொழியின் இலக்கணத்தோடு நெருங்கிய தொடர்புடையதாகக் கொள் ளப்பட்டிருத்தல் வேண்டும். தமிழ்மொழி பற்றியும் சிலர் இக்

கொள்கை யுடையோராயிருந்தனர் என்பதுற்குப் பெருந்தேவனுர், வீரசோழியம்–தாது-இபின் உரையிலே 'தமிழ்ச் சொல்லிற் கெல்லாம் வடநூலே தாயாகி நிகழ்கின்றமையின், அங்குள்ள வழக்கெல்லாம் தமிழுக்கும் பெறும்' என்பது சான்ருகின்றது.

வடமொழி நூல்களுக்குள்ளே வியாகரணம் என்னுந் துறை பற்றியன எண்ணிறந்தன. வியாகரணத் துறையிலே, இந்திரன் முதலிய ஒன்பதின்மர் ஒன்பது வகைப்பட்ட நூல்களை இயற்றினரென்பர். பிரதிசாக்கியங்களே முதன் முதல் தோன்றிய வியாகரண நூல்கள். பின்னர்ப் பன்னெடுங் காலமாக, இத்துறையிலே இலக்கணவாசிரியர்கள் உழைத்து வந்தனர். இவ்வுழைப்பின்பயனுக, வடமொழி வியாகரண மென்பது பல அம்சங்களிலும் பூரணத்துவம் பெற்றது. பிற மொழிகளுக்குரிய வியாகரணம் இயற்றுவோர்க்கு ஓர் எடுத்து காட்டாக அமைந்தது; அவர்கள் நூலியற்ற வேண்டும் நெறி இன்னதென்று வழிகாட்டிற்று. தொல்காப்பியர் வடமொழி வியாகரணத்திற் பயின்று வரும் சங்கதச் சொற்களிற் சில வற்றை மொழி பெயர்த்துக் கொண்டனர். அளபு (மாத்ரா); அவையல்கிளவி (அஸப்யம்) ; தகுதி (யோக்யதா); தொகை (ஸமாஸம்); வேற்றுமை (விபக்தி) இங்ஙனம் மொழி பெயர்த்தல் கூடாது என்று தான் கருதிய இடங்களிலும் மொழிபெயர்ப்புப் பல பொருளுடைத்தாய்ப் பொருள் மயக்க மேற்படுத்துமெனக் கருதிய இடங்களிலும் சங்கத மொழிச் சொற்களை யேனும் அவற்றின் பாகத வடிவுகளை யேனும் எடுத்தாண்டுள்ளளார் தொல்காப்பியர்:-அதிகாரம், உத்தி, காண்டிகை. ஞாபகம், படலம், பிண்டம், வாணிகம், வைசிகன். சில சங்கதப் பதங்களின் இலக்கணங்களையும் விபரங்களையும் அவர் மொழி பெயர்த்தும் அமைத்திருக்கிருர்.

'கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை
'நுண்ணிதி னுணர்ந்தோர் கண்டவாறே'

என்ற தொல்காப்பியம் எழுத்ததிகாரச் சூத்திரம்,சங்கதமொழியிலுள்ள இரண்டு சுலோகப் பகுதிகளின் பொருளைச் சுருங்க உரைத்ததாகும் என எடுத்துக் காட்டுவர் வையாபுரிப்பிள்ளை.

வடமொழியில் அதிகரணம் எனப்படும் உத்தியைத் தொல்காப்பியர் தமிழ்ப்படுத்தும் போது, அதற்கு வடமொழி நூல்களில் கொடுக்கப்படும் விளக்கத்தை அனுசரித்து 'நுதலியதறிதல்' என விவரித்துக் குறியீடு செய்வர்.

வையாபுரிப்பிள்ளை தன்னுடைய தமிழின் மறுமலர்ச்சி யென்ற நூலிலுள்ள தமிழிற் சொல்வளர்ச்சி என்ற கட்டுரையில் 'சங்கதச் சொற்களும் பாகதச்சொற்களும் காலப்போக்கில் எவ்வாறு வந்தமைந்தன என விளக்குவர். சங்க நூல்களில் சங்கதச் சொற்களும் பாகதச் சொற்களும் தமிழோடு கலந்துள்ளன. ஆனால் அக்காலத் தமிழ் மொழியில், நூறு சொற்களுக்கு இரண்டு சொற்கள் என்று கூறத்தக்க அளவிலேயே சங்கத பாகதச் சொற்களின் கலப்பு உள்ளது. ஆனால் கலித்தொகையிலும் பரிபாடலிலும் வடசொற்கள் மிகுதியாகவுள்ளன. இவற்றின் பின்தோன்றிய கீழ்க் கணக்கு நூல்களிலும் தேவாரம் திவ்வியபிரபந்தங்களிலும், வடசொற்கள் பரிபாடலின் அளவிலேனும் வழங்கியுள்ளன. திருக்குறளிலும் நூற்றுக்குமேற்பட்ட வடசொற்கள் உள்ளன. சிலப்பதிகாரம், மணிமேகலை என்னுங் காவியங்களில் வட சொற்கலப்பு, சங்க நூல்களிலுள்ளதைப் பார்க்கிலும் எத்தனையோ மடங்கு கூட என்றே கூறவேண்டும். குங்குமம், அலத்தகம் என்பன காவியச் சொற்களென்றே கொள்ளலாம். பின்னர், சமய சாத்திரங்களும் வியாக்கியானங்களும் தோன்றியபோது, அவற்றில் வடசொற்கள் எல்லை கடந்து வழங்கப்பட்டன. வடமொழிச் சொற்களை வடமொழி யுருவோடும் உச்சரிப்போடும் மிகுதியாய்க் கலந்த மணிப்பிரவாள நடையும் புகுந்தது. வடமொழிக் கலப்புக் காலஞ்செல்லச் செல்ல மிகுந்து கொண்டே வந்தது. மொழியியல் அறிவு ஏற்படாத காலத்தில் வாழ்ந்த சுவாமிநாத தேசிகர், 'ஐந் தெழுத்தாலொரு பாடையுமுண்டென்றறையவு நாணுவரறிவுடையோரே, என்று துணிந்து வினவுகிறார். பிரயோகவிவேக மியற்றிய சுப்பிரமணிய தீட்சதர் வடமொழிக்கும்தமிழ்மொழிக் கும் பேதம் கோடி கூறிட்டு ஒரு கூறுண்டோ?எனவினவினர்

இலக்கணவாசிரியர் இவ்வாருக, யாழ்ப்பாண அகராதி, மதுரைத் தமிழ்ச் சங்ககள் அகராதி என்பன இயற்றியவர்கள், இலக்கிய வழக்குப் பேச்சு வழக்கு என்பனவற்றை நோக்காது, வடமொழிச் சொற்களை வரம்பின்றித் தம் அகராதிகளில் புகுத்தினர்.

வீரசோழிய காலத்திற்கு முன்பு, தமிழொலி மரபுக்கேற்ற திரிபுபெற்று தமிழ்ச்சாசனங்களிலிடம்பெற்றவடசொற்களுக்கு எடுத்துக்காட்டு:- அங்கராகம், அரையன், அதிகாரி, அதீதர், அயனம், அர்ச்சிப்பார், அர்ச்சனுபோகம், அரன், அவனி, அவிட்டம் முதலியன. தென்னிந்தியாவில் வடமொழியை எழுதப்பயன்படுத்தப்பட்டஎழுத்துமுறை கிரந்தலிபி. சாசனங்களில், வடசொற்கள் அல்லது வடசொல்லிலுள்ள சில ஒலிகள் கிரந்தலிபியில் எழுதப்படுகின்றன. வடமொழி கற்றவர்கள்வடமொழிக்குரிய சிறப்பொலிகளைத்தமிழ் ஒலிமரபுக்கேற்ப மாற்ருததனுற்போலும், இச்சாசனங்களில் வரும் வட சொற்கள் பெரும்பாலும் கிரந்தலிபியில் எழுதப்படுகின்றன. வடமொழிக்கும் தமிழ்மொழிக்கும் பொதுவான ஒலிகளாலான சொற்களுக்கும் சில சந்தர்ப்பங்களில் கிரந்தலிபி பயன்படுத்தப்படுகிறது. தென்னிந்தியப் பிராமணர் பலரின் பேச்சு மொழியில், வடசொற்கள் இன்றும் இவ்வாறே தமிழொலி மரபுக்கேற்ப மாற்றப்படாமல் உச்சரிக்கப்படுகிறது. சில தனித் தமிழ்ச் சொற்களிற் கூடக் கிரந்தலிபி இடம் பெறுகிறது.

தொல்காப்பியர் சங்கதப் பதங்களைத் தமிழ்ப்படுத்தி வழங்கிய இடத்து, புத்தமித்திரனுர் சங்கதப் பதங்களையே வழங்குகிருர்; படலங்கள் வகுக்கும்போதே, புணரியலைச் சந்திப்படலமென்றும் வினையியலைக் கிரியாபதப் படலமென்றும் பெயரிடுகிருர்; தாதுப்படலம், தத்திதப்படலம், உபகாரகப்படலம் என்றெல்லாம் வடமொழிப் பெயர்களை வழங்குகிருர். பிறவினையைக் காரகமென்கிருர். தொகையைச் சமாசமென்று கூறி, வடமொழித் தொகை வகுப்பை எடுத்துக்

கூறித் தமிழ் உதாரணங் கூறுகிறர், அல்லது தமிழ் வழக்கில் புகுந்த வடமொழியுதாரணங் கூறுகிறர்.

நன்னூலார் கூறிய பதவியலிலக்கணம் தமிழுக்குப் புதியது; அவருக்கு முற்பட்ட தமிழிலக்கண ஆசிரியர் கூருதது வடமொழியில் விருத்தியடைந்த இலக்கண மரபைத் தழுவித் தமிழுக்கேற்ப அமைக்கப்பட்டது. பதவியலின் ஈற்றிலுள்ள ஐந்து சூத்திரங்கள் வடமொழியாக்கம் கூறுகின்றன. ஆரிய மொழி தமிழில் வடமொழியாதல் என அது நன்னூல் விருத்தியுரைகாரரால் விளக்கப்படும். நன். சூத். 146, 'பொதுவெழுத் தொழிந்த நாலேழுந்திரியும்' என்று முடிகிறது. ஆரிய மொழிக்குத் தமிழோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது சிறப் பெழுத்துக்களாகக் காணப்படும் இருபத்தெட்டு எழுத்துக்கள் எவையென இந்தச் சூத்திரத்தில் கூறுகிறர். இந்த இருபத் தெட்டும் தமிழிலே தமக்கேற்ற பொது எழுத்துக்களாய்த் திரிந்துவரும் என்று இந்த சூத்திரத்தில் கூறப்படுகிறது. 'சிறப் பெழுத்துத் திரியுமெனவரையறை கூறவே, பொதுவெழுத்து இயல்பாயுந் தமக்கேற்ற விகாரமாயும் வருமென்பதும் கூறி ஞராயிற்று என்பர்' நன்னூல் விருத்தியுரைகாரர்.

தமிழிலுள்ள வடசொற்களை மூவகையின எனலாம். முதலாவது, ஆரியத்திற்கும் தமிழிற்கும் பொதுவெழுத்தாலாகியன. இவை தற்சமம் எனப்படுபவை. அமலம், கமலம், காரணம் என்பவை எடுத்துக்காட்டுகள். இரண்டாவது, ஆரியத்திற்கேயுரிய சிறப்பெழுத்தாலானவை திரிதல்முதலிய விகாரம் பெற்றே தமிழில் வந்து வழங்குவன. இவை தற்பவம் எனப்படுபவை. சுகி, போகி, சுத்தி என்பன எடுத்துக்காட்டுகள். மூன்ருவது, ஆரியத்திற்குச் சிறப்பாக உரிய எழுத்தாலும் ஆரியத்திற்கும் தமிழிற்கும் பொதுவான எழுத்தாலும் ஆக்கப்பட்ட சொற்கள், ஏற்ற விகாரம் பெற்றுத் தமிழில் வந்து வழங்குவன. இவையும் தற்பவம் எனப்படுவன. அரன், செபம், ஞானம் என்பன எடுத்துக்காட்டுகள். வடிவம் மாறியமைவது தற்பவம், வடிவம் மாருதது தற்சமமெனலாம்.

நன்னூல் சூத்திரங்கள் 147, 148, 149, ஆரியச் சொற்கள் மூவகையாக வடசொற்களாவதைக் கூறுகின்றன. நன். சூத். 150, தமிழ்மொழிக்கும் ஆரியமொழிக்கும் பொதுவான எழுத்துக்களெவை, தமிழிற்கே சிறப்பாக உரிய எழுத்துக்களெவையெனக் கூறுகின்றது. ஆரியத்திற்குச் சிறப்பாக உரிய எழுத்துக்களாலியன்று தமிழில் வடசொல்லாக வரும் சொற்கள், ஏற்ற தமிழெழுத்துக்களைப் பெற்று வரவேண்டும். அதற்குரிய விதி நன். சூத். 147. இடபம், மிருகம், நகம், மேகம், விசயம், பந்தம், பங்கயம், பக்கம் என்பன எடுத்துக் காட்டுகள். தமிழுக்கேயுரிய சொற்கள் சில தமிழ் எழுத்துக் களை மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்களாகக் கொள்ளா. ஆரியச் சொற்கள், இருமொழிக்கும் பொதுவான எழுத்துக் களை முதனிலையாகக் கொண்டவையானாலும், அந்த எழுத் துக்கள் தமிழில் முதனிலையாக வரத்தகுதியற்றவையானால், அவை முதனிலையாக வரக்கூடிய குறிப்பிட்ட தமிழெழுத்துக் களை முதனிலையாகக் கொள்ளவேண்டும். இதற்குரிய விதி நன். சூத். 148. ரகரமுதல் ஆரியச்சொல்லுக்குஅ, இ, உ என்பனவற்றிலொன்றும், லகர முதல் ஆரியச்சொல்லுக்கு இ, உ என்பனவற்றிலொன்றும், யகரமுதல் ஆரியச் சொல்லுக்கு இகர உயிரும், தமிழில் வடசொல்லாக அமையும்போது வர் வேண்டும் ஏன இச்சூத்திரம் கூறுகிறது. அரங்கம், இராமன், உரோமம்; இலாபம், உலோபம்; இயக்கன் என்பன எடுத்துக் காட்டுகள். ஆரிய மொழியில் கூட்டெழுத்துக்கள் அல்லது இணையெழுத்துக்களென ஒருவகையுண்டு. தமிழொலி மரபு இத்தகைய கூட்டை ஏற்பதில்லை. எனவே, இத்தகைய கூட்டெழுத்துக்களும் தமிழில் திரிந்தே வரும். இதற்குரிய விதிதான் நன்.சூத். 149. இணையெழுத்துக்கள் வரும்பொழுது பின்னின்ற யகர ரகர லகரங்களுக்கு இகாரமும், மகரவகரங் களுக்கு உகாரமும், நகரத்திற்கு அகாரமும் மேலேவந்து வட மொழிகளாகும். இணைந்து முன்னின்ற ரகத்திற்குப்பின் உகாரமும் வரும். தியாகம், கிரமம், கிலேசம்; பதுமம், பக்குவம்; அரதனம்; அருத்தம் என்பன எடுத்துக்காட்டுகள். இந்த விதிகளுக்கு அடங்காத திரிபுகளாக, கட்சி, காப்பியம்,

பருப்பதம்; மூலம், அத்தம், ஆதித்தன் என்பன அமை கின்றன.

2. தமிழில் திசைச்சொல்

'வடவேங்கடந் தென்குமரியாயிடைத் தமிழ் கூறு நல்லுலகத்து வழக்கும் செய்யுளும்' ஆய்ந்து தொல்காப்பியம் எழுதப்பட்டது என அந்நூற் பாயிரம் கூறுகிறது. இந்த எல்லைகளுக்குட்பட்ட தமிழகத்தில், இன்றுகூட வெவ்வேறு பிரதேசங்களில், வெவ்வேறு பிரதேசமொழி வழக்காறுகள் காணப்படுகின்றன. இன்றேல், இந் நிலையானால், தொல்காப்பியர் காலத்தில் பிரதேசங்களின் தொகையும் பிரதேச வழக்காறுகளின் தொகையும் இன்றிலும் பலவாக அமைந் திருத்தல் வேண்டும். தொல்காப்பியர் இயற்சொல்லென்றும் திசைச்சொல்லென்றும் சொற்களைப் பாகுபாடு செய்கிறார். இயற்சொல், செந்தமிழ் நிலத்திற்கு உரியது, கொடுந்தமிழ் நிலத்தும் பொருள் வழுவாமலுணர்த்துவதென்றும் திசைச் சொல் செந்தமிழ் நிலத்தைச்சேர்ந்த பன்னிரண்டு கொடுந் தமிழ் நிலத்திற்குரியது, அவ்வந் நிலத்தில் வழங்குவ தென்றும் தொல்காப்பியம் சொல்லதிகாரம் 398. 400–ஆம் சூத்திரங்களிலிருந்து தெரியவருகிறது.

வையாபுரிப்பிள்ளை தன்னுடைய **History of Tamil Language and Literature** என்ற ஆங்கில நூலிலே, செந் தமிழின் தோற்றம் வளர்ச்சி பற்றி ஆராய்ந்துள்ளார். தமிழின் வரலாற்றிலே, செந்தமிழ் என்ற சொற்பிரயோகம் தொல்காப்பியத்தில் முதன்முதல் வருகிறது. சங்க நூல் களில், இந்த வழக்குக் காணப்படவில்லை. செந்தமிழ் நிலத்தின் எல்லையையோ கொடுந்தமிழ் நிலங்கள் பன்னி ரண்டின் பரப்பையோ, தொல்காப்பியர் குறிக்கவில்லை. தொல்காப்பியர் காலத்தில், இவை பலரும் அறிந்தனவாக இருந்திருக்கலாம். உரையாசிரியர்கள் பன்னிரண்டு பிரதே சங்களின் பெயர்களைக் கூறியும், பிரதேச வழக்குகளுக்கு

உதாரணந்தந்தும், செந்தமிழ் நிலம் மதுரையைச் சூழவுள்ள சிறுபிரதேசம் என்று குறித்தும் செல்கின்றனர். இப் பன்னிரு பிரதேசங்களில் குடநாடு, பூலிநாடு, புனனாடு என்னும் மூன்றே சங்க இலக்கியங்களில் பேசப்படுகின்றன ; குட்டுவர், வேளிர், அருவாளர் என்னும் மக்கட்குழுவினரும் குறிக்கப்படுகின்றனர். ஏனைய பிரதேசங்களைப் பற்றிற் சங்க இலக்கியங்களில் எத்தகைய குறிப்புமில்லை.

மதுரைத் தமிழ் எவ்வாறு செந்தமிழாக வந்திருக்கலாம் என்ற வினாவுக்கு விடை ஊகிக்கப்பட வேண்டியதே. மதுரை புராதன பாண்டியரின் புகழ்பெற்ற தலைநகரம். பாண்டியன் மதுரையில் ஆள்வதைப்பற்றி யவன அறிஞர் பிளினி, கி.பி. 77-ல் வெளியான தம் நூலில் கூறுகிறார். இந்தியக் குடா நாட்டின் தென்கோடியில் இந்நகரம் இருந்ததால், அந்நியர் படையெடுப்புகளுக்கு அதிகம் இலக்காகவில்லை. உள்நாட்டு வணிகமும் வெளிநாட்டு வணிகமும் செழித்தன. உரோம நாணயங்கள் தென்னிந்தியாவில் வழங்கின. உரொமரின் சில ரகச் சில்லரைச் செப்பு நாணயங்கள் மதுரையிலேயே வார்க்கப்பட்டுக் கடைத் தெருக்களில் புழங்கின. அரசியல், வணிக காரணங்களால் நகர் செல்வச் செழிப்புடையதாயிருந்தது. நகரில் நடந்த சமய விழாக்கள் கேளிக்கைகளும் மக்களைக் கவர்ந்தன. நகரிலிருந்த பட்டி மண்டபங்களில் சமய வாதங்களைக் கேட்பதற்காக, மக்கள் வந்து கூடினர். கல்வி நாடியும் மக்கள் மதுரைக்கு வந்தனர். இவற்றால் நகர் மக்களுக்கும் வெளியூர் மக்களுக்கும் தொடர்பு கூடியது. அந்நியர் நகரெல்லைக்குள் குடியேறத் தொடங்கினர். இவற்றால், நகரில் வழங்கிய தமிழ் அப்பிரதேசத்திற்குரிய இயல்பை இழந்து முழுத்தமிழ் நாட்டிற்கும் உரியதாயிற்று. பாண்டிய மன்னர் புலவர் அவைகளை வைத்திருந்தனர். இவை இலக்கியங்களின் தகுதியை ஆராய்ந்து நிர்ணயம் செய்தன. இதனால், அறிஞர்கள் இலக்கிய வழி அறிவதற்கு மதுரையை நோக்கினர். பாணர் புலவர் முதலியோர் தமிழ்நாடெங்கணும் சுற்றித் திரிந்து மன்னரைப் பாடி வாழ்ந்தனர். தமிழ்நாடு முழுவதும் ஏற்கக்கூடிய மொழி விருத்தியடைவது இதனாலும்

அவசியமாயிற்று. புலவர் பேசிய தமிழே செந்தமிழாயிருக்கலாம். உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே என்று தொல்காப்பியரும் மரபியலில் கூறுவது கவனிக்கத்தக்கது.

செந்தமிழையே இயற்சொல்லாகக் கொண்டு, இலக்கணம் எழுதிய தொல்காப்பியர், பிரதேசத்தமிழ் வழக்காறுகளைத் திசைச்சொல் என்கிறார்.

செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்துந்
தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி

—தொல். சொல். 400.

சேனாவரையர் கூறும் பன்னிரு நிலமாவன :—பொங்கர் நாடு, ஒளிநாடு, தென்பாண்டிநாடு, குட்டநாடு, குடநாடு, பன்றிநாடு, கற்காநாடு, சீதநாடு, பூழிநாடு, மலைநாடு, அருவாநாடு, அருவாவடதலை என்பன. தென்பாண்டி நாட்டார் ஆ, எருமை என்பவற்றைப் பெற்ற மென்றும் தம்மாமி யென்பதனைத் தந்துவை யென்றும் வழங்குப என்பர் சேனாவரையர். நன்னூல் மயிலை நாதருரையில் வரும் பன்னிரு நாடாவன:- தென்பாண்டிநாடு, குட்டநாடு, குடநாடு, கற்காநாடு வேணாடு, பூழிநாடு, பன்றிநாடு, அருவாணாடு, அருவாவடதலை, சீதநாடு, மலாடு, புனனாடு என்பன. சேனாவரையர் கூறியவற்றில், பொங்கர்நாடு, ஒளிநாடு, என்ற இரண்டையும் மயிலை நாதர் கூறவில்லை. மயிலைநாதர் குறிப்பிடும் வேணாடு, புனனாடு என்பன சேனாவரையத்திலில்லை. மலாடு என்பது மலைநாடு என்பதன் மரூஉ. உரையாசிரியர் பலர் மயிலைநாதர் கூறியமாதிரியே, நாட்டுப்பேர் கூறுவர். சில பிரதேசப் பெயர்கள் தொல்காப்பியர் காலத்திலும் பிற்காலத்திலும் மாறாமல் இருந்திருக்கும். சில, வெவ்வேறு காலங்களில் வெவ்வேறாக மாற்றமடைந்திருக்கும். சேனாவரையர் செந்தமிழ் நிலத்திற்குக் கூறும் எல்லை 'வையையாற்றின் வடக்கும் மருதயாற்றின் தெற்கும் கருவூரின் கிழக்கும் மருவூரின் மேற்குமாம்'. மயிலைநாதர், இளம்பூரணர், நச்சினார்க்கினியர் என்போரும் இதே கொள்கையினரே.

சேனாவரையர் முதலியோர் செந்தமிழ் நிலமாகக் கூறிய விடம் பெரும்பாலும் பாண்டி நாட்டிற்கப்பாற்பட்டதாய்ச் சோழநாட்டின் தென்பகுதியாயிருக்கின்றது. பாண்டிநாடே தமிழ் நாடென்றும் பாண்டியனே தமிழ் நாடனென்றும் நிகண்டுகள் கூறுகின்றன. 'பாண்டிய நின்னாட்டுடைத்து நல்ல தமிழ்' என்று ஔவையாரும், 'கூடலிலாய்ந்த வொண் டீந் தமிழ்' என்று மாணிக்க வாசகரும் பாடியிருக்கின்றனர். முச்சங்கங்களையும் நிறுவி முத்தமிழ் வளர்த்தவர் பாண்டிய ரென்ற கதை பலநூற்றாண்டுகளாக நிலைபெற்று வந்திருக் கிறது. சேனாவரையர் முதலியோர் சோழநாட்டிலொரு பகுதியைச் செந்தமிழ் நாடெனக் கூறியதற்குக் காரணம் சோழப் பேரரசு வளர்ச்சியடைந்து தமிழ்நாடு முழுவதையும் ஆண்ட காலத்திலும் அதனைத் தொடர்ந்து அண்மையிலும் அவர்கள் வாழ்ந்த தாகலாம். சோழநாட்டு வழக்குகள், அவர்கள் காலத் தமிழ்நாடெங்கணும் விசேட மதிப்புப் பெற் றிருந்தனவாகலாம்.

பன்னிரண்டு கொடுந்தமிழ் நிலங்களிலுமுள்ள வழக்குகள் திசைச் சொல்லாக வந்தமைவதுபற்றி, மயிலைநாதரொருவரே எடுத்துக்காட்டுகள் தந்துள்ளார். 'தென்பாண்டி நாட்டான் ஆவினைப் பெற்றமென்றும் சோற்றினைச் சொன்றியென்றும் குட்டநாட்டார் தாயைத் தள்ளையென்றும் குடநாட்டார் தந்தையை அச்சனென்றும் கற்கா நாட்டார் வஞ்சரைக் கையரென்றும் வேணாட்டார் தோட்டத்தைக் கிழாரென்றும் பூழி நாட்டார் சிறு குளத்தைப் பாழியென்றும், பன்றி நாட் டார் செறுவைச் செய்யென்றும் அருவாணாட்டார் சிறு குளத்தைக் கேணியென்றும் அருவாள் வடதலையார் புளியை எகினமென்றும் சீத நாட்டார் தோழனை எலுவனென்றும் மலாடார் தோழியை இகுளையென்றும் புனனாட்டார் தாயை ஆயென்றும் வழங்குவர்' என்பர் மயிலைநாதர். தமிழ்நாடு முழுவதிலுமுள்ள பிரதேச வழக்குகளை முதன்முதல் ஆராய்ந் தவர் மயிலைநாதரே யாகலாம்.

தொல்காப்பியர் தமிழில் பிறமொழிக் கலப்பு ஏற்பட்டதை விரிவாகக் கூறவில்லை. தமிழிற் புகுந்த கிரேக்க சொற்கள்

முதலியன மிகச் சிலவாக இருந்தமையாற் போலும் தொல்காப்பியரால் விதந்து கூறப்படவில்லை. தமிழில் சங்கதம் கலந்ததைத்தான் தொல்காப்பியர் விதந்து வடசொல் என்கிறார். வடஇந்தியாவிலிருந்து பாகதம், பாளி மொழிச் சொற்களும் தமிழில் வந்து கலந்துள்ளன. இவை முறையே சமண, பௌத்த மதங்களின் தொடர்பினால் தமிழுக்குக் கிடைத்தவை. இம்மதங்கள் உயிராற்றலுடன் தமிழ்நாட்டில் உலாவி வந்த காலமுழுதும், இவ்வகைச் சொற்கள் தமிழில் இடம் பெற்றன. இச்சமயங்கள் தாழ்நிலை யடைந்ததும் இவ்வகையான சொற்களின் வரவு நின்றுவிட்டது. கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டிற்குப்பின் எழுந்த பொது நூல்களில் பாகதச் சொற்கள் அருகிய வழக்கின. ஸ்ரீபுராணம் முதலிய பிற்பட்ட சமண நூல்களில் பாகதம் காணப்படுவது வியப்பன்று. தமிழில் இடம்பெற்ற பாகதச் சொற்கள் சில :—உருகணம், அந்தி, முரசம், சாந்து, நகர், இரவு, தானை, பார்ப்பனர் என்பன. தமிழில் இடம்பெற்ற பாளிச் சொற்கள் சில :— ஆணை, அன்னை, பண்டம், கமுகு, கண்ணன், கஞ்சி, உவமம், புளு, தூணம், பளிங்கு என்பன. சங்கதம் எவ்வாறு வைதிக சமயங்களான சைவ, வைணவ முதலியவற்றின் மூலநூல்கள் உள்ள மொழியோ, அவ்வாறே பாகதம் சமண சமய மூல நூல்களும், பாளி பௌத்த சமய மூலநூல்களும் உள்ள மொழிகளாகும். சங்ககால முடிவில் தமிழ்நாட்டில் செல்வாக்குப் பெறத் தொடங்கிய சமணரும் பௌத்தரும் பல்லவராட்சிக் காலத்திலேற்பட்ட வைதிக சமய மறுமலர்ச்சியால் நலிவுற்றுச் சோழப் பேரரசர் காலத்தின்பின் அருகிக் காணப்பட்டனர். பாளி மொழி பாகத மொழியின் ஒரு கிளைமொழியாகக் கருதப்படுவதுமுண்டு.

சமண சமயத்தவர்களால் போற்றப்பட்ட மொழிகளில் ஒன்று கன்னட மொழி. இந்தியக் குடாநாட்டில், கன்னட மொழி பேசும் பிரதேசம், இடைக்காலத்தில் பெரும்பகுதியும் சமணத்தின் கோட்டையாக விளங்கியது. கன்னட மொழியின் ஆதியிலக்கியங்கள் பெரும்பாலும் சமணர்களாலேயே ஆக்கப்பட்டன, ஆந்திரப் பிரதேசத்தில் இந்துக்களும்

பௌத்தர்களுமே, அதே காலத்தில் பெரும்பாலும் செல்வாக்குப் பெற்றிருந்ததனுல், தமிழ்நாட்டுச் சமணத்திற்கு அடிப்புரம் கன்னட மொழிப் பிரதேசத்திலிருந்து கிடைத்திருக்கலாம் போலத் தெரிகிறது. பல்லவராட்சிக்கால ஆரம்பத்திலேயே, தமிழ்நாட்டில் சமண, பௌத்தம் தோற்றுச் சைவ, வைணவ மறுமலர்ச்சி தோன்றிவிட்ட போதிலும், கி.பி. பன்னிரண்டாம் நூற்ருண்டுவரை, சமணம் கன்னட நாட்டில் வலுவிழக்காததனுற்போலும், தமிழ்நாட்டிலும் உயிராற்றலுடன் விளங்கி இலக்கிய, இலக்கண, நிகண்டுத்துறைகளில் பணியாற்றியது. கன்னட மொழியினின்றும் பல சொற்கள், சமணத் தமிழர்களால், தமிழில் அமைக்கப்பட்டன. உதாரணமாக, சிக்குதல், குளிர்தல் (தங்குதல்), ஒள்ளியன் (நல்லவன்), நீம் முதலிய சொற்கள் கன்னடத்திலிருந்து வந்தன. இச்சொற்கள், சமண காவியங்களிலிடம் பெறுகின்றன. சமணர்களைப் போலவே, வீரசைவர்களும் கன்னடச் சொற்களைத் தமது தமிழ் நூல்களில் எடுத்தாண்டனர். வீரசைவம் கன்னட நாட்டிலேயே தோன்றியதனுலும், வீரசைவ முதனூல்கள் கன்னட மொழியிலேயே எழுதப்பட்டமையாலும், விசயநகரப் பேரரசு காலத்தில், வீரசைவத்தைத் தழுவிய தமிழர் சிலர், கன்னட மொழியைப் போற்றினர். ஓது (பூனை), இட்டளம், குலுக்குதல் முதலிய சொற்கள் இவர்களால், கன்னடத்திலிருந்து தமிழில் அமைக்கப்பிட்டன.

சமயத் தொடர்பினுல் மாத்திரமன்றிச் சோழப் பெரு மன்னர் பலதேசங்களிலும் கொண்ட பெருவெற்றியாலும், மொழிக் கலப்பு ஏற்பட்டது. சோழப் பேரரசு தோற்றுவித்த சூழ்நிலையில், பலநாட்டு மக்களும் தமிழ் மக்களோடு கூட்டுறவு கொள்ளலாயினர். தமிழில் கன்னடம், தெலுங்கு முதலிய மொழிகள் கலப்பதற்குரிய சமுதாய நிலை சோழரது வெற்றியால் விளைந்தது. வீரசோழிய உரைகாரர் முருங்கை என்ற சொல் முருங்கா என்ற சிங்களச் சொல்லின் திரிபு என்பர். நன்னூற் காண்டிகையுரை, அந்தோ என்பது சிங்களச் சொல், மாமரத்தைக் கொக்கு என்பது துளுவச் சொல், எருத்தைப் பாண்டில் என்பது தெலுங்குச் சொல் எனக் கூறுகின்

றது. இவையாவும், சோழர் வெற்றிகொண்ட பிரதேசங்களி லிருந்து தமிழில் வந்து கலந்தனவே.

தெலுங்கு அல்லது வடுகுச் சொற்கள், சோழர்களுடைய வெற்றியால் மட்டும் தமிழுக்குக் கிடைத்தனவல்ல. வெற்றியைத் தொடர்ந்து, தமிழரசர் குடும்பமான சோழருக்கும் தெலுங்கரசர் குடும்பமான கீழைச் சாளுக்கியருக்கும் இடையில், கலப்புமண வினைகள் நிகழ்ந்தன. இவ்வாறு, இரு அரச குடும்பத்துக்கும் உரிமையுடையவனாக விளங்கினான் முதற் குலோத்துங்க சோழன். இங்ஙனமே தமிழரும் தெலுங்கரும் கலப்புமணம் செய்துகொண்டனர். ஒருவர் இலக்கிய இலக்கணங்களை மற்றவர் விரும்பிக் கற்றனர். இவ்வாறு ஏற்பட்ட தொடர்புகளால், பல தெலுங்குச் சொற்கள் தமிழில் அமைந்திருக்க வேண்டும். அருவர், மசரதம், தம்மி, கிச்சு, அக்கட என்பன கலிங்கத்துப்பரணி, கம்பராமாயணம் என்ற நூல்களிலிடம் பெற்றன.

சொல்வளர்ச்சி இப்படி ஏற்பட்டு வந்ததனால், நன்னூலாருக்கு ஒரு பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. பிறமொழிகளிலிருந்து வரும் சொற்களுக்காக, வடசொல்லென்பது போல ஒரு புதிய பகுதியைப் பெயரிட, அவர் விரும்பவில்லை. தொல்காப்பியர் திசைச்சொல் என்று வகுத்ததை நன்னூலார் எடுத்துக்கொண்டு, திசைச் சொல்லுக்குரிய இலக்கணத்தை விரிவுபடுத்துகிறார். கொடுந்தமிழிலிருந்து செந்தமிழுக்கு வருவதே திசைச்சொல் என்றிருந்த நிலையை மாற்றி, பிறமொழிகளிலிருந்து வரும் சொற்களும் திசைச் சொற்களே என வகுக்கிறார்.

செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்
ஒன்பதிற் றிரண்டினிற் றமிழொழி நிலத்தினுந்
தங்குறிப் பினவே திசைச்சொ லென்ப—நன். சூத். 273.

தமிழொழி பதினேழ் நிலமாவன :—‘1 சிங்களம் 2 சோனகம் 3 சாவகம் 4 சீனம் 5 துளு 6 குடகம், 7 கொங்கணம் 8 கன்னடம் 9 கொல்லம் 10 தெலிங்கம் 11 கலிங்கம் 12 வங்கம்,

13 கங்கம் 14 மகதம் 15 கடாரம் 16 கவுடம் 17 கடுங்குசலம், தங்கும் புகழ்த்தமிழ் சூழ் பதினேழ் புவிதாமி வையே' என்னுஞ் செய்யுளால் புலப்படுகிறது. இந்த நாடுகள் யாவற்றிலுமிருந்து வந்த சில சொற்களாயினும் நன்னூலார் காலத் தமிழில் வழங்கியிருக்கக் கூடுமோ தெரியாது. அக்கால இலக்கியங்கள் சில இறந்திருக்கும். பேச்சு வழக்கிலிருந்த சொற்கள் பல மாய்ந்திருக்கும். அக்காலத் தமிழையும் ஏனைய பதினேழு நிலங்களில் அக்காலத்தில் வழங்கிய மொழிகளையும் நன்கு ஆராய்ந்தால், அம்மொழிகளிலிருந்து தமிழை அடைந்த சொற்கள் சில புதிதாகத் துலக்கம் பெறுதல் கூடும்.

சோழரது வீழ்ச்சிக்குப் பின்பு, தமிழ்நாட்டிற்கும் ஆந்திர நாட்டிற்கும் உள்ள தொடர்பு வளர்ந்து சென்றிருக்கிறது. விசயநகரப் பேரரசு ஏற்பட்ட பின்பு, தொடர்பு இன்னும் நெருக்கமானது. விசயநகரப் பேரரசு காலத்திலும், அதைத் தொடர்ந்த நாயக்கர் காலத்திலும் தெலுங்கர் தமிழ்நாட்டினை ஆண்டனர். அரசியல், பெருமித வாழ்வு, ஆடையாபரணுதிகள் பற்றிய பல தெலுங்குச் சொற்கள் தமிழுக்குக் கிடைத்தன. ராணுவம், தளகர்த்தர், மனு, ஒயில், கொலு, தலைப்பாகை, கடுக்கன், சாலுவை, துப்பட்டி என்பன அவற்றுட் சில. இந்தக் காலத்தில் தமிழ்நாட்டில், தெலுங்கர் பெருந்தொகையாகக் குடியேறினர். இன்று தமிழ்நாட்டிலுள்ள மக்களில் பத்து வீதம்பேர் தெலுங்கரின் பரம்பரையினர்.

விசயநகரப் பேரரசு அழிவதற்குக் காரணமாயிருந்தவர்கள் இஸ்லாமியர்கள். இவர்களிடமிருந்து சில சொற்கள் தெலுங்கில் அமைந்தன. தெலுங்கின் வழியாகப் பல உருதுச் சொற்களும் அராபிச் சொற்களும் தமிழை அடைந்தன. இஸ்லாமியர் சிலர் தமிழ்நாட்டில் குடியேறியிருந்தனர். திப்புசுல்தான் முதலியோர் ஆதிக்கத்தினுல், இஸ்லாமியர் தொடர்பு தமிழுக்கு நேரடியாகவும் ஏற்பட்டது. எனவே, நேரடியாகவும் உருதுச் சொற்கள், அராபிச் சொற்கள் முதலியன தமிழில் இடம்பெற்றன.

ஐரோப்பியர்களது வரவினால், ஐரோப்பிய மொழிகளின் சொற்கள் தமிழில் கலந்தன. இவர்களுள் போர்த்துக்கீயர்கள் ஏலம், பீரங்கி, ஜன்னல், சாவி முதலிய சொற்களைத் தமிழுக்கு விட்டுச் சென்றுள்ளார்கள். ஒல்லாந்த மொழியிலிருந்து உலாந்தா, தோப்பு, துட்டு முதலிய சொற்கள் தமிழுக்கு வந்துள்ளன. பிரெஞ்சு மொழி பட்டாளம், துருப்பு, குசினி, போத்தல், பரங்கி முதலிய சொற்களைத் தமிழுக்குக் கொடுத்துள்ளது. ஆங்கிலேயர் ஆட்சியில் பல ஆங்கிலச் சொற்கள் தமிழ் மக்கள் பேச்சு வழக்கிற் புகுந்துவிட்டன. இவர்கள் ஆட்சியின் காரணமாக, சலாம், சராசரி, மராமத்து, அசல், கஜூர், திவால், வசூல், லஞ்சம் எனப்பல இந்துஸ்தானிச் சொற்களும் தமிழிற் புகுந்தன.

தெலுங்கரும் இஸ்லாமியரும் இலங்கையை ஆளாததனால், இலங்கைத் தமிழரின் பேச்சு வழக்கில், தெலுங்கு, உருது, அராபிச் சொற்கள் அதிகம் இடம்பெறவில்லை. போர்த்துக்கீயரும் ஒல்லாந்தரும் யாழ்ப்பாணத்தை ஆண்டதனால், இலங்கைத் தமிழரின் பேச்சுத் தமிழில் போர்த்துக்கீய, ஒல்லாந்தச் சொற்கள் பல இடம்பெற்றுள்ளன. பிரெஞ்சுக்காரர் புதுச்சேரி, காரைக்கால் முதலிய இடங்களை ஆண்டதனால், அப்பிரதேசத் தமிழில், பிரெஞ்சு மொழிச் சொற்கள் பல வழங்குகின்றன. இஸ்லாமியரின் பேச்சுத் தமிழிலும் எழுத்து நடையிலும் அரபுமொழிச் சொற்கள் பல காணப்படுகின்றன. ஒருகாலத்தில், சமணரும் வைணவரும் வடசொல்லை அபரிமிதமாகத் தமிழோடு கலந்து மணிப்பிரவாள நடையைக் கையாண்டது போல, இஸ்லாமியர் சிலர் அரபுத் தமிழ் நடையிலும் நூல்கள் எழுதியுள்ளனர். அவர்களுடைய தமிழ்மத நூல்கள் சில அரபு எழுத்து முறையில் வரையப்பட்டுள்ளன.

பிறமொழிச் சொற்கள் பேச்சு வழக்கிலே அதிகம் இடம் பெறுகின்றன ; உரைநடையில் ஓரளவு இடம்பிடிக்கின்றன. செய்யுளில் அந்நிய மொழிச் சொற்கள் அருகியே இடம்பெறுகின்றன. அதனால், எழுத்து மொழியை மாத்திரம் வைத்துக்

கொண்டு, பிறமொழிச் சொற்களுக்கு எல்லைவகுக்க முடியாது. பேச்சுவழக்கில் மாத்திரம் இடம்பெறும் அந்நிய மொழிச் சொற்கள் காலப்போக்கில் வழக்கு வீழவும் கூடும். உரை நடை தற்காலத்தில் முக்கிய இடம்பெறுவதாலும் பேச்சு வழக்கையொட்டி உரைநடையமையவேண்டும் என்ற கருத்து உரம்பெற்று வருவதாலும், இன்றைய பேச்சுவழக்கிலிடம்பெறும் பிறமொழிச் சொற்கள் தமிழ்வழக்கில் நீண்ட ஆயுள் உடையனவாகலாம்.

3. தமிழில் பிறமொழிச்சொல் அமையும்போது ஏற்படும் விளைவுகள்

பிறமொழிச் சொற்கள் ஒருமொழியிற் புகும்போது, பல விளைவுகள் ஏற்படுகின்றன எனலாம். ஒவ்வொரு மொழியிலும், அம்மொழிக்கே யுரிய பிரத்தியேகமான ஒலிகள் காணப்படுகின்றன. தமிழிலில்லாத ஒலிகளையுடைய பிறமொழிச் சொற்களைத் தமிழில் எப்படி எழுதுவது என்பது பிரச்சினையாகிறது. தொல்காப்பியர்காலத் தமிழில் பிறமொழிக் கலப்புப் பெருமளவு இல்லாததனுற்போலும், தொல்காப்பியர் இந்தத் துறைக்கு விரிவாக விதிகள் கூறவில்லை. நன்னூலார்காலத்திலும் அதற்கு முன்பும் சங்கதச் சொற்கள் பெருவாரியாகத் தமிழிற் கலந்தன. சங்கத மொழிக்குச் சிறப்பாக உரிய ஒலிகள் தமிழில் எவ்வாறு அமையும் என்று நன்னூலார் விதிகூறியுள்ளார். ஆங்கிலம் முதலிய ஐரோப்பிய மொழிச் சொற்கள் இன்று பெருந்தொகையாகத் தமிழில் வந்து சேர்கின்றன. போக்குவரத்து வசதிகள் பெருகிக் கொண்டிருப்பதாலும், அறிவியல் வளர்ச்சி மின்வேகத்தில் நடைபெற்றுக் கொண்டிருப்பதாலும், பல இன மக்களோடும் அவர்கள் மொழிகள் முதலியவற்ருேடும் தமிழ்மக்களுக்கும் தமிழ் மொழிக்கும் தொடர்பு நெருக்கமாக ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதனுல், பிறமொழிகளுக்குச் சிறப்பாக உரிய ஒலிகளாலான சொற்களைத் தமிழில் எப்படி எழுதுவது என்பது இன்று பெரும் பிரச்சினை.

எல்லாப் பிறமொழிச் சொற்களேயும் மொழி பெயர்க்க வேண்டும் என்பர் ஒரு சாரார். எல்லாப் பிறமொழிச் சொற்களேயும் தமிழ் ஒலிமரபுக்கேற்பத் திரிக்க வேண்டும் என்பர் இன்னொரு சாரார். தமிழின் ஒலிமரபையும் ஒலியினிமையையும் காப்பாற்றுவதற்காகத் தமிழர் துன்பப்படக் கூடாதென்றும், தமிழரின் நன்மைக்காகத்தான் தமிழ்மொழியிருக்க வேண்டுமென்றும், தமிழுரைநடை முதலியவற்றில் தமிழர் சிலர் பல நூற்ருண்டுகளாகப் பயன்படுத்திவரும் சில கிரந்த எழுத்துக்களேப் பயன்படுத்தலாமென்றும், ஆங்கிலம் முதலிய மொழிகளில் பிறமொழிச் சிறப்பொலிகளேப் புலப்படுத்த இடும் குறியீடுகள் முதலியவற்றைத் தமிழிலும் புகுத்தலாமென்றும் எடுத்துக்காட்டுவர் வேருெரு சாரார்.

பிறமொழிச் சொற்கள் ஒரு மொழியில் அமையும்போது, தமக்கு இயல்பாக இல்லாத புதுப்பொருள் பெற்றுவிடுவதும் மொழி வரலாற்றில் காணக்கூடியதே. பிறமொழிச் சொற்களேயறிந்து அவற்றின் பொருளே முற்றுமுணராதவர்கள் அவற்றை வேறு பொருளில் பயன்படுத்துவதாலும், அவற்றின் பொருளே முன்பு அறியாதவர்கள் அச்சொற்களேக் கேட்கும் போது புதிய பொருள்களுடன் அவற்றைத் தொடர்பு படுத்துவதாலும், இந்நிலே நேர்கின்றது. அதிசய என்ற சங்கதச் சொல், மேன்மை வாய்ந்த, மிகச்சிறந்த என்ற பொருள்களேயுடையது. தமிழில், அதிசயம் என்ற வடசொல், வியப்பு என்ற பொருளேத் தருகிறது. பகா என்ற ஒல்லாந்த மொழிச் சொல் சம்பளம் என்ற பொருளுடையது. தமிழில் வந்து வழங்கும் இச்சொல் இலஞ்சத்தைக் குறிக்கிறது.

சில பிறமொழிச் சொற்கள், தமிழில், தமக்கு இயல்பாக உரியதினும் பார்க்க, விரிந்த அல்லது பரந்த பொருளே உணர்த்துகின்றன. பறங்கி என்ற சொல் Frank என்ற சொல்லின் திரிபென்பர். ஐரோப்பிய வரலாற்று இடைக்கால ஆரம்பத்தில், பிரான்சு நாட்டில் குடியேறிய ஒரு செர்மானிய மக்கட் கூட்டத்தையே இச்சொல் குறித்தது. இச்சொல், ஐரோப்பியர் யாவரையுங் குறிக்க, ஒருகாலத்தில் தமிழ்நாட்

டில் வழங்கியது. பின்பு, வெள்ளையர் யாவரையுங் குறித்தது. இன்றைய தமிழில் வெள்ளையரும் கீழைத் தேயத்தவரும் கலப்புமணஞ் செய்ததனுல் தோன்றிய சந்ததியினரைக் குறிக்க வழங்குகிறது. யவனர் என்ற சொல் Ionians என்ற கிரேக்கச் சொல்லின் திரிபென்பர். கிரேக்கரில் ஒரு பிரிவினரே யவனர். உரோமப் பேரரசு காலத்தில், அப் பேரரசுக்கும் தமிழ்நாட்டுக்கும் வணிகம் நடந்தபோது, கிரேக்கரே தமிழ்நாட்டிற்குக் கப்பலோட்டி வந்தனர். எனவே, கிரேக்கரில் ஒரு பகுதியினரின் பெயரான யவனர் என்பது கிரேக்கர் அனைவரையுங் குறிக்கத் தொடங்கிப் பின்பு உரோமர் முதலியோரையுங் குறித்தது. உரோமப் பேரரசின் வீழ்ச்சியோடு ஐரோப்பியர் தமிழ்நாட்டிற்கு வந்து வணிகம் செய்வது தடைப்பட்டுவிட்டது. இடைக்காலத்தில், மேற்குத் திசையிலிருந்து வந்து தமிழ்நாட்டோடு வணிகம் செய்தோர் அராபியரே. எனவே, யவனர் என்ற சொல், அராபியரைக் குறிக்கத் தொடங்கியது. யவனர் என்பதற்குச் சோனகர் என்றே, அடியார்க்கு நல்லார் உரை எழுதுகிருர்.

பிறமொழிச் சொற்கள் சில, மரபுத் தொடர்களில் ஒரு அங்கமாக அமைவதுமுண்டு. இவன் ஒரு எம்டன் என்பது அத்தகையதொன்று. மற்றவர்களை ஏமாறச் செய்து, எதிரிகளை வெல்லவல்ல ஒருவனை, இத்தொடர் குறிக்கிறதெனலாம். இந்தச் சொல்லின் வரலாறும் சுவையுள்ளது. செர்மனியில் எம்டன் என்ற இடத்தில் செய்யப்பட்ட பிரபல போர்க்கப்பல் ஒன்று எம்டன் என்று பெயரிடப்பட்டது. முதலாவது உலகப் போர்க்காலத்தில், இந்துமகா சமுத்திரத்தில் திரிந்த இந்தக் கப்பல், பிரித்தானியர் முதலியோரது கப்பற் படையைப் பல முறை ஏமாற்றி, அவருக்குப் பெருநட்டம் விளைவித்தது. அந்தக் கப்பலின் பெயரே, தமிழ்மரபுத் தொடரொன்றில் அமைந்தது.

சில தனித் தமிழ்ச் சொற்கள் வழக்கொழிந்து போவதற்கும் பிறமொழிக் கலப்புக் காரணமாகிறது. இத் தனித் தமிழ் சொற்களும் இருவகை. ஒன்று வழக்கிலிருந்த தனித்

தமிழ்ச்சொல், பின் வழக்குக்கு வந்த பிறமொழிச் சொல்லுக்கு எதிர்நிற்கலாற்ருது அழிதல். ஒற்ருடை என்ற சொல் சோழர் காலச் சாசனங்களில் காணப்படுகிறது. ஆயின் இன்று துவாய் என்ற பிறமொழிச் சொல் பெருவழக்குப்பெற, ஒற்ருடை என்ற சொல் வழக்கு வீழ்ந்துவிட்டது. இரண்டாவது, புதிய பொருள் வழக்குக்கு வரும்பொழுது தோன்றும் தனித் தமிழ்ப் பெயரழிய, அப்பொருளுக்குரிய பிறமொழிப் பெயரே வழக்கில் நிலைபெறுதல். கதிரை என்ற பெயர் நிலைபெற்று விட்டது ; நாற்காலி என்ற பெயர் போற்றப்படுவதில்லை.

———

III எழுத்தியல்

1. தமிழ் நெடுங்கணக்கும் வரிவரிவும்

தமிழ் நெடுங்கணக்கின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிய ஆராய்ச்சி ஒரு பிரச்சினையாக இருந்து வந்திருக்கிறதென லாம். ஆழ்ந்த தமிழபிமானத்தினால் எழுந்த கதைகளும் கருத்துக்களும் அவற்றில் நம்பிக்கை வைத்த மேனாட்டறிஞர் சிலர் கொள்கைகளும் உண்மையை மறைக்கும் புகைப் படலங்கள் போலாயின. இந்திய உபகண்டத்தில் இன்று காணப்படும் மிகப்பழைய எழுத்து, இந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரீகத்தைச் சேர்ந்தது. இந்து நதி பள்ளத்தாக்கு எழுத்து பெரும்பாலும் சித்திர எழுத்து என்ற வகையைச் சார்ந்தது. இந்த எழுத்து வழங்கிய அதே காலத்தில் மேற் காசியாவிலும் சீனாவிலும் சித்திர எழுத்தே வழங்கியது. சித் திர எழுத்து எந்த நாட்டில் முதன்முதல் எழுதப்பட்டதென்று இன்று கூறமுடியாது. பல்வேறு நாடுகளிலும் பல்வேறு கலா சாரங்களிலும் சித்திர எழுத்துச் சுயமாகத் தோன்றியிருக் கலாம் எனச்சிலர் வாதிப்பர். ஒருநாட்டில் ஒருகலாசார்த்தில் இந்த எழுத்துமுறை தோன்றியதும், வாணிகம் முதலிய தொடர்புகளால் ஏனைய நாட்டினரும் ஏனைய கலாசாரம் தினரும் இந்த முறையை அறிந்து கைக்கொண்டிருக்கலாம் என்பர் சிலர். சித்திர எழுத்துப் பல்வேறு வளர்ச்சிப் படி களில் சென்று நெடுங்கணக்காக உருப்பெற்ற வரலாற்றை யறியக் கூடிய மூலங்கள் இன்று மேற்காசியாவிலேயே காணப்படுகின்றன. இந்து நதிப் பள்ளத்தாக்கிலுள்ள எழுத்துவடிவங்களில் வளர்ச்சிப் படிகள் காணப்படவில்லை. எனினும் இங்குள்ள எழுத்துக்கள் இந்தியாவுக்கு வெளியி லுள்ள வேறெந்தப் பழைய எழுத்து முறையுடனும் முற்றாக ஒத்துச் செல்லவில்லை. மேற்காசியாவிலிருந்த எழுத்துமுறை,

இந்துநதிப் பள்ளத்தாக்கில் எழுத்துமுறை தோன்றத் தூண்டுகோலாக இருந்திருக்கலாம். ஆனுல், எழுத்துமுறை அங்கிருந்து பெறப்பட்டது என்று உறுதியாகக் கூறமுடியாது. அங்கிருந்து பெறப்பட்டிருந்தாலும், தனித்தன்மை பெற்று வளர்ச்சியடைந்த வடிவங்களே இன்று எமக்குக் காணக் கிடைக்கின்றன எனலாம்.

இந்துநதிப் பள்ளத்தாக்கு வரிவடிவு உலகின் ஏனைய பகுதிகளிலுள்ள சித்திர வரிவடிவிலிருந்து வேறுபடுகிறது. இந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரிகம் அழிந்து ஆயிரத்தைஞ் ஞூறு ஆண்டுகள் வரை பிந்திக் காணப்படும். வரிவடிவு தான், இந்தியாவிலும் காணப்படுகின்றது. இந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரிகத்தைச் சேர்ந்த எழுந்துக்களை வாசிக்க முயலும் அறிஞர்கள், மேற்காசியாவிலுள்ள சித்திர எழுத்துக் களைக் கொண்டும் பிற்கால இந்திய எழுத்துக்களைக் கொண் டும் விளக்கங்கள் தருவர். **Father Heras** என்பவர் பழைய திராவிடமொழி எழுத்துக்களே இங்குள்ளன என்று காட்ட முனைந்தார். ஆனுல், எழுத்துக்களைப்பற்றி அறிஞரிடையே ஏகோபித்த அபிப்பிராயமில்லை; ஏகோபித்த அபிப்பிராய மேற்படுவதற்கும் இன்றுள்ள நிலையில் இடமில்லை என்று கூறி யமைவதே பொருத்தமானது. எல்லா எழுத்து முறைகளுக் கும் சித்திர எழுத்தே அடிப்படையானதால், ஒரு குறிப்பிட்ட எழுத்து முறைதான் ஒரு குறிப்பிட்ட சித்திர எழுத்து முறை யிலிருந்து தோன்றியதென நிரூபிப்பது வில்லங்கம். எழுத்து முறை வளர்ச்சிப்படிகள் கிரமமாக அமைந்திருக்கக் காணப் பட்டால், இது இயலக் கூடியதே. ஆயின், இந்த எழுத்து முறைக்குரிய நாகரிகம் அழிந்து மிக நீண்டகால இடை வெளிக்குப் பின்பே, இந்தியாவில் வேறு எழுத்து முறைகளைக் காட்டும் சான்றுகள் காணப்படுவதாலும், அச்சுயந்திரம் வரு முன்பு எழுத்துவடிவங்கள் வடிவமாறுதல் வேகமாகவும் சர்வ சாதாரணமாகவும் நடைபெற்று வந்ததாலும், இன்று ஆராய்ச்சியுள்ள நிலையில், பழைய எழுத்தையும் பிற்கால எழுத்து முறைகளையும் தொடர்புபடுத்த இயலவில்லை என்று கூறுவதே சிறப்பு.

தமிழெழுத்து முறை மிகத் தொண்மையானதென்ற எண்ணம், அந்த எழுத்துமுறை மேற்காசியாவிலிருந்து நேரே தென்னிந்தியாவுக்கு வந்திருக்கலாம், அந்த எழுத்து முறையே தேவையான மாற்றங்கள் செய்யப்பட்டு வடஇந்தியாவில் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்ற கருத்துக்கள் தோன்றக் காரணமானது. வரிவடிவைக் குறிக்கும் எழுத்து என்ற சொல்லும் புத்தகத்தைக் குறிக்கும் நூல் என்ற சொல்லும் தனித்தமிழ்ச் சொற்களாகப் பழைய தமிழிலேயே காணப்படுகின்றன. தொல்காப்பியம் எழுத்துக்களைப்பற்றி விரிவாக இலக்கணம் செய்திருக்கிறது. எழுத்து என்பது ஒலிகளை மாத்திரமன்றி வரிவடிவையுங் குறித்ததென்பதற்குப் பல தொல்காப்பியச் சூத்திரங்கள் சான்று பகருகின்றன. 'மெய் யீறெல்லாம் புள்ளியொடு நிலையல்', 'எகர ஒகரத் தியற்கையு மற்றே', 'குற்றியலுகரமு மற்றென மொழிப', 'உட்பெறு புள்ளி யுருவாகும்மே' என்னுஞ் சூத்திரங்களெல்லாம் வரிவடிவைச் சுட்டுஞ் சூத்திரங்களே. சிலப்பதிகாரத்தில் இரண்டு இடங்களில், 'கண்ணெழுத்து'க் குறிப்பிடப்படுகிறது. தொல்காப்பியர் காலத்தில் தமிழ் நெடுங்கணக்கு வளர்ச்சியடைந்து காணப்பட்டது என்பது மறுக்க முடியாதது. ஆனால், தொல்காப்பியர் காலமெது என்பதில்தான், இந்தத் தொன்மை பற்றிய பிரச்சினை முடிவு கட்டப்பட வேண்டும். தொல்காப்பியர் காலம் கி.பி. நான்காம் நூற்றுண்டு என்று கொண்டால், இந்தச் சான்றுகள் தமிழின் தொன்மையை நீட்டிச் செல்வதாகக் கூறமுடியாது. தொல்காப்பியர்காலம் கிறிஸ்துவுக்குப் பல நூற்றுண்டுகள் முன் என்றுகொண்டால், தமிழெழுத்துமுறை, அசோகன் சாசனங்களிலுள்ள எழுத்துக்களுக்கு முற்பட்டது என்றேற்படுகிறது. இவ்வாறு கருதிய டாக்டர் பர்ணல் பின்வருமாறு கூறுவர்: 'பினீசியாவிலிருந்து செங்கடலினூடாக வந்த வணிகர் கொண்டுவந்த எழுத்திலிருந்தே, தென்னிந்திய சாசனங்களிலுள்ள எழுத்துமுறை தோன்றியதென்பதே ஏற்கக் கூடிய கொள்கை. இயெமெனிலுள்ள கிமியாறிரிக் சாசனங்களிற் காணப்படும் நெடுங்கணக்கினைப் பலவகையிலும் ஒத்தது

பழைய தமிழ் நெடுங்கணக்கு. உயிரோடு கூடும் மெய், வடிவம்மாறுவது என்பதில் மாத்திரம், இது கிமியாறிரிக் நெடுங்கணக்கிலிருந்து வேறுபட்டு எத்தியோப்பிய நெடுங்கணக்குடன் ஒத்திருக்கிறது'.

தென்னிந்தியாவிற்கு ஆரியர் வருமுன்பே, தமிழரிடம் எழுத்துமுறை யிருந்ததென்றும், ஆரியர் அந்த நெடுங்கணக்கிேேடு வடமொழியொலிகளுக்குத் தேவையான எழுத்துக்களையும் சேர்த்தே, கிரந்தலிபியை ஆக்கினரெனவும், கிரந்த எழுத்திலிருந்தே, இன்றைய தமிழெழுத்துமுறை தோன்றியதெனவும் எல்லிசுத்துரை கூறினர். 'தென்னிந்தியாவில் திராவிட என்ற எழுத்துமுறையிருந்தது, அதிலிருந்து தென்னிந்திய எழுத்துக்கள் தோன்றின; வடஇந்தியாவிலிருந்த பிராமியிலிருந்து வடஇந்திய எழுத்துக்கள் தோன்றின' என்ற கருத்தும் சில அறிஞரிடையே நிலவியது. வடஇந்தியாவில், மௌரியர் ஆண்ட பகுதிகளில் சந்திரகுப்தமௌரியர் காலத்தில் எழுத்துமுறை காணப்படவில்லையென்று அங்குவந்த கிரேக்க தூதுவன் மெகாஸ்தெனே கூறுவதால், தென்னிந்தியாவில் வழங்கிய எழுத்துமுறையைத் திருத்தஞ்செய்து அசோகன் பயன் படுத்தினனென்றுகூடச் சிலர் கூறுவாராயினர். இந்துநதிப் பள்ளத்தாக்குப் பிரதேசத்தில், பிரதேச வழக்காக இருந்த கரோஸ்திலிபியைப் பயன்படுத்திய அசோகன், தென்னிந்தியாவின் தென்கோடியிலிருந்த திராவிட லிபியில் தேவையான மாற்றஞ்செய்து பயன்படுத்துவதிலும் பார்க்கக் கரோஸ்தியையே வழங்க முயற்சித்திருப்பான் என்பதை இவர் நினைத்துக்கூடப் பாராதது ஆச்சரியம்.

'அறிஞர்கள்' சிலரின் கற்பனை இப்படியெல்லாம் சிறகு கட்டிப் பறந்தது, தென்னிந்தியாவிலுள்ள மிகப் பழைய எழுத்துக்களென்று இன்று கொள்ளப்படும் மதுரை, திருநெல்வேலிக் குகைச் சாசனங்கள் அறியப்படுமுன்பே. ஆந்திர நாட்டிலுள்ள பட்டிப்புரோலு என்னுமிடத்திலுள்ள மிகப் பழைய சாசனங்கள் அறியப்பட்ட பின்பு, தென்னிந்திய எழுத்துக்களின் தோற்றம் பற்றிய பிரச்சினை, இன்னும் துலக்

கம் பெற்றது. அசோகன் சாசனங்களின் காலத்தனவே, இச் சாசனங்கள் யாவும் என்று கொண்டனர் அறிஞர் சிலர். குகைச் சாசனங்கள் கி. மு. முதலாம் நூற்றுண்டுக்குரியன என்று வேறுசிலர் கருதுவர். பட்டிப்புரோலுச் சாசனங்களும் குகைச் சாசனங்களும் பிராமி எழுத்திலேயே எழுதப் பட்டுள்ளன. ஆனுல் வரிவடிவிலுள்ள சில வேறுபாடுகளைக் காட்டித் தெனனிந்தியப் பிராமி வேறு, அசோகன் பிராமி வேறு என்று சுட்டச் சிலர் முனைந்தனர். ஆயின் ஒரே எழுத்தே வெவ்வேறு வடிவத்தில் அசோகன் சாசனங்களி லெழுதப்பட்டுள்ளதென்றும், அத்தகைய வேறுபாடே, பட் டிப்புரோலு, குகைச் சாசனங்களிலுள்ள வேறுபாடென்றும் தனி **(A. H. Dani–Indian Palarography)** கருதுகிருர். எனவே, கிறிஸ்து காலத்திற்குச் சிறிது முன்பு, இந்தியாவில் இந்து நதிப் பள்ளத்தாக்குத் தவிர ஏனைய இடங்களிலெல்லாம், பிராமி எழுத்தே வழங்கியதென்பது புலனுகிறது.

வடஇந்திய எழுத்துக்கள் பெரும்பாலும் நேர்கோடு களாக இருக்கத் தென்னிந்திய எழுத்துக்கள் வளைகோடு களாக இருக்கின்றனவே என்பர் சிலர். தென்னிந்தியாவில் பனையோலையே எழுதுவதற்குப் பெரிதும் பயன்பட்டது. பனை யோலையில்,எழுத்தாணியால்நேர்கோடுகள்வரைந்தால்,ஓலை கிழிந்துவிடும். ° இடது கையில் ஓலையை வைத்துக்கொண்டு, வலது கையில் எழுத்தாணிகொண்டு எழுதும்போது, எழுத்தை, ஓலைக்குக்கீழ் இடதுகைப் பெருவிரல் தாங்கி நிற் பதால், எழுத்து இயல்பாகவே வளைகோடு பெற்றுவிடுகிற தென்று கூறுவர். இவ்வாறு வடிவமாற்றம் பெற்ற எழுத் துக்களே, தென்னிந்தியாவில் கல்லிலும் செம்பிலும் பொறிக் கப்பட்டன.

தமிழ் நெடுங்கணக்குச் சங்கதத்துக்குரிய நெடுங்கணக் கிலிருந்தே அமைக்கப்பட்டதென்ற கால்டுவெல் கொள்கை, இன்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. தமிழ்மொழி யின் இலக்கணம் சங்கதச் செல்வாக்கு அதிகமில்லாமலே அமைக்கப்பட்டதாலும்சங்கத மொழிக்கேயுரிய உச்சரிப்புகள்

தமிழருக்குப் பரிச்சயமில்லாததாலும், தமிழொலிமுறைக் கேற்பத் தமிழ்நெடுங்கணக்கு அமைக்கப்பட்டிருக்கிறதைக் காணலாம். சங்கத மொழி நெடுங்கணக்கில் சிலவற்றை நீக்கியும் சிலவற்றைச் சேர்த்தும் தமிழ் நெடுங்கணக்கு அமைந்திருக்கிறது. வடமொழியில் எகர ஒகரக் குற்றெழுத் துக்களின்மையால், தமிழ் வரிவடிவிலும் நீண்டகாலம், இந்த ஒலிகளுக்குப் புறம்பான எழுத்து வடிவங்கள் அமைக்கப்பட வில்லை. வீரமாமுனிவரே, எகர ஏகாரங்களுக்கும் ஒகர ஓகா ரங்களுக்கும் வரிவடிவங்களை வெவ்வேருக அமைத்தவ ரென்பர். வடமொழியிலுள்ள மூக்கொலியாகிய அனுஸ்வாரம் தமிழிலில்லை. வடமொழியில் இல்லாத ஆய்தம் தமிழில் இடம் பெறுகிறது. மெய்யெழுத்துக்களை வரிசைப்படுத்தும்போது, வர்க்க எழுத்துக்களைப் பொறுத்தவரை, தமிழ் தேவநகரியைப் பின்பற்றுகிறது. ஆனல், வர்க்க எழுத்துக்களில், ஒலிப்பில் ஒலியாகிய முதல் மெய்யையும் மூக்கொலியாகிய இறுதி மெய்யையும் ஏற்குந் தமிழ், இடையிலுள்ள மெய்யெழுத்துக் களை விட்டுவிடுகிறது. அரையுயிர்களாகிய யகர வகரங்களை ஏற்றுக்கொள்ளுந் தமிழ், வடமொழியிலில்லாத எழுத்துக் களாகிய ற, ன, ழ, ள என்பனவற்றையும் அவற்ருேடு சேர்க் கிறது. சங்கத நெடுங்கணக்கிற் காணப்படும் ர, ல ஒலிகள், தமிழில் இடம்பெறுகின்றன. வடமொழியிலுள்ள ஸ, ஷ, ஸ, ஹ என்ற எழுத்துக்கள் தமிழ் நெடுங்கணக்கில் இடம்பெற் றனவாகக் கணிக்கப்படுவதில்லை. ஆனல், பேச்சுவழக் கிலும், சிலர் உரைநடையிலும் முறையே இந்த ஒலிகளும் எழுத்துக்களும் ப்யன்படுத்தப்படுகின்றன. எழுத்து வழக் கில், இந்த ஒலிகளுக்கான வரிவடிவம் கிரந்தலிபியிலிருந்து கடன்பெறப்படுகிறது.

கி.பி. ஏழாம், எட்டாம் நூற்றுண்டுகளிலிருந்து, தமிழ் நாட்டில் மூன்று எழுத்துமுறைகள் காணப்படுகின்றன. கிரந்த எழுத்து, தமிழ் எழுத்து, வட்டெழுத்து என்பனவே அவை. பாண்டிய நாட்டிலும் சேர நாட்டிலும் வட்டெழுத்து வழக்கிலிருந்திருக்கிறது. சோழ நாட்டிலும் தொண்டை மண்டலத்திலும் தமிழெழுத்து வழக்கிலிருந்திருக்கிறது.

கிரந்த எழுத்துப் பொதுவாக வடமொழியை எழுதவும் தமிழ்ச் சாசனங்களில் சில வடமொழிச் சொற்களையெழுதவும் பயன்பட்டிருக்கிறது. கிரந்த எழுத்துத் தமிழ்நாட்டில் மாத்திரம் காணப்படுவதாலும் கிரந்த எழுத்துக்கள் பலவும் தமிழெழுத்துக்கள் பலவும் ஒரே வடிவமுடையனவாதலாலும், ஆரியர் தமிழெழுத்துக்களோடு, வடமொழிக்குத் தேவையான சிறப்பெழுத்துக்களையும் சேர்த்துக் கிரந்தலிபியைத் தோற்றுவித்தனரென்பர் சிலர். தமிழ்நாட்டின் தென்பகுதியில் தமிழிற்கே சிறப்பாக உரிய வட்டெழுத்து வழங்கியதால், தமிழெழுத்துக் கிரந்தலிபியிலிருந்து வளர்ச்சியடைந்ததாக வேண்டும் என்றுகொண்டு, கிரந்தலிபிக்குக் கிரந்தத் தமிழெழுத்து என்று பெயரிடுவர் சிலர். ஆனால், மூன்று எழுத்துமுறைகளும் கிட்டத்தட்ட ஒரே காலத்திலிருந்து காணப்படுவதால், அவற்றை வெவ்வேருகக் கொண்டே ஆராயலாம்.

தமிழ்நாட்டில் குகைச் சாசனங்களில் பின்பு, கி.பி. நான்காம் நூற்ருண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் திருநாதர் குன்றுத் தமிழ்ச் சாசனங் காணப்படுகிறது. அதன் பின்பு, பல்லவர்காலச் சாசனங்களே காணப்படுகின்றன. அதனுல், தமிழ்நாட்டிலுள்ள எழுத்துக்களின் தொடர்பான வளர்ச்சியைக் கி. பி. ஏழாம், எட்டாம் நூற்ருண்டுகளிலிருந்தே அறியலாம். அசோகன் சாசனங்களிலுள்ள எழுத்துக்கள், பேரரசு அழிந்தபின்பு, வெவ்வேறு பிரதேசங்களில் வெவ்வேறு மாற்றங்கள் பெற்று வளர்ச்சியடைந்தன. மௌரியருக்குப் பின்பு, ஆந்திரப் பிரதேசத்தைச் சாதவாகனரும் இக்சுவாகு குலத்தினரும் ஆண்டனர். அவர்களுக்குப்பின் பல்லவர் ஆந்திர நாட்டின் தென் பகுதியை ஆண்டனர். இவர்கள் காலங்களிலெல்லாம், அசோகன் கால எழுத்துமுறை மாற்றங்கள் பெற்று வந்தது. பல்லவரும் பாண்டியரும் தமிழ்நாட்டை ஆண்டபோது காணப்பட்ட தமிழ்நாட்டு எழுத்துமுறைகளில் இவ்வாறு மாற்றம் பெற்றுவந்த எழுத்துக்களின் சாயலும், குகைச் சாசனங்களில் இருந்த எழுத்துக்களின் சாயலும், பட்டிப்

புரோலுச் சாசனங்களிலுள்ள எழுத்துக்களின் சாயலுங் காணப்படுவதைச் சிவராமமூர்த்தி 'Indian Epigraphy and South Indian Scripts' என்னுந்தன்னுடைய நூலில் எடுத்துக் காட்டியுள்ளார். கிரந்த எழுத்தும் தமிழெழுத்தும் கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டுவரை பெற்றுவந்த மாற்றங்களை யெடுத்துக் காட்டுகிறார். வட்டெழுத்தைப் பதினோராம் நூற்றாண்டுடன் நிறுத்திவிடுகிறார். பாண்டியநாடு சோழப் பேரரசின் ஆட்சியின்கீழ் வந்ததும், பாண்டிய நாட்டிலும் சோழ நாட்டில் வழங்கிய தமிழெழுத்தே வழங்கத் தொடங் கியது அதற்குக் காரணம். வட்டெழுத்துச் சேரநாட்டில் சில நூற்றாண்டுகளுக்குத் தொடர்ந்து வழங்கியது. கிரந்த எழுத்து இன்றைய மலையாள எழுத்தைத் தோற்றுவிக்க உதவியது. கோபிநாதராவ் என்பவர் Travancore Archaeological Series, Volume I என்பதில், தமிழெழுத்து, கிரந்த எழுத்து, தமிழ் எண்கள், வட்டெழுத்து என்பனவற்றின் வளர்ச்சிப்படிகளைக் காட்டுகிறார்.

அச்சுப் புத்தகங்கள் வெளிவரத் தொடங்கியபின், எழுத்து வரிவடிவங்களில் மாற்றமேற்படுவது நின்றுவிட்டது.

2. சார்பெழுத்து

எழுத் தெனப் படுப
அகர முத
னகர விறுவாய் முப்பஃ தென்ப
சார்ந்து வரன் மரபின் மூன்றலங் கடையே

—தொல். எழு. சூ. 1.

சார்ந்து வருதலைத் தமக்கு இலக்கணமாகவுடைய மூன்றும் அல்லாத இடத்து, எழுத்தென்று சிறப்பித்துச் சொல்லப் படுவன அகரமுதல் னகரம் ஈறாகக் கிடந்த முப்பதென்று சொல்லுவர் என்பர் தொல்காப்பியர். சார்ந்து வருதலைத் தமக்கு இலக்கணமாகவுடைய மூன்று எவையென்பதைத்

தொல்காப்பியம் எழுத்ததிகாரம் இரண்டாஞ் சூத்திரங் கூறும் :–

அவை தாம்
குற்றிய லிகரங் குற்றிய லுகர
மாய்த மென்ற
முப்பாற் புள்ளியு மெழுத்தோ ரன்ன.

குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தமென்ற புள்ளி வடிவினை யுடைய மூன்றெழுத்துக்களும் எழுத்தோடு ஒரே தன்மை யானவையாய் வழங்குமென்பர். நன்னூலாராலும் அவருக்குப் பின்வந்த தமிழிலக்கண காரராலும், எழுத்தெனத் தொல்காப்பியர் கூறியவை முதலெழுத்தென்றும் சார்ந்து வருதலைத் தமக்கு இயல்பாகவுடையவை சார்பெழுத்தென்றும் வழங்கப் படுகின்றன. 'சார்ந்து வரல் மரபு' என்று தொல்காப்பியர் கூறியது சார்பெழுத்தென்ற பெயர் பிற்காலத்தில் தோன்றக் காரணமாகலாம். சார்பெழுத்தென்று பின்னவை பெயர்பெற, முன்னவற்றின் சிறப்பு நோக்கி, அவற்றுக்கு முதலெழுத் தென்று பெயர் வழங்கியிருக்கலாம்.

பிறப்பியலில், தொல்காப்பியர் முப்பது முதலெழுத்துக் களின் பிறப்பிடங்களைத் தெளிவாக்குவர். ஒவ்வொரு முத லெழுத்தும் இன்ன இன்ன. இடத்தில் இவ்வாறு தோன்றும் என வரையறை செய்வர். சார்பெழுத்துக்களைப்பற்றிக் கூறும்போது,

'சார்ந்துவரி னல்லது தமக்கியல் பிலவெனத்
தேர்ந்துவெளிப் படுத்த வேனை மூன்றுந்
தத்தஞ் சார்பிற் பிறப்பொடு சிவணி
யொத்த காட்சியிற் றம்மியல் பியலும்

—(தொல். எழு. 101)

என்பர். சார்பெழுத்துக்கள் தமக்கெனத் தனியே பிறப்பிட முடையனவல்ல, முதலெழுத்துக்களைச் சார்ந்தே அவை பிறப்பன என்ற கருத்துக்களை அவர் இங்கே வெளியிடுகிறுர்.

தொல்காப்பியர் முதலெழுத்துக்கள் முப்பதென்று கொள்ள, வீரசோழியத்தார் அவற்றுடன் ஆய்தத்தையும் சேர்த்து முப்பத்தொன்ருக்குவர். நேமிநாதத்தாரும் வீர சோழியத்தார் கருத்தையே கொள்வர். ஏனைய இலக்கண ஆசிரியர் தொல்காப்பியரைப் பின்பற்றுவர். ஆய்தம் வல் லெழுத்தோடு சார்ந்தே வருகிறது. இது சார்ந்து வரும் வல் லெழுத்தை உரசெழுத்து ஆக்கிவிடுகிறது. ஆய்தத்தைத் தொடர்ந்த வல்லெழுத்து ஒருவகையாகவும் ஆய்தத்தைத் தொடராத வல்லெழுத்து ஒருவகையாகவும் ஒலிக்கின்றன. அதனுல், வல்லெழுத்தில், இருவகை மாற்ருெலிகள் ஏற்படு கின்றன. எனவே ஆய்தத்தை முதலெழுத்தாகக் கொள்ள முடியாது ; இன எழுத்தின்மையால், இதனை மாற்ருெலி (allophone) என்றுகூடக் கொள்ள இயலாது. சார்பெழுத்துக் களின் உச்சரிப்பு அவற்றுக்குமுன் அல்லது பின்வரும் மெய் களிலேயே தங்கியிருக்கிறது. ஆய்தம் சில மெம்மொலிகளின் திரிபு எனலாம். அவ்+து=அஃது ; கள்+தீது=கஃடீது ; அல்+திணை=அஃறிணை. தொடர்ந்துவரும் வல்லின மெய்யி லேயே, ஆய்தத்தின் உச்சரிப்புத் தங்கியிருக்கிறது.

குற்றியலுகரத்தை யெடுத்துக்கொண்டால், அதுவும் முற் றியலுகரமும் ஒலியமைப்பில் பெரிதும் ஒத்துள்ளன. குற்றிய லுகரத்திற்கு இதழ்குவி முயற்சியில்லை. முற்றியலுகரத்திற்கு அந்த முயற்சியுண்டு. இதுதான், நச்சினர்க்கினியர் இவற் றுக்கிடையில் சுட்டும் வேறுபாடு. குற்றியலுகரம் ஒரு குறிப் பிட்ட சூழ்நிலையில் மட்டும் வரும். இந்த இரண்டு காரணங் களால், இது மாற்ருெலியெனலாம். ஆனுல், தொல்காப்பியர் மாற்ருெலி என்ற பொருளில் இதனைச் சார்பொலி எனக்கூற வில்லையென்பது ஏனைய இரண்டும் அவ்வாறின்மையாற் புலப்படும். வன்ருெடர், மென்ருெடர், உயிர்த்தொடர், நெடிற் ருெடர், ஆய்தத்தொடர், இடைத்தொடர் என்று கூறப்படு கின்ற பல தொடர்களில், இது வல்லெழுத்தையூர்ந்து துணை யொலியாக வருகிறது. இது வருமொழியில் மெய் வரும் பொழுது, நிலைபெறுகிறது ; உயிர் வரும்பொழுது, மறைந்து விடுகிறது. அதனுல், இந்த உகரம் ஒலித்துணையாக வந்ததே

யன்றிப் பொருட்புலப்பாட்டிற்கு அடிப்படை அன்று என லாம். குற்றியலுகரத்தின் திரிபாகப் புணர்மொழிகளில் குற்றிய லிகரம் வருகிறது. வருமொழி யகரத்தின் சார்பால் நிலை மொழி உகரம் திரிகிறது. வரகு + யாது = வரகியாது. கேண்ம் + யா என்பதில், யகரத்தின் சார்பால், நுட்பமான இகர ஒலி தோன்றுகிறது. யகரச் சார்பால், இகரம் ஒலித் துணையாக வருவதே குற்றியலிகரமெனலாம். இந்த இகரத் திற்கும் பொருட் சிறப்புத்தரும் தனித்தன்மையில்லை.

இவற்றை ஆராய்ந்தால், சார்பொலிகள் பிற ஒலிகளைச் சார்ந்தே பிறக்கின்றன என்பது புலப்படுகிறது. நன்னூலார் இந்த நுட்பங்களைக் கவனித்ததாகத் தெரியவில்லை. குற்றிய லிகரம், குற்றியலுகரம் என்றால், அரையளவு குறுகி ஒலிக்கும் இகர உகரங்களே என்று அவர் கருதியிருக்கிறார். ஆனால், தொல்காப்பியரின்படி, இகர உகர உயிரெழுத்துக்கள் பிறக்கு மிடங்கள் வேறு; குற்றியலிகர குற்றியலுகரங்கள் பிறக்கு மிடங்கள் வேறு. மாத்திரையில் அல்லது வரிவடிவில் முத லெழுத்துக்களிலிருந்து வேறுபடும் தமிழெழுத்துக்கள் யாவும் சார்பெழுத்துக்கள் என்று நன்னூலார் கொண்டிருக்கிறார் போலத் தெரிகிறது. நன்னூலுக்கு முதலுரை வகுத்த மயிலை நாதர், 'முதலெழுத்தாந் தன்மை அவற்றுக் கின்மையானும் சார்பிற் றோன்றுதலானும் இப்பத்தும் சார்பாகவே கொள்ள வேண்டுமென்பது' என்பர். இலக்கண விளக்கத்தார் மயிலை நாதரின் கருத்தை ஆதரிக்கிறார். சங்கர நமச்சிவாயர், 'உயிர் மெய் உயிரும் மெய்யுங்கூடிப் பிறத்தலானும் ஆய்தம் உயிர் போல அலகு பெற்றும் மெய்போல அலகு பெறாதும், ஒரு புடையொத்து, அவற்றினிடையே சார்ந்து வருதலானும், ஏனைய தத்தம் முதலெழுத்தின் திரிபுவிகாரத்தாற் பிறத்தலா னும் சார்பெழுத்தாயினவெனக் கொள்க' என்பர். தொல்காப் பியர் கருத்தையேற்கும் சிவஞானமுனிவர், நன்னூலார், இலக்கண விளக்கத்தார். மயிலைநாதர், சங்கர நமச்சிவாயர் முதலியோர் கருத்துக்களைத் தொல்காப்பிய முதற் சூத்திர விருத்தியில் கண்டிப்பர்.

சார்பெழுத்துக்களின் தொகைபற்றி, இலக்கண ஆசிரியரிடையே கருத்து வேறுபாடு காணப்படுகிறது. தொல்காப்பியர் மூன்றெழுத்துக்களையே குறிப்பிடுவர். தொல்காப்பியர் குறிப்பிடும் மூன்றுடன் ஏழு உயிரளபெடையையும் இருநூற்றுப்பதினாறு உயிர்மெய்களையும் சேர்த்துச் சார்பெழுத்து இருநூற்றிருபத்தாறு என்பர் இளம்பூரணர். வீரசோழியத்தார் ஏழு உயிரளபெடையுடன் குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக் குறுக்கம் ஔகாரக் குறுக்கம் என்பனவற்றைச் சேர்த்துச் சார்பெழுத்துப் பதினொன்றென்பர். ஏழு உயிரளபெடை, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், இருநூற்றுப்பதினாறு உயிர்மெய், வல்லினமும் மெல்லினமுமாகிய வர்க்க எழுத்துக்கள், அளபெடுக்கும் ய், வ், ல், ள், ஃ யாவற்றையும் சேர்த்து இருநூற்று நாற்பத்து நாலு சார்பெழுத்துக்கள் நேமிநாதத்தாராற் கொள்ளப்படுகின்றன. நன்னூலார் சார்பெழுத்தின் வகை பத்தெனவும் விரி முந்நூற்றறுபத்தொன்பதெனவும் கூறுவர்.

உயிர்மெய்	216
முற்றாய்தம்	8
உயிரளபெடை	21
ஒற்றளபெடை	42
குற்றியலிகரம்	37
குற்றியலுகரம்	36
ஐகாரக் குறுக்கம்	3
ஔகாரக் குறுக்கம்	1
மகரக் குறுக்கம்	3
ஆய்தக் குறுக்கம்	2
மொத்தம்	369

தொல்காப்பியம் எழுத்ததிகாரம் முதற்சூத்திர உரையிலே, இளம்பூரணர் கருத்தையே நச்சினார்க்கினியர் கூறுவர். இலக்கண விளக்கத்தார், தொல்காப்பியர் கூறும் மூன்றெழுத்துக்களையும் இருநூற்றுப்பதினாறு உயிர்மெய்களையும் ஏழு

உயிரளபெடைகளையும் பதினறு ஒற்றளபெடைகளையும் ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம் என்பனவற்றையும் சேர்த்துச் சார்பெழுத்துக்கள் இருநூற்று நாற்பதென்பர். கால் மாத்திரையாக ஆய்தம் என்றும் ஒலிப்பதில்லையெனவும் அதனுல், ஆய்தக்குறுக்கம் என ஒன்றில்லையெனவும் உயிரளபெடை முதலியன சொல்லில் முதலிடை கடையென எங்கு நிற்பினும் தம்மியல்பில் வேறுபடா எனவும் இலக்கண விளக்கத்தார் கூறி, நன்னூலார் சார்பெழுத்தின் விரி முன்நூற்றறுபத்தொன்பதென்பது ஏற்கக்கூடியதன்றென்பர்.

சிவஞானமுனிவர் தொல்காப்பிய முதற்சூத்திர விருத்தியில், சார்பெழுத்துக்கள் பற்றிய தம்முன்னேர் கருத்துக்களைச் சிறப்பாக ஆராய்ந்துள்ளார். சார்ந்துவரல் மரபின் மூன்றும். அகர முதலியன போலத் தனித்து நிற்கமாட்டாமையின், நெடுங்கணக்கினுள் இடம்பெறமாட்டாவாகலால், அவற்றைத் தொல்காப்பியர் முதல் வகுத்துக் கூறுகிருர். கேண்மியா, வரகு என்பனவற்றிற் காணப்படும் இகர உகரம் வேறுரகம்; போன்ம் என்பதிற் காணப்படும் மகரக் குறுக்கம் வேறுரகம். போலும் என்பது போன்ம் எனச் சில இடங்களிற்றிரிதலுண்டு. அரைமாத்திரையாய் நின்ற மகரம் 'ன்ம்' என ஈரொற்ருய் நிற்றலினுற் கால்மாத்திரையாவதுண்டு. ஆனல் முன்பு குறிப்பிட்ட இகர உகரங்கள் அரைமாத்திரை பெறுதல், மகரக் குறுக்கம் போலச் செயற்கையான சூழ்நிலையில் நடைபெறுவதில்லை. அதனுலேதான், அவை குற்றிகரம், குற்றுகரம் என்று குறிப்பிடப்படாது குற்றியலிகரம், குற்றியலுகரமெனக் குறிப்பிடப்பட்டன. இக் குறியீடுகளின் நுட்பத்தையுணராதவர்களே, ஒரு மாத்திரை பெற்று நின்ற குற்றெழுத்துக்கள், சூழ்நிலை காரணமாக, அரைமாத்திரையாய்க் குற்றியலிகரங் குற்றியலுகரமென நின்றதெனக் கொண்டனர். குற்றியலுகரத்தைப் பற்றிக் கூறுந் தொல்காப்பியர். 'குற்றியலுகரமு மற்றென மொழிப' என்னுஞ் சூத்திரத்தால், குற்றியலுகரம் புள்ளி பெறுமென, முற்றுகரத்திற்கும் இதற்கும் வரிவடிவிலுள்ள வேற்றுமையைப் புலப்படுத்தி, உம்மையாற்

குற்றியலிகரமும் புள்ளி பெறுவதைக் கூறி, 'குற்றியலிகர நிற்றல் வேண்டும்' எனவும் 'குற்றியலுகரம் வல்லாறூர்ந்தே' நிற்றல் வேண்டும் எனவும் மொழிந்தாரேயன்றி, இவைபற்றி மாத்திரை குறுகும் என்று கூறவில்லை. குற்றியலுகரம் குற்றியலிகரம் என்பவற்றிலுள்ள குறுகுதல் என்பதற்குக் குறைதல் பொருளென்று கொண்டாலும், குற்றுயிர், குற்றெழுத்தென்றாற்போலத் தம்மிலும் கூட ஒலிக்கும் எழுத்துக்களை நோக்கக் குறுகுமென்றார் என்றுகொள்ள வேண்டும். அப்படிக் கொள்ளாவிட்டால், புணரியலில், 'எல்லா விறுதியு முகர நிறையும்' என்னும்போது, குற்றியலுகரம் முற்றுகரமாக நிற்குமெனப் பொருள்கொள்ள வேண்டும். அப்படிக் கொள்வது பொருந்தாது. எனவே, மகரக் குறுக்கம் போலன்றிக் குற்றியலிகரமுங் குற்றியலுகரமும் ஆய்தம்போல வேறு எழுத்துக்கள்.

ஐகாரக் குறுக்கம் மொழியிடைகடைகளென்னு மிடங் காரணமாகக் குறுகியிசைப்பதுபோலக் குற்றியலிகரக் குற்றியலுகரங்களும் சூழ்நிலை காரணமாகக் குறுகியிசைத்தலின், இவற்றிடை வேற்றுமை கூறப்படவேண்டும். சூழ்நிலை காரணமாகக் குறுகியிசைப்பனவாயின், ஏது, தாது என்னும் வடமொழிச் சொற்களும் அச்சூழ்நிலை காணப்படலால், உகரங்குறுகி ஒலிப்பனவாதல் வேண்டும். அதனால், சூழ்நிலை குற்றியலிகரம் குற்றியலுகரம் நிற்றற்குச் சார்பாவனவேயன்றிக் குறுகியிசைத்தற்குக் காரணமெனக் கொள்ளக் கூடாது. வடமொழியில், அதே சூழ்நிலையிற் குற்றியலுகரங் காணப்படவில்லையே என்றால், குற்றியலுகரம் தமிழுக்குச் சிறப்பெழுத்தெனக் கொள்ளவேண்டும்.

உயிர்மெய்யெழுத்துஞ் சார்பெழுத்தென்பார் சிலர். ஆல் என்னும்பொழுது உயிர் முன்னும் மெய்பின்னு நின்று மயங்கினாற்போல, லா என்னும்போதும், மெய் முன்னும் உயிர் பின்னும் நின்று மயங்கினவேயல்லது, உயிரும் மெய்யுமாகிய தன்மை திரியாமைக்கு 'மெய்யோடியையினு முயிரியறிரியா' என்னுஞ் சூத்திரமே சான்றாகியது. உயிர்மெய்யாக எழுத்து

உருப்பெற்ற பொழுதும், குறின்மை, நெடின்மை என்னு முயிர்த்தன்மையும் வன்மை மென்மை இடைமை என்னு மெய்த்தன்மையுந்தம்மியல்பிற்றிரிவதில்லை. மெய்யின்மேல் உயிர்வந்துசேர்தல் பொன்மணிபோல இயல்புப் புணர்ச்சி. மெய்யெழுத்துக்களெல்லாம் தனித்து நின்றவழியே மாத் திரை கொள்ளவும் எழுத்தெண்ணவும் படுமாகளின், அவ் வியல்பு அறிந்துகொள்வதற்குத் தனித்து நின்றமெய்யை ஒற்றெனவும் புள்ளியெனவும் உயிரோடு கூடியமெய்யை உயிர்மெய்யெனவுஞ் சிறப்புப் பெயரிட்டாளுதல் தொல்காப் பியர் கருத்து. உயிரோடு கூடியவிடத்து வரிவடிவு வேறு படுதலின், அதுபற்றிப் ‘புள்ளியில்லா மெய்யும்’ என மெய் மேல்வைத்துச் சூத்திரஞ் செய்து வரிவடிவிலக்கணங் கூறி னரேயன்றி, ஒலியெழுத்திலக்கணம் கூருமை கவனிக்கத் தக்கது. ஐகாரக் குறுக்க முதலியன, ஒரு காரணம் பற்றிக் குறுகினவாகலின், சிறு மரம் பெருத்தபொழுதும், பெரு மரஞ் சிறுத்த பொழுதும் வேறொரு மரமாகாதவாறுபோல, வேறெழுத்தெனப் படா. உயிர்மெய், உயிரளபெடை, ஐகா ரக்குறுக்க முதலிய எழுத்துக்களைச் சிறிது திரிந்தமை பற்றி, வேறெழுத்தென வடமொழியிலக்கணவாசிரியரும் கொள்வதில்லை. வன்றொடர் மொழிக் குற்றியலுகரம் வல் லெழுத்து வருவழிக் கால் மாத்திரையாய்க் குறுகுதலின், அதுபற்றி அதனைக்குற்றியலுகரத்தின் வேருகக் கொள்ளாத தொல்காப்பியருக்கும் இவையெல்லாம் சார்பெழுத் தென் றல் உடன்பாடாக முடியாது.

ஐகாரம் மொழி முதற்கண்ணுங் குறுகுமெனவும், கை, பை முதலியனவும் பொருளைச்சுட்டும் வழிக் குறுகுமெனவும் கொண்டனர் சிலர். இடையன், மடையன், திணை, பணை யென்னும்போது குறுகுதல்பொல ‘வைகலும் வைகல் வரக் கண்டும்’ என்னும்போது ஐகாரம் மொழி முதலிற்குறு காமை செவி கருவியாகவுணரப்படுகிறது. ‘வைகலும் வைகல்’ என்னும்போது குறுகினதெனக் கொண்டால், வைகலென்பதனைக் குறிலிணை யொற்றென்று கொள்ள வேண்டி ஏற்பட, வெண்பாவுக்குத் தவறக்கூடாத வெண்

டனே சிதையும். ஐகாரந்தன்னை எடுத்துக் கூறும் வழியன்றிச் சொல்லில் அமைக்கும்போது எவ்விடத்துந்திரியுமெனக் கூறுதல் 'மொழிப்படுத் திசைப்பினுந் தெரிந்துவேறிசைப்பினு மெழுந்திய றிரியா வென்மனார் புலவர்' என்ற தொல்காப்பியச் சூத்திரத்தோடு முரண்படுகிறது. 'ஔளபாகு மிடனுமா ருண்டே' என்னும் ஐகாரக் குறுக்கத்தைக் கூறுந் தொல்காப்பியச் சூத்திரத்திற் காணப்படும் உம்மையால், ஔளபரகாவிடனு மாருண்டென்பதுதானே பெறப்படுதலால், இங்கு இடமாவது மொழி முதலிடைகடையென மூன்றேயன்றி வேறின்மையால், ஐகாரம் மொழி முதலிடத்துக் குறுகாது எனக் கொள்ளவேண்டும். இங்குக் காட்டிய காரணங்களாலும், தொல்காப்பியர் குறிப்பிடாமையாலும், 'குறுகிய மூவுயிர்' என்று வேறு இலக்கண வாசிரியர் மொழிந்தாலும், ஔகாரக் குறுக்கம் என ஒன்றில்லையெனலாம். எழுத்தின் குறுக்கமாவது, கூறப்பட்ட மாத்திரையிற் குறைவாக வுச்சரித்தல்.

நன்னூல் உரையாசிரியர்கள், சார்பெழுத்துக்கள் 'தம்மொடுதாம்சார்ந்து' வருமென்பர். 'க' என்றஉயிர்மெய்யெழுத்தில், ககரமெய் அகரவுயிரைச் சார்ந்துவருகிறது அல்லது அகரவுயிர் ககர மெய்யைச் சார்ந்து வருகிறதெனலாம். ககரவுயிர் மெய்யையே, 'தம்மோடு தாம் சார்ந்து' வருவதென எப்படிக் கூறலாம் என்று புரியவில்லை. தொல்காப்பியம் எழுத்ததிகாரச் சூத்திரம் 46, 'மெய்யினியக்கம் அகரமொடு சிவணும்' என்று கூறுவதற்கேற்ப, ககர ஙகர உயிர்மெய்க்கள் ககர ஙகர மெய்களைக் குறிக்க வழங்குதல் காணக்கூடியதே. தொல்காப்பியரும் ககர ஙகர மெய்களைக் குறிப்பதற்குக் ககர ஙகர உயிர்மெய்களை வழங்கியுள்ளார். வரிவடிவில், கா, கி, கீ என்பவற்றைக் குறிக்கும்போது, ஆகார இகர ஈகாரங்களைச்சுட்டும் அடையாளங்கள் ககரமெய் வடிவத்தில் எழுதப்படாது, ககரவுயிர்மெய் வடிவத்தில் எழுதப்படுதலும் கவனிக்கத்தக்கது. இத்தகைய காரணங்கள், நேமிநாதத்தாரையும் நன்னூலாரையும் பிறரையும் உயிர்மெய்யைத் தனியொலியாகக் கருதத்

தூண்டியிருக்கலாம் என்பர் டாக்டர் **P. S.** சுப்பிரமணிய சாஸ்திரி. அளபெடை, ஐகாரக்குறுக்கம் என்பனபற்றித் தொல்காப்பியம் எழுத்ததிகாரம் 5, 6, 57-ஆம் சூத்திரங்கள் கூறுகின்றவெனினும், அவை சார்பெழுத்துக்களில் அங்கு சேர்க்கப்படவில்லை.

குற்றியலுகரம் முற்றுகரத்திலிருந்து அளவிலும் தன்மையிலும் வேறுபட்டுப் புணரியலிலும் வேறுவிதி கொள்கிறது. தமிழ்மொழியில் இந்த ஒலி பெறும் முக்கியத்துவத்தைக் கருதிப்போலும், புணரியலில் இந்த ஒலி அடையும் மாற்றங்களை விளக்கத் தொல்காப்பியர் குற்றியலுகரப் புணரியல் என ஒரு முழு இயலே ஒதுக்கியுள்ளார். குற்றியலுகரம் வல்லெழுத்துக்கள் ஆறனையும் ஊர்ந்து, நெட்டெழுத்தின் பின்னும் தொடர்மொழியினிறுதியிலும் வரவேண்டும் (தொல். எழுத். 36). நுந்தை என்ற சொல்லில்வரும் உகரமும் குற்றியலுகரமே (தொல். எழுத். 67). நுந்தை என்ற தனி எடுத்துக்காட்டைவிட, ஏனைய இடங்களில் வரும் குற்றியலுகரங்கள் யாவும், சொல்லின் ஈற்றில் வல்லின மெய்யின்மேல் ஏறிவருகின்றன. புணரியலில், குற்றியலுகர ஈறுகள், உயிர்வந்து ஒன்றும் பொழுது, உயிரேற இடங் கொடுத்து நிற்கின்றன. தெலுங்கு மொழியில், எந்தச் சொல்லும் மெய்யெழுத்தை ஈருகக் கொள்ளாது, உயிரெழுத்திலேயே முடியும். ஏனைய திராவிடமொழிகளில், மெய் யெழுத்துக்களில் முடியும் சொற்கள், தெலுங்கில் வழங்கும் போது, பெரும்பாலும் ஒலித்துணை உயிராக உகரத்தைக் கொள்ளுகின்றன. மெய்யெழுத்துக்களில் முடியும்செந்தமிழ்ச் சொற்கள் பல, பேச்சுத் தமிழில், கல்லு, நெல்லு, எள்ளு, பேரு என உகரத்தை ஒலித்துணையாகக் கொள்ளுகின்றன. சொல்லின் இறுதிநிலைவகுத்த தமிழிலக்கணகாரர் யாவரும் வல்லெழுத்துக்களை நீக்கியே விதிசெய்தனர். சொல்லின் இறுதியிற்காணப்பட்ட வல்லெழுத்தை உச்சரிப்பதை எளிதாக்கும் பொருட்டே, குற்றியலுகரம் ஒலித்துணையாக ஒருகாலத்தில் வந்து சேர்ந்ததாகலாம்.

வீரசோழியம், நேமிநாதம், நன்னூல், இலக்கணவிளக்கம், பிரயோக விவேகமென்பன, ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஐஇ, ஓஒ, ஔஉ என்பன மூன்றுமாத்திரையுடைய உயிரளபெடையான சார்பெழுத்துக்களெனக் கொள்கின்றன. முதலெழுத்தல்லாதன சார்பெழுத்தெனவும், நெட்டெழுத்தின் அளவு இரண்டு மாத்திரையேயெனவும், நெட்டெழுத்துக்கினமான குற்றெழுத்து அயலில் எழுதப்படுவதே உயிரளபெடையெனவும் கருதிய வீரசோழியத்தாரும் மற்றோரும் இவற்றைச் சார்பெழுத்தாகக் கொண்டனர். அளபெடையின் அளவு மூன்று மாத்திரையென்ற அவர்கள் கருத்தையேற்றால், ஆஅ, ஆஅஅ முதலியவற்றுக்கு வேறுபெயர் வழங்கவேண்டும். அளபெடையின் அங்கமாகவரும் குற்றெழுத்து, மொழியினிறுதியில் வரலாம் என்று நன். சூ. 108ம், இளக்கனவிளக்கச் சூத்திரம் 29ம் கூறுவதால், அளபெடை ஓரெழுத்தா அல்லது நெடிலுங் குறிலுஞ் சேர்ந்த ஈரெழுத்துக்களா என்பதுபற்றி இவ்விலக்கணவாசிரியரிடையே தெளிவான கருத்தில்லையென்றே கொள்ளவேண்டும். தொல். எழுத். சூ. 6ன் உரையில், உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் நெட்டெழுத்தும் குற்றெழுத்தும் சேர்த்து ஒலிக்கப்படவேண்டு மென்பர். தொல்காப்பியமுதற் சூத்திரவிருத்தியில், சிவஞானமுனிவர், 'அளபெடை அந்நெட்டெழுத்தோடு குற்றெழுத் தொத்து நின்று நீண்டிசைப்ப தொன்றாயினும், மொழிக்காரணமாய் வேறு பொருடராது இசைநிறைத்தன் மாத்திரைப் பயத்ததாய் நிற்றலின், வேறெழுத்தென வைத்தெண்ணப்படாதாயிற்று' என்பர். உயிரளபெடை ஏழேயென இலக்கண விளக்கத்தார் வாதிப்பது பொருத்தமாகவே காணப்படுகிறது.

தொல்காப்பியர், ஐகாரம் 'ஓரளபாகுமிடனுமாருன்டே' (தொல். எழுத். 57) என்று கூறியபோதிலும், எவ்விடங்களில் ஆகும் என எடுத்துக்காட்டவில்லை. மாத்திரை குறைந்தபோதும், ஐகாரம் பிறக்குமிடத்திலேயே ஐகாரக் குறுக்கமும் பிறத்தலாலும் ஐயம் முதலிய சொற்களின் முதனிலையில் இது குறைந்தொலிக்காமையாலும், இதனைச் சார்பொலியென்று

தொல்காப்பியர் கொள்ளவில்லை. வீரசோழியம், ஐகாரக் குறுக்கம் ஒன்றரை மாத்திரைபெறும் என்று கூறும். நேமி நாதம் இதனை ஏற்று, இவ்வெழுத்தைச் சார்பொலிகளில் ஒன்ருக்கும். நன்னூல், இலக்கணவிளக்கம், தொன்னூல் விளக்கம் என்பன, ஐகாரக்குறுக்கம் ஒரு மாத்திரையே பெறும் எனக் கூறுகின்றன. தொல்காப்பியரின் ஐகாரக் குறுக்கம் பற்றிய சூத்திரத்திற்கு உரையெழுதியவர்களே ஔகாரக் குறுக்கம்பற்றிக் குறிப்பிடுவர். நன்னூலாரும் ஔ காரக் குறுக்கத்தை ஏற்பர்.

தமிழ் இலக்கண ஆசிரியர் பலரும் உரையாசிரியர் பலரும் சார்பெழுத்துக்கள் எத்தனை என்று கூறுவதில், தம் தனித் திறமையைக் காட்ட முயன்றிருக்கின்றனரெனலாம். ஆயின் தொல்காப்பியர் சார்பெழுத்து வகுத்தபொழுது கொண் டிருந்த அடிப்படையை வைத்துக்கொண்டு பார்க்கும் பொழுது, சார்பெழுத்து மூன்றேயெனலாம்.

3. ஒலியன்களின் பிறப்பு

தொல்காப்பியர் பிறப்பியலில் கூறும் இலக்கனம் இன் றைய மொழிநூலாராற் பெரிதும் போற்றப்படுகிறது. அவர் கூறுவனவற்றிற் பெரும்பாலன, இன்றைய மொழிநூலாருக்கு உடன்பாடாகக் காணப்படுகின்றன.

அவர் பிறப்பியல் கூறத் தொடங்கும்போது,

> உந்தி முதலா முந்துவளி தோன்றித்
> தலையினு மிடற்றினு நெஞ்சினு நிலைஇப்
> பல்லு மிதழு நாவு மூக்கு
> மண்ணமு முட்பட வெண்முறை நிலையான்
> உறுப்புற் றமைய நெறிப்பட நாடி
> யெல்லா வெழுத்துஞ் சொல்லுங் காலைப்
> பிறப்பி னுக்கம் வேறுவே றியல

திறப்படத் தெரியுங் காட்சியான (தொல். எழு. 83) என்பர். இச் சூத்திரத்திற்கு உரைகூறும் நச்சினர்க்கினியர், 'தமிழெத்து எல்லாவற்றிற்கும் பிறப்பினது தோற்றரவைக் கூறுமிடத்து, கொப்பூழடியாகத் தோன்றி முந்துகின்ற உதானனென்னுங் காற்று, தலையின்கண்ணும் மிடற்றின் கண்ணும் நெஞ்சின்கண்ணும் நிலைபெற்று, பல்லும் இதழும் நாவும் மூக்கும் அண்ணமுமென்ற ஐந்துடனே, அக்காற்று, நின்ற தலையும் மிடறும் நெஞ்சுங்கூட எட்டாகிய முறைமையையுடைய தன்மையோடுகூடிய உறுப்புக்களோடு ஒன்றுற்று, இங்ஙனம் அமைதலானே, எழுத்துக்கள் வேறு வேருகத் தோன்றுகின்றன' என்பர்.

கொப்பூழடியில் உதானனென்ற காற்றுத் தோன்றி வருகின்றது என்பது இன்றைய அறிவியல் கருத்துக்கு மாருனது. நெஞ்சில் சுவாசப்பையிலிருந்தே, காற்று வருகிற தென்று கூறவேண்டும். நெஞ்சிலிருந்து புறப்படுங் காற்று மிடற்றினூடாகச் சென்று வாய்க்கு அல்லது வாய்க்கும் மூக்குக்கும் வருகிறதென இன்றைய ஒலிநூலார் கொள்வர். இக்காற்றுத் தலைக்கும் செல்கிறதெனக் கூறுந் தொல்காப்பியர், தலையென்றதனுல் எதைக் கருதினுரெனத் தெரியவில்லை. தலைக்கு இக்காற்றுச் செல்கிறதென, இன்றைய ஒலிநூலார் கூறுவதில்லை. நன். சூ, 74, பிறப்பின் பொது விதி கூறும்பொழுது, உச்சி என்று தலையைக் கூறுகிறது. தலை, மிடறு, நெஞ்சு என்னுமிடங்களில் நிலைபெற்று என்று தொல்காப்பியர்கூற, நன்னூலார் இம்மூன்றுடன் மூக்கையும் சேர்த்து நாலாக்குவர். நன்னூலார் தமது அடுத்த சூத்திரத்தில், உயிரெழுத்துக்களுக்கும் இடையினத்திற்கும் இடங் கழுத்தாகும், மெல்லினம் மூக்கை இடமாகப்பொருந்தும், வல்லினம் மார்பை இடமாகப்பெறும் என்று கூறுகிருராதலால், உச்சியை ஏன் கூறினுரெனத் தெரியவில்லை. தொல்காப்பியர் கூறியதனுல் இவருங் கூறியிருக்கலாம்.

உயிரெழுத்துக்களின் பிறப்பைப்பற்றிக் கூறுந் தொல்காப்பியர், அவை மிடற்றின்கண் நிலைபெற்ற காற்றுல் ஒலிக்

கும் என்பர். ஆயின், தமிழ் உயிரொலிகளும் மெய்யொலிகளும் வாய்ப்பகுதியிலேயே அமைகின்றன என்பர் இன்றைய மொழிநூலார். மிடற்றிலிருந்து வெளிப்படும் ஒலி, வாயில் தடைஏற்பட்டால், மெய்யொலியாகவும் தடையின்றிவெளி வந்தால் உயிரொலியாகவும் மாறுகின்றது என்பர். இந்த மெய்யொலிகளும் உயிரொலிகளும் நா, இதழ், பல், அண்ணம் இவற்றின் பல்வேறு முயற்சியால், பல்வேறு வடிவங்கள் பெறுகின்றன. உயிரொலிகளில் அகரஆகாரங்களாகிய இரண்டும் அங்காந்து கூறும் முயற்சியாற் பிறக்கும் என்பர் தொல்காப்பியர், இ, ஈ, எ, ஏ, ஐ என்று கூறப்படும் ஐந்தும் அங்காந்து கூறும்முயற்சியாற் பிறக்குமாயினும், முன்பல்லும் அடிநாவிளிம்பும் உறப்பிறக்கும் வேறுபாடுடையன என்பர் தொல்காப்பியர். உ, ஊ, ஒ, ஓ, ஔ என்று சொல்லப்படும் ஐந்தும் இதழ்குவித்துக் கூறப் பிறக்கும் என்றுங் கூறுவர். அங்காப்பு என்பதற்கு இதழ்குவியாமை என்று பொருள் கொள்ளுதல் பொருந்தும். இதழ்குவிதல் உகரத்திற்கு உண்டு ; இதழ்குவியாமையாகிய அங்காப்பு அகரத்திற்கும் இகரத்திற்கும் உண்டு. இதழ்குவியுயிர், இதழ்குவியாவுயிர் எனவும் தமிழ் உயிரெழுத்துக்களை, ஒலிநூலார் வகைப் படுத்துவதுண்டு. மொழியில் முதன்முதலில், அ, இ, உ என மூன்று உயிரெழுத்துக்களே இருந்தன என்பர். நா அடியிற் பதிந்திருக்கும் நிலையில் அகரம் பிறத்தலும் முன்னண்ணம் நோக்கி மேலெழுங்கால் இகரம்பிறத்தலும், உண்ணாக்கை நோக்கி எழுங்கால் உகரம் பிறத்தலும் உணரப்படும். இப் பிறப்பிடங்களை உயிர்முக்கோணமென்றும், இம்மூன்றெழுத் துக்களே, உயிரெழுத்துக்களின் அடிப்படையென்றுங் கூறுவர். உயிரெழுத்துக்களின் பிறப்பைக்கூறும்போது தொல் காப்பியர் இகரத்தோடு எகரத்தையும் உகரத்தோடு ஒகரத் தையும் சேர்த்துள்ளார். அகரஇகரங்களுக்கிடையே, எகரம் பிறத்தலும் அகரஉகரங்களுக்கிடையே ஒகரம்பிறத்தலும் ஒலிநூல் கூறுவன. இவ்வுண்மை நன்னூல் விருத்தி 73ஆம் சூத்திரவுரையிற் பின்வருமாறு கூறப்படுகிறது: ‘ எகரமாவது அகரக்கூறும் இகரக்கூறும் தம்முளொத்திசைத்து நரமடங்

கல்போல் நிற்ப தொன்ருகலானும், ஒகரமாவது அகரக்கூறும் உகரக்கூறும் தம்முளொத்திசைத்து அவ்வாறு நிற்பதொன்ருகலானும்......' நாவின் முன்ஞேக்கிய எழுச்சியாற் பிறக்கும், இ, எ, முதலியவற்றை முன்னண்ண (front Vowels) வுயிரெனவும், நாவின் பின்ஞேக்கிய எழுச்சியால் உ, ஒ முதலியன பிறத்தலால், அவற்றைப் பின்னண்ண உயிர் (back Vowles) எனவும் வகுப்பர். நன். சூ. 125, சந்தியக்கரம்பற்றிக் கூறும்போது, அகரத்தின்முன் இகரமும் யகரமும் என்று சொல்லப்பட்ட இவை தம்முளொத்துப் பொருந்திஞல் ஐ என்னும் நெட்டெழுத்தொலிக்குமெனவும், அகரத்தோடு உகரமும் வகரமெய்யுந் தம்முளொத்து ஒரு தன்மையனவாகப் பொருந்திஞல், ஔ என்னும் நெட்டெழுத்தொலிக்குமெனவுங் கூறும். இவை, சந்தியக்கரம் அல்லது கூட்டெழுத்து (diphthongs) என்பது இன்றைய ஒலிநூலுக்கும் உடன்பாடே.

மெய்யெழுத்துக்களின் பிறப்புப்பற்றித் தொல்காப்பியர் கூறுவதும் பொதுவாக ஏற்கப்படுகிறது. ககாரஙகாரம் முதல்நாவும் முதலண்ணமும் உறப்பிறக்கும் என்பர் தொல்காப்பியர். இவற்றைப் பின்னண்ணவினம் (Velar) என ஒலிநூல் கூறும். அண்ணத்தைச் சேர்ந்த பல்லினதடியாகிய இடத்தே, நாவினது நுனி பரந்துசென்று உறத் தகார நகாரம் பிறக்கு மென்பர் தொல்காப்பியர். ஒலிநூலார் இவற்றைப் பல்லினம் (dentals) எனக்கூறுவர். சகார ஞகாரம் இடைநாவும் இடையண்ணமும் உறப்பிறக்குமென்பர் தொல்காப்பியர். இவற்ருேடு யகாரத்தையும் சேர்த்து, ஒலிநூலார் இடையண்ணவினம் (palatals) என்பர். மிடற்றிடத்து ஒலி அண்ணத்தை அணைந்து செறிய யகாரம் பிறக்குமென்பர் தொல்காப்பியர். டகாரணகாரம் நுனிநாவும் நுனியண்ணமும் உறப்பிறக்குமென்பர் தொல்காப்பியர். இவற்றைத் தலையொலி (cerebrals) என்று குறிப்பிடும் ஒலிநூல். கால்டுவெல், இவை மூளையின் அடிப்பகுதியில் (cerebrum) பிறப்பன என்று கொண்டார். தொல்காப்பியர் கூறும்பிறப்பிடமே நன்ஞூ

லாருங் கூறுவதனுல், கால்டுவெல் எப்படி, இப்பிறப்பிடமுங் குறியீடுங்கொண்டாரெனத் தெரியவில்லை. இந்து இலக்கணவாசிரியரிடமிருந்து தாம் இக்குறியீடு பெற்றதாக, அவர் கூறுவதனுல், சங்கத மொழியிலக்கணவாசிரியரிடமிருந்து இதனைப்பெற்றிருக்கவேண்டும். இக்குறியீட்டையும் பிறப்பிடத்தையும் இன்றைய மொழியியலார் ஏற்பதில்லை. இன்றைய ஒலிநூலார், இவற்றேடு ளகார-த்தையும் சேர்த்து வளைநாவினம் (Cacunimals) என்பர். நாவிளிம்பு விங்கி அண்பல்லடியை வருட ளகாரம் பிறக்குமென்பர் தொல்காப்பியர். நாவினது நுனி மேனேக்கிச் சென்று, அண்ணத்தைத் தீண்ட, றகாரனகாரம் பிறக்குமென்பர் தொல்காப்பியர். இவற்றேடு, லகாரத்தையும் சேர்த்து மொழிநூலார் அண்பல்ஒலி (alveolar) என்பர். நாவிளிம்பு வீங்கி, அண்பல்லடியை ஒற்ற லகாரம் பிறக்குமென்பர் தொல்காப்பியர். நாவினது நுனி மேனேக்கிச் சென்று அண்ணத்தைத்தடவ. ரகாரழகாரம் பிறக்குமென்பர் தொல்காப்பியர். இவற்றை நுனியண்ணவினம் (retroflex) என்பர் ஒலிநூலார். மேலிதழுங் கீழிதழும் தம்மிற் கூடப் பகாரமும் மகாரமும் பிறக்கும் என்பர் தொல்காப்பியர். மேற்பல்லும் கீழிதழுங்கூட வகாரம் பிறக்கும் என்பர் அவர். இம்மூன்றையும் இதழினம் (labials) என்பர் மொழிநூலார்.

மெல்லெழுத்துக்களாறுஞ் தத்தம் பிறப்பினது ஆக்கஞ் சொல்லிய இடத்தே நிலைபெற்றனவாயினும், உச்சரிக்கும் பொழுது, மூக்கின்கண் உளதாகிய வளியினிசையால் தோன்றும் என்பர் தொல்காப்பியர். இன்றைய ஒலிநூலார் இவ்வொலிகள் மூக் கொலிகளென்றும் இவ்வெழுத்துக்கள் மூக்கின எழுத்துகளென்று பெயர்பெற வேண்டு மென்றுங் கூறுவர்.

4. ஒலி மரபு

ஒவ்வொரு மொழியிலும் ஒவ்வொரு வகையான மெய்யொலிகளும் உயிரொலிகளும் அமைந்திருக்கின்றன. ஒலிகள்

ஒன்றன்பின் ஒன்று தொடர்வதில் ஒவ்வொரு மொழிக்கும் ஒரு மரபு உண்டு. இன்றைய மொழிநூலார் இதனை ஒலி மரபு (phonemic pattern) என்பர்.

தமிழில் சொற்கள், ஈற்றெழுத்து வல்லெழுத்தாக அமைவதில்லை. வல்லொலிகள் உயிரொலிகளைத் துணைக்கொண்டே முடிகின்றன. வல்லொலியை இசைக்கவே, சார்பொலியாகிய குற்றியலுகரம் மொழியின் இறுதியில் இடம்பெறுகிறது. ஈறு உயிரொலியாகவோ குற்றியலுகரமாகவோ இல்லாத சொற்கள் நெகிழ்வொலிகளான மெல்லின இடையின ஒலிகளைக் கொண்டு முடியும்.

சில மெய்யொலிகளின் அருகில் சில மெய்யொலிகள் வரா என்ற நியதி உண்டு. அப்பொழுது சாரியைகள் வருகின்றன.

காயம்+கு — ம் அருகில் க் வராது. அதனால் அத்துச்சாரியை பெற்றுக் காயத்துக்கு என வரும்.

கால்+கு — காலிற்கு — இன்சாரியை.

காலுக்கு என உகரம் ஒலிநயம்பற்றி அமைவதுமுண்டு

தனிக்குறில் முன் ரழ வராது என்பது தமிழ் ஒலிமரபு. 'ரழத் தனிக்குறில் அணையா' (நன். சூ. 119) ; 'ரகாரழகாரங் குற்றொற்றாகா (தொல். எழு. 49). அதனால், அவை உகரம் பெறுகின்றன ; அன்றி முதல் நீள்கின்றன :— ஓர் — ஒரு — ஓர் ; பெர்— பெரு, பேர்.

மொழியில் ஒவ்வொரு இடத்திலும் சில குறிப்பிட்ட ஒலிகளே வரும் என்பர். அவற்றை முதனிலை, இறுதிநிலை, இடைநிலை மெய்ம்மயக்கம் எனக் குறிப்பிடுவர். தொல்காப்பியர் பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் முதல்நிலை ஒலிகளென்பர். தனிமெய்யெழுத்துச் சொல்லுக்கு முதலாக முடியாது, உயிருடன் கூடி உயிர்மெய்யாக நிற்கும் மெய்

யெழுத்துத்தான் முதனிலையாகக் கூடும் என்று தொல் காப்பியர் கூறுகிறார். க், த், ந், ப், ம் என்னும் மெய்யெழுத் துக்கள் பன்னிரண்டு உயிரெழுத்துக்களோடும் கூடும்போது தோன்றும் உயிர்மெய்யெழுத்துக்கள் யாவும் மொழிமுதலா வன என்பர். அ, ஐ, ஔ என்ற உயிரெழுத்துக்கள் தவிர்ந்த ஏனைய உயிரெழுத்துக்களோடு கூடும் சகரமெய் யும், உ, ஊ, ஒ, ஓ என்ற உயிரெழுத்துக்கள் தவிர்ந்த ஏனைய உயிரெழுத்துக்களோடு கூடும் வகரமெய்யும் மொழி முதலாகும் என்பர். ஆ, எ, ஒ என்னும் மூவுயிர்களோடு கூடும் ஞகாரமும் ஆ வென்ற வுயிரோடு சேரும் யகார மும் மொழிக்கு முதலாவன எனக்கூறுவர். நுந்தை என்ற சொல்லில், குற்றியலுகரம் மொழி முதலாவதையுங் குறிப் பிடுவர். தொல்காப்பியர் கூறியிருப்பனவற்றோடு, நன்னூ லார் சிலவற்றைக் கூட்டிக் கூறுவர். நன்னூலார் ஙகர மெய்யும் மொழிக்கு முதலில் வருமென்பர். சுட்டையும் வினாவையும் ஒட்டி, ஙகர மெய்யோடுகூடிய அகரம் மொழி முதலாகும் என்பர். அங்ஙனம், எங்ஙனம் என்பவற்றி லுள்ள ஙனம் ஒருதனிச் சொல் என்று நன்னூலார் கொண் டார். அவ்வாறு இச்சொற்களைப் பிரிப்பது பல இலக்கண வாசிரியருக்கு உடன்பாடில்லை. யகரமெய், தொல்காப்பியர் கூறிய ஆகாரத்தோடு மாத்திரமன்றி, அ, உ, ஊ, ஓ, ஔ என்பவற்றோடும் கூடி மொழிக்கு முதலாகும் என்பர். தம் முடையகாலத்திற்கு முன் தமிழிற் புகுந்த வடசொற்களைக் கருதி, நன்னூலார் இந்த மாற்றத்தைச்செய்திருக்கிறார். ஆனால், தொல். எழு. 65 உரையில், நச்சினார்க்கினியர், 'யவனர், யுக்தி, யூபம், யோகம், யௌவனம் என்பன வடசொல்லென மறுக்க' என நன்னூலார் செய்த மாற் றத்தை நிராகரிப்பர். சகரமெய் எல்லா உயிரோடும் வரு மென்பர் நன்னூலார். ஆனால், தொல். எழு. 62 உரையில், நச்சினார்க்கினியர், 'சட்டி சகடம் சமழ்ப்பு என்றாற் போல் வன "கடிசொல்லில்லை" என்பதனாற் கொள்க; சையம், சௌரியம் என்பவற்றை வடசொல்லென மறுக்க' என்பர் ஞகரமெய், தொல்காப்பியர் குறிப்பிடும் ஆ, எ, ஒ என்ப

வற்ளுேடு மாத்திரமன்றி அகரத்தோடும் மொழிமுதலாகும் என்பர் நன்னூலார். அந்த மாற்றத்தை ஏற்க விரும்பாத வர் போல, நச்சினர்க்கினியர், தொல். எழு. 64 உரையில், ஞமலி திசைச்சொல் லென்பர். பிறமொழிகளிலிருந்து தமிழில் வந்தமையும் சொற்களையேற்றுத் தமிழ் ஒலி மரபு வகுக்கப்படவேண்டும் என்று நன்னூலார் கருதியிருக்கிருர். தமிழ் ஒலிமரபு பற்றிக் கூறும்போது, பிறமொழிச்சொற்தள், திசைச்சொற்கள் கணிக்கப்படவேண்டியதில்லை என்று நச்சினர்க்கினியர் கருதியிருக்கிருர்போலத் தெரிகிறது.

மொழி யிறுதி நிலைகளைக்கூறுந் தொல்காப்பியர், ஔ தவிர ஏனைய உரெழுத்துக்கள் இறுதியில் வருவன என்பர். ஈறுகள் உயிர்மெய்யாயமையும்போது, சில உயிர்கள் சில மெய்களோடு மட்டும் இறுதியில் வரும் என்பர். ககர மெய்யும் வகர மெய்யும் ஔகாரத்தோடுகூடியும் ஈருகும். எகரவுயிர் மெய்யோடு ஈற்றில்வராது. நகர மெய்யோடு மட்டும் ஒகரம் ஈருக வரும். ஏகார ஓகாரவுயிர்கள் ஞகர மெய்யோடு சேர்ந்து ஈருக வருவதில்லை. உகர ஊகாரவுயிர்கள் ரகரமெய்யோடு சேர்ந்து இறுதியில் வரா. உகரவுயிர் சகார மெய்யோடு சேர்ந்து, இருசொற்களில் மாத்திரம் ஈருக வரும். உகரவுயிர் பகாரமெய்யோடு சேர்ந்து, ஒரு சொல்லில் மாத்திரம் ஈருக வரும். இவற்றைத் தொடர்ந்து சொல்லின் இறுதியில் வரும் மெய்யெழுத்துக்களைக்கூறுவர். ஞண நமன யரல வழள என்னும் பதினெரு மெய்களும் ஈருக வருமென்பர். நகாரமெய் இரண்டு சொற்களிலும், ஞகார மெய் ஒரு சொல்லிலும் ஈறுகளாக வருமென்பர். வகரமெய், நான்கு சொற்களில் ஈருய் வருமென்பர். நன்னூலார் தொல்காப்பியரோடு மாறுபடு மிடங்களை எடுத்து நோக்கினல், உயிரெழுத்துக்களில் ஔகாரத்தை நன்னூலார் விலக்காமல், குற்றியலுகரத்தையும் சேர்த்திருக்கிருர். தொல்காப்பியர் விதந்துகூறும் சில இடங்களை இவர் குறிக்கவில்லை. அப்படி விதந்து கூறுவது வேண்டாத ஒன்று என்று அவர் கருதியிருக்கலாம்.

இடைநிலை மெய்ம்மயக்கம் பற்றிக்கூறவந்த தொல்காப்பியர் ட, ற, வ, ள முன்னர் க, ச, ப மயங்குமென்பர். ல, ள முன் க, ச, பக்களே யன்றி ய, வ வும் தோன்றும் என்பர். மெல்லின மெய்கள் முன் தம்மின வல்லின மெய்கள் தோன்றும் என்பர். ண, ன முன் க, ச, ஞ, ப, ம, ய, வ என்னும் ஏழு மெய்யும் வரலாம் என்பர். மகரத்தின் முன் ப, ய, வ என்பன வரலாம் என்பர். ய, ர, ழ முன் மொழிக்கு முதலாகும் என விதித்த பத்து மெய்களும் வரும். ர, ழ தவிர ஏனைய பதினாறு தம்மோடு தாமே மயங்கும். ர, ழ, தம்மோடு தாம் மயங்கா. தொல்காப்பியருக்கும் நன்னூலாருக்கும் இடைநிலை மெய்ம்மயக்கம் பற்றிக் கருத்து வேறுபாடில்லை. தொலகாப்பியர் கூறியவற்றையே, உடனிலை மெய்ம்மயக்கம், வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என இரண்டாக வகுத்துக்கூறுவர் நன்னூலார். ய, ர, ழ ஒற்றின் முன் க, ச, த, ப, ங, ஞ, ர, ம என்னும் ஒற்றுக்கள் வந்து ஈரொற்றாக, அவற்றைத் தொடர்ந்து மெய்யெழுத்தே வருமென்பர் தொல்காப்பியர். ய, ர, ழ என்பன நெகிழ் வொலிகளானதினால், பிறமெய்கள் தொடர்ந்து மயங்கிவர இடங்கொடுக்கின்றன.

தொல்காப்பியர் காலத்தில் வழங்கிய தமிழ்ச்சொற்களைக் கொண்டு, தொல்காப்பியர் ஒலி மரபு வகுத்திருக்கிறார். நன்னூலார் தம்காலத்துச் சொற்களையும் நோக்கிப் போலும், சில மாற்றங்கள் செய்திருக்கிறார். பெருந் தொகையாகப் புதிய சொற்களை மொழி வேண்டிநிற்கும் பொழுது, ஒலி மரபு எந்த அளவுக்குப் பேணப்படவேண்டும் என்பது ஒரு பிரச்சினை. முதனிலை, இறுதிநிலை, இடைநிலை மெய்ம்மயக்கம் என்பவற்றைத் தளரவிடாது பின்பற்றினால், புதுச் சொற்களாக்கம் சுலபமாக நடைபெற முடியாது. இடைநிலை மெய்ம்மயக்கம் முதலியன, ஒரு காலத்துத் தமிழ்ச் சொற்களின் நிலையைத் தெரிவிப்பன வன்றிப் பொதுவாகத் தமிழ்ச்சொற்கள் தோன்றும் நெறியைக் காட்டுவன வல்ல என்று கருதுவதற்குத் தொல்

காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினுர்க்கினியம் இடந்தரு கிறது. தொல். எழு. 24-இன் உரையில், நச்சினுர்க்கினியர் இடைநிலை மெய்ம்மயக்கத்திற்குக் கொல்யானை, வெள்யாறு என்பவற்றை உதாரணமாகக்கூறி, 'இவ்வாசிரியர் நூல் செய்கின்ற காலத்து வினைத்தொகைக் கண்ணும் பண்புத் தொகைக்கண்ணு மன்றி ஒரு மொழிக்கண்ணே மயங்கு வனவும் உளவாதலின், அவற்றைக் கண்டு இலக்கணங் கூறினுர். அவை பின்னர் இறந்தன வென்று ஒழித்து உதாரணமில்லனவற்றிற்கு, உதாரணங் காட்டாமற் போதலே நன்றென்று கூறலுமொன்று' என்பர். 26–ஆம் சூத்திரத்திற்கு எழுதிய உரையிலும் இவ்வாறு தொகை மொழிகளை உதாரணமாகத் தருகிருர்.

அடுத்த சூத்திர உரையில், அவர் 'இங்ஙனம் ஆசிரியர் சூத்திரஞ் செய்தலின், அக்காலத்து ஒருமொழியாக வழங்கிய சொற்கள் உளவென்பது பெற்ரும். அவை இக்காலத்து இறந்தன' என்பர். அதற்கு அடுத்த சூத்திர உரையிலும் 'இதற்கும் உதாரணம் இக்காலத்து இறந்தன' என்பர். தொல்காப்பியர்காலப் பழைய தமிழில், இடைநிலையில் மயங்கி வந்தமெய்கள்சில, இடைக்காலத்திலும் பிற்காலத்திலும், உதாரணத்துக்கு எடுத்துக்காட்டுமளவுக்குக்கூட, இடை நிலையில் மயங்கிவரவில்லையென்று தெரிகிறது. அதனுற்ருன் போலும், ஆறுமுகநாவலர் இலக்கணச்சுருக்கத்தில் முதனிலை யும் இறுதிநிலையும் நன்னூலாரைப் பின்பற்றிக்கூறி, இடை நிலைமெய்ம்மயக்கம் கூருமலே விட்டுவிட்டார்.

5. ஒலித்திரிபு

தமிழ்ச் சாசனங்களில், உடம்படுமெய்யின்றியே, இரண்டு உயிரெழுத்துக்கள் தொடர்ந்து எழுதப்படுவதுண்டு. (அ) ஒரே சொல்லினுள் :—

கோ இலுக்கு ; காணிஆளர் ; திசைஓர் ; ஆஇரம் ; தேவரடிஆர்.

(ஆ) பெயர்ச்சொல்லுக்கும் வேற்றுமையுருபுக்குமிடையில் :—

இறைஇல் ; திருநெல்வேலிஇல் ; கரைஇன் ; கைஇல் ; முடி-ஒடு ; நெற்றிஇல்.

இரண்டு உயிரெழுத்துக்கள் இவ்வாறு தொடர்ந்து வருவதற்கு, அண்ணாமலைப் பல்கலைக்கழக வெள்ளிவிழா மலரில் டாக்டர் க. கணபதிப்பிள்ளை கொடுக்கிற விளக்கம் பொருத்தமானது போலக் காணப்படுகிறது. இந்தியாவில் திராவிட மொழிக்கு அயலிலேயே வழங்கிவரும் வடமொழியில், மிகப் பழைய காலத்தில், சொல்லினிடையில், இரண்டு உயிரெழுத்துக்கள் தொடர்ந்து வருவதவில்லை. ஆனால், பாகத மொழிக் காலத்தில், ஒரு சொல்லினுள்ளேயே, இடையில் ஒலிக்கும் சில மெய்யெழுத்துக்கள் மறைய, இரண்டு உயிரெழுத்துக்கள் தொடர்ந்து வந்தன.

உதாரணங்கள் :—சங்கதமொழி ராஜ : பாகதம் ராஅ.
,, ரூப. : ,, ரூஅ.

இதே மாதிரியான மாற்றம் தமிழிலும் நிகழ்ந்திருக்கலாம். நெட்டெழுத்தில் முடியும் ஓரசைச் சொற்களும் குற்றெழுத்தில் தொடங்கி நெட்டெழுத்தில் முடியும் ஈரசைச்சொற்களும் வேறுசொற்களோடு புணரும்போது, நெட்டெழுத்துக்கு இனமான குற்றெழுத்து எழுதப்பெறும் என்று தொல். எழு. 226, 277, 295-ஆம் சூத்திரங்கள் கூறுகின்றன.

உதாரணம் :—இரா+காக்கை=இராஅக்காக்கை. இரு என்ற வினையடியின் எதிர்மறைப் பெயரெச்சவடிவமான இராத என்பதன் குறுகிய வடிவமே இராஅ எனத் தமிழிலக்கணகாரர் கூறுவர். இது பொருத்தமானால், இராத காக்கை என்ற புணர்ச்சி, இராஅக்காக்கை என்ற வடிவம் பெற்றிருக்கிறது. இவ்வாறுகொண்டால், இராதஎன்ற சொல்லினிடையில் நின்ற தகரமெய் கெட்டமையால், இராஅ என்ற

வடிவம் தோன்றியிருக்கிறது. எனவே, தமிழ்ச்சாசனங்களிற் காணப்படும் மேற்படி உதாரணங்களில், இடையில்நின்ற உடம்படுமெய் கெட்டிருக்கலாம். உடம்படுமெய்யில்லாமலே, இந்த வடிவங்கள் இடைக்காலத் தமிழில் உச்சரிக்கவும் எழுதவும்பட்டிருக்கலாம்.

ஏழாம்எட்டாம்நூற்றுண்டுத் தமிழ்ச்சாசனங்களை ஆராய்ந்த டாக்டர் க. கணபதிபிள்ளை தமிழ்நாட்டின் வடபகுதியிலுள்ள சாசனங்களில், ந,னஎன்பன மயங்கிவருகின்றன என்பர். அந்தக் காலத்திற்குப் பின்பும் வீரசோழிய காலத்திற்குமுன்பும் தோன்றிய தமிழ்ச்சாசனங்களில், இதே நிலை காணப்படுகிறது. சோழப்பேரரசர் காலத்தில், தமிழ்நாட்டில் ஒரே அரசு ஏற்பட்டதால், அதுகாலவரை தமிழ்நாட்டில் வடபகுதியிலும் மத்திய பகுதியிலுமே வழங்கிவந்த கிரந்த எழுத்து, தமிழ்நாடுமுழுவதும் பரவியது. வட்டெழுத்து முறையில் தனியிடம்பெற்ற னகரமெய் கிரந்த எழுத்து முறையிலில்லை. கிரந்தத்தில் நகரம்மாத்திரம் இடம்பெற்றதால், புதிய எழுத்துமுறையை ஏற்றுக்கொண்ட தெற்குப் பகுதிகளிலும் நகரனகர மயக்கம் தோன்றுகிறது. இரண்டாவது பாண்டியப்பேரரசு காலச்சாசனங்களில் நகரனகரமயக்கம் தொண்டைமண்டலம், சோழமண்டலம், கொங்குமண்டலம், பாண்டியநாடு ஆகிய எல்லாப் பகுதிகளிலுள்ள சாசனங்களிலும் பரந்துகாணப்படுகிறது.

சொற்களின் நடுவில் அல்லது முடிவில், இ, ஈ, ஏ, ஐ என்னும் எழுத்துக்கள், நாற்கணத்தில் எதுவாயினுந் தொடர்ந்துவர, யகரஒலி பெறுவதுண்டு. இந்த எழுத்தொலிகள் அண்ணச் சாயல்பெறுவதை, இது சுட்டுகிறதுபோலும் என்பர் பழைய மலையாளச் சாசனங்களில் இதே திரிபைக் காணும் A. சந்திரசேகர்.

(i) வல்லெழுத்துக்களின் முன் :—

இ :—

இய்பொன் ; இய்பாற்கெல்லை ; இய்செங்கிளிநாட்டு.

ஈ :—

நீய்க்கி.

ஏ :—

கையிலேய் கொடுத்து ; பரிசேய் திருமழபாடி ; ஊரேய் சாத்ததாமோதினர்.

ஐ :—

பிழைய்க்க ; வைய்குந்தப்பெருமானடிகள் ; வைய் காவூர் ; கடுத்தலேய் சோமனயகன் ; வைய்த்த ; வைய்க்க ; கைய்க்கொண்டு ; கைய்ச்செலவு.

(ii) மெல்லெழுத்துக்களின் முன் :—

இ :—

உரிய்நெய் ; குடிய்மை ; உரிய்நறுநெய்.

ஏ :—

ஐந்தேய்முக்கால்.

ஐ :—

எல்லேய் முட்டியம்பாக்கத்து ; நாற்பத்தைய்ந்நாழி ; கைய்மாட்டாங்கானமைக்கு.

(iii) இடையெழுத்துக்களின் முன் :—

ஏ :—

தர்மாசனத்திலேய் வேறு.

ஐ :—

படைய்வந்து ; தென்கைய்லாயத்து.

(iv) உயிரெழுத்துக்களின் முன் :—

ஏ :—

முட்டாமேய் இப்பரிசு ; பொழுதேய் இக்கற்றாண் ; பலிசையாலேய் இரவு ; இவரேய் இட்ட ; பெருமக்களேய் ஆசந்திரகாலம்.

ஆனால், யகரமெய்பெறாத உதாரணங்களும் பலவாகக் காணப்படுகின்றன. கைக்கொண்டு, இப்பொன்னுக்கு, நீக்கி, முட்டாமேஎரிப்போம், கோச்சடைபன்மர் முதலிய வடிவங்களும் இடைக்காலச்சாசனங்களிற் காணப்படுவனவே.

அகரம் இகரமாகத்திரிதலுக்குச் சாசனங்களில் பல உதாரணங்கள் காணப்படுகின்றன. படலிகை—பிடலிகை ; மணாளன்—மிணாளன் ; வளாகம்—விளாகம் ; நாயனார்—நாயினார் ; பழம்பதி—பழிம்பதி. ஏறக்குறைய இதேகாலத்திற்குரிய மலையாளச் சாசனங்களிலும் இந்த மாற்றம் ஏற்படும் பல உதாரணங்களைச் சந்திரசேகர் எடுத்துக்காட்டுவர்.

ஐகாரம் சொற்களில் ஒரு மாத்திரையாக ஒலிக்குமிடமுமுண்டு என்பர் தொல்காப்பியர். இங்கே, ஐகாரம்அகரம் போல ஒலித்தலைத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். ஒலிக்கேற்ப எழுத்துவடிவம் அமையும்போது ஐகாரம் அகரமாக எழுதப்படுதலைச் சாசனங்களில் காணமுடிகிறது. குறைத்தலை—குறத்தலை ; ஐம்பத்தொன்றாவது — அம்பத்தொன்றாவது ; புடைவை—புடவை ; ஐந்நூறு—அஞ்ஞூறு ; ஐந்து—அஞ்சு. மலையாள ஒலியியலில், ஐகாரம் அகரமாகத் திரிதல் முக்கிய இடம்பெறுகிறது. மலையாளமொழியில், பன்னிரண்டாம்நூற்றாண்டு நடுப்பகுதிவரை. இந்த மாற்றம் சொல்லின் இடையிலேயே நடைபெறுகிறதெனவும் பன்னிரண்டாம் நூற்றாண்டிலிருந்து இந்தத் திரிபு சொல்லின் இறுதியிலும் ஏற்படுகிறதெனவும் சந்திரசேகர் கூறுவர்.

நகரம் ஞகரமாக மாறுதல், அண்ணச்சாயல் பெறுதலெனப்படுகிறது.

'ஐகான் யவ்வழி நவ்வொடு சில்வழி

ஞஃகா னுறழு மென்மரு முளரே—நன். சூ. 124.

சொல்லுக்கு இடையிலே சிலவிடத்து, ஐகாரத்தின்பின்னும் யகர மெய்யின் பின்னும் இயல்பாய்வரும் நகரமெய்யினோடு ஞகர மெய் ஒத்துநடக்குமென்போரு முண்டு என்கிறது இச்சூத்திரம். ஐந்தாவது—ஐஞ்சாவது ; இசைந்த—இசைஞ்ச ;

ஒழிந்த—ஒழிஞ்ச ; இருநூற்றெழுபத்தைந்து—இருநூற்றெழு பத்தஞ்சு. நன்னூலார் குறிப்பிடாத இகரத்தின்பின்னும் இத்தகைய மாற்றம் ஏற்படுவதைக் காணலாம். இலக்கிய வழக்கிலும், மலையாளம்—ந்த்—வடிவங்களை—ஞ்ச்—வடிவங் களாக மாற்றிக் கொண்டதென்றும், இன்னும்பலஇடங்களில் —ஞ்ச்—வடிவங்களை—ஞ்ஞ்— வடிவங்களாகத் திரித்துவிட்ட தென்றும் சந்திரசேகர் கூறுவர்.

தகரம் சகரமாகத் திரியும் அண்ணச்சாயல் பெறுதலும் தமிழ்ச் சாசனங்களில் காணப்படுகிறது. —த்த்—என்பது— ச்ச்—ஆகத் திரிவதற்கு உதாரணங்கள் :—அழைப்பித்து— அழைப்பிச்சு ; எடுப்பித்த—எடுப்பிச்ச. மலையாள ஒலியியல் வளர்ச்சியில், —த்த்—, —ச்ச்—ஆகமாறுதல் முக்கிய இடம் பெறுவதாகவும், இந்த மாற்றம் இலக்கியவழக்கிலிடம் பெற்றது கேரளத்திலேயே என்றும் சந்திரசேகர் குறிப் பிடுவர்.

—எய்—என்றஒலி,—ஐ—எனத் திரிவதைச் சிலசொற் களில் காணமுடிகிறது. எண்ணெய்—எண்ணை ; நன்செய்— நஞ்சை ; புன்செய்—புஞ்சை.—எஇ—என்றஒலி நெடுங்கணக் கிலிடம்பெருதபோதிலும், பேச்சுவழக்கில் — எய் — எனவரு மிடத்தில், இந்தக்கூட்டொலி தொனிப்பதாகவும், சொல்லின் இறுதியில்—எய்—என்ற ஒலி ஐ என்ற ஒலியுடன் மயங்கி வருவதாகவும் சந்திரசேகர் கூறுவது, மலையாளத்துக்கும் தமிழுக்கும் பொருந்துவதாக உள்ளது.

இன்றைய தென்னிந்தியப் பேச்சுத் தமிழிற் பயின்று வரும் ரகர றகர மயக்கத்துக்கும், இரண்டாவது பாண்டியப் பேரரசுகாலத் தமிழ்ச்சாசனங்களிலேயே உதாரணங்கள் காணலாம். பிரிந்த—பிறிந்த ; நாயனார்க்கு—நாயனாற்க்கு; நாச்சியார்க்கு—நாச்சியாற்க்கு. ரகரமெய்யைத்தொடர்ந்து வல்லினம் வரும்போது, இரண்டையும் சேர்த்து றகரமாக ஒலித்தலும் காணப்படுகிறது.

(i) —ர்க்க—என்பது — ற்க—ஆகிறது :—சர்க்கரை—சற்கரை ; நாயனார்க்கு—நாயனாற்கு ; ஊர்க்கு—ஊற்கு ; ஊர்க் கணக்கு—ஊற்கணக்கு ; நாச்சியார்க்கு—நாச்சியாற்கு.

(ii) — ர்ப்ப — என்பது — ற்ப—ஆகிறது : — பயிர்ப் பார்த்து—பயிற்பார்த்து ; எப்பேர்ப்பட்ட — எப் பேற்ப்பட்ட ; கண்ணிநல்லூர் பற்று—கண்ணி நல்லூற்பற்று.

(iii) — ர்த்த்—என்பது — ற்த் — ஆகிறது : — ஊர்த் தெற்கு—ஊற்தெற்கு.

ஒலிஇடம்பெயரல், அடிச் சொற்களில் மெய்கெடல், அசைகெடல், மொழிமுதல்துணை, மொழிஇடைத்துணை, மொழிஈற்றுத்துணை முதலிய ஒலித்திரிபுகளும் சாசனங்களில் காணப்படுகின்றன.

ஒலிஇடம்பெயரல் :—

மரகதம்—மரதகம் ; செய்வித்தான் — செவ்வித்தான் ; மயிலாப்பூரில்—மயிலார்ப்பில்; ஆரமார்பு—அராமார்பு.

சொற்களில் மெய்கெடல் :—

(i)—ழ்—மறைகிறது.
போழ்து—போது.

(ii) —ர்—மறைகிறது.

கார்த்திகை — காத்திகை ; கீர்த்தி—கீத்தி ; தவிர்த்து—தவித்து.

(iii)—ய்—மறைகிறது.

யாண்டு — ஆண்டு ; வாய்க்கால் — வாக்கால் ; பொன்மேய்ந்த பெருமாள் நல்லூர் — பொன் மேந்த பெருமாள் நல்லூர்.

அசைகெடல் (மரூஉஎன்பர் தமிழிலக்கணகாரர்) :—

ஆமைஎய்தவழி—ஆமைதவழி ; வேறுவேறு—வெவ் வேறு.

மொழிமுதல்துணை :—

ராம—இராமன் ; ரேவதி—இரேவதி.

மொழிஇடைத்துணை :—

செய்வித்த—செயிவித்த ; கோவை—கோர்வை.

மொழிஈற்றுத்துணை :—

எள்—எள்ளு ; நெல்—நெல்லு ; கல்—கல்லு ; செறு—செறுவு ; கா—காவு.

6. புணரியல்பற்றி ஒரு குறிப்பு

தமிழிலக்கணத்தில் புணரியல்பெறும் இடம்பற்றி எவருமே ஒன்றை அவதானிக்கலாம். பழைய மரபில் வந்த தமிழிலக்கணங்களுள் எழுத்திலக்கணத்தில் பெரும்பகுதி புணர்ச்சிபற்றியே பேசுகிறது. சொல்லிலக்கணத்தோடு சமதையான முக்கியத்துவமுடையதுபோல, எழுத்திலக்கணத்தையும் கூறப்போய், எழுத்திலக்கணத்தில் பெரும் பகுதியைப் புணரியலுக்கு ஒதுக்குவதைத் தொல்காப்பியம் நன்னூல் முதலிய இலக்கணநூல்களில் காணலாம். இக்கால மொழியியல் நூல்களில், புணரியல் சிறிதளவு இடமே·பெறுகிறது. ஏழு பாகங்களாக அமைந்த கால்டுவெல்லின் திராவிடமொழி ஒப்பிலக்கணநூலில், ஒலிகள் பற்றி ஒரு பாகமே அமைந்திருக்கிறது. அப்பாகத்தில் ஒருசிறு பகுதியே புணரியலைச் சுருக்கமாக இயம்புகிறது. வரதராசனின் மொழிநூல், சீனிவாசனின் மொழியியல் என்னும் நூல்களிலும், புணரியல் சிறிதளவு இடமே பெறுகிறது. எழுத்து, சொல், பொருள் என்பனவற்றில் ஒவ்வொன்றுக்கும் ஒன்பது இயல்கள்வகுத்த தொல்காப்பியர், எழுத்ததிகாரத்தில் ஆறு இயல்களில் புணரியலே கூறுகிறார். எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் இரண்டுக்கும் ஐயைந்து இயல்கள் வகுத்த நன்னூலார், எழுத்ததிகாரத்தில் மூன்று இயல்களில் புணர்ச்சியே கூறுகிறார்.

வீரசோழியத்தார் எழுத்ததிகாரத்தில், சந்திப்படலம் என ஒன்றே அமைத்திருக்கிறார். எழுத்திலக்கணம் முழுவ

தையும் இருபத்தெட்டுச் செய்யுட்களில் சுருக்கிக்கூறும் இவர், புணரியல் இலக்கணம் முழுவதையும் அவற்றுள்ளேயே அடக்கியுள்ளார். தொல்காப்பியர் புணர்ச்சியை இரண்டாக வகுப்பர் :—

வேற்றுமை குறித்த புணர்நிலை மொழியும்
வேற்றுமை அல்வழிப் புணர்நிலை மொழியும்
எழுத்தே சாரியை யாயிரு பண்பின்
ஒழுக்கல் வலிய புணருங் காலை

— தொல். எழுத். சூ. 112.

தொல்காப்பியர்காலத் தமிழ்மொழியின் இலக்கணத்தை யுணர, வேற்றுமைப்புணர்ச்சி, அல்வழிப்புணர்ச்சி என்ற பாகுபாடு, வேண்டியதொன்ருக இருந்திருக்கலாம். வீரசோழியம் இந்தப் பாகுபாட்டைக் குறிக்கவில்லை. நன்னூலார் இந்தப்பாகுபாட்டின் அடிப்படையிலேயே புணரியல் இலக்கணம் கூறுகிருர். இந்தப் பாகுபாட்டின் அடிப்படையிலமைந்த தொல்காப்பிய நன்னூற் சூந்திரங்களிலுள்ள விதிகளுக்கு, அந்நூல்களுக்கு உரை யெழுதியோர் எடுத்துக் காட்டும் பெருந்தொகையான விலக்குகளைப் பார்க்கும் பொழுது, இந்தப் பாகுபாடு மொழியின் இலக்கணத்தைப் புரிந்துகொள்ள உதவுகிறதா என்ற கேள்வி எழுகிறது.

நிலைமொழியீறும் வருமொழிமுதலுமே புணர்வன. உயிரீறு முன் உயிர்முதல், உயிரீறுமுன் மெய்முதல், மெய்யீறு முன் உயிர்முதல், மெய்யீறு முன் மெய் முதல் என நான்கு வகையிலும் புணர்ச்சி நிகழும். மெய்யீறு முன் உயிர்வரும் பொழுது, உயிர் மெய்மேலேற நிகழும் புணர்ச்சி இயல்புப் புணர்ச்சி யெனப்படும். உயிரீறுமுன் உயிர் முதல் வரும் போது நிகழும் புணர்ச்சி எவ்வகையிலும் நிலைமொழி வருமொழியின் இலக்கணத் தொடர்போடு சம்பந்தப் பட்டதல்ல. எனவே, நால்வகைப் புணர்ச்சியில், இருவகைப் புணர்ச்சிக்கு வேற்றுமை—அல்வழிப் பாகுபாடு அவசிய மற்றதாகிறது.

உயிரீறு முன் மெய்முதல் வரும் புணர்ச்சிக்கும், மெய் யீறு முன் மெய் முதல் வரும் புணர்ச்சிக்கும் வேற்றுமை-அல்வழிப்பாகுபாடு அவசியம் என்று கருதத்தக்க முறையில், தொல்காப்பியரும் நன்னூலாரும் இலக்கணஞ் செய்திருக்கின்றனர். வேற்றுமைப் புணர்ச்சி கொள்ளும்போது, முதலாம் வேற்றுமையும் எட்டாம்வேற்றுமையும் தள்ளி, ஏனைய ஆறுவேற்றுமைகளே கொள்வர். இந்த ஆறுவேற்றுமைகளுக்குமுரிய தொகைநிலை தொகாநிலைத்தொடர்கள் யாவும் வேற்றுமைப்புணர்ச்சி பெறும் என்பர். வேற்றுமையல்லாத வழியிலமையுந் தொடர்கள் யாவும் அல்வழித் தொடராகக் கொள்ளப்படுகின்றன; அவை அல்வழிப்புணர்ச்சி பெறும் என்பர்.

சில புணர்ச்சி விகாரங்கள் வேற்றுமைக்கும் அல்வழிக்கும் பொதுவாக அமைகின்றன. உயிரீறுக்கு முன்வரும் வல்லினம் இரட்டும் என்பது தொல்காப்பியம் எழுத்ததிகாரச் சூத்திரங்களில், வேற்றுமைப் புணர்ச்சிக்கும் அல்வழிப் புணர்ச்சிக்கும் எடுத்துக்கூறப்படுகின்றன. அச்சூத்திரங்களின் பொருளைத் தொகுத்துக்கூறும் நன். சூ. 165, 'இயல்பினும் விதியினு நின்றவுயிர்முன், க ச த ப மிகும் விதவாதன மன்னே' என்கிறது. 'ய, ர, ழ முன் வல்லினம் வருவதைக் கூறப்போந்த நன். சூ. 224, ய, ர, ழ முன்னர்க் கசதப வல்வழி, இயல்பு மிகலு மாகும் வேற்றுமை மிகலும் இனத்தோ டுறழ்தலும் விதிமேல்' என்கிறது. ய, ர, ழ முன்னர் வல்லெழுத்து வரும்பொழுது, சில தொடர்களில், இரு வழியிலும் மிகலாம் என்று இச்சூத்திரத்தில் கூறப்படுகிறது. மிகுதல் ஒருவகைப் புணர்ச்சிக்கு, மிகாமை ஒருவகைப் புணர்ச்சிக்கு என்று பிரித்துக்காட்ட, இப்பாகுபாடு உதவவில்லை. இச்சூத்திரத்தின் காண்டிகையுரை, 'அல்வழி யியல்பு மிகுதி யிரண்டனுள், இயல்பு எழுவாய்த் தொடர், உம்மைத்தொகை, வினைத்தொகைகளிலும், மிகுதி பண்புத் தொகை உவமைத் தொகைகளிலும் கொள்ளப்படும்' என்கிறது. அல்வழியில், சில பிரிவு

களில் இயல்பும், சில பிரிவுகளில் மிகலும் வருவதனால், அல்வழியில் இயல்பும் மிகலும் வரும் என்று சூத்திரஞ் செய்வதிலும் பார்க்க, அல்வழியின் பிரிவுகளையே குறிப்பிட்டு, எவ்வெப்பிரிவுகளில் இயல்பு, எவ்வெப்பிரிவுகளில் மிகல் எனக் குறிப்பிடுவதே பிரயோசனமாக இருந்திருக்கும். உயிரீறு முன்வரும் வல்லினம் இரட்டுதல்கூட, வேற்றுமைப் புணர்ச்சியிலோ, அல்வழிப் புணர்ச்சியிலோ எல்லா இடமும் நடப்பதில்லை. இலக்கியத் தமிழில், வல்லினம் இரட்டல் கூடிய அளவு நடைபெறுகிற தெனலாம். இலக்கணம் கற்ற புலவர்கள் இவ் விலக்கண விதிகளைக் கூடிய அளவு போற்றுவது இதற்குக் காரணமாகலாம். பேச்சு வழக்கைப் பெரிதும் ஒட்டிச்சொல்லும் சாசனங்களில், உயிரீறு முன் வல்லினம் இரட்டாமை பரந்து காணப்படுகிறது. தொல்காப்பியர் காலத்திலும் இதே நிலை இருந்ததனைப் போலும், அவர் பொதுவிதியாலேயே அமைக்க முடியாது, பெருந்தொகையான சிறப்புவிதிகளையும் அமைத்துப் புணரியலை அவ்வளவு விரிவாகக் கூறுவது.

வேற்றுமைப் புணர்ச்சியில் மகரவீற்றுச் சொற்களின் மகர வீறு கெட, வருமொழி வல்லெழுத்து மிகும் என்று தொல். எழு. சூ. 310 கூறும். அல்வழிப் புணர்ச்சியிலும், இவ்வாறு சொற்கள் புணர்வதைத் தமிழ்ச் சாசனங்களிற் காணலாம். அதனால், நன்னூலார், இத்தகைய புணர்ச்சியை 'மவ்வீ றொற்றழிந் துயிரீ றொப்பவும்' என இரு வகைப் புணர்ச்சிக்கும் பொதுவாகக் கூறுவர். மகர வீற்றுப்புணர்ச்சியை விரிவாக நோக்கிய ஆறுமுகநாவலர், இலக்கணச் சுருக்கத்தில் பின்வருமாறு கூறுவது கவனிக்கத்தக்கது : 'மகரத்தின் முன் வல்லினம் வரின், வேற்றுமையினும் அல்வழியிலே பண்புத்தொகையினும் உவமைத் தொகையினும் இறுதிமகரங் கெட்டு, வரும்வல்லினம் மிகும். எழுவாய்த் தொடரினும் உம்மைத்தொகையினும் செய்யு மென்னும் பெயரெச்சத் தொடரினும் வினைமுற்றுத் தொடரினும் இடைச்சொற்றொடரினும் இறுதி மகரம் வரும் வல்லெ

முத்திற்கு இனமாகத் திரியும்.' தொல். எழு. சூ. 314, 'அல்வழி யெல்லா மெல்லெழுத் தாகும்' என்கிறது. ஆனால், ஆறுமுகநாவலரோ, அல்வழித் தொடரில் ஒரு சாரனவே, இத்தகைய புணர்ச்சி பெறுமென்கிறார். இத் தகைய புணர்ச்சிபெறாத அல்வழித்தொடர்கள் பல, தமிழ்ச் சாசனங்களிற் காணப்படுகின்றன. வேற்றுமைத்தொடர், இத்தகைய புணர்ச்சிபெறும் என்று தொல்காப்பியர் கூற வில்லை. ஆனால், நன். சூ. 219, 'மவ்வீ றொற்றழிந்துயிரீ றொப்பவும், வன்மைக்கினமாத் திரிபவு மாகும்' என்கிறது. வேற்றுமைத்தொடரும் இத்தகைய புணர்ச்சிபெறும் என்று நன்னூலார் கொண்டதனாற் போலும், இங்கு அல்வழித் தொடரை விதந்து கூறவில்லை. நன்னூற் காண்டிகை யுரைகாரர், 'வினையாலணையும் பெயரிறுதி மகரமும், தனிக் குறிலைச் சார்ந்த மகரமும், வேற்றுமையிலும் வல்லினம் வரிற் கெடாது இனவெழுத்தாகத்திரியும் எனவுங் கொள்க' என்பர். இலக்கணச் சுருக்கம், 'தவஞ் செய்தான் என இரண்டாம் வேற்றுமைத் தொகையினும் நிலங் கிடந்தான் என ஏழாம் வேற்றுமைத் தொகையினும் வருமொழி வினை யாயவிடத்து, இறுதி மகரங் கெடாது வரும் வல்லெழுத் திற்கு இனமாகத் திரியும்' என்கிறது. இரண்டாம் வேற் றுமைத் தொகையிலும் ஏழாம் வேற்றுமைத் தொகையிலும் இத்தகைய புணர்ச்சி நிகழ்வது, தமிழ்ச்சாசனங்களிற் காணக்கூடியதாயிருக்கிறது.

லகர ளகர ஈற்றுமெய்கள், புணர்ச்சி பெறுமாற்றை, நன். சூ. 227 எடுத்துக் கூறும் :—

லளவேற் றுமையிற் றடவு மல்வழி
அவற்றோ டுறழ்வும் வலிவரி னாமெலி
மேவி னணவு மிடைவரி னியல்பும்
ஆகு மிருவழி யானு மென்ப.

லகர ளகர ஈற்றுச் சொற்கள், மெல்லினமும் இடையினமும் முதலிலுடைய சொற்கள் வந்து புணரும்போது, வேற்று

மைத்தொடரிலும் அல்வழித்தொடரிலும் ஒரே தன்மையன என்று இச்சூத்திரம் கூறுகிறது. வல்லினத்தை முதலிலுடைய சொற்கள் வருமொழியாக வரும்போது தான், வேற்றுமைத் தொடரும் அல்வழித் தொடரும் வெவ்வேறு மாற்றமடைவது குறிப்பிடப்பட்டிருக்கிறது. பொதுவாக நோக்கும்போது, புணரியலிற் கூறப்படும் விதிகளிற் பெரும்பாலன, வருமொழிமுதல் வல்லினமாக அமையும்போது, ஏற்படும் மாற்றங்களையே எடுத்துக்கூறுகின்றன. வருமொழி முதலெழுத்தாக மெல்லினம், இடையினம் அல்லது உயிர் அமையும்போது, பெரும்பாலும் இயல்புப்புணர்ச்சியே நிகழ்கிறது. வருமொழிமுதலில் வல்லினம் வரும்பொழுது, வேற்றுமைப்புணர்ச்சியில், ல ள முறையே ற ட வாகுமெனவும், அல்வழிப்புணர்ச்சியில், ஒருகால் இயல்பாகியும் ஒருகால் திரிந்தும் உறழும் என்றும் இச்சூத்திரம் கூறுகிறது. எனவே, இருவகைப் புணர்ச்சிக்கும் உள்ள வேறுபாடு வேற்றுமைத் தொடரில் மாற்றம் கட்டாயம் நிகழவேண்டியதெனவும், அல்வழித் தொடரில் மாற்றம் நிகழ்ந்தும் நிகழாமலும் இருக்கலாமெனவும் தெரிகிறது. இச்சூத்திரத்துக் காண்டிகையுரையில், ' அல்வழி யவற்றோடுறழ்வும் என்றரேனும், இவற்றோடு மயங்காத தகரம் வரின். ஏற்புழிக் கோடலால், கற்றீது, முட்டீது எனத் திரிபொன்றுமே கொள்க ' எனப்படுகிறது. இங்கே, சில அல்வழித் தொடர்கள் வேற்றுமைத் தொடர்கள் போல, விகாரம் மாத்திரம் பெறுதல் குறிப்பிடப்படுகிறது. நன். சூ. 229-க்குரிய உரை, வேற்றுமையில் வல்லினம் வரத் திரியாதியல்பானவற்றுக்கு உதாரணம் தருகிறது. ல, ளக்கள் அல்வழியில் வல்லினம் வர உறழும் என்பதையும் மாற்றி, சில பிரிவுகளில் இயல்பும், சில பிரிவுகளில் திரிபும் மாத்திரமே வருமென்கிறது இந்த உரை. எழுவாய்த்தொடர், உம்மைத்தொகை, விளித்தொடர், வினைமுற்றுத்தொடர், வினைத்தொகை என்பவற்றில், இயல்பு மாத்திரமும் பண்புத்தொகை, உவமைத்தொகை, வினையெச்சம் என்பவற்றில் திரிபு மாத்திரமும் வருமெனப்படுகிறது. இலக்கணச் சுருக்கம், வேற்றுமைத்தொடரில் திரிபு என்பதற்கு

விலக்காக, இரண்டாம் வேற்றுமைத் தொகையினும் மூன்றும் வேற்றுமைத் தொகையினும் வருமொழி வினையாயவிடத்துத் திரியாவெனக் கொள்க என்கிறது. இத்தகைய காரணங் களால், வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி என்ற பாகுபாட்டை அடிப்படையாக வைத்துப் புணரியல் இலக் கணம் கூறுவது தேவையற்றது போலக் காணப்படுகிறது. சங்கத மொழியிலக்கணத்தில் இத்தகைய பாகுபாடு இல்லா ததனாற்போலும், வீரசோழியத்தார் இந்தப் பாகுபாட்டைக் குறிக்கவில்லையென்று டாக்டர் **P. S.** சுப்பிரமணிய சாஸ்திரி கூறியது ஏற்கக்கூடியதாகவில்லை. இந்தப் பாகுபாடு அதிகம் பயனுள்ளதல்ல என்பதை வீரசோழியத்தார் உணர்ந்திருக் கலாம்.

தொல்காப்பியர் கூறாத புணர்ச்சி விதிகள் பல, வீரசோழி யத்தார் கூறுகிறார். வீரசோழியத்தார், தம்கால இலக்கியத் தையும் பேச்சுவழக்கையும் நன்கு ஆராய்ந்திருக்கிறார் போலத் தெரிகிறது. வீரசோழியம்–எழுத்-13, இகர ஈகார ஐகார உயிரீற்று நிலைமொழிப் பதத்தின் பின்னர் வருமொழி உயிர் முதலாகிய மொழிவந்து புணர்ந்தால், இடையே யகாரவொற்று வருமென்றும், இவையல்லாத மற்றவுயிரீற்று நிலை மொழிப் பதத்தின் பின்னர் வருமொழி உயிர் முதலாகிய மொழிவந்து புணர்ந்தால், இடையே வகரவொற்று வருமென் றும் ஏகாரவீற்று நிலைமொழிப்பதத்தின் பின்னர் வருமொழி உயிர்முதலாகிய மொழிவந்து புணர்ந்தால், இடையே யகார வகார வொற்றுக்கள் இரண்டும் வருமென்றும் கூறும். இரண்டு உயிர்களினிடையில உடம்படுமெய் வரலாம் என் பது, தொல். எழு. சூ. 140, 'எல்லா, மொழிக்கு முயிர்வரு வழியே யுடம்படு மெய்யி னுருவுகொளல் வரையார்' என்று கூறுவதிலிருந்து புலப்படுகிறது. சுட்டுக்களைத் தொடர்ந்து உயிர்கள் வரும்போது, வகரவுடம்படுமெய் வருமென்பது, தொல். எழு. சூ. 207, 238, 255– லிருந்து தெரியவருகிறது. தமிழ்ச்சாசன வழக்குகள், ஒரு வகையில் தொல்காப்பியத்திற்கு ஆதரவாகவும் இன்னொரு

வகையில் வீரசோழியத்திற்கு ஆதரவாகவும் அமைந்துள்ளன. வீரசோழியத்தார் குறிப்பிடுவதுபோல, அந்தந்த உயிரெழுத்துக்களுக்குப்பின், அந்தந்த உடம்படுமெய்களே வருகின்றன. ஆனுல் தொல்காப்பியர் குறிப்பிடுவதுபோல், உயிரெழுத்துக்கள் உயிரெழுத்துக்களைத் தொடரும்போது, உடம்படுமெய் எழுதும் வழக்கம் எல்லா இடங்களிலும் காணப்படவில்லை. உடம்படுமெய்யுள்ள இடங்கள், உடம்படுமெய்யில்லாத இடங்களிலும் குறைவாகவே காணப்படுகின்றன.

ழகார ளகார வொற்றீற்று நிலைமொழிப் பின் வருமொழி முதல் தகாரம் வந்து புணர்ந்தால், நிலைமொழியீறும் வருமொழி முதலுந்திரிந்து தனித்தனி யிரண்டும் டகாரமென்றும் பின்னும் அவ்விலக்கணத்துள் நிலைமொழியீற்றிற்கு அழிவுமுண்டென்றும் வீரசோழியம். எழுத். 15-ஆம் செய்யுள் கூறும். டகரமொன்று கெடுமென்று தொல்காப்பியம் கூறவில்லை. ழகரம் டகரமாவதற்கு உதாரணங்கள், புகட்படர, கலுட் பெரும்பிணக் குன்றம் என முதலாம் சடாவர்மன் சுந்தர பாண்டியன் காலச் சாசனமொன்றில் காணப்படுகின்றன. வீரசோழியத்திற்குப் பிந்திய கந்தபுராணம் காப்புச் செய்யுளில், திகழ்+தசக்தரம், திகடசக்கரமெனப் புணர்கிறது. எழுத். 18-ஆம் செய்யுளில், ழகரத்தைத் தொடர்ந்து நகரம் வந்தால், ழகரம் கெட, நகரம் ணகரமாகும் எனப்படுகிறது. கீழ்+நோக்கிய என்பது இரண்டாவது பாண்டியப் பேரரசு காலச் சாசனங்களில் கீணோக்கிய என மாறுகிறது, ழகார வொற்று நிலைமொழியின் பின்னர் வருமொழி முதல் வல்லினம் வந்து புணர்ந்தால், அந்த ழகாரமானது னகாரமும் டகாரமுமாம் என்றும் வருமொழி முதல் மகாரம் வந்து புணர்ந்தால், அந்த ழகாரமானது ணகாரமாம் என்றும் அதே செய்யுள் கூறும். ழகாரமெய்பற்றி இவர் கூறிய இந்த விதிகள் தொல்காப்பியர் கூறுதவை.

வடமொழிச் சொற்கள் மாத்திரமன்றிச் சொற்றொடர்களும் வீரசோழிய காலத் தமிழிற் பயின்று வழங்கியதனுற்

போலும், வீரசோழியம் எழுத். 10, 11, 12-ஆம் செய்யுட்கள் வடமொழிப் புணர்ச்சி கூறுகின்றன. 12-ஆம் செய்யுள் குண சந்தி, விருத்திசந்தி யென்பனவற்றைக் கூறுகிறது.

நேமிநாதத்தார் கூறும் பதினைந்து புணர்ச்சி பற்றிய செய்யுட்களில், பத்து வீரசோழியத்தைத் தழுவியவை யென்றும் மூன்று தொல்காப்பியத்தைத் தழுவியவையென்றும் கூறுவர். ஏகாரத்தைத் தொடர்ந்து உயிர்வரும்போது வகரமே யுடம் படுமெய்யாக வருமென்று இவர் ஏன் கூறுகிறுரென்பது தெரியவில்லை. நேமிநாதம் எழுத். 18-ஆம் செய்யுள், நிலை மொழி யிறுதியினின்ற வகரந்திரிந்து மகரமாகவும் பெறும் எனப் புது விதியொன்று கூறி, தெவ் என நிறுத்தி முனை யென வருவித்து தெம்முனையென முடிக்க என உதாரண முந்தரும்.

தமிழ்ச்சொற்களின் புணர்ச்சிபற்றி இளம்பூரணர், வீர சோழியத்தார், நேமிநாதத்தார், தொல்காப்பியர் கூறிய யாவற்றையுங் கூட்டித் தொகுத்து நன்னூலார் கூறுகிருர் என்பர் டாக்டர் P. S. சுப்பிரமணிய சாஸ்திரி. இலக்கண விளக்கம், ‘ முன்னோர் மொழி பொருளே யன்றி யவர் மொழி யும் பொன்னே போற் போற்றுவோம்’ என்பதற்கிணங்கத் தொல்காப்பியத்தையும் நன்னூலையும் பின்பற்றுகிறது. நிலை மொழி மூன்றும் வேற்றுமையுருபோடு அல்லது ஆறும் வேற் றுமை யுருபோடு வரும் வேற்றுமைத் தொடரிலும் விளித் தொடரிலும், புணர்ச்சியில் விகார மேற்படுவதில்லை யென் பதே, அது புதிதாகக் கூறுவது. எகரவுயிரைத் தொடர்ந்து யகரவுடம்படுமெய் வருமென்பதுதான் வீரமாமுனிவ ரின் தொன்னூல் விளக்கம் புணரியலில் காணப்படும் புதுமை .

புலமையையும் வித்துவத் தன்மையையும் காட்டுவதே முக்கியம் என்ற கருத்து நிலவிய காலத்தில் தோன்றிய உரைநடையிலும் செய்யுளிலும் கடினசந்தி விகாரங்கள்

யாவற்றையும் அமைத்துக் கடினநடையில், தமிழறிஞர் எழுதி வந்தனர். கருத்துத் தெளிவே முக்கியம், கருத்தைப் புலப் படுத்த மொழி ஒரு கருவியே என்ற கருத்து இன்று நிலவு வதால், இன்றைய தமிழ்நடையில், சந்தி விகாரங்கள் பெரும் பாலும் அவசியமான இடங்களிலேயே இடம்பெறு கின்றன.

———

IV சொல்லியல்

1. சொல்லாக்கம்

இலக்கணம் என்ருல் சொற்களையும் அவை வழங்கு மாற்றையும் கற்பது எனலாம். சொல் என்ருல் இன்னது என, நன். சூ. 259 கூற முயல்கிறது :—

> ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி யென்ரு
> இருதிணை யைம்பாற் பொருளையுந் தன்னையும்
> மூவகை யிடத்துங் வழக்கொடு செய்யுளின்
> **வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே.**

தொல்காப்பியர் பல சூத்திரங்களில் விரிவாகக் கூறுவதை, நன்னூலார் தொகுத்து ஒரு சூத்திரத்தில் கூறுவதுண்டு. குறுகிய அளவுள்ள நூலில் தமிழிலக்கணங் கற்பதற்கு வழி செய்த நன்னூலாரைப் பாராட்டவேண்டும். ஆனுல், விடயங்களைச் சிறப்பாக இலக்கண விடயங்களை எடுத்துக் கூறுவதில் தெளிவு வேண்டும். தொல்காப்பியரோடு ஒப்பிடும் போது, நன்னூலார் இந்த அம்சத்தில் பல இடங்களில் தவறுகிருர். அத்தகைய இடங்களில் இதுவுமொன்று. நன்னூலார் சூத்திரத்தில் தொல்காப்பியத்திலிருந்து பெற்ற கருத்துக்களெவை, பவணந்தியாரின் சொந்தக் கருத்துக்களெவை யென முதன்மையாக ஆராய வேண்டும்.

நன்னூலார் 'வழக்கொடு செய்யுளின்' எனக்கூறுவது தொல்காப்பியப் பாயிரத்தில் 'வழக்குஞ்செய்யுளு மாயிரு முதலின்' என வருவதை நோக்கியதா லாகலாம். தொல்காப்பியம் சொல்லதிகாரம் முதற் சூத்திரம் சொல் இருதிணையிலொன்றைக் குறிக்கு மெனக்கூற, அடுத்து வரும் சூத்திரங்கள் ஐம்பாற் பாகுபாட்டை எடுத்தியம்பும். இவற்றை நோக்கிய நன்னூலார் 'இருதிணை யைம்பால்' எனக்

கூறுகிருரெனக்கொள்ளலாம். தொல். சொல். சூ. 156, 'பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும், சொல்லி ஞகும் என்மஞர் புலவர்' என்கிறது. நன்னூலார் 'பொருளை யும் தன்னையும்' என்பது மேற்படி சூத்திரத்தின் பொருளைத்தான். தொல்காப்பியத்தில், அடுத்த சூத்திரம் 'தெரிபு வேறு நிலையலுங் குறிப்பில் தோன்றலும் இரு பாற்றென்ப பொருண்மை நிலையே' என்று கூறுவதனுல், 'வெளிப்படை குறிப்பின் விரிப்பது' எனக்கூறுவர். பெயர்ச் சொற்கள் மாத்திரமன்றி, வினைமுற்றுக்களும் தமிழில் இடம் சுட்டு கின்றன. தொல்காப்பியம் வினையியலில் மூவிடப்பெயர்கள் பெரு மளவு முக்கியத்துவம் பெறுகின்றன. தொல்காப்பியர், உயர்திணைவினையில் தன்மைப்பன்மை, தன்மையொருமை வினைமுற்றுக்களை முதலில் கூறுவர். விரவுத்திணை வினைமுற்றுக்களில், முன்னிலை யொருமை முன்னிலைப்பன்மை வினை முற்றுக்களே முதலில் கூறப்படுகின்றன. உயர்திணைவினை யில், படர்க்கை ஆண் பால், படர்க்கைப் பெண்பால், படர்க்கைப் பலர்பால் என்பனவற்றையும் அஃறிணைவினை யில், ஒன்றன்பால், பலவின்பால் என்பனவற்றையுமே, தொல்காப்பியர் எடுத்துமொழிவர். அதனுலேயே, நன்னூலார் 'மூவகை யிடத்தின்' என்கிருரெனலாம்.

தொல்காப்பியத்திலிருந்து பெருததாக, நன்னூலார் கூறுவது, 'ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி யென்ரு' என்பதே. நன்னூல் 260-ஆம் சூத்திரம் இதற்கு விளக்கம் கூறுகிறது.

> ஒருமொழி யொருபொரு ளனவாந் தொடர்மொழி
> பல பொருளனபொது விருமையு மேற்பன.

ஒருமொழி என்பது தனிச்சொல்லையும், தொடர்மொழியென்பது தொடர்ந்து வருகின்ற சொற்களையும், பொதுமொழியென்பது ஒருமொழியாகவும் தொடர்மொழியாகவும் பொருள் கொள்ளத்தக்க முறையில் அமைந்திருக்கும் மொழியையும் குறிப்பனவாகும். மிகச்சில இடங்களிலேயே,

பொதுமொழி காணப்படுகிறது. சொல்லின் இயல்பு கூறும் போது, எடுத்துக் கூறத்தக்க முக்கியத்துவம் இதற்கில்லை. தொடர்மொழி சொற்றொடரென இக் காலத்தில் வழங்கு கிறது. சொற்றொடரிலக்கணம் இன்றைய மொழியியலாரால் போற்றிக்கற்கப் படுகிறது. ஆனால், சொல் இன்ன தென்று கூறப்போன இடத்தில், சொற்கள் பலவகையிலும் தொடரு வதை எடுத்துக் கூறுவது அவசியமற்றது. நன்னூலார் இந்தச் சூத்திரத்தால், சொல்லை வரையறை செய்யவில்லை, தொல்காப்பியர் பெயரியல் ஆரம்பத்தில் சொல்லைப்பற்றிப் பொதுவாகக் கூறுவதால், தானும் அவ்வாறு கூறவேண்டும் என்று நினைத்திருக்கிறார் போலத் தெரிகிறது.

தொல்காப்பியர் கூறாத இலக்கணமாக, நன்னூலார் பதவியல் எனப் புதிய பகுதியமைத்துக் கூறுகிறார். பதம் என்பது சொல் என்பதற்கு வடமொழிப் பெயர். எனவே, பதம் என்பதை, நன்னூலார் எப்படி விளக்குகிறார் என்று பார்க்கவேண்டும்.

‘எழுத்தே தனித்துந் தொடர்ந்தும் பொருடரிற்
பதமாம்’ என்கிறது நன். சூ. 128.

சொல்லென்பதுபற்றிச் சேனாவரையர், தொல். சொல். 1. உரை யில் கூறுவது :— “சொவ்லாவது, எழுத்தோடு ஒரு புடை யான் ஒற்றுமையுடைத்தாய்ப் பொருள்குறித்து வருவது. உரையாசிரியரும் எழுத்தாதல் தன்மையோடு புணர்ந்து என்பார், ‘எழுத்தோடு புணர்ந்து’ என்றாராகலின், ஒருபுடை யொற்றுமையே கூறினார். தன்மையொடு புணர்ந்து என் னுக்கால், ஓரெழுத்தொரு மொழிக்கு எழுத்தொடு புணர் தலின்மையின், சொல்லாதல் எய்தா தென்க. பொருள் குறித்து வாராமையின், அசைநிலை சொல்லாகா எனின், ‘ஆவயின் ஆறும் முன்னிலையசைச்சொல்’ (சொல். 247) என் றும் ‘வியங்கோளசைச் சொல்’ (சொல். 273) என்றும் ஓது தலான், அவையும் இடமுதலாகிய பொருள் குறித்துவந் தன வென்க. ‘யா காபிற பிறக்கு (சொல். 279) என்னுந் தொடக்கத் தனவோவெனின், அவையும் மூன்றிடத்திற்

கும் உரியவாய்க் கட்டுரைச் சுவை பட வருதலின், பொருள் குறித்தனவேயாம்'' அதனாலேதான், தொல்காப்பியர், 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' (சொல். 155) என்றார்.

தொல். எழுத். சூ. 45, சொற்களை மூவகையாகப் பாகுபடுத்துகிறது.

ஓரெழுத் தொருமொழி யீரெழுத் தொருமொழி
யிரண்டிறந் திசைக்குந் தொடர்மொழி யுளப்பட
மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே.

ஓரெழுத்துச்சொல், ஈரெழுத்துச்சொல், இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துக்களாலான சொல் என்பனவே, இங்கு தொல்காப்பியர் கூறும் மூவகைச் சொற்கள். சொற்களுக்கு எழுத்தெண்ணும்போது, மெய்யெழுத்துக்களும் குற்றியலுகரமும் சேர்த்து எண்ணக்கூடாது என்பர் நச்சினார்க்கினியர். கணேசையர் தக்க காரணங்கள் காட்டி, நச்சினார்க்கியரை மறுப்பர்.

நன்னூலார் பதம் என்பதற்குக் கூறிய இலக்கணம் இன்றைய மொழியியலார் பொருளசை (**morpheme**) என்று கூறுவதற்கும் பொருந்தும். ஒரு பொருளசையைத் தனித்துப் பிரித்தறய, அது பிற பொருளசையோடு, எவ்வாறு வேறுபடுகிறது என்று காணவேண்டும். அது பிறவற்றோடு உணர்த்தும் பொருளால், வேறுபட்டிருக்கவேண்டும்.

செய் வ் ஆன் — எதிர்காலம்.
செய் த் ஆன் — இறந்தகாலம்.
செய் கிறு ஆன் — நிகழ்காலம்.

எனவே, வ், த், கிறு என்பன முறையே எதிர்காலம், இறந்தகாலம், நிகழ்காலமென்பவற்றை உணர்த்தும் பொருளசைகளாக் கொள்ளப்படுகின்றன.

செய் வ் ஆன்.
செல் வ் ஆன்.
அழி வ் ஆன்.

எனவே, செய், செல், அழி என்பன பொருளுணர்த்தும் பொருளசைகளாகின்றன.

ஓடு வ் ஆன்.
ஓடு வ் ஆள்.
ஓடு வ் ஆர்.

எனவே, ஆன், ஆள், ஆர் என்பன பால்காட்டும் பொருளசைகளாகின்றன.

இவ்வாறு பிரித்து அறியப்படும் பொருளசைகள் ஒன்றிரண்டைக் கொண்டு மட்டும், ஒருமுடிவுக்கு வரக் கூடாது. பல சொற்களில், அதே பொருளில், அவை வழங்கும்போதே, அவ்வடிவங்கள் பொருளசைகளென்று உறுதியாகின்றன. பொருளை உணர்த்துவது என்பதிலும் இருவகை யுண்டு. பொதுப்பொருளை யுணர்த்துவது ஒருவகை; இலக்கணப் பொருளை உணர்த்துவது மற்றொருவகை. செய், அழி, ஓடு, கை முதலியன பொதுப்பொருளுணர்த்துவன. த், ட், வ், ப், தில் முதலியவை இலக்கணப் பொருளுணர்த்துவன. இப்பொருளசைகள் அமைவதில், ஒரு ஒழுங்குவேண்டும். வ் நட ஆன் என்று இவை அமையுமானால், அவை பொருளசைகளாகா. அவை தொடர்வதில் உள்ள ஒழுங்குமுறை இலக்கண அமைப்பு எனப்படும். ஒவ்வொரு மொழியும், இவ்வகையில், ஒவ்வொரு அமைப்புள்ளது.

நன்னூலார் எந்தப் பதத்தையும் பகுபதம், பகாப்பதம் என இருவகையாகப் பிரிப்பர். பெயர், வினை, இடை, உரி என்று வழங்குபவை, பிரிக்க முடியாமல் அமைந்தால், அவற்றைப் பகாப்பதம் என்பர். பகாப்பதத்துக்கு, அவர் கூறும் இலக்கணம்,

பகுப்பாற் பயனற் றிடுகுறி யாகி
முன்னே யொன்ருய் முடிந்தியல் கின்ற
பெயர் வினை யிடை யுரி நான்கும் பகாப்பதம்

நன். சூ 131.

இச்சூத்திரத்தில் ' பகுப்பாற் பயனற் றிடுகுறி யாகி ' என்பதே பகாப்பதத்தின் வரையறை யெனலாம். இன்னும் பிரித்தால், பிரிந்து நிற்கும் பகுதி பொருள் தராது என்ற அளவில் உள்ள சிறியவடிவமே பகாப்பதமெனப்படுகிறது. இன்று பொருளசையும் இவ்வாறுதான் வரையறை செய்யப்படுகிறது. ஆனல், நன்னூலார் கூறும் பகாப்பதங்களெல்லாம் பொருளசைகள் என்று முடிவுகட்டி விடக்கூடாது. அடுத்த சூத்திரத்திலேயே, மையீற்றுப்பண்புப் பெயர்களெல்லாம் பகாப்பதங்களெனக் கூறப்போகிருர். அதற்காகத்தான், 'முன்னே யொன்ருய் முடிந்தியல்கின்ற' என்று கூறிவிட்டார். இவ்வாறு கூறி அறிவியல்முறையிலே அமையக்கூடிய வரையறைக்குக் குறைபாடேற்படுத்திவிட்டார். பொருளசைகள் பிற தொடர்தலில்லாமல், தாமே உரிமையாக விளங்குவனவற்றை, நன்னூலார் பகுதியென்று கூற, இன்றைய மொழி நூலார் உரிமைப்பொருளசை (free form) என்பர். நன். சூ. 134, ' தத்தம் பகாப்பதங்களே பகுதியாகும் ' என்கிறது. பிறவற்றைச் சார்ந்தே வரும் பொருளசைகளை, நன்னூலார் இடைநிலை, விகுதியென்று கூற, இன்றைய மொழி நூலார் சார்புப் பொருளசை என்பர்.

பகுதிகளும் இடைநிலைகளும் விகுதிகளும் சேர்ந்து அமைவனவே பகுபதம்.

பகுதி விகுதி யிடைநிலை சாரியை
சந்தி விகார மாறினு மேற்பவை
முன்னிப் புணர்ப்ப முடியுமெப் பதங்களும்

—நன். சூ. 133.

பகுதி, இடைநிலை, விகுதி சேர்ந்து பகுபதம் அமையும் பொழுது உண்டாகும் ஒலித்திரிபுகளைச் சாரியை, சந்தி, விகாரமென்பர். ஆறு உறுப்புக்களும் ஒரே ரகமானவை மாதிரி நன்னூற் சூத்திரம் அமைந்திருக்கிறது. 'பகுதி, பொருளுணர்ச்சிக்கு மிக முக்கியம்; விகுதி, இடைநிலை ஓரளவு முக்கியம்; ஏனைய உறுப்புக்கள் ஒலித்துணையாகவே வருவன' என்ற நுட்பங்களை நன்னூலார் எடுத்துச் சொல்லவில்லை. நன்னூலார் பகுபதத்தை எடுத்துக் கூறும் சூத்திரம்,

> பொருளிடங் காலஞ் சினை குணந் தொழிலின்
> வருபெயர் பொழுதுகொள் வினை பகு பதமே
>
> —நன். சூ. 132.

பொதுப்பொருளுணர்த்தும் பகுதிகளோடு, பிற பகாப்பதங்கள் சேர்ந்தே, பகுபதமாகும் என்பதற்கு இச்சூத்திரமும் சான்றெனலாம்.

நன்னூலார் காட்டும் பகுதிகளிற் பல அடிச்சொற்களே (roots); சில, இன்னும் பிரித்துக்காட்ட இடந்தந்து நிற்கின்றன. பிரித்துக்காட்டக்கூடிய பகுதிகளைக் கால்டுவெல் பிரிப்பர். அவர் அப்படிப் பிரித்துக் கூறுவன, ஒலிநயச் சேர்க்கை, ஆக்க உருபுகள் என இரண்டு வகை. நன்னூலார் கூறும் இடைநிலைகள், விகுதிகள் என்பனவற்றை இலக்கணச் சேர்க்கை என்பர்.

முதன் முதலில், அடிச்சொற்கள் பெயரடியாகப் பிறந்தன, வினையடியாகப் பிறந்தன, பெயர்—வினை வேறுபாடற்றுப் பிறந்தன என்றெல்லாம் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகளுண்டு. பெரும்பாலன, வினையடியாகப் பிறந்தன என்பதுதான் பொருத்தமானதுபோல்க் காணப்படுகிறது. வடமொழியில், ஒரு சில சொற்கள் தவிர, மற்றெல்லாச் சொற்களும் 'தாது' என்னும் வினையடியாகப் பிறப்பவை என்றே கொள்ளப்படுகின்றன. வடமொழியிற் காணப்படும் அடிச்சொற்கள் இலக்கணக்காரர்கள்

படைப்பு என்பர். தமிழ் மொழியிலுள்ள அடிச்சொற்கள் பல, இன்றும் பேச்சு வழக்கில் தனிச்சொற்களாக விளங்குகின்றன. நன். சூ. 137, வரிசைப்படுத்தும் ஏவல்வினைப் பகாப்பதங்கள் அடிச்சொற்களே. இவ்வுண்மை உணராத வீரசோழியத்தார், தாதுப்படலம் முதலாம் செய்யுளில், 'தமிழ்க்கும் பன்னிய தாதுக்களைப் படைத்துக்கொள்க' என்பர். இச் செய்யுளுக்கு உரை எழுதிய பெருந்தேவனாரும் 'தமிழ்ச் சொல்லிற்கெல்லாம், வடநூலே தாயாகி நிகழ்கின்றமையின், அங்குள்ள வழக்கெல்லாந் தமிழுக்கும் பெறும்,' என்கிறார். இவர்கள் கருத்து ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

தமிழ் அடிச்சொற்கள்பல, வினைக்கும் பெயர்க்கும் பொதுவாக, முதலில் பயன்பட்டன. பிறகு, சில மாறுதல்கள் பெற்று, வினைக்கே யுரிமையாகியும் பெயர்க்கே யுரிமையாகியுமுள்ளன என்பர் கால்டுவெல்.

ஓரசை அடிச்சொல்.

பூ, பூக்கள், பூவை, பூவிற்கு — பெயர்.

பூ, பூத்த, பூத்தது — வினை.

ஈரசை அடிச்சொற்கள் சில இவ்வாறு உள்ளன.

எடுத்துக்காட்டு : மலர்.

பல, பெயர் வினையென்னும் வேறுபாடுணர்த்தி நிற்கின்றன.

எடுத்துக்காட்டு : மரம், நட.

பெருகுகிறது என்பதில், நன்னூலாரின்படி, பெருகு என்பது பகுதி. பெர் என்பதே அடிச்சொல். உண்டான் என்பதில், உண் என்பது பகுதியும் அடிச்சொல்லுமாகும். பெயர்ச்சொல்லில்வரும் இடைநிலை காலம் உணர்த்தாது. அறி ஞ் அன். காலம் உணர்த்தாத பெயரிடைநிலையைப் பொருட்சிறப்புப் பயப்பது எனலாம். ஒலித்துணையாவன, அடிச்சொற்களோடு சேர்ந்து அவற்றை ஒலித்தற்கு எளியனவாக மாற்றும். பொருளைச் சிறப்பித்தலோ, வேறுபடுத்தலோ இவற்றால் இயலாது. பெரும்பாலும் உயிரெழுத்துக்கள், சிறப்பாக உகரம் ஒலித்துணையாகும்.

ஆடு—ஆட்டை—ஆடினுன். உகரம்கெடுவதால், அது அடிச்சொல்லின் பகுதியாகமுடியாது. அது ஒலித்துணையெனல்வேண்டும்.

அ, அன், இன் முதலியனவும் ஒலித்துணையாகின்றன.

என்+கு=எனக்கு ; இது+ஆல்=இதனுல் ; காடு+கண்=காட்டின்கண்.

பொருட்சிறப்புப் பயப்பன :—

அட்(அடு).
அடங்கு—அ+கு—மூக்கொலிபெற்றுச் சேர்ந்தது.
அடக்கு—அ+கு—வல்லொலியாய் இரட்டித்தது.
அடை—ஐ.
அடர்—அர்.
அடுக்கு—கு.
அண்டு—மூக்கொலிபெற்றது.

இலக்கணவேறுபாடு உணர்த்தும் உறுப்புக்கள் முதலியன எவ்வாறு தோன்றின என்பது ஒருவினு. பல, தொடக்கத்தில் அடிச்சொற்களாக இருந்தவைகளே. இவை, வேறு அடிச்சொற்களோடு சேர்ந்து பொருளுணர்த்தப் பயன்பட்டபோது, தமக்கென்று இருந்த பொருளையிழந்து, மற்றவற்றிற்குத் துணையான உறுப்புக்களாக மாறிவிட்டன. துணையுறுப்புக்களாக இன்று வழங்குபவற்றுள்சில, தவறுபடச் சொற்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவை. இகர உயிரே தமிழிற் பிறவினையுணர்த்த, வி, பியென்பன பிறவினை விகுதிகளென்று கொள்வது அத்தகையதொன்று.

கால்டுவெல் சொற்களைப் பிரித்து ஆராய்ந்த முறை, இக்கால மொழிநூலாருக்கு உடன்பாடு. பொருளசையென்ற பெயரும் அதன் முக்கியத்துவமுந்தான், இக்கால மொழியியலாராய்ச்சியில் விசேடமாக ஏற்பட்ட மாறுதல்.

காலம் உணர்த்தும் பொருளசைகள், நன்னூலில் நன்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. நன்னூலார் காலமுணர்த்தும் இடைநிலைகளைக் கூறும்போது, த், ட், ற், இன் என்

பன இறந்த கால இடைநிலைகளென்றும், ஆநின்று, கின்று, கிறு என்பன நிகழ்கால இடைநிலைகளென்றும், ப், வ் என்பன எதிர்கால இடைநிலைகளென்றும் முறையே நன்னூல் சூத்திரங்கள் 142, 143, 144 கூறும். தொல்காப்பியர் கால இடைநிலைகளை எடுத்தோதவில்லை. வினைச்சொற்களின் வகை கூறும்பொழுதும் காலத்தை அடிப்படையாக வைத்து வகுக்கவில்லை. திணையை அடிப்படையாக வைத்து, உயர் திணைக்குரியன, அஃறிணைக்குரியன, விரவுத் திணைக் குரியன என வகுக்கிறார். பெயர்ச் சொல்லிற்குச் சிறப்பாக உரிய திணை பால் எண் இடம் உணர்த்தும் இயல்பு, வினைச் சொல்லுக்குச் சிறப்பாக உரியது என்று கொள்ளக் கூடிய மாதிரி தொல்காப்பியரின் வினையியல் அமைந்திருக்கிறது. ஆனால், தொல்காப்பியர் காலத்திலேயே, முக்கால மென்ற பிரிவுண்மை உணரப்பட்டிருக்கிறது.

காலந் தாமே மூன்றென மொழிப

— தொல். சொல். 199.

இறப்பி னிகழ்வி னெதிர்வின் என்று
அம்முக் காலமுங் குறிப்பொடுங் கொள்ளும்
மெய்ந்நிலை யுடைய தோன்ற லாறே

— தொல். சொல். 200.

மொழிப என்று கூறுவதனால், இம் முக்காலப் பாகுபாடு தொலகாப்பியர் காலத்திற்கும் முந்திய தென்பது தெளிவு.

மூன்று காலப் பிரிவுண்மை தொல்காப்பியருக்கு உடன் பாடாதலால், முக்காலத்தைக் குறிப்பதற்கும் வெவ்வேறு வினை வடிவங்கள் அமைதல் தொல்காப்பியர் கால வழக்காறு என்று நோக்குதல் வேண்டும்.

செய்த னெச்சத் திறந்த காலம்
எய்திட னுடைத்தே வாராக் காலம்

— தொல். சொல். 239.

செய்து என்பது இறந்தகால வாய்பாடெனவும் அது எதிர் காலச் செயலைக்குறிக்க வழங்குவதுண்டெனவும் தொல்காப்பியர் கூறுகிறுர். உதாரணம் : நீ உண்டு வருவாய்.

முந்நிலைக் காலமுந் தோன்று மியற்கை
எம்முறைச் சொல்லும் நிகழுங் காலத்து
மெய்ந்நிலைப் பொதுச்சொற் கிளத்தல் வேண்டும்
— தொல். சொல். 240

உதாரணம் : மலை நிற்கும் ; திங்க ளியங்கும்.

நிகழுங் காலத்தைச் சுட்டுகிற வினைவடிவமுண்டு என்பது இச் சூத்திரத்திலிருந்து புலனுகிறது.

இறப்பே எதிர்வே ஆயிரு காலமுஞ்
சிறப்பத் தோன்றும் மயங்குமொழிக் கிளவி
—தொல். சொல். 247.

எதிர்கால வினைவடிவம் இறந்த காலத்தைக் குறிப்பதற்கும், இறந்தகால வினைவடிவம் எதிர்காலத்தைக் குறிப்பதற்கும் வரலாம் என்று கூறுகிறுர்.

ஏனைக் காலமும் மயங்குதல் வரையார்.
—தொ. சொல். 248.

இறப்பும் எதிர்வுமேயன்றி நிகழ்காலமும் ஏனையவற்ருேடு, மயங்கி வரும் என்கிறுர். இந்தத் தொல்காப்பியச் சூத்திரங்களிலிருந்து, மூன்று காலங்களையும் வெவ்வேறு வினைவடிவங்கள் சுட்டுவது, தொல்காப்பியர் காலத்தில் ஏற்கப்பட்டிருக்கின்றமை அறியக்கிடக்கிறது.

தொல்காப்பியர் காலஇடைநிலைகளைச் சுட்டிக்கூருத போதும், தொல்காப்பியர் இறந்தகாலப் பொருளில் பயன்படுத்திய சொற்களைக்கொண்டு, அவர்காலத்தில் வழங்கிய காலக்கிளவிகளை யறியலாம். அவர் பயன்படுத்திய சொற்களில் மாதிரிக்காகச் சில :— அறிந்த (சூ. 515) ; சென்று (சூ. 1016) ; ஆற்றிய (சூ. 1020) ; சொல்லிய (சூ. 143) ;

பெற்ற வழி (சூ. 1056) ; தொட்டது (சூ. 1051). இவற்றிலிருந்து, தொல்காப்பியர் காலத்தில், த், இ என்பன இறந்த காலத்தைச் சுட்டின, டு, று ஈறுகளிலுள்ள மெய்கள், அடிச்சொற்களின் முதலெழுத்துக்கள் நீண்டொலிக்காத பொழுது இரட்டி இறந்த காலங் காட்டின என்பன காணக் கிடக்கின்றன. தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் நிகழ்கால இடைநிலை இல்லை. உம் விகுதியே நிகழ்கால முணர்த்தியது. 'நிகழூஉநின்ற பால்வரை கிளவி' (தொல். சூ. 173), 'நிகழுங்காலத்துச் செய்யுமென் கிளவி' (தொல். சொல். சூ. 227) என்ற பகுதிகள் தொல்காப்பியரே கூறியிருப்பவை. தொல்காப்பியர் எதிர்காலப் பொருளில் வழங்கிய வினைவடிவங்கள் சில :—மொழிப (சூ. 955), காண்ப (சூ. 1078), எனப்படுவோர் (சூ. 1069). எனவே, தொல்காப்பியர் காலத்தில் பகரவகர மெய்கள் எதிர்கால முணர்த்தின என்லாம்.

வீரசோழிய ஆசிரியர் இடைநிலையையும் விகுதியையும் பிரித்துக்கூருமல், பல இடங்களிலும் சேர்த்தே கூறுகிருர். சங்கத மொழியிலுள்ள —தி, —சி, —மி என்பன காலமும் இடமுமுணர்த்துவதால், தமிழிலும் ஈறுகள் காலமும் இடமும் உணர்த்த வேண்டும் என்று கருதியிருக்கிருர்போலத் தெரிகிறது. வீரசோழியம், கிரியாபதப்படலத்தில், வினைப்பகுதிக்குப் பின்வருவனவற்றைச் சேர்க்க வினைமுற்றுக்களாகும் எனக் கூறப்படுகிறது. இறந்த காலத்தைக் காட்டச் சேர்க்க வேண்டியன :— தான்—உண்டான் ; தாள் — உண்டாள் ; தார் — உண்டார் ; தார்கள் — உண்டார்கள் ; தது — உண்டது ; தன — உண்டன. நிகழ்காலத்தைக்காட்டச் சேர்க்க வேண்டியன :— நின்ருன் —உண்ணுநின்ருன் ; நின்ருள்— உண்ணுநின்ருள் ; நின்ருர் — உண்ணுநின்ருர் ; நின்ருர்கள் — உண்ணுநின்ருர்கள் ; நின்றது — உண்ணுநின்றது ; நின்றன—உண்ணுநின்றன. வீரசோழிய உரை, நின்ருன் என்பதுபோல, கிடந்தான், இருந்தான் என்பனவும், அதே சூழ்நிலையில், நிகழ்காலத்தில் வரும் என்றும், இம்மூன்றும் தமக்குமுன் ஆவென்னும் இடைச்சொற் பெற்றல்லது

முடியா என்றும் கூறும். கிறான், கிறாள், கிறார், கிறார்கள், கின்றது, கின்றன என்பனவும் வினைப்பகுதியுடன் சேரும் போது நிகழ்காலத்தைக் காட்டும் என்னும் வீரசோழியம். இந்த ஆறுவடிவங்களில் இரண்டு கின்று என்பதைக் கொண்டிருக்கின்றன. கின்று என்பதே பழைய வடிவமாக லாம். கிறு அதன் திரிபாகலாம். பெயரெச்ச வாய்பாடாக, நன்னூலார் செய்கின்ற என்பதே கூறுவார். பெருந்தேவனாரும், கிறான் முதலியவை, நடுவே ஒரு னகார வொற்றுப் பெற்றுக் கின்றான், கின்றாள் என முடிதலுமாம் எனக் கூறி, உண்கின்றான், உண்கின்றாள், உண்கின்றார், உண் கின்றார்கள், உண்கின்றது, உண்கின்றன என உதாரணங் களும் தருவர். எதிர்காலத்தைக் காட்டும் .வினைமுற்றுக்க ளமையுமாறு:— வான்—உறங்குவான்; வாள்—உறங்குவாள்; வார்—உறங்குவார் ; வார்கள்—உறங்குவார்கள் ; வது—உறங்குவது ; வன — உறங்குவன. பான் — உண்பான் ; பாள்—உண்பாள் ; பார்—உண்பார் ; பார்கள்—உண்பார் கள் ; பது—உண்பது ; பன—உண்பன. ஆனால், இறந்த காலப் படர்க்கை வினைமுற்றுக்களில் இ இடைநிலை வருகிற இடத்தில் ஒரு வேறுபாடு காணப்படுகிறது. ஆன்—உறங் கினான் ; ஆள்—உறங்கினாள் ; ஆர்கள்—உறங்கினார்கள் ; அது—உறங்கியது ; அன—உறங்கியன. இந்த ஈறுகளை வீரசோழியத்தார், இனான், இனாள் முதலியனவாக ஏன் ஆக்கவில்லையென்று தெரியவில்லை. இவை படர்க்கை வினை முற்றுக்குரியன. தன்மை முன்னிலை வினைமுற்றுக்களுக்கும், இதே ரீதியில். ஈறுகள் கூறப்படுகின்றன.

தொல்காப்பியர் வினைமுற்று விகுதிகளைத் தம்நூலில் கூறியிருக்கிறார். எனவே, நன்னூலார் செய்தது, காலமும் இடமும் உணர்த்தும் வீரசோழிய ஆசிரியர் காட்டும் ஈறு களிலிருந்து, வினைமுற்று விகுதிகளைப் பிரித்தெடுத்துவிட்டு, எஞ்சி நின்ற பதத்தைக் காலங் காட்டு மிடைநிலையென வகுத்த தாகும். தான் என்ற வாய்பாடு வீரசோழியத்தார் கூறப் பெருந்தேவனார் உண்டான் என உதாரணந் தருவர். தகரத்தின் திரிபே, இந்த உதாரணத்தில் வரும் டகரம்

என்று பெருந்தேவனுர் உணர்ந்திருக்கிருர். இன்றைய மொழியியலார், ட, ற என்னும் இடைநிலைகள் தகரத்தின் திரிபே யென்பர். இன் இடைநிலைபற்றி, நன்னூல் விருத்தி யுரையில், சங்கர நமச்சிவாயப் புலவர், உறங்கினுன் என உதாரணந்தந்து, எஞ்சியது எனக் கடைகுறைந்தும் போனது என முதல் குறைந்தும் வரும் என்பர். மலையாளம், தெலுங்கு, கன்னடமொழிகளில், த், இ என்பனவே இறந்த கால இடைநிலைகளாகும். தமிழில், நன்னூலார் சுட்டும் ட், ற் என்பன த் என்பதன் திரிபே. ண், ள் என்பவற்றின் பின் வரும் த், ட் ஆக மாறுதலும், ன், ல் என்பவற்றின் பின் வரும் த், ற் ஆக மாறுதலும் தமிழொலியியல்புக்கேற் பனவே.

ஆள்+த்+ஆன்=ஆண்டான்.
உண்+த்+ஆன்=உண்டான்.
கல்+த்+ஆன்=கற்ருன்.
ஈன்+த்+ஆள்=ஈன்ருள்.

சொல்லிய, ஆற்றிய, செப்பிய என்ற வினைகளில் இகரம் இறந்த காலத்தை உணர்த்துகிற்து.

சொல்+இ+ய்+அ.
ஆற்று+இ+ய்+அ.
செப்பு+இ+ய்+அ.

யகரம் உடம்படுமெய்யாக வருகிறது. இகரமே கால முணர்த்துகிறது. பாடி, வீசி, போகி என்னும் வினையெச் சங்களில் இகரமே இறந்த கால முணர்த்தல் உறுதியா கிறது. ஆயின், பாடினுன், வீசினுன், போகினுன் என்ற உதாரணங்கள் காணப்படுகின்றன. நன்னூலார் இவற்றைப் பாடு+இன்+ஆன், வீசு+இன்+ஆன், போகு+இன்+ஆன் எனப் பிரித்து இடைநின்றதை இறந்தகாலங் காட்டு மிடை நிலை யென்றிருக்கிருர். சொல்லிய, சொல்லின ; ஆற்றிய, ஆற்றின என்பவற்றை ஒப்பிட்ட கால்டுவெல், னகரமெய், யகரமெய் போல, இங்கே உடம்படுமெய்யாக வருகிற தென்

கிருர். இகரமில்லாமல் னகரமெய் மாத்திரம் பெற்றுக் காலங் காட்டும் பகுதிகள் ஆ, போ என்பவே. உதாரணம் :— ஆனது, போனது. ஆயினது, போயினது என்பனவற்றின் திரிபே இவை யெனலாம். என்றிசினோன் என்பதில், எடுத்தோதாப் பிற இடைநிலை நின்று இறந்த காலங் காட்டிய தென்பர் சங்கர நமச்சிவாயப்புலவர் நன். சூ. 145 விருத்தி யுரையில். இசின் இறந்த கால இடைநிலையென்பர் நன்னூற் காண்டிகை யுரைகாரர். அப்படியானுல், என்று என் பதிலுள்ள ற் அல்லது த் இறந்த காலத்தைக் காட்டவில் லையா என்ற கேள்வி எழுகிறது.

வினைப்பகுதி குற்றியலுகர ஈருக இருந்தால், இகரம் இறந்த காலங் காட்ட வருகிறது. பகுதி நெட்டெழுத்தாக இருந்தாலும் அவ்வாறே. ள், ல் என்ற ஈறுகள் சில சந்தர்ப் பங்களில் இகர இடைநிலை பெறுகின்றன. உதாரணங் கள் :— தள்ளினுன், புல்லினுன். த், ட், ற், இன்—இவை யாவும் ஒரே பொருள் தருகின்றன. வெவ்வேறு ஒலிகளின் சூழலில் வருகின்றன. இவற்றை, மாற்றுப் பொருளசை கள் (allomorphs) என்று கூறலாம்.

நிகழ் கால இடைநிலைகளில், கிறு என்பது கின்று என ஒலிநயங் கருதி மாறிய தென்பர் பண்டிதர் இலக்குவனுர், 'The Making of Tamil Grammar' என்ற தம்முடைய நூலில். பரிபாடலில், சேர்கின்ற என்ற பிரயோகம் காணப்படுகிறது. அங்கு வினையாலணையும் பெயராக வருகிறது. தேவாரம், திருவாசகம், நாலாயிரதிவ்விய பிரபந்தம் என்பவற்றில், கிறு, கின்று, ஆநின்று என்பவை பரந்து காணப்படுகின் றன. தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிகளில் இந்த இடைநிலைகளில்லை. ஆனுல், இவை மலையாளத்தில் காணப் படுகின்றன. எனவே, தெலுங்கு, கன்னடம் திராவிட மொழியிலிருந்து பிரிந்த பின்பும், மலையாளம் பிரியு முன்பும், இவை தோன்றியிருக்கலாம். கின்று என்பதைக் கு+இன்று எனப் பிரிக்க வேண்டும், கின்று என்பதன் திரிபே கிறு என்று முதலில் கூறியவர் டாக்டர் Graul, தம்முடைய 'Outlines of Tamil Grammar' என்ற நூலில். கு, பழந்தமிழில்

எதிர்காலத்தைக் குறித்தது. அதனோடு இப்போது என்று பொருள்படும் இன்று என்பதைச் சேர்க்க, நிகழ்காலம் வருகிறது என்று அவர் கூறுகிறார். டாக்டர் Gundert என்பவரும் தம்முடைய மலையாள இலக்கணத்தில், இதே கருத்தை வெளியிடுகிறார். பேச்சுத் தமிழில், கிறு, கின்று என்பன இன்று முழுதாக ஒலிக்கப்படுவதில்லை. வேகுகிறது என்பது வேகுது என ஒலிக்கப்படுவதுண்டு. போகிறேன் என்பது போறேன் என ஒலிக்கப்படுவதுண்டு.

ஆநின்று என்னும் இடைநிலை ஆகி நின்று என்பதிலிருந்து வந்திருக்க வேண்டும் என்று கால்டுவெல் கருதுகிறார். ஆகி, ஆயி, ஆய், ஆ என்றிவ்வாறு திரிந்துகாணப் படலாம் என்பர். ஆ எதிர்மறைப்பொருள் தருவதாயினும், நிகழ்கால இடைநிலையில் ஒரு பகுதியாக வரும்பொழுது, உடன்பாட்டுப்பொருள் தருகிறது என்பர் தமிழிலக்கண ஆசிரியர். ஆனால், ஆ என்றால் ஆவது என்றும் பொருள் படும். ஆவது எதிர்காலத்திற் குரிய நிகழ்ச்சி. ஆநின்று/ ஆகிடந்து / ஆவிருந்து. எதிர்காலத்து நிகழ்ச்சி ஆரம்பித்து நிற்கிறது, ஆரம்பித்துக் கிடக்கிறது, ஆரம்பித்து இருக்கிறது என்று இவை பொருள் தரலாம். எதிர்காலத்தில் முற்றுப் பெற வேண்டிய நிகழ்ச்சி, ஆரம்பித்தாய் விட்டதென்றால், நிகழ் காலத்தில் நடந்துகொண்டிருக்கிற தென்பதுதானே பொருள். கின்று=கு (எதிர்காலம்)+இன்று. எதிர் காலத்தில் முற்றுப் பெற வேண்டிய நிகழ்ச்சி, நிகழ் காலத்திலேயே ஆரம்பிப்பதைக் குறிக்கிறது. எதிர்காலத்தின் ஆரம்பம்தான் நிகழ்காலம்; நிகழ் காலத்தின் முடிவு தான் எதிர்காலம். அதனால், கின்று என்பது நிகழ் காலத்தைக் குறிக்கலாம் என்று கொண்டால், இறந்த காலத்தில் தொடங்கியது, எதிர்காலத்தில் முடிய இருப்பதாக உள்ளது. நிகழ் காலத்தில் நடந்து கொண்டிருப்பதாகக் கொள்ளலாம். எனவே, ஆ நின்று/ஆ கிடந்து/ஆ விருந்து என்பன, இவ்வாறு நிகழ் காலத்தைக் காட்டுகின்றன எனலாம்.

பண்டிதர் இலக்குவனர் தம்முடைய The Making of Tamil Grammar என்ற நூலில், பழங்காலத்து வினையாலணை

யும் பெயர்களில் நகரமும் பகரமும் நிகழ்கால முணர்த்தின என எடுத்துக் காட்டுவர். உடம்படுநர் (உடம்படுகின்றவர்) (அக நானூறு. 16) ; எம்மலை வாழுநர் (வாழுகின்றவர்) (குறுந்தொகை. 39); என்னுநள் போல் (என்கின்றவள்) (அக நானூறு. 5). நகரம் நிகழ் காலத்தை யுணர்த்தியதை, இலக்கணவாசிரியர் எடுத்துக்கூறவில்லை. இடைக்காலத்திலேயே, இது அருகிய வழக்காகிவிட்டது. நகுபவள் (நகுகின்றவள்) (கலித்தொகை. 71) ; உணர்ப்பவள் (உணர்த்துகின்றவள்) (கலித்தொகை. 72) ; உண்பவள் (உண்கிறவள்) (கலித்தொகை. 73). பிற்கால'இலக்கணவாசிரியர்,பகரம் எதிர்காலத்தில் மாத்திரம் வரும் என வரையறை செய்த தனாற் போலும், நிகழ்காலத்தில் இவ்வாறு வருதல் அருகிவிட்டது.

எதிர் காலங் காட்டு மிடைநிலைகளில், வகரம் வருமிடத்தில் பகரம் வருவதில்லை. அதனால் இவற்றையும் மாற்றுப் பொருளசைகளென்று கூறலாம். உதாரணமாக, உண் என்பது உண்பான் என்றேவர, செய் என்பது செய்வான் என்றே வரும். தன்வினையில் வகரம் வருமிடங்களில் பிறவினையில் பகரம் வரும். ஒழிவான்—ஒழிப்பான். எதிர்மறையில் வகரம் வந்தால், உடன்பாட்டில் பகரம் வருகிறது. நடவான்—நடப்பான். செய்கு, செய்கும் என்பன எதிர்காலத்தில் வழங்கியதை ஆராய்ந்து, கு என்பது தொழிற்பெயர் விகுதியாக வருதலையுணர்ந்து, செய்கு முதலியவை தொழிற்பெயரென முடிவுகட்டுவர் கால்டுவெல். தொழிற் பெயராக இருந்தவை, கால முணர்த்தாத சொல்லாக இருந்து பின்னர் முக் காலத்திற்கும் பொதுவினை யாக மாறி, நாளடைவில் எதிர்கால வினையாக அமைந்திருக்கு மென்பது அவர் கொள்கை. எதிர்கால இடைநிலையாக உள்ள பகரம், சில இடங்களில் மகரமாகத்திரிய, என்மர் முதலிய வடிவங்கள் தோன்றுகின்றன.

கால இடைநிலையில்லாமலும், சொற்கள் காலமுணர்த்துவதுண்டு. அச்சொற்களில் விகுதிகள் கால முணர்த்துவனவாகக் கொள்ளப்படுகின்றன. காலஇடைநிலை கூறிவந்த

நன்னூலார், 'இவை சில வில' என 144-ஆம் சூத்திரத்திற் கூறுவர். அடுத்த சூத்திரம், காலங்காட்டும் விகுதிகளை யெடுத்துக் கூறும். று, றும், என்பன இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும் ; து, தும் என்பன இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும் ; டு, டும் என்பன இறந்தகாலத்தையும் கு, கும் என்பன எதிர்காலத்தையும் ; மின், ஏவல், வியங்கோள், இ, மார் என்பன எதிர்காலத்தையும் ; ப, இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும்; செய்யும் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் ; எதிர்மறை முக்காலத்தையும் காட்டும் என்பர்.

சென்று—சென்றேன் ; சென்றும்—சென்றேம்
—இறந்தகாலம்.

சேறு—செல்வேன் ; சேறும்—செல்வேம்—எதிர்காலம்.

வந்து—வந்தேன் ; வந்தும்—வந்தேம்—இறந்தகாலம்.

வருது—வருவேன் ; வருதும்—வருவேம்—எதிர்காலம்.

உண்டு—உண்டேன் ; உண்டும்—உண்டேம்
—இறந்தகாலம்.

உண்கு—உண்பேன் ; உண்கும்—உண்பேம்
—எதிர்காலம்.

1. உண்மின், உண்ணீர், உண்ணும், உண்ணாய் என மின், ஈர், உம், ஆய் என்னும் ஏவல் விகுதிகளும்
2. உண்க, வாழிய, வாழியர் எனக் க, இய, இயர் என்னும் வியங்கோள் விகுதிகளும்
3. சேறி என இகர விகுதியும் (செல்வாய்)
4. உண்மார் எனமார் விகுதியும் (உண்பார்)

எதிர்காலங் காட்டின. உண்ப என்பது உண்டார் எனவும் உண்பார் எனவும் பொருள் பட்டு இறந்த காலமும் எதிர் காலமுங் காட்டின. உண்ணும் என்னும் செய்யும் என்வாய்பாட்டுமுற்று நிகழ்காலமும் எதிர்காலமுங் காட்டிற்று. உண்ணா என்னும் எதிர்மறை முக்காலமுங் காட்டிற்று.

தொல்காப்பியர் காலங்காட்டும் விகுதியென எதையும் சுட்டிக் கூறவில்லை. தொல். சொல். 202 க்குச் சேனாவரையர் உரையெழுதிய போது, 'உம்மொடு வரூஉங் கடதற எதிர்காலம் பற்றிவரும்' என்பர். மேலும், 'உம்மொடு வரூஉங் கடதற—உண்கும், உண்டும், வருதும், சேறும்.' அடுத்த சூத்திர உரையில், 'குற்றுகர நான்கும் அல்லும் எதிர்காலம் பற்றிவரும்' என்பர். தொல், சொல். சூ. 7ன் உரையில், மார் எதிர்காலமுணர்த்துவதென்பர். நன்னூலாரிலிருந்து இவர் வேறுபடுகிறது தெரிகிறது. டு, டும் எதிர்காலத்தைக் குறிக்குமென இவர் கூற, நன்னூலார் இறந்தகாலத்தைக் குறிக்குமென்பர். து, தும் ; று, றும் என்பன எதிர்காலத்தைக் குறிக்குமென இவர் கூற, நன்னூலார் எதிர்காலத்தோடு இறந்த காலத்தையும் குறிக்குமென்பர். கு, டு, து, று என்பன பெரும்பாலும் எதிர்காலத்து வருமென்பர் நச்சினார்க்கினியர்.

2. தமிழில் சொற்பாகுபாடு

தொல்காப்பியம் சொல்லதிகாரம் 397–ஆம் சூ. :—

இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்லென்
றனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே.

தொல்காப்பியர் காலத்தில், தமிழ்ச் சொற்கள், இலக்கண முறையிற் போன்றே, சொற்பிறப்பியல் முறையிலும் நான்காக வகுக்கப்பட்டன. தொல்காப்பியம் சொல்லதிகாரம் பெயரில் முற்பகுதியில் இலக்கண முறையிலமைந்த சொற்பாகுபாடு காணப்படுகிறது.

சொல்லெனப் படுப பெயரே வினையென்
றாயிரண் டென்ப அறிந்திசி னோரே
—தொல். சொல். 158.

இடைச்சொல் கிளவியும் உரிச்சொல் கிளவியும்
அவற்றுவழி மருங்கில் தோன்று மென்ப
—தொல். சொல். 159.

சேனவரையர் உரை: 'பெயர் வினை யிடையுரி யென்பன இயற்சொற் பாகுபாடாகலான், அந் நான்கு பாகுபாட்டா னும் செய்யுட் குரித்தாம். திரிசொற் பெயராயல்லது வாரா... திசைச்சொல்லுள், ஏனைச் சொல்லு முளவேனும், செய்யுட் குரித்தாய் வருவது பெயர்ச்சொல்லேயாம். வடசொல்லுள் ளும் பெயரல்லது செய்யுட்குரிவாய் வாரா. இவ்வாறுதல் சான்றோர் செய்யுள் நோக்கிக் கண்டு கொள்க'.

சான்றோர் செய்யுள் என்று உரையாசிரியர் குறிப்பது, சங்ககால இலக்கியத்தை யாதல் வேண்டும். செய்யுள் என்ற சொல், தொல்காப்பியர்காலத்தில், எழுத்துவழக்கு முழுவதையும் குறித்திருக்கிறது. தொல்காப்பியம் உரை நடையை ஒருவகைச் செய்யுளாகவே கூறுகிறது. நான்கு வகை உரைநடை தொல்காப்பியர் காலத்திலேயே இருந் திருக்கிறது. தொல்காப்பியர் கால உரைநடை எதுவும் இன்று கிடைக்கவில்லை. அக்காலப் பாட்டுக்கள் யாவும் இன்று கிடைத்துள்ளன என்று கொள்ளவும் இடமில்லை. எனவே, உள்ளபாட்டுக்களை மாத்திரம் வைத்துக்கொண்டு, சேனவரையர் வரையறை கூறுவது பொருத்தமாகத் தெரிய வில்லை.

சொற்பாகுபாடு கூறவந்த நன்னூலார் இந்த மூன்று சூத்திரங்களின் பொருளையும் இணைத்து ஒரு சூத்திரஞ் செய்வர்.

அதுவே—
இயற்சொற் றிரிசொ லியல்பிற் பெயர்வினை
எனவிரண் டாகு மிடையுரி யடுத்து
நான்கு மாந்திசை வடசொலணு காவழி
—நன். சூ. 270.

'பெயரியற்சொல், பெயர்த்திரிசொல், வினையியற்சொல், வினைத்திரிசொல், இடையியற்சொல், இடைத்திரிசொல், உரி யியற்சொல், உரித்திரிசொல் என எண்வகைப்படுமென்பதும் திசைச்சொல்லும் வடசொல்லுஞ் சேர்ந்த விடத்துப் பத்து

வகைப்படுமென்பதும் பெற்ரும்' என்னும் நன்னூற் காண்டிகையுரை. சேனுவரையருக்கும் நன்னூலாருக்கும் ஒரு முக்கிய வேறுபாடு காணப்படுறது. சேனுவரையர் சொற்களை ஏழாகப் பாகுபாடு செய்ய, நன்னூலார் பத்தாகப் பாகுபாடு செய்கிருர். திரிசொல்லில், பெயர் மாத்திரம் சேனுவரையர் கூற, நன்னூலார் பெயர், வினை, இடை, உரி நான்கும் கூறுகிருர்.

நன்னூலாருக்கும் சேனுவரையருக்கும் திரிசொல் பற்றி, இத்தகைய வேறுபாடு ஏற்பட்டதற்குக் காரணமாயவற்றுள் ஒன்று, திரிசொல் என்பதனுல், தொல்காப்பியர் எதனைக் குறிப்பிட்டார் என்பது பிற்காலத்தில் தெரியாமல் போனது. திசைச்சொல், வடசொல்லென்பவற்ருல், தொல்காப்பியர் எவற்றைக் கருதினுர் என்பதில் கருத்து வேறுபாடு அதிகமில்லை. இயற்சொல்லையும் திரிசொல்லையும் விளக்கவந்த தொல்காப்பியர்,

அவற்றுள்
இயற் சொற் ருமே
செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்
தம்பொருள் வழாமை யிசைக்குஞ் சொல்லே
—தொல். சொல். 398.

ஒருபொருள் குறித்த வேறுசொல் லாகியும்
வேறுபொருள் குறித்த ஒருசொல் லாகியும்
இருபாற் றென்ப திரிசொற் கிளவி
—தொல். சொல். 399.

சேனுவரையருடைய கருத்துக்கள், அவருடைய பின்வரும் உரைப்பகுதிகளில் புலப்படுகின்றன. 'செந்தமிழ் நிலத்து வழச்காதற்குப் பொருந்திக் கொடுந் தமிழ் நிலத்துந் தம் பொருள் வழுவாமலுணர்த்தும் சொல் இயற்சொல்லென்பர்'. 'திரிபின்றி இயல்பாகிய சொல்லாகலின் இயற்சொல்லாயிற்று'. 'கொடுந்தமிழ் நிலத்திற்கும் பொதுவாகலின் இயற்சொல்லாயிற் றெனினு மமையும்'. 'திரிசொல்லது

திரிவாவது உறுப்புத் திரிதலும் முழுவதுந்திரிதலுமென இரு வகைத்து'. 'திரிபுடைமையே திரிசொற்கிலக்கணமாதல், சொல்லின் முடிவின் அப்பொருள் முடித்தல் என்பதனுற் பெறவைத்தார்'. இளம்பூரணர், நச்சினுர்க்கினியரும் இதே கருத்தினரே.

தொல்காப்பியர் திரிசொல்லின் இருவகைகளைக் கூறு வதோடு நிறுத்திவிட்டார். தமிழ்ச் சொற்களில், மிகப்பெரும் பாலன, ஒரு பொருள் குறித்த பல சொல்லாகியும் பல பொருள் குறித்த ஒரு சொல்லாகியும் அமைவதை நன்னூ லார் கவனித்திருக்கிருர். திரிசொல், இயற்சொல்லின் வேறு பட்ட சொல்லாகவேண்டும் என நன்னூலார் உணர்ந்திருக் கிருர். திரிசொல் இயற்சொல்லின் வேறுபட்ட வடிவம் என்று சேனுவரையர் கருதுகிருர். திரிதல் என்ருல் வேறு படுதல். நன்னூலாரின்படி, வேறுபடுதலென்றது, இயற் சொற்போல, இயல்பால் உணரப்படாது அரிதின் உணரப் படுதலே. அதனுலேதான், பவணந்தி முனிவர்,

'ஒருபொருள் குறித்த பலசொல் லாகியும்
பலபொருள் குறித்த வொருசொல் லாகியும்
அரிதுணர் பொருளன திரிசொல் லாகும்
—(நன். சூ. 272) என்பர்.

'அரிதுணர் பொருளன என்றதனுல், ஒரு பொருள் குறித்த பல சொற்களுள்ளும் பல பொருள் குறித்த ஒரு சொல்லுள் ளும், இயற்சொல்லொழியக் கொள்க' என்பர் நன்னூல் விருத்தியுரை காரர்.

இயற்சொல்லுக்கும் திரிசொல்லுக்கும் நன்னூலார் கூறு வதே வேற்றுமையாயின், சொல்லை இவ்வாறு இரண்டாகப் பாகுபாடு செய்வதால், எவ்விதச் சிறப்புமில்லை. இயற்சொல்லை யும் திரிசொல்லையும் ஒரே வகையாகக் கொண்டு, திசைச் சொல், வடசொல் என்பவற்ருேடு சேர்த்து, சொற்பிறப் பியல் முறையில், தமிழ்ச் சொற்களை மூன்ருகப் பாகுபாடு செய்திருக்கலாம்.

இயற்சொல் செய்யுள் விகாரம் பெறுவதே திரிசொல் என்று சேனாவரையர் கூறுவதை ஏற்றுக் கொண்டால், திசைச்சொல், வடசொல்லுங்கூடச் செய்யுள்விகாரம் பெறலாம். தொல்காப்பியர் செய்யுளீட்டச் சொல்லாக, இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என நான்கையுங் கூறி, அவற்றை விளக்கிப் பின்பு செய்யுள் விகாரங் கூறுகிறார்.

> அந்நாற் சொல்லுந் தொடுக்குங் காலை
> வலிக்கும்வழி வலித்தலும் மெலிக்கும்வழி மெலித்தலும்
> விரிக்கும்வழி விரித்தலும் தொகுக்கும்வழித் தொகுத்தலும்
> நீட்டும்வழி நீட்டலும் குறுக்கும்வழிக் குறுக்கலும்
> நாட்டல் வலிய என்மனார் புலவர்
>
> —தொல். சொல். 403.

திரிசொல்லும் செய்யுள் விகாரம் பெறு மென்பது தொல்காப்பியர் கருத்து. எனவே, செய்யுள் விகாரம் பெற்ற இயற்சொல்லே திரிசொல் என்ற சேனாவரையர் கருத்துப் பொருந்தாது. திரிசொல் என்பதால் தொல்காப்பியர் எதைக் கருதினார் என்று இன்று தெரியாது.

தொல்காப்பியர் பெயர்ச்சொல்லென்றால் என்ன என்றும் வரையறை செய்யவில்லை. பெயர்ச்சொல் என்ற குறியே பொருளை விளக்கி நிற்கிறதென்று அவர் கருதியிருக்கலாம். தொல்காப்பியம் குறிக்கும் பெயர்ச்சொல்லென்பது, ஆங்கிலத்திலுள்ள **noun** என்பதற்கு நேரிடையான சொல்லன்று. ஆங்கிலத்தில் மூவிடப்பெயர் **(pronoun)**, எண்ணுப்பெயர் **(numeral)** எனக் கொள்ளப்படுவன, தமிழில் பெயர்ச்சொல்லிலேயே அடங்குகின்றன. இன்னொரு வகையில் பார்க்கும்பொழுது, பெயர்ச்சொல், **noun** என்பதிலும் பார்க்கக் குறுகிய பொருளுடையது போலக் காணப்படுகிறது. தொல்காப்பியர் உயர்திணை, அஃறிணைப் பெயர்களாகத் தரும்

பட்டியலைப் பார்க்கும்பொழுது. அவர் ஆள் அல்லது பொருளைக் குறிக்கும் சொல்லையே பெயர்ச்சொல்லாகக் கொண்டிருக்கிறார் போலத் தெரிகிறது. நன். சூ. 275, பெயரின் இலக்கணத்தை வரையறுத்துக் கூற முயல்கிறது.

இடுகுறி காரண மரபோ டாக்கந்
தொடர்ந்து தொழிலல காலந் தோற்ரு
வேற்றுமைக் கிடனாய்த் திணைபா லிடத்தொன்
றேற்பவும் பொதுவு மாவன பெயரே.

பெயர்ச்சொற்கள் இடுகுறி மரபாக அல்லது இடுகுறி ஆக்கமாக, அல்லது காரணக்குறி மரபாக அல்லது காரணக்குறி ஆக்கமாக வரலாம் என்று கூறப்படுகிறது. வினையாலணையும் பெயர் தவிர, ஏனைய பெயர்கள் காலங்காட்டா. பெயர்ச்சொற்கள் எட்டு வேற்றுமைகளையும் ஏற்கக் கூடியன. அவை திணை பாலிடங்களில் ஒன்றையோ பலவற்றையோ ஏற்கும். இவையே, சூத்திரத்தில் சொல்லப் படுகின்றன. இந்தச் சூத்திரம் பெயர்ச் சொற்களைப்பற்றிய செய்திகள் பல தருகிறது. ஆயின், இது பெயர்ச்சொல்லுக்கு வரையறை யிலக்கணம் உணர்த்துகிறது என்று கூற இயலாது.

வினைச்சொல் பற்றித் தொல்காப்பியம் சொல்லதிகாரம் 198-ஆம் சூத்திரம் :

வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்.

வினையென்று சொல்லப்படுவது, வேற்றுமையொடு பொருந்தாது, ஆராயுங்காற் காலத்தொடு புலப்படும். இந்தச் சூத்திரமும், வினைச்சொல் பற்றிய செய்திகள் சில கூறுகிறதென்றே கொள்ளலாம். வினையென்ற பெயரே, அதன் பொருளைச் சுட்டுகிறதென்று தொல்காப்பியர் நினைத்திருக்கலாம். அதே நோக்கிற் போலும், வீரசோழியமும் தொழிற்பதம் என்று வினைச்சொல்லைக் குறிக்கிறது. நேமிநாதத்தார் தொல்காப்பியர் கூறுவதையே திருப்பிக் கூறுகிறார். நன்னூலார்,

'செய்பவன் கருவி நிலஞ் செயல் காலஞ்
செய்பொருளாறுந் தருவது வினையே'
—(சூ. 320) என்பர்.

இதனை வினைச் சொல்லின் வரையறையிலக்கணமாகக் கொள்ளமுடியாது. வினைச்சொல் பொதுவாக, செயல் காலம் செய்பவன் என்பவற்றையே உணர்த்தும். நன்னூலாரின் இந்தச் சூத்திரம்,

'வினையே செய்வது செயப்படு பொருளே
நிலனே காலம் கருவி யென்ரு
இன்னதற் கிதுபய னுகு வென்னும்
அன்ன மரபின் இரண்டொடுந் தொகைஇ
ஆறெட் டென்ப தொழின்முதல் நிலையே' என்ற

தொல்காப்பியம் சொல்லதிகாரம் 112-ஆம் சூத்திரத்திலிருந்து பெறப்பட்டதாகல் வேண்டும். தொழிலது காரணத்தை, அதாவது தொழிலுக்கு முன் நிகழ்பவைகளைத் தொல்காப்பியச் சூத்திரம் எடுத்தோதுகிறது. வினைச்சொல், இப்பொருள்கள் யாவற்றையும் உணர்த்தவேண்டு மென்று நன்னூலாரைக் கொள்ள வைத்தது என்னவென்று தெரியவில்லை. இலக்கண விளக்கத்தார், நன்னூலார் கூறிய வரையறையிலக்கணம் தவறு என உணர்ந்திருக்கிருர். தொல்காப்பியர் கூறியது வரையறையிலக்கணமாதல் வேண்டும் என்று கொண்ட அவர், தொல்காப்பியச் சூத்திரத்திலிருப்பதற்கு இன்னும் சிறிது கூட்டினுலே, அது வரையறையிலக்கணம் என்னும் தகுதி பெறலாம் என்ற எண்ணத்தில், 'பொருட் புடைபெயர்ச்சி புலப்படுவதுவே' என்பதனைச் சேர்த்து எழுதியிருக்கிருர். அதனுல், அவர் கருத்துப்படி, வினைச்சொல் தொழிலையும் காலத்தையும் உணர்த்தி, வேற்றுமை யுருபுகள் முதலியன பெருமல் நிற்பதாகும்.

இடைச்சொல் பற்றித் தொல்காப்பியர் மூன்று சூத்திரங்களால் விளக்குகிருர்.

இடையெனப் படுவ பெயரொடும் வினையொடும்
நடைபெற் றியலுந் தமக்கியல் பிலவே

—தொல். சொல். 249.

அவை தாம்
புணரியல் நிலையிடைப் பொருணிலைக் குதநவும்
வினைசெயன் மருங்கிற் காலமொடு வருநவும்
வேற்றுமைப் பொருள்வயின் உருபா குநவும்
அசைநிலைக் கிளவி யாகி வருநவும்
இசைநிறைக் கிளவி யாகி வருநவும்
தத்தங் குறிப்பிற் பொருள்செய் குநவும்
ஒப்பில் வழியாற் பொருள்செய் குநவுமென்
றப்பண் பினவே நுவலுங் காலை

—தொல். சொல். 250.

அவை தாம்,
முன்னும் பின்னும் மொழி யடுத்து வருதலுந்
தம்மீறு திரிதலும் பிறிதவண் நிலையலும்
அன்னவை யெல்லாம் உரிய வென்ப

—தொல். சொல். 251.

நேமிநாதம் சொல்லதிகாரம் 50-ஆம் சூத்திரம் இடைச் சொல்பற்றிய தொல்காப்பியம் சொல்லதிகாரம் 250-ஆம் சூத்திரத்தி லுள்ளதையே திருப்பிக்கூறுகிறது. நன்னூல் 420-ஆம் சூத்திரம், தொல்காப்பியர் மூன்று சூத்திரங்களில் சொல்லியதையும் சேர்த்து ஒரே சூத்திரமாகக் கூறியது :—

வேற்றுமை வினைசா ரியையொப் புருபுகள்
தத்தம் பொருள விசைநிறை யசைநிலை
குறிப்பெனெண் பகுதியிற் றனித்திய லின்றிப்
பெயரினும் வினையினும் பின்முன் னோரிடத்
தொன்றும் பலவும்வந் தொன்றுவ திடைச்சொல்.

இலக்கண விளக்கமும் தொன்னூல் விளக்கமும் நன்னூல் கூறியதையே கூறுகின்றன. தொல்காப்பியத்திற்கு உரை

யெழுதியவர்களும் பிற்காலத் தமிழிலக்கணவாசிரியர்களும் தொல். சொல். 249 இடைச்சொல்லுக்கு வரையறையிலக் கணங் கூறுவதாகக் கொண்டனர். பெயர்ச்சொல், வினைச் சொல் என்பவற்றிற்போல, இடைச்சொல்லும், தன்குறி யாலேயே தன்னை உணர்த்தி நிற்கும் என்று தொல்காப் பியர் கொண்டிருக்கலாம். இடைச்சொல்லெல்லாம் வேற் றுமைச் சொல்லே என்ற தொல்காப்பியம் சொல்லதிகாரம் 455–ஆம் சூத்திரம், இதைத் தெளிவு படுத்துகிறது. வேற் றுமையெனினும் வேறுபாடெனினும் ஒக்கும். இன்னொரு சொல்லோடு சேர்ந்து, அதன்பொருளை வேறுபடுத்துந் தன் மையதே இடைச்சொல் லென்று கூறுகிறுர். 249, 251-ஆம் சூத்திரங்களில், இடைச்சொல், தாம் தனித்துநின்று பொருள் தருவனவல்ல, பெயர்ச்சொல் வினைச்சொற்களின் பகுதி யாக, அல்லது அவற்றின் முன் பின்னுக அமைந்து காணப் படுவன என்கிறுர்.

சேனுவரையரும் தெய்வச்சிலையாரும், தொல். சொல். 249 உரையில், இடைச்சொல், பெயரும் வினையு முணர்த் தும் பொருளைச் சார்ந்து நின்று, அவற்றை வெளிப்படுப் பதல்லது, தமக்கெனப் பொருளுடையவல்ல வென்ற வாரும் என்பர். அவ்வாறு கொள்வது ‘எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே’ (தொல். சொல். சூ. 155) என்று கூறுந் தொல் காப்பியருக்கு உடன்பாடாக முடியாது. ‘தமக்கியல்பில’ என்பது, பெயர்ச்சொல், வினைச்சொல், அல்லது பெயரும் வினையும் சேர்ந்த வாக்கியத்திற்கு, வெளியில் இடைச்சொல் தனியே வரா தென்பதைச் சுட்டுகிறது.

உரிச்சொல்லின் இயல்பைத் தொல்காப்பியர், சொல்லதி காரம் சூ. 297–இல் எடுத்துக் கூறுகிறுர்.

உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை
இசையினுங் குறிப்பினும் பண்பினுந் தோன்றிப்
பெயரினும் வினையினும் மெய்தடு மாறி
ஒருசொல் பலபொருட்கு உரிமை தோன்றினும்

பலசொல் ஒருபொருட்கு உரிமை தோன்றினும்
பயிலாத வற்றைப் பயின்றவை சார்த்தித்
தத்த மரபிற் சென்றுநிலை மருங்கின்
எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்.

தொல்காப்பிய உரையாசிரியர் யாவரும் இச்சூத்திரம் உரிச்சொல்லின் வரையறையிலக்கணம் உணர்த்துவதாகக் கருதினர். 'மெய்தடுமாறலும் ஒரு சொற் பலபொருட் குரிமையும் பலசொல் ஒரு பொருட் குரிமையும் உரிச்சொற்கு உண்மையான் ஓதினாரேனும், உரிச்சொற்கு இலக்கணமாவது, இசை குறிப்புப் பண் பென்னும் பொருட்குரியவாய் வருதலேயாம்' என்பர் சேனாவரையர். தொல்காப்பியர் உரிச்சொல்லைக் குறைச்சொற் கிளவியென்று எழுத்ததிகாரத்திற் குறிப்பிடுவதால், சங்கத மொழியில், தாது என்பதற்கு நேரிடையானதே தமிழ்மொழியில், உச்சொல் என்பர் தெய்வச்சிலையார். நேமிநாதம் சொல்லதிகாரம் 56–ஆம் செய்யுள், தொல்காப்பியர் சொல்வதைச் சுருக்கிக் கூறும். நன்னூல் 442–ஆம் சூத்திரம்,

'பல்வகைப் பண்பும் பகர்பெய ராகி
ஒருகுணம் பலகுணந் தழுவிப் பெயர்வினை
ஒருவா செய்யுட் குரியன வுரிச்சொல்' என்று கூறும்.

செய்யுளுக்கு மாத்திரம் உரியனவே உரிச்சொல் என்கிறது நன்னூல். இலக்கண விளக்கத்தார், தொல்காப்பியச் சூத்திரத்திலுள்ளதைக் கூறி, உரிச்சொல், பெயர்ப்போலி வினைப்போலியாக அல்லது பெயர் வினைச்சொற்களின் அடிச்சொல்லாக வரும் என்பர். தொல்காப்பியச் சூத்திரம், உரிச்சொல்லின் வரையறையிலக்கணம் கூறுவதாகக் கொண்டால், சேனாவரையர் சுட்டிக்காட்டுவது போல, சூத்திரத்தின் முதலிரண்டடிகளே இங்கு தேவையானவை. ஆனால், உரிச்சொல்லென்றால் என்ன என்பதுபற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு காணப்படுகிறது. 'எழுத்துப் பிரிந்திசைத்தல் இவணியல் பின்றே' (தொல். சொல். 395)

என்பதனைத் தெய்வச்சிலையார், உரையோடு சேர்த்துவைத்துப் பார்க்கும் டாக்டர் **P. S.** சுப்பிரமணிய சாஸ்திரி, தெய்வச்சிலையார் கொண்ட முடிவைச் சிறிது மாற்றுவர். தாது என்பது வினையடியையே குறிக்கும். தொல்காப்பியர் தமிழ்ச் சொற்கள் யாவும் வினையடியிலிருந்தே பிறக்கும் என்று கூறாததனால் உரிச்சொல், பெயரடி வினையடி இரண்டையும் குறிப்பதாகும் என்று அவர் கொள்வர். உரிச்சொல்லும் இடைச்சொல்லும் சேர்ந்தே, பெயர்ச்சொல் வினைச்சொற் பகுபதங்களாகின்றன என்று அவர் கருதுகிறார். ரா. சீனிவாசன் அவர்களும் இதே கருத்தைத் தமது மொழியியலில் எடுத்துக் கூறுவார்கள். டாக்டர் மு. வரதராசன், சேனாவரையரது கருத்தைப் பின்பற்றி, இசை குறிப்புப் பண்பு என்பனவற்றை உணர்த்துவனவே உரிச்சொல்லென்கிறார். போப்பையர், உரிச்சொல் பெயரடையாகவோ, வினையடையாகவோ வருவ தென்கிறார். உரிச்சொல்லே, பெயரடையாக வருகிறது என்று கால்டுவெல்லும் கருதுகிறார். உரிச்சொல் பெயரடையே என்பர் காமில்சுவெலிபில். அறிஞர்களிடையே, இத்தகைய கருத்து வேறுபாடு இருப்பதற்குக் காரணம் உரிச்சொற்கள் சில, சில சந்தர்ப்பங்களில், வெவ்வேறு சூழ்நிலைகளில் பயன்படுதலே. தெய்வச்சிலையார் 282–ஆம் சூத்திர உரையில், உறு என்ற உரிச்சொல், வெவ்வேறு நிலைகளில் பயன் படுமாற்றைக் கூறுவது, இதை விளக்குகிறது :— 'உறுவழி' என்பது பெயரைச் சார்ந்து வந்தது. இங்கே, பெயரடை. 'உறக்கொண்டான்' என்பது வினையைச் சார்ந்து வந்தது. இங்கே, வினையடை. 'உறுவன்' என்பதில், பெயருக்கு அங்கமாயிற்று. இங்கே, பெயரடி. 'உற்றான்' என்பதில், வினைக்கு அங்கமாயிற்று. இங்கே, வினையடி. எனவே, அடிச்சொற்கள் யாவும் உரிச்சொல் என்பதனால், உணர்த்தப்படலாம் போலத் தெரிகிறது.

உறு, தவ, நனி முதலிய வழக்கில் அருகிவரும் சொற்களையே, தொல்காப்பியம் உரியியலிற் கண்டதனாற் போலும்,

நன்னூலார் செய்யுட்குரிய சொல்லே உரிச்சொல்லென்றார். பின்வரும் தொல்காப்பியம் சொல்லதிகாரம் 298-ஆம் சூத்திரத்தை, அவர் கவனிக்கத் தவறிவிட்டார் போலத் தெரிகிறது.

வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா
வெளிப்பட வாரா வுரிச்சொன் மேன

சேனாவரையரும் இலக்கண விளக்கத்தாரும் நன்னூலாரின் இந்தக் கொள்கையும் ஏற்கப்படக் கூடியது மாதிரிக் குறித்துச் சொல்வது, ஏன் என்று தெரியவில்லை. அவர்கள் கூறுவதுபோல, கறுப்பு சிவப்பு என்பன பெயர்ப்போலியல்ல; ஆக்கப் பொருள் சேர்த்துக் கூறப்படும் அடிச்சொற்களே. பழைய உரையாசிரியரிடம் இவ்வாறு கூறும் மரபு காணப்படுகிறதென்றும், அந்த மரபில் தொல்காப்பியரும் கூறியிருக்கிறார் என்று கொள்ளலாமென்றும் சீனிவாசன் மொழியியலில் கூறுவர்.

V. பெயரியல்

1. பெயர்ச் சொல்லாக்கம்

பெயரடிகளாக அமைந்துள்ள சில பெயுர்ச் சொற்களைத் தவிர, ஏனைய பெயர்ச் சொற்கள், வினை வடிவங்களிலிருந்தும் பெயர்ச் சொற்களிலிருந்தும் ஏனைய உரிச் சொற்களிலிருந்தும் அமைகின்றன.

1. பெயர்ப்பகுதியாயே, அமைந்த பெயர்ச் சொற்கள் :—

ஒளி ; வரை ; கரை ; அடி (பாதம்).

2. பகுதி விகுதியாகப் பிரிப்பதற் கரிய பெயர்கள் :—

பொருள், குடை ; முதல்.

3. வினை வடிவங்களிலிருந்து உண்டாகும் பெயர்கள் :—

(i) சில வினையடிகள் பெயர்ச் சொற்களாகவும் வழங்குகின்றன. இவற்றை முதனிலைத்தொழிற்பெயரென்பர் தமிழிலக்கணகாரர். பூ, கட்டு, தளிர், தீட்டு, முடி, இணை, பணி. எதிர், பிடி, அணை, பொரி, புகழ், வளை, நிரை, அலை.

(ii) முதனிலை திரிந்த தொழிற் பெயர் :—

(அ) வினையடியின் முதலுயிர் நீளல் :—

பொரு-போர் ; கடு-காடு ; கரு-கார் ; பெறு—பேறு ; பர—பார்

(ஆ) வினைப்பகுதியின் ஈற்றுயிர் மெய்யிரட்டல்—

எழுது—எழுத்து ; ஒழுகு—ஒழுக்கு ; மாறு-மாற்று ; கூடு—கூட்டு ; பூசு—பூச்சு.

பகு-பங்கு என்பதில் வினைப்பகுதியின் ஈற்று வல்லின மெய் இனமான மூக்கொலி பெறுகிறது,

(இ) வினைப்பகுதியின் நீண்ட உயிர் குறுகிறது :—

காண்—கண்.

(iii) தொழிற் பெயர்.

வினைப்பகுதிகளுக்குத் தொழிற் பெயர் விகுதிகள் சேர்க்க, உண்டாகும் இவ் வடிவங்கள் தொழிலையுணர்த்துவன :— இவ்வாறு தமிழிலக்கணக்காரர் வரையறை செய்யும் தொழிற்பெயரைக் கால்டுவெல், தொழிற்பெயர், வினையடிப்பெயரென இரண்டாக வகுப்பர். தொழிற்பெயரில், வினையின் ஆற்றல் மிகுந்திருக்க, வினையடிப்பெயரில், பெயரின் ஆற்றல் மிகுந்திருக்கும்.

(அ) தொழிற்பெயர். வினையடிகள், தல் அல்லது அல் விகுதி பெற்றுவருவன.

–தல்/–த்தல் :-

எண்(ணு)–எண்ணுதல் ; நண்(ணு)தல் ; கொடு-கொடுத்தல். கொடுப்பி-கொடுப்பித்தல், காட்டிக்கொடு-காட்டிக்கொடுத்தல் என வெவ்வேறுவகை வினைப்பகுதிகளும் இந்த விகுதிபெற்றுத் தொழிற் பெயர்களாதல் உண்டு.

–அல் :–

கா–காவல் ; தீட்டு–தீட்டல் ; பாய்-பாயல் ; தோன்று–தோன்றல் ; குத்து–குத்தல் ; நீங்கு–நீங்கல் ; ஆற்று–ஆற்றல். இவை வினையடிப்பெயர்போல வழங்குதலும் உண்டு.

(ஆ) வினையடிப்பெயர் :—

-அம் :—

நில்-நிலம் ; பழ்-பழம் ; உள்(ளு)–உள்ளம் ; ஓட்(உ)-ஓடம். தோண்டு–தோட்டம் என்பதில் வினைப்பகுதியின் ஈற்றெழுத்துக்கு அயலெழுத்தாகிய மூக்கின எழுத்து வல்லெழுத்தாகத் தெரிகிறது. நாடு–நாட்டம் என்பதில், வினைப்பகுதியின் ஈற்றிலுள்ள டகரமெய் இரட்டுகிறது. பெயரடையோடு-அம்விகுதி சேர்ந்து பெயர்ச்சொற்களமைவதற்கான உதாரணங்கள் :– நல்–நலம்; வள்–வளம். கோடு–கோட்டம் என்பதில், நெடிற்

ருடர்க் குற்றியலுகரத்தினீற்றிலுள்ள டகரமெய் இரட்டுகிறது.

-ஐ :—

மடு-மடை ; பிற-பிறை ; வகு-வகை ; இறு-இறை ; நிறு-நிறை ; அடு-அடை ; பொறு-பொறை ; தொடு-தொடை ; கொல்-கொலை ; வில்-விலை ; நில்-நிலை ; ஒழுகு-ஒழுகை ; ஓடு-ஓடை ; பகு-பகை.

-மை :—

ஆள்-ஆண்மை ; கட-கடமை, ஒண்ணு என்ற எதிர் மறைப்பகுதி ஒண்ணுமை என ஆகும்.

-கை/-க்கை :—

போ-போகை ; வரு-வருகை ; சொல்(லு)-சொல்லுகை ; கொள்(ளு)-கொள்ளுகை ; கொடு-கொடுக்கை.

-பு/-ம்பு/-ப்பு :—

அடை-அடைப்பு; இறு-இறுப்பு; ஒ-ஒப்பு; சிற-சிறப்பு; நிவ-நிவப்பு; வை-வைப்பு; அள-அளப்பு; உறு-உறுப்பு; பிற-பிறப்பு; வகு-வகுப்பு.

குடியிரு என்ற வினைப்பகுதி, குடியிருப்பு என்ருகிறது. நிச்சயி என்ற வடசொற் பகுதி நிச்சயிப்பு என வருகிறது. குழை என்பதிலிருந்து குழம்பு வருகிறது. பொன் என்ற பெயர்ச் சொல்லிலிருந்து பொற்பு என்று பெயர்ச்சொல் ஆகிறது.

-சி/ச்சி :—

ஆள்-ஆட்சி ; திரள்-திரட்சி ; காண்-காட்சி ; வீழ்-வீழ்ச்சி. இறையிழி என்ற வினைப்பகுதியிலிருந்து இறையிழிச்சி தோன்றுகிறது.

-தி :—

அறு-அறுதி; வெல்-வென்றி, வெற்றி; மிகு-மிகுதி.

-து/-த்து :—

பழு-பழுது; கோ-கோத்து.

-வு :—

அள-அளவு; இசை-இசைவு; உழ்(உ)-உழவு; சாய்-சாய்வு; புர-புரவு; அழி-அழிவு; அசை-அசைவு; பிரி-பிரிவு; ஒழி-ஒழிவு; விளை-விளைவு; வர்(உ)-வரவு; செல்-செலவு.

சில இடங்களில் வினையடியுடன் ஒலித்துணையாக வரும் உகரத்திற்குப் பதில், வினையடிப்பெயரில் அகரம் வருகிறது. சில இடங்களில், வினைப்பகுதி அகரம்பெற்றே, வகர உகர விகுதி கொள்கிறது.

-சை :—

வரி-வரிசை; பொலி-பொலிசை.

-கு/-ங்கு :—

கடு-கடுகு; தீ-தீங்கு.

-ய் :—

நோ-நோய்.

-இ :—

ஒற்று-ஒற்றி; அருவு-அருவி; கொடு-கொடி; தொடு-தொடி.

(iv) இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம், எதிர்மறை என்பவற்றை யுணர்த்தும் வினையாலணையும் பெயர்களை வினைபற்றிய பகுதியில் பார்க்க.

4. பெயர் முதலியவற்றிலிருந்து அமைந்த பெயர்கள் விகுதிகளைச் சேர்ப்பதாலும், பாலறி கிளவிகளைச் சேர்ப்பதாலும், இத்தகைய பெயர்களமைகின்றன.

(i) விகுதிகளைச் சேர்ந்தமைந்தவை :—

பெயர்கள்

-இ :—

பொன்-பொன்னி; ஊழ்-ஊழி.

-று :—

களி-களிறு.

-மை :—

முறை-முறைமை.

-வு :—

நடு-நடுவு.

பெயரடைகள்

-இ :—

வெள்-வெள்ளி.

-மை :—

செம்–செம்மை.

-ணி :—

குறு-குறுணி.

(ii) பாலறி கிளவிகள் சேர்ந்தமைந்தவை :—

தன்மையொருமை :—ஏன்.

பழியிலி சிறிய நங்கையேன்; தானவேந்தனேன்; காடு பட்டிப் பேரரையனேன்; பொற்றிருங்கையேன்; கோதை பவித்திரத்தேன்; சிவக்குறி நூற்றெண்மனேன்; நாராயணன் பூண்டினேன்.

தன்மை பன்மை :—ஓம்.

சவையோம்; அருவாகூரோம்; பெருநகரத்தோம்; ஊரோம்; திருப்பழனத்தோம்; வாணபுரத்தோம்; சான்ரேம்; கிழவர்களோம். சுட்டு இடத்தைக் குறிக்கும் அணே என்பது அணேவோம் ஆகிறது.

முன்னிலையொருமை :—ஆய்.

சோமாசியாய்.

முன்னிலைப்பன்மை :—ஈர்.

நகரத்தீர், மதுரையீர்.

படர்க்கை.

ஆண்பால் ஒருமை.

—அன் :—பாண்டியன்; சோழன்; தென்னன்; வில்லவன்; மற்றவன்; காவலன்; கிழவன்.

-ஆன் :-கூட்டத்தான்; கிழான்; கடவான்; வல்லுவநாட்டான்.

பெண்பால் ஒருமை.

-ஆள் :-தேவரடியாள்.

-இ :-பறைச்சி; ஆரியச்சி; வேட்டுவச்சி; வெள்ளாட்டி; கம்மாட்டி; பார்ப்பனி; வண்ணாத்தி; குறத்தி; சாத்தி; கள்ளிச்சி; பேய்ச்சி.

பலர்பால்.

-அர் :-மீனவர், வாரியர்; தென்னவர்; தஞ்சையர்; ஊரவர்; இடையர்; பலர்; வீரர்; தெவ்வர்; பாண்டியர்; பிறர்; இருவர்; கோசலர்; நாட்டவர்.

-ஆர் :-சவையார்; கணத்தார்; நகரத்தார்; ஊரார்; அடியார்; வல்லார்; அகத்தார், தானத்தார்; தட்டார்.

-ஓர் :-கிழவோர்; உடையோர்; மறையோர்.

-அர்கள் :-கொற்றவர்கள்; கிழவர்கள்; ஊரவர்கள்.

—ஆர்கள் :-இராயூரார்கள்.

பலர்பால் வடிவங்கள் சில, தன்மைப் பன்மை விகுதி பெற்றுத் தன்மைப் பன்மையாக வழங்குகின்றன :—

அனைவரோம்; இருவரோம்; கணக்கரோம்; பிராமணரோம்; நாட்டாரோம்.

இந்த ஐந்து எடுத்துக் காட்டுக்களும், நன்னூலாருக்குப் பிந்திய தமிழ்ச் சாசனங்களில் வருகின்றன.

அஃறிணைப்பாலறிகிளவி பெற்றுவரும் பெயர்கள் குறிப்பு வினைகளாகப் பயன்படுகின்றன.

ஒன்றன்பால் : து :—

கடவது; சாசனத்தது’ மேலது; நீரது; பாலது; உடையது; உள்ளது; உரித்து.

பலவின்பால் : அ :—

கடவன; மேலன; மேல.

5. கூடியமையும் பெயர்கள்.

(i) பெயர்+பெயர் :—
மேற்படி; கோயில்; வாய்க்கால்; இடையூறு.

(ii) பெயர்+வினையடி+விகுதி :—
மஞ்ஞளன்; காராண்மை; மன்ருடி; கைச்செலவு; நீர்போகி; ஊருணி.

(iii) பெயர்+இடப்பொருளுருபு+பாலறிகிளவி :—
வழியிலார்.

(iv) தொழிற்பெயர் + எதிர்மறையிடைச்சொல் + விகுதி பாலறிகிளவி :—
இறையிலி; தரமிலி; விரவலர்.

(v) பெயர்ரடை+பெயர் :—
வெண்பா; வெள்ளிலை.

காரன், காரி என்ற துணைச்சொற்கள் சேர்ந்து பெயர்ச்சொற்களமைதல், இடைக்காலத் தமிழில் இருந்ததெனலாம். இரண்டாவது பாண்டியப் பேரரசு காலத் தமிழ்ச் சாசனங்களில், வேட்டைக்காரர், நிவந்தக்காரர் என்ற சொற்கள் காணப்படுகின்றன. சாலி, வான், மான், வந்தர் என்ற துணைச்சொற்கள் இன்னும் பிற்காலத் தமிழில் புகுந்திருக்கலாம். பொறுமைசாலி, பாக்கியவான், புத்திமான், செல்வந்தர் முதலிய வடிவங்களும் இன்றைய தமிழில் வழங்குகின்றன.

2. பெயர்ச்சொல்—பாகுபாடு

சொல்லெனப் படுப பெயரே வினையென்
றாயிரண் டென்ப அறிந்திசி னோரே

—தொல். சொல். 158.

மற்ற மொழிகளிற் போலத் தமிழிலும், பெயர்ச்சொல், வினைச் சொல் என்பனவே, இருவகைச் சொற்களாகத் தொல்காப்பியர் காலத்திலும் கருதப்பட்டன. பெயர்ச்சொல், திணை பால் எண் இடம் என்பவற்றை உணர்த்துகிறது. பொருள்களின் இயற்கையான தன்மை கண்டே பால் வகுக்கப்படுகிறது. வடமொழி முதலியவற்றில், உயிரில்லாத பொருள்களும் நுண் கருத்துக்களும் ஆண்பாலெனவும் பெண்பாலெனவும் பகுக்கப்படுகின்றன. ஆண் எனவும் பெண் எனவும் கூற முடியாத பொருள்களை யுணர்த்தும் சொற்கள் ஆண்பாற் சொல்லெனவும் பெண்பாற் சொல்லெனவும் வழங்கப்பட்டு, ஆண்பால் உருபும் பெண்பால் உருபும் சேர்க்கப்படுதலும், அவன் அவள் எனச் சுட்ட இயைதலும், இந்தோ-ஐரோப்பிய மொழிகள் பலவற்றில் இன்றும் காண்பன. தமிழ்ப் பால் பாகுபாட்டின் அடிப்படையில், உயர்திணை, அஃறிணை என்ற திணைப் பாகுபாடு அமைந்திருக்கிறது.

உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை யென்மனார் அவரல பிறவே
ஆயிரு திணையி னிசைக்குமன் சொல்லே

—தொல். சொல். 1.

மக்களெனச் சுட்டப்படுவோர் உயர்திணை யெனவும், அல்லாதன வெல்லாம் அஃறிணை யெனவும் தொல்காப்பியர் கூறுகிறார். உயர்திணையின் பரப்பு, நன்னூலார் காலத்தில் சிறிது, விரிவடைந்து காணப்படுகிறது.

மக்கள் தேவர் நரகர் உயர்திணை
மற்றுயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை

—நன். சூ. 261.

நன்னூலார் தேவரையும் நரகரையும் மக்களுடன் சேர்க்கிறார். நரகரைப் பற்றித் தொல்காப்பியர் எதுவும் கூறவில்லை. தேவரும் நரகரும் வடஇந்திய இலக்கியங்களில் மக்களின் நிழல்போலச் சித்திரிக்கப்பட்ட கற்பனைப் பாத்திரங்கள். நன்னூலார் காலத் தமிழில், வடமொழியின் செல்வாக்கால், இத்தகைய பிரிவினருக்கு, உயர்திணையந்தஸ்து வழங்க வேண்டிய நிலையேற்பட்டிருக்கிறது. தொல்காப்பியர் காலத்திலேயே, தேவர்களைப் பற்றிய பிரச்சினை தோன்றிவிட்டது. தெய்வம், பேடு என்பனவற்றிற்குப் பால் கூறமுடியாத சிக்கல் மொழியில் ஏற்பட்டுவிட்டது. அவை வினைகொண்டால், எத்தகைய முடிவுகொள்ள வேண்டுமென்பது விடுவிக்க வேண்டிய புதிராகிவிட்டது. அவற்றிற்குத் தொல்காப்பியர், 'இவ்வென அறியும் அந்தம் தமக்கில' வென்று கூறி, அவை வினையேற்குங்கால், உயர்திணைப் பால் முடிவுகொண்டு இசைக்கும் என்று அமைதி கூறுகின்றார்.

உயர்திணை, அஃறிணையென்று சொற்கள் பாகுபடுத்தப்பட்டபொழுது, சாத்தன், முடவன் முதலிய சொற்கள், உயர்திணைக்கும் அஃறிணைக்கும் வந்ததைக் கண்டனர். இத்தகைய சொற்களுக்காகத் தொல்காப்பியர் விரவுத்திணையென்ற பகுப்பை ஏற்படுத்தினர்.

அவற்றுள்,

> பெயரெனப் படுபவை தெரியுங் காலை
> உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும்
> ஆயிரு திணைக்குமோ ரன்ன உரிமையும்
> அம்மூ வுருபின தோன்ற லாறே
>
> —தொல். சொல். 160.

பொதுப்பெயர்கள் கொண்டு முடியும் வினைச்சொல்லின் அமைப்பைக் கொண்டே, அவற்றின் திணை பால் உறுதி செய்ய முடியும்.

இருதிணைச் சொற்குமோ ரன்ன உரிமையின்
திரிபுவேறு படூஉம் எல்லாப் பெயரும்
வினையோ டல்லது பால்தெரி பிலவே

—தொல். சொல். 172.

விரவுப்பெயரின் தொகையும் வகையும் தொல்காப்பியரால் எடுத்துக் கூறப்படுகின்றன.

இயற்பெயர் சினைப்பெயர் சினைமுதற் பெயரே
முறைப்பெயர்க் கிளவி தாமே தானே
எல்லா நீயிர் நீயெனக் கிளந்து
சொல்லிய அல்ல பிறவு மாஅங்கு
அன்னவை தோன்றின் அவற்றொடுங் கொளலே

—தொல். சொல். 174.

இயற்பெயர் நான்கு; சினைப்பெயர் நான்கு; சினைமுதற் பெயர் நான்கு; முறைப்பெயர் இரண்டு; ஏனையவை ஐந்து குறிப்பிடப்பட்டுள்ளன. பெண்மை சுட்டிய பெயர் ஒன்றற்கும் ஒருத்திக்கும் பொருந்தி வரும்.

பெண்மையியற் பெயர்	—சாத்தி.
பெண்மைச்சினைப்பெயர்	—முடத்தி.
பெண்மைச்சினைமுதற் பெயர்	—முடக்கொற்றி.
பெண்மை முறைப்பெயர்	—தாய்.

பழந் தமிழர் ஆவையும் எருதையும் அவற்றின் பயன்பாடும் உழைப்பும் பற்றி, அருமையாய்ப் பேணி, அவற்றுக்குச் சாத்தி, சாத்தன் என்னும் மக்கட்பெயரையே இட்டு அழைத்து வந்திருக்கின்றனர். விரவுத்திணைப் பெயர்களிற் பெரும்பாலன, மாடுகளுக்கு மனிதப்பெயர்கள் வைத்தமையால் ஏற்பட்டவையே.

ஆண்மை சுட்டிய பெயர், ஒன்றற்கும் ஒருவற்கும் பொருந்தி வரும்.

ஆண்மை யியற்பெயர் —சாத்தன்.
ஆண்மைச்சினைப்பெயர் —முடவன்.
ஆண்மைச்சினை முதற்பெயர் —முடக்கொற்றன்.
ஆண்மை முறைப்பெயர் —தந்தை.

பன்மை சுட்டிய பெயர், ஒன்று, பல, ஒருவன், ஒருத்தி என நான்கு பொருளிலும் வரும். இங்கு நன்னூலார் தொல்காப்பியரிலிருந்து வேறுபடுகிறார். ஒவ்வொரு சொல் லும், இருதிணையிலும் தன் பாலில் வரும் என்ற கருத்தில், 'அவற்றுள், ஒன்றே யிருதிணைத் தன்பால் ஏற்கும்' என்னும் நன். சூ. 284.

பன்மையியற்பெயர் —யானை.
பன்மைச்சினைப் பெயர் —நெடுங்கழுத்தல்.
பன்மைச்சினை முதற்பெயர் —பெருங்கால் யானை.

இப்பெயர்கள் யாவும் பன்மை சுட்டும் பால் பகா அஃ றிணைப் பெயர்களெனத் தொல்காப்பியர் கொள்கிறார்.

ஒருமை சுட்டிய பெயர் ஒன்றன்பால், ஆண்பால் பெண் பாலுக்குப் பொருந்தி வரும்.

ஒருமையியற்பெயர் —கோதை.
ஒருமைச்சினைப்பெயர் —செவியிலி.
ஒருமைச்சினைமுதற்பெயர் —கொடும்புறமருதி.

தொல்காப்பியர் பத்தொன்பது விரவுப்பெயர்களைக் கூற, நன்னூலார் இருபத்தாறு பொதுப் பெயர்களை யெடுத்துக் கூறுவர். இயற்பெயரை முதற் பெயரென்பர் நன்னூலார். தொல்காப்பியர் நீயிர், நீ என இரண்டு முன்னிலைப் பெயர் களே கூற, நன்னூலார் அவற்றுடன், எல்லீர், நீவிர், நீர் என்னும் மூன்று முன்னிலைப் பெயர்களைக் கூட்டிக் கூறுவர், இவை, தொல்காப்பியர் கால வழக்கில் இல்லாதனவாய், நன்னூலார் கால வழக்கிற் காணப்பட்டன போலும். தன் மைப் பெயர் உயர்திணை யென்பர் தொல்காப்பியர். கதை சொல்லக் கூடியவர் மக்களே என்று தொல்காப்பியர் கருதி

யிருக்கிறுர் போலத் தெரிகிறது. எனவே, தொல்காப்பியரைப் பொறுத்தவரை, தன்மை யொருமை உயர்திணையாகத்தான் இருக்கலாம். ஆனுல், தன்மைப் பன்மையில், ஒருவர் அல்லது பலர் தம்மோடு அஃறிணைப் பொருள்களையும் சேர்த்துத் தன்மைப் பன்மையாக வழங்குதல் தொல்காப்பியர் காலத்திலும் காணப்பட்டிருக்கிறது. அதனுலேதான்,

தன்மைச் சொல்லே அஃறிணைக் கிளவியென்று
எண்ணுவழி மருங்கின் விரவுதல் வரையார்

—தொல். சொல். 63.

அவற்றுள்,

பன்மை யுரைக்குந் தன்மைக் கிளவி
எண்ணியன் மருங்கின் திரிபவை யுளவே

—தொல். சொல். 209.

என்ற சூத்திரங்கள் எழுந்தன. நன்னூலார் காலத்தில். வடமொழிச் செல்வாக்கால், தமிழர் கண்ட இலக்கியங்களில், மிருகங்கள், பறவைகள், பிராணிகள் முதலிய அஃறிணைப் பொருள்கள் தன்மை யொருமையிலும் தன்மைப் பன்மையிலும் கதைத்தன. எனவே, நன்னூலார் இவற்றையும் பொதுப்பெயராகக் கொண்டார். அவர் கொண்ட தன்மைப் பெயர்கள் நான், யான், நாம், யாம்.

உயர்திணையையும் அஃறிணையையும் பால்களாகப் பாகுபடுத்தப் புகுந்த தொல்காப்பியர்,

ஆடூஉ அறிசொல் மகடூஉ அறிசொல்
பல்லோ ரறியுஞ் சொல்லொடு சிவணி
அம்மூப் பாற்சொல் உயர்திணை யவ்வே

—தொல். சொல். 2.

ஒன்றறி சொல்லே பலவறி சொல்லென்
றாயிரு பாற்சொல் அஃறிணை யவ்வே

—தொல். சொல். 3.

என்பர். உயர்திணைச் சொற்களில், ஆண்பால், பெண்பால், பலர்பால் என்ற பாகுபாடும் அஃறிணைச் சொற்களில் ஒன்றன்பால், பலவின்பால் என்ற பாகுபாடும் உண்டு. பொருள்களின் இயற்கைத் தன்மை கருதியே, திணை பால் வகுக்கப்படுகிற தென்பது முழு உண்மையல்ல என்று இங்கே தெரிகிறது. பறவைகள், மிருகங்கள் முதலியவற்றில் ஆண், பெண் பாகுபாடு உண்டு. சில சந்தர்ப்பங்களில், பறவைகள், மிருகங்கள், மரங்கள் முதலியன, ஆண் பெண்ணென அடைமொழி கொடுத்துக் கூறப்படுவதுமுண்டு. பிடி—களிறு ; எருது—பசு என அஃறிணைப் பொருள்கள் சிலவற்றில், ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறு பெயர் கூட உண்டு. அப்படிப்பட்ட இடங்களில் கூட, இவை யாவும் அஃறிணையாகவே கொள்ளப்படுகின்றன ; ஒன்றன்பால் விகுதியே வினைமுற்று அல்லது வினையாலணையும் பெயரில் கொள்ளுகின்றன. சுட்டுப்பெயர் கூட, ஒன்றன் பாலாகவே, பெரும்பாலும் அமைகிறது. பன்மையைப் பொறுத்தவரையில், உயர்திணையிலோ, அஃறிணையிலோ, ஆண்—பெண் வேறுபாடு கொள்வது இல்லை. ஆண்பாற் பன்மை, பெண்பாற் பன்மை, இருபாலுக்கும் பொதுவான சொற்களின் பன்மை யாவும் உயர்திணைப் பலர்பாலில் அடங்குகின்றன. மரியாதைப் பன்மை கூடப் பலர்பால் விகுதிகளையே கொள்ளுகின்றன. ஆயின், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் சொற்கள் சில, குறிப்பினால் ஆண்களை அல்லது பெண்களைச் சுட்டும்.

இருதிணை யாண்பெணுள் ஒன்றனை யொழிக்கும்
பெயரும் வினையுங் குறிப்பி னானே

—நன். சூ. 352.

இருதிணை ஐம்பாற் பாகுபாடு நிலைபெறுவதற்கு முன்னர், மிகப்பழங்காலத் திராவிடமொழியில், எல்லாச் சொற்களும் ஒரே வகையாக, அஃறிணையாகக் கருதப்பட்டு வந்த நிலை யிருந்ததென்று கூறலாம். இறை, அரசு, வேந்து, இல் முதலான சொற்கள், மிகப் பழையவை. அவை

அஃறிணை வினைமுற்றுக் கொண்டே முடிந்துள்ளன. இறைவன், அரசன், வேந்தன், இல்லாள் முதலான சொற்கள் பிற்காலத்தில் அமைந்தன.

குடிமை ஆண்மை இளமை மூப்பே
அடிமை வன்மை விருந்தே குழுவே
பெண்மை அரசே மகவே குழவி
தன்மை திரிபெயர் உறுப்பின் கிழவி
காதல் சிறப்பே செறற்சொல் விறற்சொலென்று
ஆவறு மூன்றும் உளப்படத் தொகைஇ
அன்ன பிறவும் அவற்றொடு சிவணி
முன்னத்தி னுணருங் கிளவி யெல்லாம்
உயர்திணை மருங்கின் நிலையின ஆயினும்
அஃறிணை மருங்கின் கிளந்தாங்கு இயலும்

—தொல். சொல். 56.

இந்தப் பதினெட்டுச் சொற்களும் உயர்திணைக்குரிய பாலறி கிளவி யெதுவும் பெறவில்லை. இவை வினைகொள்ளும் போதும், அஃறிணைக்குரிய வினையே கொள்ளும். இச் சொற்கள் பொருளால், உயர்திணையை உணர்த்தும்போதும், இந் நிலையிலேயே காணப்படுகின்றன. பெயர்கள் உயர்திணைப் பொருளைத் தந்தால், அவை கொண்டு முடியும் வினைமுற்றை உயர்திணையாக்க வேண்டியதே, தொல்காப்பியர் காலத்திலும் அதற்குப் பின்னும் வழக்கு. இச் சூத்திரம் ஒரு புறனடைச் சூத்திரம். இது பழைய வழக்கை உணர்த்துவதாகக் கொள்ளலாம் போலத் தெரிகிறது. வினைமுற்றுப் பெயர்ச்சொல்லின் திணைக் கேற்பத் திரியாத ஒரு நிலையை, இச் சூத்திரம் சுட்டுகிறது. திணைபால் பாகுபாடு வளர்ச்சியில், இச் சூத்திரம் ஒரு இடைப்பட்ட கால நிலையைப் பிரதி பலிக்கிறதெனக் கொள்ளலாம்.

கன்னட, மலையாள மொழிகளில், பையன் என்பதற்குப் பதிலாகப் பால்காட்டும் அன் விகுதியின்றிப் பைதல் என்றே வழங்கினர். ஆண், பெண் என வேறுபடுத்தல் வேண்டின்

ஆண்பைதலெனவும் பெண்பைதலெனவும் கூறினர். இதுவும் திராவிடமொழியிலிருந்த பழைய நிலையைச் சுட்டுவதாகலாம்.

தெலுங்கிலும் கோந்த்மொழியிலும், ஐம்பால் பாகுபாடு இல்லை. அவற்றில், உயர்திணையில், பெண்பால் என்ற பகுப்பில்லை. பெண்கள் பலரைச் சுட்டும்போது, உயர்திணையில் அடக்குதலுண்டு; ஆனால் ஒருத்தியைக் குறிக்கும்போது, அஃறிணை யொன்றன் பாலாகக் கொள்வர். இந்த நிலை, தமிழில் ஒரு காலத்தில் இருந்திருக்கலாம். நீலகிரி மலையில், தொழுவர், கோடர் மொழிகளில், படர்க்கையிடப் பெயராக உள்ள சொல், திணை பால் எண்ணென்னும் வேறுபாடற்றது. அதம், இதம் என்னும் சொற்கள், அவன், அவள், அவர், அது, அவை என்றும் இவன், இவள், இவர், இது, இவை என்றும் தமிழில் வழங்குவன யாவற்றையும் குறிக்கும். படர்க்கை யிடப்பெயர் இம்மொழிகளிற் காணப்படும் நிலையில், திராவிடமொழிப் பெயர்களனைத்தும் ஒரு காலத்தில், இருந்திருக்கலாம்.

எனவே, தமிழ் முதலிய திராவிடமொழிகளில், பெயர்ச்சொற்கள், திணைபால் பாகுபாடற்ற நிலையி லிருந்து, இருதிணை ஐம்பாற் பகுப்பு படிப்படியே வளர்ந்து அமையப் பெற்றுள்ளன எனலாம்.

திராவிடமொழிகளில், ஒருமை பன்மை என எண் இரண்டே. வடமொழியி லுள்ளதுபோல, இருமை என்ற எண் இல்லை. திராவிடமொழிகளில், திணைபால் பாகுபாடும் எண் பாகுபாடும் தனிப்பட்டு வேறு நிற்பன அல்ல. திணை பால் பாகுபாட்டிலேயே, எண்ணும் கலந்து அமைகின்றது. அஃறிணையில் எண் நோக்கியே, பால் வகுக்கப்படுகின்றது. உயர்திணையிலும் பன்மையெல்லாம் பலர்பாலாகின்றன. ஒருமையில் மாத்திரமே, ஆண்பால், பெண்பால் என்ற வேறுபாடு காணப்படுகிறது. திராவிடமொழிகளில், பலர் பால் விகுதியும் பலவின்பால் விகுதியும் வேறு வேறு

ஏனெனில், அவையே, திணையையும் உணர்த்தி நிற்கின்றன.

பெயர்ச்சொற்களை, அவற்றின் வடிவம் நோக்கிப் பால் பாகுபாடு முற்றிலும் அறியமுடியாது. சில சொற்களில், ஈற்றை நோக்கி, அவற்றின் பால்திணையைக் கூறமுடியாது. அவற்றின் திணைபாலை, அவை குறிக்கும் பொருளைக் கொண்டே உணர்தல் வேண்டும். இன்ன ஈறு இன்ன பாற்கு உரித்து என அறுதியிட்டுக் கூறமுடியாது என்பதைப் பின்வரும் சூத்திரத்தில் தொல்காப்பியர் கூறச் சேனாவரையர், அதனை நன்கு விளக்குகிறார்.

இருதிணைப் பிரிந்த ஐம்பாற் கிளவிக்கும்
உரியவை யுரிய பெயர்வயி னான

—தொல். சொல், 161.

'அவன், பெண்மகன், சாத்தன் என னகர வீறு ஆடுவிற்கும் மகடுவிற்கும் அஃறிணை ஆண்பாற்கும் உரித்தாய் வருதலானும் அவள் மக்கள் மகள் என ளகர வீறு மகடுவிற்கும் பல்லோர்க்கும் அஃறிணைப் பெண்பாற்கும் உரித்தாய் வருதலானும், வினைச்சொற்போல, இன்ன ஈறு இன்ன பாற்கு உரித்து எனப் பெயர்ச்சொல் ஈறுபற்றி உணர்தலாகாது' என்பர் சேனாவரையர்.

பால் உணர்த்தும் சிறப்பு நோக்கிப் போலும் மாற்றுப் பெயர்களாகிய அவன், இவன், உவன் முதலானவற்றையே முதற் கூறி, அதன்பின்பே ஏனைய பொதுப் பெயர்களைத் தொல்காப்பியர் கூறுகின்றார். சுட்டு முதலாகிய மாற்றுப் பெயர்கள் பொதுவாகப் பாலறிகிளவிகளைப் பெறுகின்றன. இவற்றுள், பாலறிகிளவிகளாக அமைந்துள்ளவை, இடப் பெயர்களின் திரிபுகளென்பர் கால்டுவெல். மூவிடப்பெயர், சுட்டுப்பெயர் முதலிய பெயர்களிலேயே, பாலறிகிளவிகள் ஆரம்பத்தில் இடம்பெற்றிருக்க வேண்டும். அதனைத் தொடர்ந்து வினைச் சொற்களில் சேர்ந்திருக்க வேண்டும்: அதன் பின்பே, ஏனைய பெயர்களோடு பாலறிகிளவிகள்

கூடின எனக் கொள்ளலாம். பாலறிகிளவிகள், வினை யோடேயே சிறப்பாகத் தோன்றும் என்பர் தொல்காப்பியர்.

இருதிணை மருங்கின் ஐம்பால் அறிய
ஈற்றினின்று இசைக்கும் பதினே ரெழுத்துந்
தோற்றந் தாமே வினையொடு வருமே

—தொல். சொல். 10.

தொல்காப்பியர் ஈற்றில் நின்றிசைக்கும் பதினே ரெழுத்துக்களையும் தொல்காப்பியம் சொல்லதிகாரம் கிளவி யாக்க ஆரம்பத்திலேயே கூறிவிடுகிருர். அவற்றைக் கூறத் தொடங்கியபொழுது, அவை வினைக்குரியன எனப் பகுத் தோதவில்லை. சொல்லதிகாரம் ஐந்தாம் சூத்திரத்திலிருந்து ஒன்பதாம் சூத்திரம் வரையில், பதினெரு ஈறுகளையும் கூறி, அடுத்த சூத்திரத்திலேயே, அவை வினையோடு வரும் என் கிருர். தொல். சொல். சூ. 161, இவ்வீறுகளில் ஏற்பன பெய ரோடும் வரும் என்கிறது. வாக்கியத்தில், பெயரில் வரும் ஈற்றெழுத்தும் வினையில் வரும் ஈற்றெழுத்தும் ஒத்திருக்க வேண்டும் என்று தொல். சொல். சூ. 11, கூறும்.

வினையின் தோன்றும் பால்அறி கிளவியும்
பெயரின் தோன்றும் பால்அறி கிளவியும்
மயங்கல் கூடா தம் மரபினவே.

கிளவியாக்கத் தொடக்கத்தில், பாலறிகிளவியான ஈற் றெழுத்தைக் கூறிய தொல்காப்பியர், வினையியலில், ஒவ் வொரு பாலுக்குமுரிய விகுதிகளை விரிவாகக் கூறுவர்.

தொல்காப்பியர் – நன்னூலார்

உயர்திணை ஆண்பால் விகுதி அன், ஆன் —
,, பெண்பால் ,, அள், ஆள் — + இ (பெயர்களில்)
,, பலர்பால் ,, அர், ஆர், ப, மார் — + கள்.

அஃறிணையொன்றன்பால் விகுதி து, று, டு —
,, பலவின்பால் ,, அ, ஆ, வ— + வை, கள், வ்.

இவ் விகுதிகள் அவ்வப் பாற் பெயர்ச்சொற்களிலும் வரும். இகர ஈறு, பெயர்ச்சொற்களில் மாத்திரம் வருவதும், பெயர்ச்சொற்களுக்கான ஈறு தொல்காப்பியர் தனியே எடுத்துக் கூறுதலும், இகர ஈறு தொல்காப்பியத்தில் விடப்பட்டதற்குக் காரணமாகலாம். வை விகுதி வகர விகுதியின் திரிபாகலாம். வகரமெய் விகுதி, பன்மை சுட்டும் மகர மெய்யீற்றின் திரிபாகலாம்.

தமிழிலுள்ள அஃறிணைப் பெயர்ச்சொற்கள், பன்மை புணர்த்தும் கள் விகுதியில்லாமல் வழங்குவது காணலாம். கள் விகுதி பொருந்துமிடமும் உண்டு என்று தொல்காப்பியர் கூறுதலால், பழைய வழக்கு எது என்பது புலனுகிறது.

> கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே
> கொள்வழி யுடைய பலவறி சொற்கே
>
> —தொல். சொல். 169.

கள் விகுதியின்றி வழங்கும் அஃறிணைச் சொற்களைப் பால்பகா அஃறிணையென்பர் தமிழ் இலக்கணகாரர். இந் நிலை இன்றைய தமிழிலும் ஓரளவு காணப்படுகிறது. நன்னூலார் காலத்தில், கள் விகுதி உயர்திணைக்கும் கொள்ளப்படுகிறது.

> கிளந்த கிளைமுதல் உற்ற ரவ்வீற்றவும்
> கள்ளெ னிற்றி னேற்பவும் பிறவும்
> பல்லோர் பெயரின் பகுதி யாகும்
>
> —நன். சூ. 278.

நன்னூலார் காலத்திற்கு முந்திய தமிழ்ச் சாசனங்களில், பெருமக்கள், மன்றுடிகள், மாணிகள், பிள்ளைகள் முதலிய வழக்குகள் காணப்படுகின்றன. நன்னூலார் காலத்திற்கு முன்பே, மலையாள மொழியிலும் கள்விகுதி இவ்வாறு பயன்

படுத்தப்படுவதைச் சந்திரசேகர் எடுத்துக்காட்டுவர். அஃறிணையிலேயே வரலாம், அதுவும் சில இடங்களில் என்ற தொல்காப்பியர் காலநிலை மாறி, உயர்திணையிலும் இவ்விகுதி சகசமாக இடம்பெறுவது மொழி வளர்ச்சியைக் காட்டுகிறது.

கள்விகுதி, ரகர ஈற்றுக்குப் பதிலாக, உயர்திணைப் பன்மையுணர்த்துவது ஒருவகை. கள்விகுதி ரகர ஈற்றுடன் சேர்ந்து வருமிடமும் உண்டு. கொற்றவர்கள் என்பது ஒரு உதாரணம். ரகர ஈற்றுச்சொல் உயர்திணையில் பன்மையையும் மரியாதைப் பன்மையையும் உணர்த்தத் தொடங்கப் பிறகு இவற்றிடையே வேறுபாடு அமைக்கவேண்டி, இத்தகைய உதாரணங்களில் கள்விகுதியும் இடம்பெற்றிருக்க வேண்டும். பின்பு, மரியாதைப் பன்மையிலும், இந்தக் கள் விகுதி வழக்குப் பெற்றுவிட்டது. எனவே, இன்று சொல்லின் வடிவம் இரட்டைப் பன்மையாக இருந்தாலும், அதைக் கொண்டு மாத்திரம், அது பலர்பாற் சொல்லா அல்லது மரியாதைப் பன்மைச் சொல்லா என்று துணிய முடியாது. தென்னிந்தியப் பேச்சுவழக்கில், இந்தக் கள்விகுதி மிகுதியாக இடம்பெற்றுவிட்டது. 'அவர்கள் வருவார்கள்' எனப் பொருள்படும் 'அவங்க வருவாங்க', மரியாதைப் பன்மையிலும் மிகுதியாக வழங்குகிறது. 'ங்கள்' என்பதன் திரிபாக 'ங்க' என்பது அமைகிறது.

மொழியில், பால் வேறுபாடு உணர்த்தாத சொற்களும் தேவையாக உள்ளன. பால்வேறுபாடு சுட்டிக்காட்டத் தேவையில்லாத இடத்தும் பொதுவாகக் குறிக்கவேண்டிய இடத்தும், பொதுச்சொல் தேவைப்படுகிறது. பலர்பால், ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவாதலால், ஆண் பால், பெண்பால் என வேறுபடுத்த வேண்டாத இடத்து, அதைப் பயன்படுத்துக எனத் தொல்காப்பியரும் கூறுவர்.

பால்மயக் குற்ற ஐயக் கிளவி
தான்அறி பொருள்வயிற் பன்மை கூறல்

—தொல். சொல். 23.

பேச்சுமொழியில், பால் உணர்த்தத் தேவையல்லாத இடங்களில், உயர்திணைச் சொற்களை, அஃறிணை வடிவு கொண்டே உணர்த்துகின்றனர். முறைப் பெயர்களில், இவ் வழக்கைப் பரக்கக் காணலாம். னகர ஈற்றிலோ, ளகர ஈற்றிலோ கூறுவது மரியாதைக் குறைவெனக் கொண்டு, பால் சுட்டாமல் வழங்க வேண்டுமென்பதற்காக இவ்வாறு வழங்குகின்றனராகலாம் எனச் சீனிவாசன் மொழியியலில் கூறிப் பின்வரும் உதாரணங்கள் தருவர்.

மாமா வந்தது. அக்கா வந்தது. தம்பி வந்தது.

இன்னும் கூடிய மரியாதையை வழங்க விரும்பின், யாழ்ப்பாணத் தமிழில் 'வந்தவ' என்று வழங்குவதுமுண்டு.

சொற்களின் ஒருமை பன்மை பற்றிய தன்மை, னகர மகர ஈறுகளாலும் புலப்படுத்தப்படுகிறது. நான், யான், என், நின், தான் என்பன ஒருமையை உணர்த்த, நாம், யாம், எம், நும், தாம் என்பன பன்மையை உணர்த்துவதால் இது தெளிவாகிறது. வருந முதலிய வடிவங்கள் தொல்காப்பியத்தில் காணப்படுகின்றன. செய்யுன் என்பதே செய்யுந் என்ற வாய்பாடாகியிருக்கலாம். னகரத்திற்குப் பதிலாகத் தொல்காப்பியர் பலவின்பால் விகுதியாகிய அகரத்தைச் சேர்த்துப் பன்மையாக்கியிருக்கலாம். செய்யுந என்பதும் செய்யும் என்பதும் ஒரே பொருளவாக இருந்திருக்கலாம். தொல்காப்பியர் காலத்தில், மகரமும் னகரமும் மாறி வந்த காரணத்தால், அவற்றிற்கிடையே யுள்ள வேறுபாடு மறைந்து, அவை போலியாகக் கொள்ளப்படும் நிலை எய்தியிருக்கலாம்.

மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த
னகரத் தொடர்மொழி யொன்பஃ தென்ப
புகரறக் கிளந்த வஃறிணை மேன

—தொல். எழு. 82.

நிலம் நிலன்; பிலம் பிலன்; கலம் கலன்; வலம் வலன்; உலம் உலன்; குலம் குலன்; கடம் கடன்; பொலம்

பொலன் ; புலம் புலன் ; நலம் நலன் ; குளம் குளன் ; வளம் வளன் என இவை ஒன்பதும் மொழியிறுதிப்போலி யென்று தொல்காப்பியம் நச்சினர்க்கினியத்திலிருந்து தெரிய வருகிறது. பழந்தமிழில், ஒருகாலத்தில், மரம் என்பது பன்மையையும் மரன் என்பது ஒருமையையும் உணர்த்தியிருக்கலாமென்றும் மகரம் பன்மையையும் னகரம் ஒருமையையும் உணர்த்துவனவாக ஒரு காலத்தில் விளங்கின என்பது தமது ஆராய்ச்சி முடிவென்றும் பேராசிரியர் தெ. பொ. மீனட்சிசுந்தரனர் கூறுவர்.

உயர்திணை யாண் பாற்பெயர், உயர்திணைப் பெண் பாற்பெயர் முதலியவற்றை நன்னூலார் கூறும்பொழுது, பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்பவற்ருேடு பாலறிகிளவி சேரும்போது, அவ்வப்பால் தோன்றும் என்பர். அச் சூத்திரங்களின் பிற்பகுதியில், இவ்விதிக்கமையாது, மேற்கூறிய பால்களை உணர்த்தும் நம்பி, ஆடூஉ, விடலை, கோ, வேள், குரிசில், தோன்றல், மகடூஉ, நங்கை, தையல் என்பவற்றைக் கூறுகிருர் (நன். சூ. 276, 277). மேலும், திராவிடமொழிகளில், பெயர் சுட்டும் பொருளின் இயற்கைத் தன்மைகொண்டே, பால் உணரப்படுவதால், பாலறிகிளவிகள் சேர்க்கவேண்டிய கட்டாயமும் இருக்கவில்லை. எனவே, இடைக்காலத்தில் வந்த முறையை, இடைக்கால இலக்கண நூலாராகிய நன்னூலார் பாராட்டி முன்கூறிப் பழைய காலத்திற்குரிய முறையிற் பாலுணர்த்துவனற்றைப் பிற்கூறினர் என்று கொள்ள வேண்டும்.

3. மூவிடப்பெயர்கள்

மாற்றுப்பெயர்களில், மூவிடப்பெயரும் ஒரு வகையாகும். மொழிகளின் உறவையும் மொழியினங்களின் தொடர்பையும் விளக்குவற்கு மூவிடப்பெயரே பெரிதுந்துணை செய்கின்றது.

தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் இம் மூன்று இடங்களைக் குறிக்கும் பெயர்கள் ஒருமை பன்மை மட்டும் காட்டும். ஒருமையை னகர ஈறும், பன்மையை மகர ஈறும் ரகர ஈறும் காட்டுகின்றன. தொல்காப்பியர் காலத்தில், தன்மைப்பெயர் உயர்திணையாகக் கொள்ளப்பட்டது. முன்னிலைப் பெயரும் படர்க்கைப் பெயருமே விரவுத்திணைப் பெயராயிருந்தன. நன்னூலார் தன்மைப் பெயரையும் பொதுப் பெயரென்பர்.

		தொல்காப்பியம்	நன்னூல்
தன்மை	ஒருமை	யான்	யான், நான்.
	பன்மை	யாம், நாம்	யாம், நாம்.
முன்னிலை	ஒருமை	நீ	நீ.
	பன்மை	நீயிர்	நீயிர், நீவிர், நீர்.
படர்க்கை	ஒருமை	தான்	தான்.
	பன்மை	தாம்	தாம்.

யான், தான், நான் என்பவற்றில் னகரம் ஒருமையை உணர்த்த, யாம், தாம், நாம் என்பவற்றில் மகரம் பன்மையை உணர்த்துகிறது. நீயிர், நீவிர், நீர் என்பன பன்மையை உணர்த்துவதால், ரகர ஈறும் பன்மையுணர்த்துவது புலப்படுகிறது.

பொதுவாக, மூவிடப் பெயர்கள், உருபு ஏற்க, நெடு முதல் குறுகுகின்றன. இதில் தொல்காப்பியருக்கும் நன்னூலாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை.

> தான் தாம் நாம் முதல் குறுகும் யான் யாம்
> நீ நீர் என் எம் நின் நும் மாம்
>
> —நன். சூ. 247.

நான் என்பது நன்னூலார் காலத்திற்கு முந்திய தமிழ்ச் சாசனங்களில் பயின்று வருகிறது. வீரசோழியத்திலும் இது குறிப்பிடப்படுகிறது. ஆனால் நான் என்பது நெடுமுதல் குறுகி நன் என்று வருவதில்லை. உன், உம் என்ற வடிவங்கள்

வீரசோழியத்தில் தரப்படுகின்றன. நன்னூலார் இவற்றைக் குறிப்பிடவில்லை. நுன் என்ற வடிவம், இம்மூவர் நூல்களிலும் இடம்பெறவில்லை. நாங்கள், யாங்கள் என்னும் இரட்டைப் பன்மையும் வீரசோழியத்தில் காணப்படுகிறது. யாங்கள் என்ற வடிவம் வீரசோழியத்திற்கு முந்திய தமிழ்ச்சாசனங் களிலும் காணப்படுகிறது. நாங்கள் என்ற வடிவம் சாசனங் களிற்கூடச் சிறிது பிந்தியே இடம்பெறுகிறது.

யாம் என்பதற்கு நேரிடையான ஒருமையாக யான் இருந்ததால், அதனோடொப்ப, நாம் என்பதற்குப் பதிலாக நான் வழங்கத் தொடங்கியிருக்கலாம். இரட்டைப் பன்மை களைப் பற்றித் தொல்காப்பியரோ, நன்னூலாரோ எதுவும் சொல்லவில்லை. இரட்டைப்பன்மை வடிவம், தொல்காப்பியர் காலத்திற்குப்பின், இடைக்காலத் தமிழிலேயே விருத்தி யடைந்திருக்கலாம். வீரசோழியத்தார், நாம் என்பது மரியாதைப் பன்மையென்றும் நாங்கள் என்பது பன்மை யென்றும் கூறுவர். பெருந்தேவனார், யாம் என்பதை நாம் என்பதனோடும் யாங்கள் என்பதை நாங்கள் என்பதனோடும் உரையில் கூட்டிக் கூறுவர். தொல்காப்பியர் எடுத்துக்கூறிய யாம் என்பதையும் அதனிலிருந்து விருத்தியடைந்து தனக்கு முந்திய சாசனங்களிற் காணப்பட்டதாகிய யாங்கள் என் பதையும் விடுத்து, நாம், நாங்கள் என்ற வடிவங்களை மாத் திரம் வீரசோழியம் எடுத்துக் கூறுவது, தன்காலப் பேச்சு வழக்கு மொழிக்கு முக்கியத்துவம் வழங்கியதனாலாக இருக் கலாம். வீரசோழியம் கூறிய இரட்டைப்பன்மை வடிவங்களை, நன்னூலார் ஏன் கூறவில்லையென்பது தெரியவில்லை. மரி யாதைப் பன்மையிலிருந்து பன்மையை வேறுபடுத்த வேண் டும் என்ற அவாவே, இரட்டைப் பன்மை வடிவம் தோன்றக் காரணமாகலாம்.

தன்மைப் பன்மையாக, எம்மையெலாம், நம்மையெலாம் முதலியனவாக வரும் எலாம் என்னும் தொகைப் பெயரை, நன். சூ. 287 கூறுகிறது. எல்லாம் என்பது மூவிடத்திற்கும் பொதுத் தொகைப் பெயரென்பது, நன். சூ. 285லிருந்து

தெரியவருகிறது. உயர்திணையில், எல்லாமென்பது எல்லா நம்மையும், எல்லா நம்மானும் முதலியனவாக நம் சாரியை பெற்று வருமென்பர் தொல்காப்பியர் (எழுத். சூ. 190).

எல்லாரு மென்னும் படர்க்கை யிறுதியும்
எல்லீரு மென்னு முன்னிலை யிறுதியும்
ஒற்று முகரமுங் கெடுமென மொழிப
நிற்றல் வேண்டும் ரகரப் புள்ளி
யும்மை நிலையு மிறுதி யான
தம்மிடை வரூஉம் படர்க்கை மேன
நும்மிடை வரூஉ முன்னிலை மொழிக்கே

—தொல். எழு. 191.

எல்லாரும் என்பது படர்க்கைத் தொகைப் பெயரிடத்தும் எல்லீரும் என்பது முன்னிலைத் தொகைப் பெயரிடத்துமே வருமாதலால், எல்லா நம்மையும் முதலாயின பிற்காலத்தில் தன்மையில் மாத்திரம் வழங்கியிருக்கலாம் என்று வாதித்து, நன். சூ. 245-ஐச் சான்றாகக் காட்டுவர் டாக்டர் **P. S.** சுப்பிரமணிய சாஸ்திரி அவர்கள். எல்லா நம்மையும் முதலியன தன்மையை உணர்த்தும்போதும், எல்லா நும்மையும் முதலியன முன்னிலையை உணர்த்தும்போதும் எல்லாம் என்பதனோடு சேர்ந்து வரும் நம், நும் என்பனவற்றைத் தொல்காப்பியர் ஏன் சாரியைகளென்று கொள்கிறாரெனத் தெரியவில்லை. இவற்றைத் திரிந்து நிற்கும் தன்மை முன்னிலைப் பெயர்களென்று கொள்ளலாம். எல்லாம் என்பது மூவிடத்திற்கும் வருவதற்கு, யாமெல்லாம், நீயிரெல்லாம், அவரெல்லாம் முதலியனவாக நன்னூல் விருத்திகாரர் உதாரணங் காட்டியிருத்தலும் நோக்கற்பாலது. எல்லா நம்மையும் முதலியன மூவிடத்திற்கும் பொதுவாக வழங்கின என்று கொள்வதற்குச் சான்றில்லை. எல்லாம் என்பது மாத்திரம் அவ்வாறு வழங்கியிருக்கலாம். ஆனால், இக்காலத்தில், எல்லாம் என்பது உருபேற்ற பெயர்களைத் தொடர்ந்து நம்மையெல்லாம், நம்மாலெல்லாம் என்று வருகிறது.

முன்னிலைப் பன்மைப் பெயர்களை யெடுத்துக் கொண்டால், நீயிர் என்பது நும்மின் திரிபெயர் என்று தொல். சொல். சூ. 143 குறிப்பிடும். எழுவாய்ப் பெயர் வடிவத்தினின்று வேற்றுமையேற்கும் வடிவந் தோன்றுதலேயன்றி, வேற்றுமையேற்கும் வடிவத்தினின்று எழுவாய்ப்பெயர் வடிவந் தோன்றுதல் தமிழின் இயல்பன்று. நீ என்பதனோடு பன்மையுணர்த்தும் இர் சேர்ந்து உருவாகியதே நீயிரெனக் கொள்ளவேண்டும்.

யான்—யாம்—எம்.
தான்—தாம்—தம்.
நீ —நீயிர்—நும்.

நீயிரென்கிற வடிவத்தின் அமைப்பு, தன்மைப்பெயர் படர்க்கைப் பெயர்களோடு மாறுபட்டிருப்பதைக் கவனித்ததனுற்போலும், தொல்காப்பியர் நீயிர் என்பதை நும்மின் திரிபெயர் என்கிருர். நீர், நீர்கள் என்பன வீரசோழியத்தாரற் குறிக்கப்படுகின்றன. நீயிர், நீவிர் என்ற வடிவங்களே, நீர் எனத் திரிந்திருக்க வேண்டும். நீர்கள் என்ற வடிவம் இரட்டைப் பன்மையாகும். நீயிர்கள், நீவிர்கள் என்ற வடிவங்களும் வழக்கிலுள்ளன என்பர் பெருந்தேவனுர். நீர்கள், நீயிர்கள், நீவிர்கள் என்ற இரட்டைப் பன்மை வடிவங்கள் இடைக்காலத் தமிழ்வழக்கில் இடம் பெற்றன என்பது வீரசோழியத்திலிருந்தும் அதன் உரையிலிருந்தும் மாத்திரமே தெரியவருகிறது. இதனுலும் இடைக்காலத் தமிழை ஆராய்வதற்கு வீரசோழியம் பெருமளவு உதவுவது புலனுகிறது. நீம் என்ற முன்னிலைப்பன்மை சீவக சிந்தாமணியில் காணப்படுகிறது. அதனைத் திசைச்சொல்லென்னும் அதன் உரை. அச்சொல் கன்னடத்திலிருந்து வந்திருக்கலாம். சீவகசிந்தாமணி காலத்தில், கன்னட்மொழி பேசும் பிரதேசமே தென்னிந்திய சமணத்தின் கேந்திரஸ்தானமாக விளங்கியதால், சமணமுனிவராகிய திருத்தக்கதேவர் அந்த மொழி வழக்கைப் போற்றிக்

கூறியிருக்கலாம். அல்லது, நாம், தாம் என்பவற்றுக்கு இணையாக, நீ என்பதிலிருந்து நீம் என்ற வடிவத்தை அமைத்திருக்கலாம். நீவிர் என்ற வடிவம் வகர உடம்படு மெய் பெறுதலினாலேயே, நீயிர் என்ற யகர உடம்படுமெய் பெறும் வடிவத்திலிருந்து வேறுபடுகிறது. மகரம் வகர மாகத் திரிதல் திராவிடமொழியியல்பாதலால், நீம் என்பதுவே நீவ் என அமைந்து இர்பெற்று நீவிரெனவும் பிறகு நீயிர், நீர் எனவும் மாறியமைந்துள்ளது என்றும் சிலர் கூறுவர். ஆனால், நீவிர் என்பதைத் தொல்காப்பியர் கூறவில்லை. சங்க இலக்கியங்களிலும் அது காணப்படவில்லை. எனவே, நீவிர் என்பது பிற்கால வடிவமாகலாம். நீவிரென்பதிலிருந்து தான். நீயிரென்பது வந்திருக்க வேண்டும் என்று இன்று கூறமுடியவில்லை. நீங்கள் என்ற இரட்டைப்பன்மை நீம் என்ற முன்னிலைப்பன்மை வடிவத்திலிருந்து அமைந்திருக்கிறது. வீரசோழியமே, இவ்வடிவத்தை முதன் முதல் குறிப்பிடும் இலக்கணம். பன்மையாகவும் மரியாதைப் பன்மையாகவும் இன்று பெருவழக்காக இருக்கும் வடிவம் இதுவே. நின் என்ற முன்னிலையொருமை வடிவம், பெருங் கதையிலும் சீவக சிந்தாமணியிலும் நுன் என்று மாறுகிறது. தொல்காப்பியத்திலேயே இடம்பெற்ற நும் என்ற முன்னிலைப் பன்மைக்கு நேரிடையான முன்னிலையொருமை நுன் என்ற கருத்து, இதன் தோற்றத்துக்குக் காரணமாகலாம். நுங்கோன் + நுன்னை = நுங்கோனுன்னை = நுங்கோன் + உன்னை என்று புணர்ச்சியைத் தவறுபடப் பிரித்தெடுத்த தனால், உன் என்ற வடிவம் வழக்குக்கு வந்திருக்கலாம் என்பர் டாக்டர் **P. S.** சுப்பிரமணிய சாஸ்திரி. இன்றைய தமிழில், நின் என்பதற்கும் பதிலாக உன்னை வழங்குகிற தெனலாம்.

முன்னிலைத் தொகைப் பெயராகத் தொல்காப்பியர் எல்லீரும் என்பதே கூறுவர். நன். சூ. 287, எலீர் என்றதைக் கூறுகிறது. எல்லீரும் என்பது வேற்றுமை யுருபேற்று வருவதை, நன். சூ. 246 கூறுகிறது. எல்லா நும்மையும் முதலிய வழக்காறுகளும் இருந்திருக்கின்றன. ஆயின், இன்

றைய வழக்கில், எல்லாரும், எல்லோரும் என்பனவே, இவ் விடத்து வழங்குகின்றன.

படர்க்கைத் தொகைப்பெயர் எல்லாரும், எல்லார் தம்மையும், எல்லார் தம்மொடும் என்றிருந்திருக்கிறது. இன்றைய பேச்சுவழக்கில், தம் என்பது சேர்க்கப்படுவதில்லை. அஃறிணையில், எல்லாவற்றையும் முதலியனவும் உயர்திணையில், எல்லா நம்மையும் முதலியனவும் வழங்கின என தொல். எழு. சூ. 189, 190 கூறும். ஆயின் பழந்தமிழிலேயே, எல்லாரையும் எல்லாரோடும் என்னும் வடிவங்களும் காணப்படுகின்றன.

மூவிடப்பெயர்களை எடுத்துக் கூறும் தொல்காப்பியர் தன்மைப் பன்மையில் மாத்திரம் இரு வடிவங்கள் கூறுவது கவனிக்கத்தக்கது. யாம் என்பது முன்னிலையை உளப்படுத்தாது. நாம் என்பது முன்னிலையை உளப்படுத்தும். நாம் என்பது தன்மையோடு முன்னிலையை உளப்படுத்தும் பெயராதலின், அதில் தன்மைப்பெயரின் கூறும் முன்னிலைப் பெயரின் கூறும் சேர்ந்திருத்தல் வேண்டும் என்றும், இது முன்னிலையை உளப்படுத்தலினாலேயே, பழந்தமிழ் இடப் பெயர்களில் முன்னிலைக்கு மாத்திரம் உரிய நகரம் இடம் பெற்றுள்ளது என்றும் வேங்கடராஜுலு ரெட்டியார் கூறுவர். தமிழ் நாட்டில் இவ்வழக்குப் பேச்சு மொழியில் இன்றும் உள்ளது என்பர் சீனிவாசன்.

தொல்காப்பியர் தான், தாம் என்பன படர்க்கைக்குரியன என்று எடுத்துக் கூறவில்லை. உரையாசிரியர் தரும் உதாரணங்கள் யாவும் படர்க்கை வினைகள் கொள்கின்றன. அதனால், இவை படர்க்கைப் பெயரெனக் கொள்ளக்கிடக்கின்றன. இப்படர்கைப் பெயர்கள் ஏனை இடப்பெயர்களோடு சேர்ந்து, அவற்றின் வினைமுடிவையே பெற்றுத் தற்சுட்டுப்பெயர் (reflexive pronoun) ஆகவும் விளங்குகின்றன. இவை, சில இடங்களில் தேற்றப்பொருளில் இடைச்சொற்களாக வருகின்றன. தற்சுட்டுப் பெயராக வருதலும் தேற்றப்பொருளில் வருதலும் சேர்ந்து ஒரு உதாரணத்

திலேயே காணப்படுவதுமுண்டு. நற்றிணை முற்பகுதியின் மொழியமைப்பை ஆராய்ந்த கமில் சுவெலிபில் இந்த நிலையைச் சுட்டிக் காட்டுகிருர். 'அவனே தான் வேண்டு களத்து தான் வேண்டு பொன் மறையிலி மன்றப் பெறுவதாகவும்', 'தேவச் சானி தான் எடுப்பித்த தளிக்கு' என வரும் சாசனப்பகுதிகளில், இரண்டு பொருள்களும் கொள்ளலாம் போலத் தெரிகிறது. 'தேற்றப்பொருளில் வரும்பொழுது தான் என்பதே ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாக வருகிறது. தற்சுட்டுப் பெயராக வரும்பொழுதே, ஒருமை பன்மை வேறுபாறு பாராட்டப்படுகிறது' என்பர் சீனிவாசன். ஆனுல் அசைநிலையாக வரும்பொழுதே, தாம் தான் என்ற வேறுபாடு காணப்படுவதை நன். சூ. 441 எடுத்துக் காட்டுவதால், தேற்றப்பொருளில் இந்த வேறுபாடு இருக்காது எனச் சொல்ல முடியாது.

இப்பெயர்கள் தாங்கள், தங்கள் என இரட்டைப்பன்மை வடிவம் பெறுவதுண்டு. அப்பொழுது அவை பெரும்பாலும் முன்னிலையில் மரியாதைக்காக வரும். 'இது வெல்லாந் தங்கள் காவல்', 'கனக வீரக்குரத்தியார் தங்கள் மகளார் ஆதினமையில்' என்பன சாசனங்களில் வரும் உதாரணங்கள். நீங்கள், உங்கள் என்று கூறுவதிலும் தாங்கள் தங்கள் என்று கூறுவது கூடியவளவு மரியாதையைக் குறிக்கிறதெனலாம். இவ்வழக்கு இடைக்காலத் தமிழிலேயே இடம் பெற்று விட்டது.

சுட்டின் அடியாகப் பிறக்கும் பால் தெளிய நிற்கும் சொற்களாகிய அவன், அவள், அவர், அது, அவை என்பன வழக்கு மிகுதிபெறவே, தான் தாம் என்பன தம் படர்க்கைப்பொருளை இழந்து விட்டன. படர்க்கையிடத்தில் சுட்டுப்பெயர்கள் பெருவழக்காகி விட்ட காரணத்தாலும் தெளிவாகப் பாகுபாடு காட்டுவதனுலும், அவை செல்வாக்குப் பெற்றுவிட்டன. படர்க்கை யிடப்பெயராக இன்று வழங்குவன சுட்டுப் பெயர்களே. அகரம் சேய்மைச் சுட்டு; இகரம் அண்மைச் சுட்டு. உகரம் நடுவணதைச்

சுட்டும். உகரம் யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் ஓரளவு இடம் பெறுகிற போதிலும், தென்னிந்தியப் பேச்சுத் தமிழில் வழக்கிறந்தது. சுட்டுப் பெயர்களைப் போலவே, எகர வினுவிலிருந்து வினுப் பெயர்கள் அமைகின்றன. யா என்பதும் வினுப் பொருள் தருவது ; ஐம்பால் விகுதிகளுடன் கூடி வருவது. யா என்பதற்கும் எகரவுயிர்க்கும் தொடர்பு உண்டு. இரண்டனுள், யா பழையது என்று கருதுவர் சிலர். யாவர் என்பதன் திரிபாகிய யார் என்பது ஒருமையிலும் வழங்குகிறது. அது ஆர் என்றும் மருவியுள்ளது. எவன் என்னும் வினு, ஏன் என்னே என்ன என்று பிற் காலத்தில் மருவியது. யாது என்பது இடையே வகரம் பெற்று யாவது என மருவியது. தமிழில் அகரம் முதலான சுட்டு வினுக்களடியாகப் பிறந்த பண்புப் பெயர்கள் பல காணப்படுகின்றன. அம்மை, இம்மை, உம்மை, எம்மை, இம்பர், உம்பர் முதலியன எடுத்துக்காட்டுகள். ஆ, ஈ, ஏ என்பவை சுட்டுவினுப் பொருளில் தமிழிலக்கியத்திலும் பிற திராவிடமொழியிலும் வழங்கி வருவதால், நெட்டெழுத்து வடிவங்களான அவையே பழையன என்பர் சிலர்.

அவன் இவன் உவன் என்பவை ஆண்பாலையும், அவள் இவள் உவள் என்பவை பெண்பாலையும், அது இது உது என்பவை ஒன்றன்பாலையும், அவை, இவை, உவை என்பன பலவின்பாலையும் உணர்த்துகின்றன. 'வகரக் கிளவி நான் மொழியிற்றது' என்னுந் தொல். எழு. சூ. 81, அவ், இவ், உவ் என்ற வடிவங்களைக் குறிக்கிறது. ஐம்பாலையும் உணர்த்தும் சுட்டுப் பெயர்கள், அ, இ, உ என்ற சுட்டுக்களிலிருந்து தோன்றியனவா அல்லது அவ், இவ், உவ் என்ற சுட்டுக்களிலிருந்து தோன்றியனவா என்பது ஒரு பிரச்சினை. அவ், இவ், உவ் என்பவற்றிலிருந்தே, இவ்வடிவங்கள் தோன்றின என்போர், அஃது இஃது உஃது என்பனவே திரிந்து அது இது உது என்னும் ஒன்றன்பாற் பெயர்களாயின என்பர். மேலும் தொல்காப்பியர் அவ், இவ், உவ் என்பன அடைகளாக நின்று ஏனைய சொற்களோடு புணரும்போது பெறும் திரிபுகளையே அ, இ, உ என்ற சுட்டுக்கள் பெறும் என்பர்.

தொல்காப்பியர் காலத்தில் இரண்டு வகை வடிவங்களும் காணப்பட்டன. இத்தகைய திரிபுகளும் இடம்பெற்றன என்று கூறியமைவதே, இன்றுள்ள நிலையில் முடிவுகட்டக் கூடியது.

தொல்காப்பியத்திற் காணப்படும் வினாப் பெயர்களாவன யாவன், யாவள், யாவர், யாஅர், யார், யாவது, யா, யாவை, எவன் என்பன. உயர்திணையிலுள்ள மூன்று பால்களுக்கும் யாஅர் பயனிலையாக வருமென்பர் தொல்காப்பியர் :—

யாஅர் என்னும் வினாவின் கிளவி
அத்திணை மருங்கின் முப்பாற்கும் உரித்தே

—தொல். சொல். 210.

ஒன்றன் பாலும் பலவின் பாலும் எவன் என்பதைக் கொள்ளும் என்பர் :—

அத்திணை மருங்கின் இருபாற் கிளவிக்கும்
ஒக்கும் என்ப எவனென் வினாவே

தொல். சொல். 219.

திணைபாலறியாப் பொருளிடத்தும், எவன் என்பது வருமென்பர் :—

யாது எவன் என்னும் ஆயிரு கிளவியும்
அறியாப் பொருள்வயின் செறியத் தோன்றும்

தொல். சொல். 31.

தொல்காப்பியர் காலத்தில் உருபேற்கும் பெயர்கள் கூட, யா என்பதையே அடியாகக் கொண்டு தோன்றியிருக்கின்றன. இடைக்காலத்தில், எவைகள், எவர்கள் என்பவும் வழக்கிலிருந்தன. தற்காலத் தமிழில், எவன், எவள், எவர், எது, எவை என்பன யாவன், யாவள், யாவர் முதலியவற்றின் இடத்தை எடுத்துவிட்டன என்றே கூறலாம். தொல்காப்பியர் காலத்தில், யா என்ற வினா அடிச்சொல் சிறப்புப் பெற்றிருந்தது. ஏகாரத்தைத் தொல்காப்பியர் வினாவடி

யாகக் கொள்வதாலும், எவன் என்பதைக் குறிப்பிடுவதா லும், எப்பொருள், எப்பெயர் என்பவற்றை யாள்வதாலும், தொல்காப்பியர் காலத்திற்கு முன்பு, வேற்றுமை யுருபேற் காத பெயர்கள் யா அடியாகவும் வேற்றுமை யுருபேற்கும் பெயர்கள் எ அடியாகவும் தோன்றியிருக்கலாமென்றும் கரு துவர் டாக்டர் P. S. சுப்பிரமணிய சாஸ்திரி. தொல்காப் பியர் காலத்தில் யாகாரம் எங்கும் இடம்பெறப் பிற்காலத் தில் எகரம் எங்கும் இடம் பெற்றிருக்கலா மென்று மேலும் அவர் கூறுவர். யா பழைய வடிவமாகவும், எ அதன் திரி பாகவு மிருக்கவேண்டும் என்பர் கால்டுவெல்.

4. எண்ணுப் பெயர்கள்

எண்ணுப் பெயர்கள் மூவிடப் பெயர்களை விட்டு வேறொரு இலக்கணப் பிரிவாகக் கொள்ளப்படுகின்றன. மூவிடப் பெயர்களோடு சில அம்சங்களில் ஒப்புடைய எண் ணுப் பெயர்களை, மூவிடப் பெயர்களென்ற பகுதியில், ஒரு உப பிரிவாகக் கொள்ளலாம் போலத் தெரிகிறது என்பர் யெஸ்பெர்சன் (Jesperson–The Philosophy of Grammar–Chapter IV). மூவிடப் பெயர்கள் பொருள்களின் பெயர் களாகாமல், அவற்றைச் சுட்டுதல் போலவே, எண்ணுப் பெயர்களும் அவ்வப் பொருள்களின் பெயர்களாகாமல், அவற்றைக் குறிப்பிட வழங்குகின்றன.

எண்ணுப் பெயர்களுள், ஏழு, நான்கு என்பவை தவிர, ஏனைய து விகுதி அல்லது அதன் திரிந்த வடிவமான டு, று பெற்றுத் தொகைச் சொல்லாக நின்று அஃறிணை யொருமையை உணர்த்துகின்றன. ஒன்+து=ஒன்று, இரண்+து=இரண்டு என இவ்வாறு அமைந்துள்ளன. உயர்திணையுணர்த்த—வர் அல்லது—மர் சேர்கிறது. ஒருவர், ஐவர், ஒன்பதின்மர் என்பன எடுத்துக் காட்டுக்கள். மெல் லொலி முன்—மர் என்பதும் ஏனைய இடத்து—வர் என்பதும் அமைகின்றன என்பர் சீனிவாசன்.

எண்ணுப் பெயர்களை, எண்ணலளவை யென்றும் எண்ணு முறை யென்றும் இரண்டாக வகுக்கலாம். எண்ணுப் பெயர்களில், ஒன்று முதல் எட்டுவரை, பெயரடை வடிவங்களும் காணப்படுகின்றன. ஒன்று—ஒரு, ஓர்; இரண்டு—இரு, ஈர்; மூன்று—மு, மூ; நான்கு (நாலு)—நால்; ஐந்து (அஞ்சு)—ஐ, ஐம் (அய், அய்ம்); ஆறு—அறு; ஏழு—எழு; எட்டு—எண். நான்கு என்னும் எண்ணின் பெயரடை நால். அது அடைந்த ஒலிநயத் திரிபுகளே, ஏனைய வடிவங்களாகச் சில சமயங்களிற் காணப்படும் நான், நாற் என்பன. ஏனைய திராவிடமொழிகளில் நான்கு என்னும் எண்ணைக் குறிக்கும் பெயர்களை ஒப்பிட்டு ஆராய்ந்த கால்டுவெல், நால் என்பதே இந்த எண்ணுப் பெயரின் பழைய வடிவமென்றும் கு என்னும் விகுதி, அந்த எண்ணுப் பெயரை, அஃறிணைப் பெயர்ச் சொல்லாக்குவதற்காகச் சேர்க்கப் பட்டிருக்கலாம் என்றுங் கூறுவர். சங்கத் தமிழிலும் பழைய தமிழ்ச் சாசனங்களிலும் நால்கு என்ற வடிவமும் வழங்குதல் கவனிக்கத் தக்கது. ஐந்து என்பதைப் பொறுத்த வரையில், பெயரடைகளிற் காணப்படும் மூக்கின எழுத்து ஒலிநயச் சேர்க்கையே. ஐ அல்லது அய் அல்லது அ என்பதே எஞ்சுகிறது. ஐகாரம் இவ்வாறு வேறு வேருக ஒலித்தல், தமிழிலக்கணக் காரருக்கு உடன்பாடு.

ஒரு, இரு, மு என்னும் பெயரடைகள் மெய்யெழுத்தை முதலாகவுடைய சொற்களுக்கு முன் வருகின்றன; ஓர், ஈர், மூ என்னும் முதல் நீண்டொலிக்கும் பெயரடைகள், உயிரெழுத்தை முதலாகவுடைய பெயர்ச் சொற்களுக்கு முன் வருகின்றன. ஒர், இர் என்பனவே பண்டைய வடிவங்களாக இருந்து ஒலிநயங்கருதி, ஒரு, இரு என உகரம் பெற்றிருக்கலாம் என்றும், உயிர்முதன்மொழி வரும்போது இந்த உகரங் கெடலால், அதை ஈடு செய்வதற்காக, முதலுயிர் நீண்டிருக்கலாம் என்றும் கால்டுவெல் கூறுவர்.

ஒருவிளக்கு; ஒருமா; ஓரணை; ஓராண்டு; இருகலம்; இருநாழி; இரு கழஞ்சு; ஈரடுக்கு; ஈரணை; முக்கலம்; முக்குறுணி; முந்நாழி; மூவடுக்கு.

தொகை எண்கள் பெருக்கல், கூட்டல் என்னும் இரு வழிகளில் அமைகின்றன. பெருக்கல் வழியில் அமையும் தொகையெண் பண்புத் தொகையாகவும் கூட்டல் வழியில் அமையும் தொகையெண் உம்மைத் தொகையாகவும் வரும் :—

(i) பெருக்கல் : இருபது ; நாற்பது ; எண்ணூறு ; இரண்டாயிரம்.

(ii) கூட்டல் : ஒன்றிலிருந்து ஒன்பதுவரையிலுள்ள எண்கள் பத்துக்களுடன் கூட்டப் படுகின்றன. பதினுறு ; முப்பத்திரண்டு ; நூற்றிருபத்தொன்பது, நூற்றெட்டு, இருநூற்றைம்பது முதலியனவும் இவ்வகையிலேயே அமைகின்றன.

ஒன்பதுக்கும் எண்பத்தொன்பதுக்கும் இடைப்பட்ட எண்ணுப் பெயர்கள், பத்து அல்லது பத்தின் இரண்டு திரிந்த வடிவங்களைப் பெறுகின்றன. திரிபின்றியே பத்து என்பது நிலைபெறும் எண்களுக்கு எடுத்துக் காட்டுக்கள் :—ஐம்பத்தாறு ; இருபத்துநான்கு ; இருபத்தேழு ; முப்பத்திரண்டு. பத்துக்கு மேற்பட்ட பத்துக்கள் பது என்பதை ஈற்றில் கொள்ளுகின்றன :—இருபது, நாற்பது, அறுபது, எண்பது. பதினொன்றுக்கும் பதினெட்டுக்கும் இடைப்பட்ட எண்கள் பது என்னும் வடிவத்துடன் இன் என்னும் சாரியையும் கொள்ளுகின்றன :—பதினுறு ; பதினேழு.

பத்து என்பதன் திரிபே பது. தகர மெய்யை இழந்து நிற்பதை ஈடு செய்வதற்காகப் போலும், பது என்பது இன் சாரியையைச் சில இடங்களில் சேர்த்துக் கொள்கிறது. பத்தொன்பது என்பதில் இன் சாரியை காணப்படாமையால், பத்தொன்று, பத்திரண்டு என்ற வடிவங்களும் ஒருகாலத்தில் வழங்கியிருக்கலாம், எண்ணுப் பெயரடைகள் பத்து என்பதற்கு முன் வரும்பொழுது, பத்து என்பதைத் தொடர்ந்து வரும் எண்கள், இன் சாரியை யின்றியே வழங்கல் கவனித்தற்குரியது. இருபத்தாறு என்பது உதாரணம். சாசனங்களில், இருநூற்றெருபத்து நான்கு, நானூற்றெருபத்தொரு என்னும்

வழக்காறுகள் காணப்படுதலும், இந்தக் கருத்தை உறுதி செய்யவே உதவுகின்றதெனலாம்.

பத்து அல்லது பதின் என்பதற்கு ஒன்றுமுதல் எட்டு வரையுள்ள எண்களின் பெயரடைகளைச் சேர்க்கத் தொகை எண்களின் பெயரடைகள் அமைகின்றன. பதினறு; இருபத்தெண்; நாற்பத்தை; இருபத்தெழு. பத்தைக் குறிக்கப் பான், பன் என்ற வடிவங்களும் வழங்குகின்றன. பதினிரண்டு பன்னிரண்டு எனவும் கூறப்படுகிறது. பதின் என்பதன் திரிபே பன் ஆகலாம். தகர இகர உயிர்மெய்யை இழந்ததற்கு ஈடாக, முதல் நீண்டு பான் என வழங்கியிருக்கலாம். பத்திலிருந்து பதிற்று என்றும் ஒரு பெயரடை அமைந்திருக்கிறது.

எண்ணுப் பெயர்கள், பெயர் போலவும் பெயரடை போலவும் பயன்படுத்தப்படலாம். பெயராகப் பயன்படுத்தப்படும் பொழுது, எண்ணுப் பெயர் எந்தப் பொருளைக் குறிக்கிறதோ. அந்தப் பொருளின் பெயரைத் தொடர்ந்து அமையும்:—கயல் இரண்டு; அடைக்காய்ப் பத்து; பழம் பதினறு; காசு தொண்ணூறு; யாண்டு எட்டு. இவ்வாறு வரும்பொழுது, எண்ணுப் பெயர் வேற்றுமையுருபும் ஏற்கும்:—களிறு ஒன்ரோடு; பரி ஒன்ரல்; விளக்கு இரண்டுக்கு. இத்தகைய உதாரணங்கள், சாசனங்களில் நிறையக் காணப்படுகின்றன. எண்ணுப் பெயர்கள் யாவும் ஒருநோக்கில், பெயரடைகளே. எனவே, பெயரடைகள் என்று சிறப்பாகப் பெயர்பெறும் வடிவங்களைப் போல, எண்ணுப் பெயர்களும் மற்றப் பெயர்களுக்கு முன்பு வரலாம். ஒன்று என்ற எண்ணே இதற்கு விதிவிலக்கு. ஒரு அல்லது ஓர் என்பதே, ஏனைய பெயர்ச் சொற்களுக்கு முன் வரும். இதே பொருளில் முதல் என்பதும் சில இடங்களில் முதற்றியதி என்பது போல வரும். எண்ணுப் பெயர்கள் பெயரடைகள் போல வருவதற்கு எடுத்துக் காட்டுக்கள் :— பதினறு அடி; மூன்று மா; ஐம்பது காசு; நாற்பத்தெட்டுக் காணம்; ஆயிரந் தலை. ஆயிரம், இலட்சம், கோடி என்ற எண்கள், வடமொழியிலிருந்து பெறப்பட்டவை. ஆயிரம் என்பது சாசனங்களில் ஆஇரம் என்றும் எழுதப்படுகிறது.

பின்னங்களை எடுத்துக்கொண்டால், அரையைக் குறிக்கப் பாதி என்பதும் வழங்குகிறது. பொதுவாக, எண்ணுப் பெயர்களைத் தொடர்ந்து பின்னங்கள் எழுதப்படுகின்றன :— ஒன்றரை; எட்டரை. எண்ணுப் பெயர்களைத் தொடர்ந்து கால் வரும்பொழுது, ஏகார மிடையில் வருவதுண்டு :—நாலே கால்; ஆறே கால். உயிரெழுத்தை முதலெழுத்தாகவுடைய பின்னத்தின் முன்னால், எண்ணுப் பெயரின் உகரம் கெடுகிறதென்றும் மெய்யெழுத்தை முதலெழுத்தாகவுடைய பின்னத்தின் முன்னால், உகரத்தின் இடத்தை ஏகாரம் எடுக்கிறதென்றும் A. H. Arden, A Progressive Grammar of Common Tamil என்ற நூலில் கூறியது பொருத்தமாகவே காணப்படுகிறது. எட்டில் ஒன்று என்னும் பின்னம் அரைக்கால் அல்லது காலே அரை என்று இடைக்காலச் சாசனங்களிற் குறிக்கப்படுகிறது. நாலில் மூன்று முக்கால் எனப்படுகிறது. பின்னங்கள், ஏனைய எண்ணுப் பெயர்களைப் போல, பெயர்ச் சொற்களுக்கு முன்பே பெரும்பாலும் வருகின்றன. அரைக்கால் பொலிசை; காலே அரைமா; காற்பொன்; நாலேகால் காணம் என்பன எடுத்துக்காட்டுக்கள். சில சந்தர்ப்பங்களில், எண்ணுப் பெயர்களைத் தொடர்ந்து அவை சுட்டும் பிற பெயர்கள் வர, அவற்றைத் தொடர்ந்தே பின்னங்கள் வருகின்றன :—பதின் கழஞ்சரை; இரு கழஞ்சேகால்; தொண்ணூற்றேழு பலவரை.

எண்ணலளவைப் பெயர்களுக்கு ஆம் அல்லது ஆவது என்பதைச் சேர்ப்பதால், எண்ணுமுறைப் பெயர்கள் உருவாகின்றன. ஆம் என்பது சேர்ந்தமையும் எண்ணுமுறைப் பெயர்கள், அவை சுட்டும் பெயர்களுக்கு முன்பு வருகின்றன. தமிழ்ச் சாசனங்களில், ஆவது சேர்ந்தமையும் எண்ணுமுறைப் பெயர்கள் பெயர்ச் சொற்களுக்குப் பின்பே வருகின்றன. பத்தொன்பதாம் நாள்; ஒன்பதாம் யாண்டு; யாண்டு இருபதாவது; யாண்டு பதினேழாவது என்பன சாசனங்களில் காணப்படும் எடுத்துக்காட்டுக்கள். இன்றைய வழக்கில், ஆவது சேர்ந்தமையும் எண்ணுமுறைப் பெயர்களின் பின்பும் பெயர்ச்சொற்கள் அமைகின்றன :—ஆறுவது நாள்

எண்ணுப் பெயர்களிலிருந்தே, புணரியலில், எண்ணுப் பெயரடைகள் தோன்றின என்பது மரபுவழிவந்த தமிழிலக்கணத்தின் கொள்கை. அது ஏற்கக்கூடியதன்று. ஒன்று= ஒன்+து. ஒன்பது என்னும் எண்ணுப் பெயருக்கு அடையாக விளங்கும் வடிவம் ஒன் என்பதாகும். இந்த ஒன் என்பது ஓர் என மாறும் என்பர் தொல்காப்பியர். பழைய வடிவம் ஓர் என்பதாக இருக்கலாம். பிறவற்றோடு சேரும்போது, ரகரம் னகரமாகத் திரிந்திருக்கலாம். இரண்டின் அடிச் சொல்லாகிய இர், பிளத்தல் என்று பொருள்படும் ஈரின் திரிபாகலாம் என்பர் கால்டுவெல். கன்னட வடிவமாகிய மூரு என்பதே பழைய வடிவமென்றும் னகரம் பெற்ற மூன்று என்ற வடிவம் பிந்தியது என்றும் கூறுவர் கால்டுவெல். நால் என்பதன் குறுகிய வடிவமாகிய நல் மிகுதிப் பொருளில் வழங்கி, மூன்றுக்கு மேற்பட்ட எண்ணைக் குறிக்க வழங்கியிருக்கலாம். கை என்பதன் திரிபாகிய ஐ, கையிலுள்ள விரலின் எண்ணிக்கையைக் குறித்தது. இவ்வாறு ஏனைய எண்களின் தோற்றத்தையும் கால்டுவெல் ஆராய்வர். ஒன்பது + பத்து = தொண்ணூறு என்றும் ஒன்பது+நூறு=தொள்ளாயிரம் என்றும் எவ்வாறு ஆயின என்பது இன்னும் விடுபடாத புதிர். தொல்காப்பியர் நிலைமொழியையும் வருமொழியையும் விதிமுறை எதற்கும் அடங்காத முறையில் திரிப்பது ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லை. தொள் + நூறு =தொண்ணூறு என்றும், தொள் + ஆயிரம் = தொள்ளாயிரம் என்றும் வந்திருக்க வேண்டும் என்பதுதான் ஒலிநூலார் ஏற்கக்கூடிய கூற்று. தொல் தொள்ளாகத் திரிந்திருக்கலாம் என்பர் கால்டுவெல். லகரம் ளகரமாக மாறுவது பழைய தமிழில் இருந்ததற்குச் சான்றில்லை. தொண்ணூறு, தொள்ளாயிரம் என்பவற்றின் தோற்றம் இன்றைய நிலையில் விளக்க மெய்தவில்லை என்று அமைதல் பொருத்தம்.

எண்ணுப் பெயர்களின் அடைகளோடு பொழுது என்று பொருள்படும் கால் என்ற சொல்லைச் சேர்க்க, வினையடைகள் தோன்றுகின்றன. கால் என்பதை வினையெச்ச ஈறுகளில் ஒன்றாகத் தொல். சொல். சூ. 229-ம் குறிப்பிடுகிறது. ஒரு

கால்; இருகால்; முக்கால். 'ஒருகாலாவதும் இருகாலாவதும் முக்காலாவதும்' என்கிறது பதின்மூன்ரும் நூற்ருண்டுத் தமிழ்ச் சாசனங்களிலொன்று. இன்றைய பேச்சுத் தமிழில் தரம் என்ற சொல்லும் கால் என்ற சொல் வழங்குவது போல வழங்குகிறது. ஒருதரம்; இருதரம். இரண்டுதரம் என்றும் வரலாம். மூன்று என்பதிலிருந்து, எண்ணுப் பெயர்களைத் தொடர்ந்தே தரம் என்பது வருகிறது. மூன்றுதரம்; நாலு தரம்.

IV வினையியல்

1. வினைச்சொல்

வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்

—தொல். சொல். 198.

வினையென்று சொல்லப்படுவது, வேற்றுமையொடு பொருந்தாது, ஆராயுங்காற் காலமொடு தோன்றும் என்று சேனாவரையர் இச் சூத்திரத்தை விளக்குவர். வேற்றுமை கொள்ளாது என்னாது காலமொடு தோன்று மெனின் வினையாலணையும் பெயரும் தொழிற் பெயரும் வினைச் சொல்லாவான் சொல்லுமாதலாலும், காலமொடு தோன்றும் என்னாது வேற்றுமை கொள்ளா தெனின் இடைச் சொல்லும் உரிச் சொல்லும் வினைச் சொல்லெனப்படு மாதலாலும், தொல்காப்பியர் இவ்வாறு சூத்திரஞ் செய்தா ரெனச் சேனாவரையர் மேலும் விளக்குவர். வினைச் சொல்லுள் வெளிப்படக் காலம் விளக்காதனவும் உள என்பதைக் குறிக்கப் போலும் 'நினையுங்காலை' என்றார்.

தொல். சொல். 201, பின்வருமாறு கூறும் :—

'குறிப்பினும் வினையினும் நெறிப்படத் தோன்றிக்
காலமொடு வரூஉம் வினைச்சொல் எல்லாம்.'

தொல்காப்பியர் குறிப்புவினை அல்லது வினைக்குறிப்பு எனப் பிற்காலத்தில் வழங்கப்படுவதை வினை யென்ற சொல்லால் எங்கும் குறிக்கவில்லை. குறிப்பு என்ற சொல்லையே ஆள்கிறார். ஆனால் வினையையும் குறிப்பையும் சேர்த்து வினைச் சொல் என்கிறார். வினைச் சொல்லின் இரண்டு வகையாகக் குறிப்பையும் வினையையும் அவர் கொண்டிருக்கிறார் போலத் தெரிகிறது.

குறிப்புக்கள் என்ன அடிப்படையில் தோன்றுகின்றன என்பதைத் தொல்காப்பியர் எடுத்துக் காட்டுகிருர் (தொல். சொல். 213, 214, 220) :—

கழலினன்—ஆரும் வேற்றுமை உடைமைப் பொருள் பற்றியது.

இல்லத்தன்—ஏழாம் வேற்றுமை இடப்பொருள் பற்றியது.

புலிபோல்வன்—ஒப்புப்பொருள் பற்றியது.

செய்யன்—பண்புப் பொருள் பற்றியது.

அல்லள்—அன்மை தெரிவிப்பது.

நெடுஞ்செவித்து—பண்பிஞகிய சினைமுதற் கிளவி.

இவ்வகை வினைச்சொல் பொருளின் தன்மை சுட்டலாகிய குறிப்புப்பற்றிப் பிறப்பது என்பர் சீனிவாசன். இது உடைமை, இடம், உவமை, பண்பு முதலிய பண்புகளின் அடிப்படையில் அமைவது. வினையென்பது செயலென்றும் பொருள்படும். செயல் பற்றிப் பிறப்பதை வினையென்றும், பொருளின் தன்மை சுட்டி வருவதைக் குறிப்பென்றும், இவை இரண்டும் வினைச்சொல் லென்றும் தொல்காப்பியர் கொண்டிருக்கிருர் போலத் தெரிகிறது.

குறிப்புக்களில் கால முணர்த்தும் இடைநிலைகளில்லை. ‘இறப்பி னிகழ்வின் எதிர்வின் என்ரு அம் முக் காலமுங் குறிப்பொடுங் கொள்ளும்’ என்று தொல்காப்பியர் கூறுவது குறிப்புக்கு மாத்திரமா அல்லது வினைக்கும் சேர்த்தா என்பது தெளிவாகத் தெரியவில்லை. இடைக் காலத்தில், வினை தெளிவாகக் கால முணர்த்தத் தொடங்கிவிட்டதால், குறிப்பாகக் கால முணர்த்து மென்பது குறிப்புக்கே யுரியது என இடைக்கால இலக்கண உரையாசிரியர் கொண்டனர். தொல்காப்பியர் கால இடைநிலை பற்றி எதுவுங் கூருமையாலும், காலத்தை யடிப்படையாகக் கொண்டு வினை வகுத்துக் காட்டாமையாலும், அவர் வினையுங் குறிப்பும் குறிப்பாகவே காலங் காட்டுவன என்றும் கொண்டிருக்கலாம்.

இடைக் காலத்தில், வெளிப்படையாகக் காலங் காட்டுவன தெரிநிலை வினையென்றும் குறிப்பாகக் காலங் காட்டுவன குறிப்பு வினையென்றும் கொள்ளப்பட்டன.

நன்னூலார் இப் புதிய பாகுபாட்டையே கருத்திற் கொண்டிருக்கிறு ரென்பது, அவர் குறிப்புவினை பற்றிப் பின் வருமாறு கூறுவதிலிருந்து புலனுகிறது. :—

'பொருண்முத லாறினுந் தோற்றிமுன் னுறனுள்
வினைமுதன் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே

—நன். 321.

பொருளாதி யாறும் முதனிலை யடியாக, அவற்றி னிடத்தே பிறந்து, வினைக்குக் கூறப்பட்ட செய்பவன் முதலாகிய ஆறனுட் கருத்தா வொன்றையுமே விளக்குவது வினைக் குறிப்புச் சொல் என்பர் காண்டிகையுரைகாரர். நன்னூலார் வகுத்த பாகுபாட்டைக் கண்ட கால்டுவெல், குறிப்பு வினை வடிவங்கள் காலம் உணர்த்துவ தில்லையென்றும் நிகழ் காலத்திற் குரியவாகக் கொள்ளலமையு மென்றும் கூறுவர்.

குறிப்புவினை இவ்வாறு அமையும் என்று கொண்ட நன்னூலார், திணைபாற் பெயர்களை வரிசைப் படுத்தும்போது, உயர்திணை யாண்பாற் பெயரமையு மாற்றைப் பின்வருமாறு கூறுவர் :—

அவற்றுள்,

கிளையென் குழூஉ முதற் பல்பொரு டிணைதேம்
ஊர்வா னகம்புற முதல நிலன் யாண்
டிருது மதிநா ளாதிக் காலந்
தோள்குழன் மார்புகண் காது முதலுறுப்
பளவறி வொப்பு வடிவு நிறங்கதி
சாதி குடிசிறப் பாதிப் பல்குணம்
ஓத லீத லாதிப் பல்வினை
இவையடை சுட்டு வினுப்பிற மற்ருே

டுற்ற னவ்வீறு நம்பி யாடூஉ
விடலை கோவேள் குரிசி லேன்றல்
இன்னன வாண்பெய ராகு மென்ப

—நன். சூ. 276.

இந்த வரிசையில், மிகப் பெரும்பாலானவை, பொருள் முத லாறினுந் தோற்றி, வினை முதல் விளக்கியமைவனவே. ஏனைய பாற் பெயர்களிலும் மிகப் பெரும்பாலன, இவ்வாறே அமைவதை, நன்னூலில் அடுத்துவரும் சூத்திரங்கள் காட்டு கின்றன. எழுவாயாக அல்லது செயப்படுபொருளாக வரும் பொழுது, பெயரெனப்படும் சொற்கள் பல, பயனிலையாக வரும்போது, குறிப்பு வினைமுற்றுக்கள் எனப்படுகின்றன. இதை நோக்கிய வீரமாமுனிவர், பெயர்ச் சொற்கள் வினை யாகப் பயன்படும்பொழுது குறிப்பு வினைகளெனப்படுகின்றன என்பர் **A Grammar of the High Tamil** என்ற நூலில். குறிப்புவினைமுற்றாக வரும் சொல் பின்பு பெயராக வந்தால், அதனைக் குறிப்பு வினையாலணையும் பெயரென்பர் தமிழிலக் கணகாரர். அதை, வாளா பெயரென்றே கூறலாம்.

அது வீடு என்ற உதாரணத்தைக் காட்டி, பயனிலை யாகப் பெயர் வருவதுண்டென்றும், தொல். சொல். 66 அதை உறுதி செய்கிற தென்றும், ஆகவே பயனிலையாக வந்ததால்தான், அவன் நாடன் என்பதில் நாடன் என் பது பெயராகக் கொள்ளப்படாது குறிப்பாகக் கொள்ளப் பட்டது என்பது பொருந்தா தென்றும் கூறுவர். வீடு என் பதற்கும் நாடன் என்பதற்கும் சொல் அமைப்பிலுள்ள வேற்றுமையும் நாடன் என்பதற்கும் செய்வன் என்பதற் கும் சொல் அமைப்பிலுள்ள ஒற்றுமையும், பின்னவை யிரண் டையும் ஒரே இயல்பினவாகக் கொள்ளத் தூண்டியிருக் கலாம். அப்படிக் கொண்டதாலேயே, பொருண்மை சுட்டும் குறிப்பைத் தொல்காப்பியர் வினையுடன் சேர்த்து வினைச் சொல்லாகக் கொண்டிருக்கலாம்.

தொல்காப்பியர் குறிப்பை வினையென்று கொள்ளாத தனைற் போலும், பெயரெச்சம் வினையெச்சம் குறிப்புக்கு

வகுக்கவில்லை. இடைக் காலத்தில், குறிப்புவினை என்ற குறி ஏற்பட்டு விட்டதால், குறிப்புவினைப் பெயரெச்சமும் குறிப்பு வினை வினையெச்சமும் தலைகாட்டின. நன்னூலாரும் குறிப்பு வினைப் பெயரெச்சம், குறிப்புவினை வினையெச்சம் பற்றிக் குறிப்பிடவில்லை. தமிழிலக்கணகாரர் குறிப்புவினைப் பெய ரெச்சமென்று கொள்வன, பழைய தமிழ்ச் சாசனங்களிற் காணப்படுகின்றன. அன்றி, இன்றி, அல்லது என்னும் குறிப்புவினை வினையெச்ச வடிவங்களும் அதே காலச் சாசனங்களிற் காணப்படுகின்றன. சேனாவரையர் தொல். சொல். சூ. 229 உரையில், குறிப்புவினை வினையெச்சம் பற்றிக் கூறுவர். மயிலைநாதர் நன் சூ. 339 உரையில், குறிப்பு வினைப்பெயரெச்சம் பற்றிக் கூறுவர்.

தமிழ் வினை ஆக்க முறைகள் இரண்டெனலாம். இறந்த கால வினையெச்சங்களை நோக்கும்போது, இது புலனாகிறது. உகரம் அல்லது இகரத்தில் முடிவுறும் இறந்த கால வினை யெச்சங்களிலிருந்தே, இறந்த கால வினைமுற்றுக்கள் அமை கின்றன.

முதலாம் வினையாக்கமுறை: உகர உயிரை ஈறாக உடைய இறந்த கால வினையெச்சங்களின் வினையடிகள் யாவும் இந்த வினையாக்க முறைக் குரியன. அவை பின் வருமாறு :—

(1) தகர இடைநிலை அல்லது அதன் மாற்று வடிவங் களைக் கொண்டு, இறந்த காலம்காட்டும் வினையடிகள். ந்த்/த்த் என்பன தகர இடைநிலையின் மாற்று வடிவங்க ளெனலாம்.

(2) ஈற்று மெய்யிரட்டி இறந்த காலங் காட்டுவன என்று கொள்ளப்படும் ஓரசை வினையடிகள். பாலறிகிளவி முதலியன சேரும்போது, முதலாம் வினையாக்க முறையிற் காணப்படும் உகரம் கெடுகிறது. நிகழ்வு—எதிர்வு, எதிர்வு என்பன அமையும்பொழுது, இந்த வினையாக்க முறையின் தனித் தன்மை புலனாகும்.

தமிழிலுள்ள செயப்படுபொருள் குன்ரு வினையிற் பெரும் பாலன, இந்த வினையாக்க முறையைச் சேர்ந்தனவே. த்த் என்பது கொண்டு, இறந்த காலம் காட்டும் இவ் வினைகள், க்க் என்பது கொண்டு நிகழ்பு—எதிர்வும் ப்ப் என்பது கொண்டு எதிர்காலமும் காட்டுவன. காலங்காட்டு மிடை நிலைகளை யிரட்டிச் செயப்படு பொருள் குன்ரு வினையாக அமையும் வினைவடிவங்கள் முதலாம் வினையாக்க முறைக்கே யுரியன. இவற்றை வல்வினைகள் எனலாம். இவ் வினை யாக்க முறையைச் சேர்ந்த ஒரு சார் வினைகள் செயப்படு பொருள் குன்ரு வினைகளாக வல்வினைகளைத் தோற்றுவித்த லோடு செயப்படுபொருள் குன்றிய வினைகளாக மெல்வினை களையும் தோற்றுவிக்கின்றன. இவ் வினையாக்க முறையைச் சேர்ந்த ஏனைய வினையடிகள் மெல்வினைகளைத் தோற்று விக்க அவை பெரும்பாலும் செயப்படுபொருள் குன்றிய வினைகளாக அமைகின்றன.

இரண்டாம் வினையாக்க முறை : காலக்கிளவி யாகிய இகரத்தைக் கொண்டு இறந்த கால வினையெச்சங்களை யமைக்கும் வினையடிகள் யாவும் இந்த வினையாக்க முறை யைச் சேர்ந்தன எனலாம். பாலறிகிளவி முதலியன சேரும் போது, இந்த இகரம் கெடுவதில்லை. முதலாம் வினையாக்க முறையைச் சேர்ந்த வினையடிகளைப் போலன்றி, இவை யாவும் ஒவ்வொரு காலங் காட்டும்போதும் ஒரே முறையில் அமைவன. இந்த வினையாக்க முறையைக் சேர்ந்த வினை கள் மெல்வினைகளாக இருந்து பெரும்பாலும் செயப்படு பொருள் குன்றிய வினைகளாக அமைவன. இந்த வினை யாக்க முறையில், வல்வினைகளில்லை. ஆனல், சில மெல் வினைகள் செயப்படுபொருள் குன்ரு வினைகளாக வரும்.

இந்த வினையாக்க முறையிலுள்ள சில வினைகள் அடிச் சொல்லின் உள்ளே ஏற்படும் மாற்றத்தால் செயப்படு பொருள் குன்ரு வினையாக அமைதலுண்டு. செயப்படு பொருள் குன்றிய வினையடியிலுள்ள மூக்கின ஒலியை வல் லொலியாக மாற்றுவதன் மூலம் செயப்படுபொருள் குன்ரு

வினை அமையும். பிறவினைகள் பல, இந்த வினையாக்க முறைக்கேயுரியன.

இறந்த கால வடிவங்கள் அமைப்பு :

முதலாம் வினையாக்கமுறை வடிவங்கள் :

இந்த வடிவங்களை நான்காக வகுக்கலாம் :—

முதலாம் வகை : அடிச்சொல்லின் ஈற்றுமெய் யிரட்டியமையும் வடிவம். இவை,—க்கு,—ட்டு,—ற்று என முடிவுறும்.

இரண்டாம் வகை :— அடிச் சொல்லும் இறந்த கால இடைநிலையாகிய தகரமும் சேர்ந்து அமைவன.

—து வென முடிவது.

மூன்றும் வகை : அடிச்சொல்லோடு மூக்கின ஒலி சேர்ந்த இறந்த கால இடைநிலையாகிய தகரம் கூடுவது. இவை

—ந்து என்று முடிவன.

நான்காம் வகை : அடிச்சொல்லோடு இரட்டித்த தகர இடைநிலை சேர்ந்து வருவது.

—த்து என வருவது.

முதலாம் வகை இரண்டாம் வகை வடிவங்களைச் செயப்படுபொருள் குன்றிய வினை, செயப்படுபொருள் குன்று வினையெனப் பாகுபடுத்துதல் எளிதன்று. மூன்றும் வகை வடிவங்கள் மெல்வினைகளாகிப் பொதுவாகச் செயப்படுபொருள் குன்றிய வினையை யுணர்த்த, நான்காம் வகை வடிவங்கள் வல்வினைகளாகிப் பொதுவாகச் செயப்படுபொருள் குன்று வினையை உணர்த்துவன.

முதலாம் வகை : கு, டு, று என்னும் ஈறுகளையுடைய, குற்றெழுத்தை முதலெழுத்தாகவுடைய ஓரசையடிச் சொற்கள் ஈற்றுமெய்யெழுத்தை யிரட்டி இறந்த காலம் காட்டுகின்றன.

—கு :-மிக்கு ; புக்கு.

—டு :-பட்டு ; சுட்டு ; இட்டு ; அட்டு; தொட்டு; விட்டு.

—று :-உற்று ; பெற்று.

புகு, புகுந்து என்ற வடிவங்கொள்வதுமுண்டு. மிகு என்பதும் மிகுந்து என்ருகலாம்.

இரண்டாம் வகை : ண், ன், ய், ர், ல், ழ், ள் என்னும் ஈறுகளையுடைய ஓரசையடிச் சொற்களுக்கு, இறந்த கால இடைநிலையாகிய தகரம் சேர்க்கப்படுகின்றன.

(அ) ன், ல் என்ற ஈறுகள் தகரத்துடன் சேரும்போது, முறையே ன்ற், ற்ற் என்றும் ண், ள் என்ற ஈறுகள் முறையே ண்ட், ட்ட் என்றும் மாறுகின்றன.

என்று ; விற்று ; பூண்டு ; கேட்டு.

ஓரசைச் சொல்லிலுள்ள முதலெழுத்தாகிய உயிரெழுத்து நெட்டெழுத்தாக இருந்தால், அது அதற்கு இனமான குற்றெழுத்தாக மாறுகிறது.

கண்டு ; கடைக் கண்டு ; புறங்கண்டு.

(ஆ) யகர மெய்யைத் தொடர்ந்து தகரம் வரும்போது மாற்ற மெதுவும் நிகழ்வதில்லை.

செய்து ; உய்து.

(இ) குற்றெழுத்தை முதலெழுத்தாகயுடையதாய், ர், ழ் என்பவற்றை ஈருக உடைய ஓரசையடிச் சொற்கள் தகர மெய்யுடன் சேரும்போது இடையில் வரும் உகரம் எந்தக் காலக் கிளவியோடு சேரும்போதும் கெடுவதில்லை.

அழுது ; பொருது.

இவற்றுள் சில மூக்கின ஒலிபெற்ற தகரத்தையே, இறந்த காலம் காட்டுவதற்குக் கொள்ளும்.

இருந்து ; வீற்றிருந்து.

மூன்ரும் வகை : மூக்கின ஒலிபெற்ற—ந்த்—என்பதைக் கொண்டு, இறந்த காலம் அமைப்பது. இந்த வகையி லுள்ள அடிச்சொற்களைப் பின்வருமாறு பிரிக்கலாம்:—

(அ) அகர ஈற்று அடிச்சொற்கள் :—

இந்தப் பிரிவிலுள்ள அடிச்சொற்கள்-த்த்-என்பதுடைய வல்வினைகளை இறந்த காலத்திற் கொள்ளா. ஆனல், நிகழ்வு, நிகழ்பு–எதிர்வு, எதிர்வு, செயவெனெச்சம் என் னும் வடிவங்களில், இவை வல்வினைகளாகவே வரும்.

அளந்து; பயந்து; சிவந்து; இகந்து; இறந்து; பிறந்து.

(ஆ) இகர ஐகார ஈற்று அடிச்சொற்கள். ய், ர். ழ் என் னும் மெய்யிற்று அடிச் சொற்களும் இதே பிரிவுக்கு உரியன.

எறிந்து ; புரிந்து ; வரைந்து ; கடைந்து ; ஆராய்ந்து ; அடர்ந்து ; சூழ்ந்து.

இந்தப் பிரிவுக்குரிய சில அடிச்சொற்கள் பின்வரும் மெல்வினை வடிவங்களைக் கொள்வதோடு, வல்வினை வடிவங்களையும் கொள்ளும்.

நிமிர்ந்து ; வீழ்ந்து ; அமைந்து ; நிறைந்து ; எதிர்ந்து ; இசைந்து.

இதே பிரிவுக்குரிய ஒழிந்து முதலிய சொற்கள் பின் னண்ணத் திரிபு பெற்று ஒழிஞ்சு என வருதலுமுண்டு.

(இ) ல், ள் என்ற ஈற்று அடிச்சொற்கள்.

ல், ள் என்பவற்ருேடு—ந்த்—என்பது சேரும்போது, முறையே ன்ற், ண்ட் என வருகின்றன. இப் பிரிவுக் குரிய அடிச்சொற்கள் வல்வினை வடிங்கள் கொள்வ தில்லை. இப் பிரிவுக்குரிய அடிச்சொற்களில் ஒரு பகுதி, பிறவினை வடிவங்கள் கொண்டு இறந்த கால முணர்த் தும் வடிவங்களில் அமையும்போது, இரண்டாம் வினை யாக்க முறைக்கு உரியவையாகின்றன.

கொண்டு ; சென்று ; நின்று ; ஆண்டு ; கொன்று ; நவின்று.

(ஈ) தா/தர், வா/வர் என வேற்று வடிவங்களையுடைய ஓரசையடிச் சொற்கள்—த்த்—என்பதுடைய வல்வினை வடிவங்கள் கொள்வதில்லை.

தந்து ; வந்து.

நான்காம் வகை: இறந்த கால இடைநிலையாகிய தகரத்தை இரட்டி—த்த்—என்பது சேர்ந்து இறந்த காலம் அமைகிறது. முதலாம் வினையாக்க முறையில் வரும் வல்வினைகள் இந்த வகையைச் சேர்ந்தன. இவற்றுள் பெரும்பாலன செயப்படுபொருள் குன்று வினைகளே. இந்த வகையிலுள்ள அடிச்சொற்களைப் பின்வருமாறு பிரிக்கலாம் :—

(அ) உகர ஈற்று அடிச்சொற்கள்.

(ஆ) இ, ஐ, ர், ழ், ய் என்பவற்றை ஈருக உடைய அடிச்சொற்கள்.

(இ) நெட்டெழுத்துக்களை யீருகவுடைய ஓரசையடிச் சொற்கள்.

–த்த்- ஏன்பதுகொண்டு வல்வினை வடிவங்களாக வரும். பின்வருவன,-ந்த்-என்பதையுடைய மெல்வினை வடிவங்கள் கொள்ளா.

(அ) உகர ஈற்று அடிச்சொற்கள் :—

கொடுத்து, எடுத்து, வகுத்து, }அடுத்து, படுத்து, இறுத்து, கெடுத்து, தடுத்து, உகுத்து.

உகு என்ற வினையடி உக்கு என்ற வடிவமும் கொள்ளும்.

(ஆ) இ, ஐ, ய், ர், ழ் என்ற ஈறுகளையுடைய அடிச் சொற்கள் :—

குறித்து ; விழித்து ; பிழைத்து ; உரைத்து ; வைத்து ; துமித்து ; உயிர்த்து ; முகிழ்த்து.

உய்த்து என்பது உய்து என்ற வடிவ்மும் கொள்ளும்.

(இ) நெட்டெழுத்துக்களில் முடியும் ஓரசைச்சொற்கள் :—
காத்து ; மூத்து.

-த்த்-என்பதுகொண்டு வல்வினை வடிவங்களாக வருவன சில, -ந்த்-என்பதையுடைய மெல்வினை வடிவங்களும் கொள்ளும் :—

(அ) அறுத்து.

(ஆ) தீர்த்து ; ஒழித்து ; பேர்த்து ; நெகிழ்த்து ; அழித்து ; இசைத்து ; அமைத்து ; பணித்து.

நினைத்து என்பதற்கு நினைந்து என மெல்வினை வடிவமொன்று காணப்படுமாயினும், பொருளில் இரு வடிவங்களுக்கும் வேறுபாடில்லை.

இரண்டாம் வினையாக்க முறையின் இறந்த கால வடிவங்கள் :

மொழிக்கு இறுதியில் வருவன என்று கொள்ளப்படும் எல்லா மெய்யெழுத்துக்களும் இந்த வினையாக்க முறையைச் சேர்ந்த அடிச்சொற்களுக்கு ஈற்றில் வருகின்றன. செயப்படுபொருள் குன்றிய வினை, செயப்படுபொருள் குன்றா வினை என்பன கூட, முதலாம் வினையாக்க முறையிற்போல, காலக் கிளவி மாறி அல்லது திரிந்து ஏற்படுவதில்லை. வினையடியினுள் ஏற்படும் மாற்றமே, இத்தகைய வினைகள் அமையக் காரணமாகின்றன. —க்கி,—ச்சி,—ட்டி,—த்தி,—ப்பி,—ற்றி என்ற ஈறுகளையுடைய வடிவங்கள் பிறவினைகளாகின்றன.

(அ) —கி,—ங்கி,—க்கி என முடியும் வடிவங்கள் :—

ஆகி ; விளங்கி ; மசக்கி ; நீக்கி ; சுருக்கி ; முழக்கி ; ஆக்கி ; போக்கி ; இறக்கி.

போ என்ற வினையடி, போந்து என்ற வடிவமும் கொள்ளும். அடிச்சொற்களோடு குகரச் சாரியை சேர்ந்தமைந்தனவே இந்த வடிவங்கள் என்பது தெளிவாகப் புலப்படுகிறது. நோக்கி, தாங்கி என்பனவும் இவை போன்றனவே. ஆனால், இவற்றின் அடிச்சொல் இன்று புலப்படவில்லை.

(ஆ)—சி,—ஞ்சி,—ச்சி என்ற ஈறுகளையுடைய வடிவங்கள் :—

பூசி ; துஞ்சி ; ஓச்சி.

(இ)—டி,–ண்டி,–ட்டி என்ற ஈற்று வடிவங்கள் :—

ஆடி; சூடி; தீண்டி; வேண்டி; கட்டி; ஒட்டி; வெட்டி; சுட்டி; காட்டி; முட்டி; கொட்டி; ஓட்டி; கூட்டி; அட்டி.

(ஈ)—தி,-ந்தி,-த்தி என முடியும் வடிவங்கள் :—

எய்தி; திருத்தி; முந்தி; சார்த்தி.

(உ)—பி,–ம்பி,–ப்பி என்ற ஈற்று வடிவங்கள் :—

காண்பி; விரும்பி; திறம்பி; நடப்பி.

(ஊ)—றி,-ன்றி,–ற்றி என்ற ஈறுகளையுடைய வடிவங்கள் :—

சிதறி; சீறி; மன்றி; தோன்றி; இயற்றி; ஏற்றி; அகற்றி.

(எ)—வி,–வ்வி என முடியும் வடிவங்கள் :—

விரவி; பாவி; வவ்வி.

(ஏ)—ரி,–ளி,-ல்லி,-ன்னி முதலியன கொண்டு முடியும் வடிவங்கள் :—

வாரி; அருளி; கல்லி; மன்னி.

பாலறி கிளவிகள் :

பாலறி கிளவிகளை இரண்டாகத் தொகுக்கலாம் :

முதலாம் தொகுதி :— இத் தொகுதியைச் சேர்ந்த பாலறி கிளவிகள் குற்றெழுத்தை முதலெழுத்தாக வுடையன. முதலாம், இரண்டாம் வினையாக்க முறைகளில் முறையே அன் அல்லது ன் சாரியையைத் தொடர்ந்து, இவைகள் சேர்க்கப் படுகின்றன. இந்தத் தொகுதிக்குரிய வடிவங்கள் இரண்டாம் தொகுதிக்குரிய வடிவங்களிலும் பார்க்கத் தொன்மை யானவை.

இரண்டாம் தொகுதி :— இந்தத் தொகுதிக்குரிய பாலறி கிளவிகள் நெட்டெழுத்தை முதலெழுத்தாக வுடையன. முதலாம் வினையாக்க முறையில், இவை சேரும்போது சாரி

யைகள் தோன்றுவதில்லை. இரண்டாம் வினையாக்க முறையில் மாத்திரம் னகர மெய்யாகிய சாரியை வருகிறது.

அஃறிணைப் பாலறி கிளவிகளைப் பொறுத்த வரையில், இரண்டு தொகுதிகளிலும், வினையாக்க முறைகளில் வேறுபாடில்லை.

முதலாம் தொகுதி

	தொல்காப்பியர் காலம்	இடைக்காலமும் பிற்காலமும்.
	ஒருமை	பன்மை.
தன்மை	என்	அம், எம்.
முன்னிலை	இ	இர்.
படர்க்கை	அன், அள்	அர்.

இரண்டாம் தொகுதி

தன்மை	ஏன்	ஆம், ஏம்.+ஓம்.
முன்னிலை	ஐ, ஆய்	ஈர்+ஈர்கள்.
படர்க்கை	ஆன், ஆள்	ஆர்+ஆர்கள்.

2. வினைமுற்று

தமிழில் வினைமுற்றுக்களிற் பெரும்பாலன, காலம் உணர்த்துவதோடு, பெயர்ச்சொல் போல் திணை பால் முலியவற்றை உணர்த்துவதும் உண்டு. திணை பால் உணர்த்தும்போது, பால்காட்டும் விகுதிகள் சேர்க்கப்பட வேண்டும். அவ்வாறு பால்காட்டும் விகுதிகள் சேரும்போது, வினைச்சொல்லிலேயே, எழுவாயும் கலந்து அமைந்தாற்போற் தோன்றும். உதாரணம்: வந்தான்-he came. உலகிலுள்ள மொழிகள் பெரும்பாலனவற்றில், இந்த நிலையில்லை. தமிழிலும் கன்னடத்திலும் சில பழைய வினைமுற்றுக்களின் உருவங்கள் காணப்படுகின்றன. அவற்றில், பால்காட்டும் விகுதிகளில்லை. செய்து, செய்தும், செய்கு, செய்கும் என்பன தன்மையில் வழங்குவனவாகத் தொல்காப்பியம் (சொல். சூ. 202, 203) கூறியபோதிலும், அதற்குரிய விகுதியில்லை. கன்னடத்தில் கும் விகுதி தன்மையிலேயன்றி ஏனையிடங்களிலும் பால்களி

லும் வழங்கும். டாக்டர் கிறவுல் என்பவர் (Dr. Graul-outlines of Tamil Grammar, page 42, published 1856), செய்து செய்தும் என்னும் வடிவங்கள் ஆதியில் மூவிட வினைகளுக்கும் பயன்படுத்தப்பட்டன போலத் தெரிவதாகவும், பால்காட்டும் விகுதிகள், செய்து ஏன்-செய்தேன் எனப் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டனவாகக் கருதுவதாகவும் சுமார் நூறுண்டுகளுக்கு முன்பே எழுதியுள்ளார். மலையாள மொழியில், வினைமுற்றுக்கள் பால்காட்டும் விகுதிகளின்றி இன்றும் அமைவதை அவர் தமது கோட்பாட்டுக்கு ஆதாரமாகக் காட்டுவர்.

வினைமுற்றுக்களில் பால்காட்டும் விகுதிகளாக இன்று காணப்படுபவை, ஆதிகாலத்தில் வினைமுற்றைத் தொடர்ந்து வந்த பெயர்ச்சொற்களே என்று கருதுவதற்குத் தமிழிலக்கணவாசிரியர் இடந்தருகின்றனர். தொல்காப்பியர் வினைமுற்றுக்களைப் பற்றிக் கூறும்போது,

அவைதாம்
தத்தம் கிளவி அடுக்குந வரினும்
எத்திறத் தானும் பெயர்முடி பினவே

—தொல். சொல். 429

என்பர். வினைமுற்றை விளக்கவந்த நன்னூலார்,

பொதுவியல் பாறையுந் தோன்றிப் பொருட்பெயர்
முதலறு பெயரல தேற்பில முற்றே

—நன். சூ. 323

என்பர். பொருட்பெயர் முதலிய அறுவகைப் பெயரையும் பயனிலையாக ஏற்பனவாகி, மற்றொன்றையு மேலாதன வினைமுற்றுக்களென்பர் காண்டிகையுரைகாரர். இச்சூத்திரத்திற்கு உதாரணமாக, பெய்தானவன், நல்லனவன், வந்ததுகார் என்பன கொடுக்கப்பட்டிருக்கின்றன. உதாரணங்களிற் கொடுக்கப்பட்ட வினைமுற்றுக்கள் யாவும், பால்காட்டும் விகுதிகள் கொண்டனவாயிருக்கின்றன. ஆனால், தமிழில் பால்காட்டும் விகுதிகள் பெறாத பழைய வினைமுற்றுக்களும்

காணப்படலால், அவற்றைத் தொடர்ந்து பயனிலையாகப் பெயர்ச் சொற்கள் பழைய காலத்தில் வந்திருக்க வேண்டும். தொல்காப்பியரும் நன்னூலாரும் தமிழில் ஆதிவாக்கிய அமைப்பு எப்படியிருந்தது என்பதைத் தெளிவாக்க உதவு கின்றனர்.

பால்காட்டும் விகுதிகள் சேர்க்கப்படாத மலையாள வினை முற்றுக்கள், தமிழ் வினைமுற்றுக்களின் அமைப்பு வரலாற்றைச் சுட்டுகின்றன. அடித்தேன், அடித்தாய், அடித்தான் என்ற வினைமுற்றுக்கள், இன்று மலையாளத்திலில்லை. ஞான் அடிச்சு, நீ அடிச்சு, அவன் அடிச்சு என்ற வழக்கே, அவற்றிற்கு நேராக, இன்று காணப்படுகின்றது. தமிழில் அடித்து என்னும் வினையெச்சத்திற்கு நேரான சொல்லாகும் அது. அதனோடு பாலறிகிளவி சேர்ந்தாலே, தமிழில் வினைமுற்று ஆகும்.

வினைமுற்றுப் பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிவதற்குச் சாசனங்களில் நிறைய உதாரணங்கள் காணப்படுகின்றன. 'எப்பேர்ப்பட்ட மன்றுபாடும் ஏரிக்கே குடுத்தேன் நம்பிய மல்லனேன்'; 'தூம்பு புதுக்குவித்தார் கொங்கரையர்'; 'கச்சிப்பேடழித்தான் பாவம்படுவோம் குடாதோம்' என்பன எடுத்துக்காட்டுக்கள்.

ஆகவே, ஆதிகாலத்தில், தமிழில் செய்து அவன் என்று வாக்கியம் அமைந்திருக்க வேண்டும். அவன் என்பது ஆண் பாற் சுட்டுப் பெயர். தனியே ஆண்பாலைக் குறித்த பழைய வடிவம் அன் ஆக இருந்திருக்கலாம். அன்னும் ஆனும் மாற்று வடிவங்கள். எனவே, செய்து ஆன் என வாக்கியம் ஒருகாலத்தில் இருந்திருக்கவேண்டும். செய்து ஆன் என் பதே புணர்ந்து செய்தான் எனவும் வழங்கியிருக்கவேண்டும். சொற்களைப் புணர்த்தி எழுதுதலே பழைய தமிழ்முறை; பிரித் தெழுதும் வழக்கம் ஐரோப்பியராலேயே ஆரம்பிக்கப்பட்டது என்பதும் கவனிக்கத்தக்கது. வடமொழியில் பெயரைத் தொடர்ந்து வினைமுற்றுப் பயனிலையாக வருவது வழக்கம். அம்முறையைப் பின்பற்றித் தமிழில், வினைச்சொல்லைக் கால முன்னாகக் கொண்டு விளங்கிய பழைய வாக்கியத்தின் முன்,

பெயர்ச்சொல் வழங்கப்பட்டது. ஆகவே, இன்றைய தமிழ் வாக்கிய அமைப்பு, அவன் வந்தான்—he came he—என்றாகி விட்டது.

இறந்தகால வினைமுற்று வடிவங்கள் :

முதலாம் வினையாக்க முறை :

ஒருமை :

தன்மை :

-ஏன் :—

கொடுத்தேன் ; வைத்தேன் ; கொண்டேன்.

—என் :—

உண்டெனென்.

முன்னிலை :

–இ :—

உரைத்தி.

–ஐ :—

உண்டனை.

–ஆய் :—

உண்டாய்.

படர்க்கை :

(அ) ஆண்பால் :

–அன் :—

வைத்தனன்.

–ஆன் :—

செய்தான் ; பட்டான் ; வைத்தான் ; கொடுத்தான்.

(ஆ) பெண்பால் :

–அள் :—

உண்டனள்.

-ஆள் :—

வைத்தாள்.

(இ) ஒன்றன்பால் :

-து :—

சென்றது ; புரிந்தது ; பெற்றது.

பன்மை :

தன்மை :

-அம் :—

உண்டனம் ; தின்றனம்.

-ஆம் :—

உண்டாம் ; தின்ருேம்.

-எம் :—

உண்டனெம் ; தின்றனெம்.

ஏம் :—

உரைத்தேம் ; உரைத்தனேம்.

-ஓம் :—

கொண்டோம் ; அமைந்தோம் ; வைத்தோம் ; பணித்தோம்.

முன்னிலை :

-இர் :—

உண்டனிர்.

-ஈர் :—

உண்டீர்.

-ஈர்கள் :—

உண்டீர்கள்.

படர்க்கை :

(அ) பலர்பால் :

-அர் :—

கொடுத்தனர் ; வைத்தனர்.

-ஆர் :—

கொடுத்தார் ; வைத்தார்.

-ஆர்கள் :—

கொடுத்தார்கள் ; வைத்தார்கள்.

(ஆ) மரியாதைப் பன்மை :

பலர்பால் வடிவங்கள் யாவும் மரியாதைப் பன்மையாக வரக்கூடியனவே.

-ஆர் :—

பட்டார்.

(இ) பலவின்பால் :

-அ :—

போந்தன ; போந்த ; வந்தன ; வந்த.

இரண்டாம் வினையாக்கமுறை :

ஒருமை :

தன்மை :

-என் :—

வெட்டினென்.

-ஏன் :—

வெட்டினேன்.

முன்னிலை :

-ஐ :—

வெட்டினை.

-ஆய் :—

பாடினாய்.

படர்க்கை :

(அ) ஆண்பால் :

-அன் :—

ஓட்டினன்.

-ஆன் :—

ஓட்டினான்.

(ஆ) பெண்பால் :

–அள் :—

பாடினள்.

–ஆள் :—

பாடினாள்.

(இ) ஒன்றன்பால் :

–து :—

திருத்தியது.

பன்மை :

தன்மை :

–அம் :—

வெட்டினம்.

–ஆம் :—

பாடினோம்.

–எம் :—

வெட்டினெம்.

–ஏம் :—

ஓடினேம்.

–ஓம் :—

வெட்டினோம் ; ஓட்டினோம்.

முன்னிலை :

–இர் :—

பாடினிர்.

–ஈர் :—

ஓடினீர்.

–ஈர்கள் :—

பாடினீர்கள்.

படர்க்கை :—

(அ) பலர்பால் :

–அர் :—

பாடினர்.

–ஆர் :—

ஓடினார்.

–ஆர்கள் :—

ஓட்டினார்கள்.

(ஆ) மரியாதைப்பன்மை :

பலர்பால் வடிவங்கள் யாவும் வரலாம்.

(இ) பலவின்பால் :

–அ :—

ஓடின ; பாடின.

இறந்தகால வினையாலணையும் பெயர்கள் :

வினைமுற்று வடிவங்கள் பெயர்களாகப் பயன்படும் பொழுது வினையாலணையும் பெயர்கள் எனப்படுகின்றன. வினைமுற்று வடிவங்கள் திரிபின்றியே பெயர்களாக வழங்குவன ஒரு வகை. செய்தான் முதலிய வினைமுற்றுக்கள் செய்தவன் முதலிய பெயர்களாகத் திரிந்து வழங்குவன இன்னொரு வகை.

முதலாம் வினையாக்க முறையிலிருந்து அமையும் வினையாலணையும் பெயர்கள் :

ஒருமை :

தன்மை :

உரைத்தேன் ; வந்தேன்.

உரைத்தேனுக்கும் பரிசில் வழங்கினான் ; வந்தேனை உபசரித்தனர்.

முன்னிலை :

செய்தாய் ; சென்றனை.

வேலே செய்தாய்க்குக் கூலி கிடைக்கவில்லே ; தூது சென்றனேக்கு அவமரியாதை கிடைத்தது.

படர்க்கை :

(அ) ஆண்பால் :—செய்தான் ; அழித்தான் ; கொன்ருன் ; ஆண்டான். இதன்றென்ருர் கங்கையிடைக் குமரியிடை எழுநூற்றுக் காதமும் செய்தான் செய்த பாவத்துப் படுவார் ; இது அழித்தான் கடிகை எழா இருவரையும் கொன்ற பாவத்துப்படுவான் ; கங்கைக்கரை ஆயிரங்குரால் ஆக்கொன்ருன் கொன்றபாவங் கொள்வது; இது காத்தாண்டான் அடி என் முடிமேலன.

(ஆ) பெண்பால் :—பாடினவள்.

பாட்டுப் பாடினவள் பரிசில் பெற்ருள்.

(இ) ஒன்றன்பால் :—அகப்பட்டது; பெற்றது; எப்பேர்ப் பட்டதும். வெட்டியும் இறையும் எச்சோறும் வெதினேயும் எப்பேர்ப்பட்டதும் இருததாக விற்று ; தேவதானமாகப் பெற்றதற்குப் பெற்ற பரிகாரம்; இவ்வூரெல்லேயுள் ளகப்பட்டது கோத்தொட்டுண் ணப்பால தெல்லாம் எவ்வகைப் பட்டதும் கோக்கொள்ளப்பெருது.

பன்மை :

தன்மை :—என்ரும்.

இதன்றென்ரும் கங்கையிடைக் குமரியிடைச் செய்தார் செய்த பாவங்கொள்வாம்.

முன்னிலே :—உண்டீர்.

உண்டீர் ஒருபுறம், உண்ணுதீர் ஒருபுறம் செல்வீராக.

படர்க்கை :

(அ) பலர்பால் :—என்ருர்; பிழைத்தார்; நினேத்தார்; வந்தார்; காத்தார். இதன்றென்ருர் கங்கையிடைக் குமரியிடை எழுநூற்றுக் காதமும் செய்தான் செய்த பாவத்துப் படுவார்; இது காத்தார் அடி என் முடிமேலன்; இதனேத் தீங்கு நினேத்

தார் கங்கையிடைக் குமரியிடை எழுநூற்றுக் காதமும் செய்த பாவங் கொள்வார்; வந்தார்க்கு நிசதி இரண்டு சோறு கொடுப்போம்; காவலனுக்குப் பிழைத்தாராவர்.

(ஆ) பலவின்பால் :—பெற்றன.

வெண்கூறை இணை ஏழரைக் காணம் பெற்றன, ஒருமுறை நாலிணையாக.

இரண்டாம் வினையாக்க முறையிலிருந்து அமையும் வினையாலணையும் பெயர்கள் :

ஒருமை :

படர்க்கை :

ஆண்பால் :—இறக்கினன்.

இதிறக்கினன் ஏழாநரகத்துக் கீழா நரகம் புகுவான்.

பன்மை :

தன்மை : திறம்பினோம்.

இதிற் றிறம்பினோம் தர்மாசனத்திலே வேறு இருபத்துநாலு தண்டப்படுவோமானும்.

படர்க்கை :

பலர்பால் :—ஊட்டினர்; அட்டினர்; முந்தினர்.

இதுக்கு என்றும் குத்துக்கால் காத்தூட்டினர் அடி என் முடிமேல்; நெல்லட்டினரும் அட்டவுடன் பட்டாரும்; பன்மாகேசுவரர் முந்தினரைத் தண்டம் இடப்பெறுவதாகவும்.

3. எச்சங்கள்

இவற்றைப் பெயரெச்சம் வினையெச்சமென இரண்டாக வகுக்கலாம்.

வினையெச்சம்

வினையெச்சம் என்றால் என்ன என்று தொல்காப்பியரோ வீரசோழியத்தாரோ விளக்கவில்லை. நன்னூலார் தாம் வினை

யெச்சத்திற்கு முதன்முதல் வரையறை யிலக்கணம் கூறு கிறார்.

தொழிலுங் காலமுந் தோன்றிப் பால்வினை
ஒழிய நிற்பன வினையெச் சம்மே

—நன். சூ. 342

தொழிலுங் காலமும் விளங்கி வினைமுற்றுதற்கு வேண்டும் பாலொன்றுந் தோன்றாது அப்பாலுடனே வினை எஞ்ச நிற்பன வினையெச்சம் என்று இச் சூத்திரம் விளக்குகிறது. வினையெச்சமாவது பால்காட்டும் முற்றுவிகுதி பெறாத குறைச் சொல்லாய் வினைச்சொல்லைக் கொண்டு முடியும் வினையென, இலக்கணச் சுருக்கம் கூறும். இவ் வினையெச்சம் கொள்ளும் வினைச்சொற்களாவன உடன்பாடும் எதிர்மறையும் பற்றி வருந்தெரிநிலையுங் குறிப்புமாகிய வினைமுற்றும் பெயரெச்சமும் வினையெச்சமும் வினையாலணையும் பெயரும் தொழிற்பெயரும் ஆகிய ஐவகை வினைச்சொற்களுமாம்.

வினையெஞ்சு கிளவிக்கு வினையுங் குறிப்பும்
நினையத் தோன்றிய முடிபா கும்மே
ஆவயிற் குறிப்பே ஆக்கமொடு வருமே

—தொல். சொல். 432

வினையெச்சம் வினையை அல்லது குறிப்பைக் கொண்டு முடியு மென்றும், அக்குறிப்பு ஆக்கத்தோடு வருமெனவும் தொல் காப்பியம் கூறுகிறது. குறிப்பு ஆக்கமோடு வருதல் பெரும் பான்மை வழக்கு என்பர் சேனாவரையர்.

தொல்காப்பியர் வினையெச்ச வாய்பாடுகளைப் பின்வரு மாறு குறிப்பிடுவர் :—

செய்து செய்யூச் செய்பு செய்தெனச்
செய்யியர் செய்யிய செயின் செயச் செயற்கென
அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி

—தொல். சொல். 228

இத்தனை வாய்பாடுகள் கூறிய தொல்காப்பியர் இகர ஈறும் யகர ஈறும் கூறுமையால், சேனாவரையர், இவற்றைச் செய்து என்னும் வாய்பாட்டில் அடக்குவதற்குப் பின்வருமாறு காரணம் கூறுவர் :—

'உகரம் கடதற வூர்ந்து இயல்பாயும், ஏனையெழுத் தூர்ந்து இகரமாய்த் திரிந்தும் நெடிலீற்று முதனிலை முன்னர் யகரம் வரத் தான் கெட்டும் இறந்தகாலம் பற்றி வரும். இவ்வுகர ஈறு, இகரமாதலும் யகரம் வரக் கெடுதலும், வினையெஞ்சு கிளவியும் வேறு பல்குறிய (தொல். சொல். 457) என்பதனாற் பெறப்படும்.

எடுத்துக்காட்டு :—நக்கு, உண்டு, வந்து, சென்று எனவும் எஞ்சி, உரிஞி, ஓடி எனவும் ஆய், போய் எனவும் வரும். ஆகி, போகி, ஓடி, மலர்த்தி, ஆற்றி என்புழி, முதனிலை குற்றுகர வீறுதலின் ஏனையெழுத்தாத லறிக.

'அஃதேல் ஆய் என்பதனை யகர வீறென்றும் ஓடியென்பதனை இகர வீறென்றும் கொள்ளாது, உகர வீறென்ற தென்னை யெனின்—இகர விறுதி இடைச்சொல்லாயின், இறுதியிடைச் சொல் எல்லாத் தொழிலும் பற்றி வருதலிற் செலவு வரவு என்பனவற்றோடும் வரல் வேண்டும். இனிச் செய்தனெச்சத் துகரமும் இறுதியிடைச் சொல்லாதலின் ஆகுதல் ஓடுதல் என்னும் தொழில் பற்றியும் வரல் வேண்டும். செலவு வரவு பற்றி இகரம் வாராமையானும் ஆகுதல் ஓடுதல் பற்றி உகரம் வாராமையானும், இறுதியிடைச்சொல் இகரமேயாக உகரமேயாக ஒன்றுவதல்லது இரண்டெனப் படாதாம். உகரம் ஒன்றாய் நின்று கடதறவூர்ந்த விதிவினைகட் பயின்று வருதலானும், எதிர்மறை யெச்சமெல்லாம் பெரும்பான்மையும் உகரவீறாயல்லது வாராமையானும், உகரம் இயல்பாக இகரம் அதன் றிரிபென்றலே முறைமையென்க. யகர வீற்றிற்கும் இஃதொக்கும்'.

இன்றைய மொழியியலார், உகரம் வெறும் ஒலித்துணையாக வருவதென்றும், தகரமும் இகரமுமான இறந்தகால இடைநிலைகளே இறந்தகால வினையெச்சங்களில் வருகின்றன

வென்றும், யகரமெய் இகரவுயிரின் திரிபென்றும் கூறுவர். செய்து, உறங்கி, போய் என அமையும் வடிவங்களே பண்டைத் தமிழில் பயின்று வழங்கியனவும் இன்றைய தமிழில் நிலைத்துள்ளனவுமாகும். செய்யூ என்ற வாய்பாடு பின்வருந் தொழிற்கு இடையின்றி முன்வருந் தொழின்மேல் இறந்தகாலம் பற்றி வரும் என்று சேனாவரையரும் நச்சினார்க் கினியரும் கூறுவர். இந்த வாய்பாடு நிகழ்காலத்திலும் வர லாம் என்பர் தெய்வச் சிலையார். இது செய்யா என்ற வாய் பாடாகவும் மாறும். செய்பு நிகழ்காலம் பற்றி வருமென்பர் சேனாவரையர். நிகழ்கால மென்றது முடிக்குஞ் சொல்லால் உணரப்படுந் தொழிலோடு உடனிகழ்தல் என விளக்கமும் கூறுவர். தெய்வச்சிலையாரும் நச்சினார்க்கினியரும் இவ் வாய்பாடு இறந்தகாலமும் சுட்டுமென்று உதாரணந் தருவர். தொல். சொல். 26-ஆம் சூத்திரம் 'மயங்காமை' என்பதை ஆள்வதால், தொல்காப்பியர் காலத்திலேயே, செய்யாமை என்ற எதிர்மறை வாய்பாடு இருந்திருக்கிறது. செய்யாமல் என்ற வாய்பாடு கலித்தொகையில் காணப்படுகிறது.

செய்யிய, செய்யியர், செயற்கு என்பன ஒரே கருத் துடையன. முதல் இரண்டும் வழக்கற்றுப் போய்விட்டன. மூன்றாவது, நான்காம் வேற்றுமையுருபேற்ற தொழிற்பெயர் எச்சப்பொருள்பட வந்ததாகக் கூறலாம். இன்று செய்வதற்கு என்ற வாய்பாடே இப்பொருளில் பெரிதும் வழங்குகிறது.

செய என்ற வாய்பாட்டில், செய்ய என்ற வடிவமும் வழங்குகிறது.

செயின் என்பதற்குப் பதிலாக, இன்று செய்தால் என்ற வாய்பாடே பெருமளவு வழங்குகிறது. பழைய தமிழில், எதிர்மறையாகச் செயினல்லால் என்பது வழங்கியது. இன்று செய்யாவிடின், செய்யாவிட்டால் என்பன வழங்குகின்றன. செயின் என்பதுடன் உம்மை சேர்ந்து செயினும் என்றமை யும் வாய்பாடும் பழந்தமிழில் காணப்படுகிறது. செய்தென என்பது காரணப் பொருளில் பெரும்பாலும் வழங்குவதால், இறந்தகாலத்தையே சுட்டுகிறது.

பொருட்டு, க, பான், தற்கு, வான், அ என்பன வினையடிகளின் பின்வரும் என்றும், இவை மற்றொரு பதத்திற்கு உறுப்பாகவன்றி வாரா வென்றும் வீரசோழியம் தாதுப் படலம் 8-ஆம் செய்யுள் கூறும். அதே செய்யுளுரையில், இவற்றுக்குக் கொடுக்கப்பட்டுள்ள உதாரணங்களாவன :— உண்ணுதற் பொருட்டு வந்தான், நிற்க வேண்டியிருந்தான், அறிதற்குத் துணிந்தான், போவான் கருத்தில்லை, உண்ண வல்லன், படிப்பான் வந்தான் முதலியன. இங்கே, உண்ணுதற்பொருட்டு, அறிதற்கு என்பன, நான்காம் வேற்றுமை யுருபுகொண்ட உண்ணுதல், அறிதல் என்னும் தொழிற் பெயர்களே. நிற்க, உண்ண என்பன தொல்காப்பியர் கூறும் செயவென் வாய்பாட்டைச் சேர்ந்தவை. போவான் கருத்தில்லை, படிப்பான் வந்தான் என்னும் எடுத்துக்காட்டுக் களில் வரும் போவான் படிப்பான் என்பன ஆரம் பத்தில் வினைமுற்றுக்களாக இருந்து பின்பு எச்சங்களாகக் கொள்ளப்பட்டன எனலாம். முற்று எச்சப் பொருளைத் தந்து முற்றெச்சமாக வருதல் தமிழிலக்கணகாரருக்கு உடன்பாடே. முற்று எச்சமாகப் பயின்று வழங்குவதைக் கண்ட இலக்கண காரர், இவற்றை எச்சமாகவே கொண்டிருக்கலாம். வீர சோழியத்திலேயே, வான், பான் என்பன முதலில் இடம் பெறுகின்றன. வீரசோழியத்தின் அடுத்த செய்யுள் ஆ, இட்டு, து, உ, இ என்பன ஒருகருத்தாவுடையனவாய், இரண்டு வினையடியுள்ளபொழுது, முன்பு நின்ற வினையடி யின் கண் வரும் என்று கூறும். உரையில் தரப்படும் உதா ரணங்களாவன :—உண்ணாப் போனான், உண்டிட்டுப் போனான், உண்டு போனான், புக்குப் போனான், சொல்லி நின்றான் முதலியன. இடு என்பதன் இறந்தகால வினையெச்ச வடிவமாகிய இட்டு என்பது வீரசோழியத்தார் காலப்பேச்சுத் தமிழில் வழங்கியிருக்க வேண்டும். புக்கு என்பது புக்கூ என ஒருகாலத்தில் இருந்ததன் ஈறு குறுகிய வடிவமாக இருக் கலாம்.

தொல்காப்பியர் கூறியவற்றில், செய்யியர், செய்யூ என் பன வழக்கற்றுப் போனதாற்போலும், நேமிநாதத்தார்

அவற்றை நீக்கியும், வீரசோழியத்தார் புதிதாகக் கூறிய வற்றில் ஆ, பான் என்ற ஈறுகளையுடைய வடிவங்களைக் கூட்டியும் பாக்கு எனப் புதிய வடிவமொன்று கூறியும் நேமிநாதம் சொல்லதிகாரம் 43-ஆம் செய்யுளையமைத் துள்ளார்.

நன். சூ. 343, வினையெச்ச வாய்பாடுகளை எடுத்துக் கூறு கிறது.

செய்து செய்பு செய்யாச் செய்யூச்
செய்தெனச் செயச் செயின் செய்யிய செய்யியர்
வான்பான் பாக்கின வினையெச் சம்பிற
ஐந்தொன் றாறுமுக் காலமு முறைதரும்.

தொல்காப்பியர் கூறியவற்றில் செயற்கு என்பது தவிர’ ஏனையவை யாவும் இங்கு காணப்படுகின்றன. வீரசோழி யம் கூறியவற்றில், ஆ, வான், பான் என்ற ஈறுகளையுடைய வாய்பாடுகள் இங்கு குறிப்பிடப்படுகின்றன. நேமிநாதம் புதிதாகக் கூறிய பாக்கு என்பதையும் நன்னூலார் இங்கு சேர்த்திருக்கிறார்.

சேனாவரையர் தொல். சொல். 229-க்கு எழுதிய உரை யில், செய்தால், செய்யாமல் முதலிய வடிவங்களையும் பாக்கு ஈற்று வினையெச்ச வாய்பாட்டையும் கூறுவர். நச்சினார்க் கினியர், இதே சூத்திரத்திற்கு எழுதிய உரையில் வாக்கு என்ற வடிவத்தையும் சேர்ப்பர்.

தொல். சொல். 229, பெயரெச்ச வடிவங்கள் காலம் அல் லது இடத்தைக் குறிக்கும் சில பெயர்ச் சொற்களோடு சேர்ந்து வினையெச்சங்களாக இயங்குவதைக் குறிக்கிறது:—

பின்முன் கால்கடை வழிஇடத்து என்னும்
அன்ன மரபின் காலங் கண்ணிய
என்ன கிளவியும் அவற்றியல் பினவே.

கூறியபின், கூறுகின்றபின், தின்னுமுன், விடுத்தக்கால், வந்தக்கடை, உரைத்தவழி, உரைக்கும்வழி, உரைத்த

விடத்து, உரைக்குமிடத்து என்பன இவ்வகையில் அமையும் வினையெச்சங்களுக்கு எடுத்துக் காட்டுகளாகச் சேனாவரையத்தில் தரப்படுகின்றன.

எந்த எந்த வினையெச்ச வாய்பாடு என்ன என்ன காலத்தைக் காட்டுமென்றும் நன்னூலார் கூறுகிறார். செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென என்ற ஐந்தும் இறந்த காலத்தையும் செயவென்பது நிகழ்காலத்தையும் செயின், செய்யிய, செய்யியர், வான், பான், பாக்கு என்பன எதிர் காலத்தையும் குறிப்பன என்பர் நன்னூலார்.

நன்னூலார் கூறும் வினையெச்ச வாய்பாடுகளில் செய்து, செய்யூ, செய்பு, செய்யா என்பவை தம் வினைமுதல் வினையால் முடியும். வான், பான், பாக்கு என்ற ஈறுகளையுடைய வினையெச்ச வாய்பாடுகளும் இத்தகையனவே (நன். சூ. 344). இவ் வெச்சங்கள் சினைவினையாயின், சினைவினையோடு முடியாது, முதலோடு சினைக்கு ஒற்றுமையுண்மையால், முதல் வினையோடும் முடியும் (நன். சூ. 345). ஏனைய வினையெச்ச வாய்பாடுகள், செய்பவனையன்றி, மற்றவைகளையும் கொண்டு முடியும்.

இலக்கணச் சுருக்கம் வினையெச்சங்களைப் பற்றித் தெளிவாக எடுத்துக் கூறுகிறது. வினையெச்சங்கள், செய்து என்னும் வாய்பாட்டிறந்த கால வினையெச்சமெனவும் செயவென்னும் வாய்பாட்டு முக் காலத்திற்கு முரிய வினையெச்சமெனவும் செயின் என்னும் வாய்பாட்டெதிர்கால வினையெச்சமெனவும் மூவகைப்படும் என்று அது கூறுகிறது. இந்த மூன்று வாய்பாடுகளுமே பயின்று வழங்குவதை ஆறுமுக நாவலர் அவதானித்திருக்கிறார்.

செய்து என்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சங்கள் து, இ, ய் என்னும் விகுதிகளை இறுதியிற் பெற்றுத் தன் கருத்தாவின் வினையையே கொண்டு முடிவன. இங்கே இறந்த காலமென்றது, முடிக்குஞ் சொல்லால் உணரப்படுந் தொழிற்கு முன்னிகழ்தலை. விகுதி விகாரப்பட்டும் தனிஇக்

கொண்டான், மரீஇ வந்தான் என இந்த வாய்பாட்டிறந்த கால வினையெச்சம் வரலாம். இச் செய்தெனெச்சம் ஓரோ விடத்துக் காரணப்பொருட்டாயும் வரும் :— கற்றறிந்தான்; அறஞ்செய்து புகழ் பெற்றான். செய்யுளிலே, இச் செய்தென் வாய்பாட்டிறந்தகால வினையெச்சங்கள் பு, ஆ, ஊ என்னும் விகுதிகளைப் பெற்றுவரும். செய்பு, செய்யா, செய்யூ என்பன அந்த வாய்பாடுகள். பொதுவான வழக்கு எது, செய்யுளில் அதே பொருளில் வழங்கும் வாய்பாடுகள் எவையென்று பிரித்துக் கூறியது மொழியியல்பைத் தெளிவாக்குகிறது.

செய என்னும் வாய்பாட்டு முக்காலத்திற்கு முரிய வினையெச்சம் அகர விகுதியை இறுதியிற் பெற்றுத் தன் கருத்தாவின் வினையையும் பிறகருத்தாவின் வினையையும் கொண்டு முடிவது. செயவென் வாய்பாட்டு வினையெச்சம் இறந்த காலத்திலே காரணப் பொருளில் வரும். காரணப் பொருளில் வருதலாவது, முடிக்குஞ் சொல்லா லுணரப்படுந் தொழிலுக்கு வினையெச்சத்தாலுணரப்படும் தொழில் காரணமென்பது படவருதல். செய்யுளிலே, இச் செயவென் வாய்பாட்டிறந்தகால வினையெச்சம் செய்தென என்றும் வரும்.

செயவென் வாய்பாட்டு வினையெச்சம் எதிர்காலத்திலே காரியப் பொருளில் வந்து தன் கருத்தாவின் வினையையும் பிறகருத்தாவின் வினையையும் கொண்டு முடியும். காரியப் பொருளில் வருதலாவது, முடிக்குஞ் சொல்லால் உணரப் படுந் தொழிலுக்கு, வினையெச்சத்தாலுணரப்படும் தொழில் காரிய மென்பதுபட வருதல். இச் செயவென் வாய்பாட்டு எதிர்கால வினையெச்சம் கு என்னும் விகுதியைப் பெற்றும் வரும். செயற்கு என்பது இப்படிவந்த வாய்பாடே. செய்யும்படி, செய்யும் பொருட்டு, செய்யும் வகை என்பன செயற்கு என்னும் பொருள்பட வரும். செய்யுளிலே, இச் செயவென் வாய்பாட்டெதிர்கால வினையெச்சம் இய, இயர், வான், பான், பாக்கு என்னும் விகுதிகளைப் பெற்றுவரும். இவற்றுள் முன்னைய இரண்டு விகுதிபெற்றவை தன் கருத்

தாவின் வினையையும் பிற கருத்தாவின் வினையையும் கொண்டு முடியும் ; பின்னைய மூன்று விகுதி பெற்றவை, தன் கருத்தாவின் வினையைக் கொண்டு முடியும்.

செயவென் வாய்பாட்டு வினையெச்சம் நிகழ்காலத்திலே, இது நிகழாநிற்க, இது நிகழ்ந்தது என்னும் பொருள்பட வந்து பிற கருத்தாவின் வினையைக் கொண்டு முடியும். இங்கே நிகழ்கால மென்றது, முடிக்குஞ் சொல்லால் உணரப் படுந் தொழிலோடு வினையெச்சத்தாலுணரப்படும் தொழில் முற்பிற்பாடின்றி உடனிகழ்தலே.

செயின் என்னும் வாய்பாட்டு எதிர்கால வினையெச்சங் கள் இன், ஆல், கால், கடை, வழி, இடத்து, உம் என்னும் விகுதிகளை இறுதியிற் பெற்றுக் காரணப் பொருளில் வந்து, தன் கருத்தாவின் வினையையும் பிற கருத்தாவின் வினையை யுங் கொண்டு முடிவனவாம். இவ் வினையெச்சம் எதிர்காலச் சொல்லையே முடிக்குஞ் சொல்லாகக் கொள்ளும். இவ் வினை யெச்சத்தால் உணரப்படுந் தொழில், துணிவாகவே சொல்லு வான் சொல்லுக்குப் பின் நிகழ்வதாயும், முடிக்குஞ் சொல் லால் உணரப்படுந் தொழிலுக்குக் காரணமாக முன்னிகழ் வதாகவும் உள்ளது ; ஆதலால், இவ் வினையெச்சம் எதிர் காலம் பற்றிக் காரணப் பொருளில் வருவதாயிற்று. செய் வானேல், செய்வானெனின், செய்வானுயின், செய்வானே னும் என முற்றுவினைகள் ஏல், எனின், ஆயின், ஏனும் என் னும் நான்கனேடும் இயைந்து, ஒரு சொல் நீர்மைப்பட்டுச் செயின் என்னும் வினையெச்சங்களாயும் வரும்.

பெயரெச்சம்

நிலனும் பொருளும் காலமுங் கருவியும்
வினைமுதற் கிளவியும் வினையும் உளப்பட
அவ்வறு பொருட்குமோ ரன்ன வுரிமைய
செய்யுஞ் செய்த வென்னுஞ் சொல்லே
—தொல். சொல். 234

தொல்காப்பியர் செய்த என்ற இறந்த காலப் பெயரெச்ச வடிவத்தையும் செய்யும் என்னும் நிகழ்பு—எதிர்வு வடிவத்தையுமே கூறுகிறுர். உறங்கினுன் முதலிய இகர இடைநிலை பெற்றுவரும் வினைமுற்றுக்கள், உறங்கிய என்ற வடிவத்தை இறந்தகாலப் பெயரெச்சமாகக் கொள்ளும். இடைக்கால இலக்கியங்களிலும் சாசனங்களிலும் செய்கின்ற, செய்யாநின்ற என்ற வாய்பாட்டு நிகழ்காலப் பெயரெச்ச வடிவங்கள் காணப்படுகின்றன. அதே காலப் பேச்சு வழக்கில், செய்கிற என்ற வடிவம் பயின்று வழங்கியிருக்கலாம். அதனுல்தான், வீரசோழியம் தாதுப்படலம் 7–ஆம் செய்யுள், வினையடிகளின் பின் த, ன, ய என்பன இறந்த காலத்தைக் குறித்து வருமெனவும் நிகழ்காலத்தின் கண், சு, கிற, ஆநின்ற என்பன வருமெனவும் எதிர்காலத்தின் கண், கும், உம் என்பனவும் மகார வொற்றும் வருமெனவும் கூறுகிறது. அதே செய்யுளுரையில் கொடுக்கப்பட்டிருக்கும் உதாரணங்கள் :—பிறந்த பிள்ளை, கண்ட எருது, நின்ற பசு எனத் தகாரமும், ஊட்டின, தீற்றின, போன என னகாரமும், சொல்லிய, ஆய என யகாரமும் இறந்தகாலத்திலும், செய்கிற சாத்தன், செய் சாத்தன், செய்யாநின்ற சாத்தனென முறையே கிற, சு, ஆநின்ற என்பன நிகழ்காலத்திலும், நிற்குஞ் சாத்தன், அறியுஞ் சாத்தன், சாங்கிழவியெனக் கும், உம், மகாரம் என்பன எதிர்காலத்திலும் வந்தன. 'சு' புணர்ந்து கெட்டது என்று இவர் கூறும் செய் சாத்தன் என்பதிலுள்ள செய், பெயரெச்சமாகக் கொள்ளப்பட வேண்டியதில்லை.

நன்னூலார் தொல்காப்பியர் கூறியவற்ருேடு செய்கின்ற என்ற வாய்பாட்டு நிகழ்காலப் பெயரெச்சத்தைச் சேர்ப்பர். வீரசோழித்தாரின் செய்கிற என்ற வாய்பாட்டுக் குப் பதிலாக, நன்னூலாரின் செய்கின்ற என்பது காணப் படுகிறது.

செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டிற்
காலமுஞ் செயலுந் தோன்றிப் பாலொடு

செய்வ தாதி யறுபொருட் பெயரும்
எஞ்ச நிற்பது பெயரெச் சம்மே

—நன். சூ. 340

நன்னூலாரே, பெயரெச்சத்திற்கு முதன்முதல் வரையறை யிலக்கணம் கூறுகிருரெனலாம். 'காலமும் செயலும் தோன்றி' எனவும் 'பெயர் எஞ்ச நிற்பது' எனவும் கூறு கிருர். 'பெயரெஞ்சு கிளவி பெயரொடு முடிமே' எனத் தொல். சொல். 433 கூறுகிறது. ஆனல், தொல்காப்பியர் காலமும் செயலும் தோன்றி என்று கூறவில்லை. நன்னூ லார் வினையெச்ச இலக்கணம் கூறும்போதும், தொழிலுங் காலமுந்தோன்றி என்பர். எனவே, தொழிலுங் காலமுந் தோன்றுதல், இருவகை எச்சத்துக்கும் பொது இலக்கணம். பாலறிகிளவி யின்மையாலேயே, இரண்டும் எச்சமெனப் படுகின்றன. பெயர் கொண்டு முடிவது பெயரெச்சமாகவும் வினையுங் குறிப்புங் கொண்டு முடிவது வினையெச்சமாகவும் வருகின்றன. இருவகை யெச்சமும் வெவ்வேறு வாய்பாடு களையுடையன.

பண்டைத் தமிழில், எதிர்மறைப் பெயரெச்சமாகச் செய் யாத என்பதே வழங்கிவந்தது. இக் காலத் தமிழில் இத ேைடு, செய்யாமலிருந்த, செய்யாமலிருக்கின்ற, செய்யாம லிருக்கும் என்ற வடிவங்கள் முறையே இறந்தகால, நிகழ்கால, எதிர்காலப் பெயரெச்சங்களாக வழங்கிவரு கின்றன என்பர் டாக்டர் P. S. சுப்பிரமணிய சாஸ்திரி. செய்யப்பட்ட, செய்யப்படுகின்ற, செய்யப்படும் என்ற வாய் பாடுகள் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ப வற்றுக்குரிய உடன்பாட்டுச் செயப்பாட்டுவினைப் பெயரெச் சங்களாக, இடைக்காலத்திலிருந்து வழங்கிவருகின்றன. செய்யப்படாத என்பது எதிர்மறைச் செயப்பாட்டுவினைப் பெயரெச்சமாக, இடைக்காலத்திலிருந்து வழங்குகிறது. இன் றைய தமிழில், செய்யப்படாமலிருந்த, செய்யப்படாமலிருக் கின்ற, செய்யப்படாமலிருக்கும் என்பன முக்காலத்திலும் முறையே வழங்குகின்றன.

இறந்த கால எச்சங்கள் :

இறந்தகால வினையெச்ச ஆக்கம் :

முதலாம் வினையாக்க முறையில், தகரம் அல்லது அதன் திரிபுகளை ஏற்றுநிற்கும் வினைவடிவங்கள் உகர ஈறுபெற்று, ட்டு, ற்று, து, ந்து,–த்து என்ற ஈற்று வடிவங்களையுடைய இறந்தகால வினையெச்சங்களாகின்றன. இரண்டாம் வினை யாக்க முறையில் இகரம் சேர்ந்த வினைப்பகுதியே திரிபின்றி இறந்தகால வினையெச்சமாக விளங்குகிறது.

இறந்தகாலப் பெயரெச்ச ஆக்கம் :

இறந்தகாலப் பெயரெச்சங்கள் அகர விகுதி பெறுவன. முதலாம் வினையாக்க முறையில், தகரம் அல்லது அதன் திரிபுகளை ஏற்றுநிற்கும் வினை வடிவங்கள் அகர ஈறு பெறும் போது, மாற்றமெதுவும் நிகழ்வதில்லை. இரண்டாம் வினை யாக்க முறையில், அகரம் சேரும்பொழுது, இடையில் உடம் படுமெய்யாகிய யகரம் வருகிறது. –இய எனவரும் இந்த வடி வங்கள் சாசனத் தமிழிலும் பிற்கால வழக்கிலும் பெரும்பாலும் –இன என வருகிறது. யகரம்போல, னகரமும் உடம்படுமெய் யாக வேண்டுமென்பர் கால்டுவெல். னகரம் சாரியை என்பர் வரதராசனர். வினைமுற்றுக்களில் பாலறிகிளவி கெட்டு இவ் வடிவம் தோன்றியிருக்கலாம் என்பர் வேறுசிலர்.

முதலாம் வினையாக்க முறையிலிருந்து அமையும் எச்சங்கள் :

1. இறந்தகால வினையெச்சம் :

(அ) –ட்டு, –ற்று, –க்கு :—

பட்டு; சுட்டு; இட்டு; அட்டு; தொட்டு; உற்று; நக்கு.

(ஆ) –து :—

செய்து; பூண்டு; கண்டு; விற்று.

(இ) –ந்து :—

எறிந்து ; கொண்டு ; சென்று ; அளந்து ; கிடந்து ; கடந்து.

(ஈ) -த்து :—

வைத்து ; குறித்து ; எடுத்து ; உய்த்து ; தீர்த்து ; அறுத்து.

2. இறந்தகாலப் பெயரெச்சம் :

(அ) -க்க,-ட்ட,-ற்ற :—

மிக்க; புக்க; பட்ட; விட்ட; பெற்ற.

(ஆ) -த :—

செய்த, உண்ட, உய்த.

(இ) -ந்த :—

பிறந்த; புகுந்த; இகந்த; விழ்ந்த; அடைந்த.

(ஈ) -த்த :—

வைத்த; காத்த ; இசைத்த; உரைத்த; அறுத்த.

இரண்டாம் வினையாக்க முறையிலிருந்து அமையும் எச்சங்கள்

1. இறந்த கால வினையெச்சம் :

காலக்கிளவியாகிய இகரம் சேர்ந்த இரண்டாம் வினை யாக்கத்துக் குரிய வினைவடிவங்கள், இகர ஈற்று இறந்த கால வினையெச்சங்களாக விளங்குகின்றன.

-கி :—ஆகி.

-ங்கி :—தாங்கி.

-க்கி :—நோக்கி; நீக்கி; சுருக்கி; முழக்கி; ஆக்கி.

-சி :—பூசி.

-டி :—ஆடி; சூடி.

-ட்டி :—கட்டி; ஒட்டி; வெட்டி; சுட்டி; கூட்டி.

-தி :—எய்தி.

-த்தி :—சார்த்தி; திருத்தி.

-ம்பி :—விரும்பி.

-ரி :—வாரி.

-ல்லி :—கல்லி.

-ளி :—அருளி.

-வி :—விரவி.

-வ்வி :—வெளவி.

-றி :—சிதறி; சீறி.

-ன்றி :—தோன்றி; மன்றி.

-ற்றி :—இயற்றி; அகற்றி.

போய், ஆய் என்னும் யகர ஈற்று இறந்தகால வினையெச்ச வடிவங்கள் காணப்படுகின்றன. இகர ஈற்று இறந்தகால வினையெச்சங்களுக்கும் யகர ஈற்று இறந்தகால வினையெச்சங்களுக்கும் பெரிதும் வேறுபாடில்லை. 'இகர யகரம் இறுதி விரவும்' என்கிறது தொல். எழு. சூ. 58. இவ் வினையெச்சங்களில் இகரமே யகரமாகத் திரிகிறதெனலாம்.

2. இறந்தகாலப் பெயரெச்சம் :

-கிய :—ஆகிய.

-திய :—எய்திய.

-க்கின :—இறக்கின; ஆக்கின.

-ங்கின :—விளங்கின.

-ட்டின :—கட்டின; முட்டின; அட்டின.

-ண்டின :—தீண்டின; வேண்டின.

-ல்வின :—கல்வின.

-வின :—பாவின.

-யின :—ஆயின.

ஆன, போன என்ற உதாரணங்களில், நெட்டெழுத்துக்களாகிய ஆகார ஓகாரங்களின் முன் இறந்தகால இடைநிலையாகிய இகரம் கெட்டிருக்கலாம்.

இறந்தகால எச்சங்களின் பயன்பாடு :

(அ) வினையெச்சம் :

வினைமுற்றுக் கொள்ளும் எழுவாயையே இதுவும் கொள்கிறது :

(1) வாக்கியத்திலுள்ள முக்கிய வினையைத் தழுவி நிற்கும் :—

சனன் தளரா விழ்ந்து பட்டான்; நிசதி உரிநெய் கொண்டு நந்தா விளக்கு முட்டாமை எரிப்போமானோம்; இப்படிஒட்டி, இக்காசு கொண்டோம் ; விற்று விலையாவணம் செய்து கொடுத்தோம்.

(2) தொழிற் பெயரைத் தழுவி நிற்பது :—

திருத்தணியில் சபையார்க்கு இறையிலி யாவதற்குப் பொன் கொடுத்துக் கொண்டமையில் ; காடுபற்றி வரம் பழிந்து கிடக்கையால்.

(3) இன்னொரு இறந்தகால வினையெச்சத்தைத் தழுவுவது :—

கடல் கடைந்தமிர்துகொண்டு; தான் ஆராய்ந்து பண்டிதரில் மேந்தோன்றி ; தடம் பூதம்பணிகொண்டு தடாகங்கள் பலதிருத்தி.

(4) இறந்தகாலப் பெயரெச்சத்தைத் தழுவி நிற்கும் :—

களிறு ஒன்றேடுந்தோன்றி அரவினர் சடைமுடி வீற்றிருந்த வெண்டிங்கள் ; கணைதொடை ஞெகிழ்த்துப் பருதி ஆற்றலோடு விளங்கின பரசக்குர கோலாலன்.

(5) செயவெனெச்சத்தைத் தழுவி நிற்பது :—

தானை இடும்பை உற்று இரிய ; அழநாட்டு நாட்டார் நின்று எல்லைகாட்ட.

(6) வினையடையெனத்தகும் வகையில் இன்னொரு வினையெச்சத்தைத் தழுவி நிற்பது :—

வரகுணமகாராசர் தொண்டை நாட்டுப் பெண்ணைக் கரை அரைசூர் வீற்றிருந்து ; சூழநகர் இருந்தருளி.

(ஆ) பெயரெச்சம் :

பெயரடைபோல வழங்கப்படும் இது, விசேடிக்கும் பெயருக்கு முன்பக்கத்தில் வரும்.

நன்னன் கொற்றன் கொடுத்தபொன் ; சடைமுடி வீற்றிருந்த வெண்டிங்கள் ; உலப்பினுமங்கலத்து எதிர்ந்த தெவ்வர். சில சந்தர்ப்பங்களில், பெயரெச்சத்துக்கும் அது தழுவி நிற்கும் பெயருக்கு மிடையில், வேறு சொற்கள் வரும் :—குவலயதலந் தனதாக்கின வரைபுரையு மணிநெடுந்தோள் மன்னர்கோன் ; கொடும்பை மாநகர் நிறைந்த குரைகடற் பொருந்தானை ; இவ் விசைத்த பெருநான் கெல்லை.

படு என்ற பொருளசைபெற்ற வடிவங்கள் :—

நாற்பால் எல்லையுள்ளும் அகப்பட்ட நிலத்தில் ; ஆயிரங் குழியாலும் எப்பேர்ப்பட்ட இறையுங் காட்டாதோமானோம். காலத்தைக் குறித்து நிற்கும் சொற்கள், பெயரெச்ச வடிவங்களைத் தொடர்ந்து வருதலுண்டு :—

இகந்த பின் ; அடைந்த பின் ; புகுந்தபோது ; முட்டினபொழுது. வினையெச்சங்கள் பல, பெயரெச்சமொன்றைத் தழுவி நிற்றலுண்டு :—

வாடாத வாகை சூடிக் கோடாத செங்கோல் நடாவி... கணைதொடை நெகிழ்த்துப் பருதி ஆற்றலோடு விளங்கின பரசக்கிர கோலாலன்.

நிகழ்காலம் :

நிகழ்கால வினைவடிவங்கள் கின்று/கிறு/ஆநின்று என்பவற்றை வினைப்பகுதிக்குச் சேர்க்கத் தோன்றுகின்றன.

கின்று/கிறு :—

1. வினையடி மாறாமல் நிற்கும் :—
   செய்கின்று ; அட்டுகின்று ; ஏகின்று.
2. வினைப்பகுதியில், ல் ற் ஆதலுண்டு.
   விற்கின்று ; விற்கிறு .

3. வினைப்பகுதியிலுள்ள ர், ள் என்பவற்றோடு உகரம் சேர்தலுண்டு.

அருளுகின்று ; அருளுகிறு ; வருகின்று.

இவ்வாறும் இன்னும் பலவாறும் அமையும் நிகழ்கால வினைவடிவங்களிலிருந்து, நிகழ்கால வினைமுற்றுக்கள், வினையாலணையும் பெயர்கள் அமைகின்றன.

நிகழ்கால வினைவடிவங்களிலிருந்து வினையெச்சங்கள் அமைவதில்லை ; பெயரெச்சங்கள் அமையும்.

இறந்தகாலப் பெயரெச்சம்போல, நிகழ்காலப் பெயரெச்சமும் அகர விகுதி சேர்ந்தமையும் :—

செய்கின்ற ; அட்டுகின்ற ; விற்கின்ற ; அருளுகிற ; வருகிற.

ஆநின்று :—

இதைக் கால இடைநிலையாகவுடைய வடிவம் அருகியே வரும்.

1. வினையடி மாறாமல் நிற்கும் :—

அருளா நின்று.

2. ஓரசைச் சொல்லாய இடத்துக் குற்றெழுத்தைத் தொடர்ந்து வரும் ஒற்று இரட்டும் :—

வில்லா நின்று ; செய்யா நின்று.

3. வினையடிலுள்ள குற்றியலுகரம் கெடும் :—

அட்டா நின்று.

இவையும் அகர விகுதி பெற்றுப் பெயரெச்சமாகும். இறந்தகாலப் பெயரெச்சம் போலவே, நிகழ்காலப் பெயரெச்சமும் பயன்படுகிறது.

நிகழ்பு-எதிர்பு :

செய்யும் என்ற நிகழ்பு-எதிர்வு வாய்பாடு பெயரெச்சமாகவும் வினைமுற்றாகவும் வழங்குகிறது. இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்பவற்றைக் குறிக்க வரும்

வினைமுற்றுக்களிலும் பார்க்க, நிகழ்பு–எதிர்வு வடிவ அமைப்பு சுலபமானது. உம்விகுதி வினையடியுடன் சேர, இதற்குரிய வடிவம் தோன்றுகிறது. சில வினையடிகள்–க்–என்பதை இடையில் சேர்ப்பதுண்டாயினும், அது ஒலிநயச் சேர்க்கையே ஆகும்.

ஆகவே, நிகழ்பு–எதிர்வை இரண்டாக வகுக்கலாம் :—

(அ) விகுதியை மாத்திரம் சேர்க்கும் வினையடிகள்.

(ஆ) விகுதிக்குமுன்பு-க்-சேர்க்கும் வினையடிகள்.

(அ) விகுதியை மாத்திரம் சேர்க்கும் வினையடிகள் :—

(1) இரண்டாம் வினையாக்க முறையைச் சேர்ந்த எல்லா வினையடிகளும் :—

காட்டும் ; வேண்டும் ; செலுத்தும் ; அட்டும் ; வைகும் ; பூசும் ; ஆலும்.

(2) முதலாம் வினையாக்க முறையின் முதலாம் பிரிவிலுள்ள அடிச்சொற்கள் :—

இடும் ; படும் ; அடும்.

(3) முதலாம் வினையாக்க முறையில், இரண்டாம் பிரிவில், ல் ள் தவிர்ந்த ஏனைய எழுத்துக்களை ஈருக உடைய வினையடிகள் :—

எனும் ; செயும்.

ஓரசைச் சொற்களில், குற்றெழுத்தைத் தொடர்ந்துவரும் ஒற்று இரட்டுதலுண்டு :—

என்னும், செய்யும்.

(4) முதலாம் வினையாக்க முறையில், மூன்றும் பிரிவில், தொகுதி (அ) தவிர்ந்து,- ந்து என்ற மெல்வினை வடிவம் பெறும் வினையடிகள் யாவும் :—

வாழும் ; வரும்.

புரையும் என்பதில் உடம்படுமெய்யாகிய யகரம் வருகிறது.

ளகர ஈற்றுக் குற்றெற்று, ஈற்றை இரட்டும் :—

கொள்ளும்.

(ஆ) விகுதிக்கு முன் -க்க்- சேர்க்கும் வினையடிகள் :—

முதலாம் வினையாக்க முறையில்,—த்த்—என்பதைக் கொள்ளும் இறந்தகால வினைவடிவங்களே, நிகழ்பு–எதிர்வைக் குறிக்க–க்க்–கொள்கின்றன :—

ஒக்கும் ; அரைக்கும்.

மூன்றும் பிரிவில் தொகுதி (அ) வைச் சேர்ந்த வினையடிகள், இறந்தகாலத்தைக் காட்ட—ந்த்—கொள்பவை, நிகழ்பு–எதிர்வைக் காட்ட–க்க்–உம் என்பதைக் கொள்கின்றன :—

அளக்கும்.

செய்யும் என்ற வாய்பாட்டு வினைமுற்றுத் தன்மை, முன்னிலை, படர்க்கைப் பலர்பால் என்பவற்றில் வராது எனத் தொல்காப்பியர் வரையறை செய்வர். பாலறிகிளவிகளோடு கூடிய நிகழ்கால, எதிர்கால வினைமுற்று வடிவங்கள் இடைக்காலத் தமிழில் பல்கிப் பெருகியதனுற்போலும், வினைமுற்றுக இந்த வாய்பாடு வழங்குவது அருகி வந்திருக்கிறது. நிகழ்காலப் பெயரெச்ச வாய்பாடுகளும் இடைக் காலத்திலிருந்து வளர்ச்சிபெற்றுவர, இந்த வாய்பாடு எதிர்காலத்திற்கே, சிறப்பாக உரியதாயிற்று. எனினும், நிகழ்பு–எதிர்வுப் பொருளை, அது இழக்கவில்லை. முக்காலத்திற்கும் பொதுவான வினையும் இதே வாய்பாட்டாற் கூறப்படுகின்றது.

நிகழ்பு–எதிர்வுப் பெயரெச்சத்தின் பயன்பாடு :

இறந்தகால, நிகழ்காலப் பெயரெச்சங்கள்போல, இதுவும் பெயரடைபோல வழங்கப்படுகிறது. இது விசேடிக்கும் பெயர், இதனைத் தொடர்ந்து வரும். முக்கிய வினை சுட்டும் காலத்தொடு, உடனிகழ்வதை, இது குறிக்கும் :–

ஆளும் போர்ப்பரி ஒன்றால் அகன் கொங்கில் அமர் கடந்து; வானவெல்லைவரைத் தாண்டும் அலைக்கடல் கடைந்து; அரிசி பத்தெட்டுக்குத்தல் மிடாவில் அட்டும் பரிசே அளப்போம்.

எதிர்கால வினை :

இறந்தகால வினைமுற்றுக்களைப்போல, எதிர்கால வினை முற்றுக்களும் எதிர்கால வினைவடிவங்களுடன் பாலறி கிளவிகளைச் சேர்ப்பதால், உருவாகின்றன. வகரம் அல்லது பகரத்தை இடைநிலையாகக் கொண்டுவரும் வடிவங்கள் மெல்வினைகளாகப் பெரும்பாலும் செயப்படு பொருள் குன்றிய வினைகளாகவரும். -ப்ப்- என்பதை இடைநிலையாகக் கொண்டுவரும் வடிவங்கள் வல்வினை களாகப் பெரும்பாலும் செயப்படுபொருள் குன்றா வினை களாக அல்லது பிறவினைகளாக வரும்.

எதிர்கால மெல்வினைவடிவ அமைப்பு :—

இரண்டாம் வினையாக்க முறைக்குரிய வினையடிகளி லிருந்து மெல்வினைகளமையுமாறு :—

செலுத்துவ் ; அட்டுவ் ; வேண்டுவ் ; பாடுவ் ; எய்துவ்.

முதலாம் வினையாக்க முறையிலிருந்து, வகர இடைநிலை பெற்று மெல்வினைகளையமைக்கும் வினையடிகள் :—

(அ) குற்றொற்றிரட்டி இறந்தகாலங் காட்டுவன வெனப் படும் முதலாம் வினையாக்க முறையின் முதற்பிரிவைச் சேர்ந்த வினையடிகள்.

படுவ்; புகுவ்; பெறுவ்; இடுவ்.

(ஆ) -த்- கொண்டு இறந்தகாலங் காட்டும் வினையடிகள் :— செய்வ்.

முதலாம் வினையாக்க முறையில் இரண்டாம் பிரிவைச் சேர்ந்தனவாக -த்- கொண்டு இறந்தகாலங் காட்டு

வினையடிகளில் ஒரு பகுதி -ப்- சேர்த்து எதிர்காலம் காட்டுகிறது :—

நிற்ப்; உண்ப்; கடைக்காண்ப்.

(இ) -ந்த்- கொண்டு இறந்தகாலங் காட்டுபவையில் சில, வகரம் கொண்டு மெல்வினை வடிவமாகின்றன :—

கொள்வ்; எரிவ்; செல்வ்.

வல்வினை வடிவங்கள் :—

எதிர்கால வல்வினை வடிவங்கள், வினைப் பகுதிக்கு -ப்ப்- சேர்க்க, ஆகின்றன. மூன்றும் பிரிவு தொகுதி (அ), நான்காம் பிரிவைச் சேர்ந்த வினையடிகள் -ப்ப்- சேரும் வடிவங்கள் கொள்கின்றன.

மூன்றும் பிரிவு தொகுதி (அ) :—அளப்ப்.

நான்காம் பிரிவு :—வைப்ப் ; எரிப்ப் ; காப்ப் ; பணிப்ப் ; எடுப்ப்.

எதிர்கால வினைமுற்றுக்கள் :

மெல்வினை வடிவங்கள் :— -வ்-/-ப்-

ஒருமை :

தன்மை :

-ஏன் :—செலுத்துவேன்.

முன்னிலை :

-ஆய் :—செய்வாய்.

படர்க்கை :

ஆண்பால் :—படுவான்.

பெண்பால் :—புகுவாள்.

ஒன்றன்பால் :-செல்வது; எரிவது; உண்பது; அட்டுவது.

பன்மை :

தன்மை :

-ஓம் :—புகுவோம்; செய்வோம்; அறிவோம்.

முன்னிலை :

-ஈர் :—புகுவீர்.

படர்க்கை :

பலர்பால் :—ஆவர்; படுவார்; இயற்றுவார்; எய்துவார்.

வல்வினை வடிவங்கள்-ப்ப்- :—

ஒருமை :

தன்மை :—வைப்பேன்.

முன்னிலை :—எடுப்பாய்.

படர்க்கை ஆண்பால் :—நடப்பான்.

பெண்பால் :—நடப்பாள்.

ஒன்றன்பால்:—எரிப்பது, எடுப்பது, கொடுப்பது.

பன்மை :

தன்மை :—எரிப்போம்.

படர்க்கை பலர்பால் :-காப்பார்.

எதிர்கால வினையாலணையும் பெயர்கள் :

எதிர்கால வினைமுற்று வடிவங்கள் வினையாலணையும் பெயர்களாகவும் வழங்குகின்றன.

மெல்வினை வடிவங்கள் -வ்–/-ப் :—

ஒருமை :

தன்மை : அட்டுவேன். இதின் பொலிசையால், நிசதி உழக்கு நெய்முட்டாமை அட்டுவேனானேன்.

படர்க்கை ஆண்பால் : ஆள்வான்; இறக்குவான். உழக்கு எண்ணையும் ஊர் ஆள்வானே அட்டுவதாகச் சிலா லேகை செய்து கொடுத்தோம்; ஏரிப்பட்டி இறக்கு வானும் ஏழா நகரத்துக் கீழா நகரம் புகுவான்.

ஒன்றன்பால் : வேண்டுவது. நூற்றமிர்து வேண்டுவது இடுவது.

பன்மை :

தன்மை : செலுத்துவோம்; செய்வோம்; ஊட்டுவோம்; காட்டுவோம்.

இத் தன்மம் முட்டாமை செலுத்துவோமானோம்; இத் தண்டம் பட்டும் இப்பரிசே செய்வோமானோம்; சந்திரா தித்தவல், திருநந்தா விளக்கு காட்டுவோமானோம்.

படர்க்கை பலர்பால் :—பாடுவார்; அட்டுவார்; கடைக் காண்பார்.

திருப்பதியம் பாடுவார் உள்ளிட்ட பலபணி செய்வார்க்கு; இது ஆசந்திர காலமும் முட்டாமை ஊட்டுவிப்பதாக யிப் பெருமக்கள் கடைக்காண்பாரானுர்.

பலவின்பால் :—வேண்டுவன. ஒரு பொழுதைக்கு வேண்டு வன அரிசி பயறு முதலியன ...

வல்வினை வடிவங்கள் -ப்ப் :—

ஒருமை :

தன்மை : கொடுப்பேன். எச்சோறும் வெட்டி வெதினே யும் காத்துக் கொடுப்பேனுனேன்.

பன்மை :

தன்மை : எரிப்போம்; அளப்போம்; கொடுப்போம்.

விளக்கு எரிப்போ மானோம் இத்தளி அர்ச்சிப்போம்; ஏழுநாள் முந்துறக் கோயிலுக்குக் கொண்டுசென்று அளப்போமானோம்; குத்துக்கால் தீர்த்துக் கொடுப்போ மானோம்.

படர்க்கை பலர்பால் : பணிப்பார்; பறிப்பார்; அர்ச்சிப்பார். நாழி நெய் முட்டாமை அர்ச்சிப்பார் கையிலே கொடுத்து; திருப்பள்ளித் தாமம் பறிப்பார்க்கும் திருப்பதியம் பாடு வார் உள்ளிட்ட பல் பணி செய்வார்க்கு நெல்லு நானூற்றுக்காடி.

பலவின்பால் : அளப்பன; நிறுப்பன.

அளப்பன கொண்டுவந்து விற்ருரை; நிறுப்பன நிறை யால் ஒரு பலங்கொள்ளப் பெறுவது.

4. வியங்கோள்-ஏவல்வினை

ஏவல்வினை யென்று ஒன்றைத் தொல்காப்பியர் எடுத்துக் கூறவில்லை. வியங்கோள்வினை கூறுகிறார். வியங்கோள் என்றால் ஏவல் கொள்ளுதல். தொல்காப்பியர் காலத்தில் ஏவல் வினையும் வியங்கோளில் அடங்கியிருக்கலாம். ஏவல்வினை வடிவங்களைப் பற்றித் தொல். சொல். சூ. 450, 451 எடுத்துக் கூறுகின்றன.

செய்யாய் என்னும் முன்னிலை வினைச்சொல்
செய்யென் கிளவி யாகிடன் உடைத்தே

—தொல். சொல். சூ. 450

முன்னிலை முன்னர் ஈயு மேயும்
அந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே

—தொல். சொல். சூ. 451

செய்யாய் என்னும் வாய்பாட்டதாகிய முன்னிலை முற்றுச் சொல் ஆயென்னும் ஈறு கெடச் செய்யென்னும் சொல்லாய் நிற்கும். உண்ணாய், தின்னாய், கிடவாய், நடவாய் என்பன ஈறுகெட உண், தின், கிட, நட எனச் செய்யென் கிளவி யாயினவாறு காணலாம். முன்னிலை வினைச்சொல் முன்வரும் ஈகாரமும் ஏகாரமும், அந்த முன்னிலைச் சொல்லுக்கு ஏற்ற மெய்யூர்ந்து வரும். சென்றீ, நின்மே என்பன எடுத்துக் காட்டுக்கள். ஈகாரம், புக்கீ, உண்டீ, உரைத்தீ என முன்னிலை வினையீற்று வேறுபாட்டிற்கு ஏற்ப, வெவ்வேறு மெய் கொள்ளுதலால், ‘அந்நிலை மரபின் மெய்’ யென்றார். ஏகாரம் மகரம் ஊர்ந்தல்லது வராது. முன்னிலை வினைபற்றிய தொல்காப்பியர் கருத்து, முன்னிலை வினையில் ஒரு பகுதியாகிய ஏவலுக்கும் பொருந்துகிறது. வினைப்பகுதி காலக்கிளவியும் விகுதியும் பெறாமலே, ஏவலொருமையாக விளங்குகிறதெனலாம். முன்னிலையிலுள்ள ஒருவரை ஏவும் சொல்லாதலின், முன்னிலையொருமை விகுதி சேர்க்கவேண்டியதில்லை. முகக் குறிப்பும் குரல் ஒலியுமே ஏவற்குறிப்பை உணர்த்தவல்லன.

நன். சூ. 137, இருபத்துமூன்று செய்யென்னும் வாய்பாட்டு ஏவல்வினைகளை யெடுத்துக் கூறுகிறது.

> நட வா மடி சீ விடு கூ வே வை
> நொ ப் போ வெள வுரிஞ் உண் பொருந் திருந்தின்
> தேய் பார் செல் வவ் வாழ் கே ளஃகென்
> றெய்திய விருபான் மூன்று மீற்றவும்
> செய்யெ னேவல் வினைப்பகாப் பதமே
>
> —நன். சூ. 137

வினையடியோடு இ நேராகச் சேர்ந்து ஏவலாக அமைவது கலித்தொகையில் காணப்படுகிறது :—ஊக்கி; காட்டி; தேற்றி.

வினையடியோடு ஐ சேர்ந்து வருதல் :—வந்தை; கண்டை; காண்டை.

வினையடியோடு மோ,மே, மதி சேர்ந்து ஒருமையில் வருதல்:— அறிமோ; அறிமே; அறிமதி.

முன்னிலைப்பன்மை ஏவல் வினைகளில், விகுதி இன்றியமை யாதது. மின் என்பது இலக்கியங்களில் பயின்று வருகிறது, உம், உங்கள் என்பன பேச்சுவழக்கில் உள்ளன :—அறிமின்; அறியும்; அறியுங்கள். உம் விகுதியை உம்மை இடைச் சொல்லென்பர் கால்டுவெல். ஆயின் முன்னிலையில் வழங்கும் நும் என்பதன் திரிபே இந்த உம்மெனலாம். மோ, மே, மதி, மின் என்பவை போல, உம்மும் வழக்கிறந்துவிட்டது எனச் சீனிவாசன் ஏன் கூறுகிறரென்று தெரியவில்லை. உம் இன்றும் வழக்கிலுள்ளது. பழந்தமிழிலக்கியத்தில் செய்யாய், செய், செய்யி, செய்யி, செய்யை என்பன முன்னிலையொருமையிலும் செய்யீர், செய்மின் என்பன முன்னிலைப் பன்மையிலும் வழங்கிய வாய்பாடுகள்.

இடைக்காலத்தில், செய்மின்கள் என்ற வாய்பாடும் வழங்குகிறது. தொழுமின்கள், சேர்மின்கள் என்பன தேவார காலத்தில் காணப்படுகின்றன. வீரசோழியம் செய்யென்ற

வாய்பாடு முன்னிலையொருமையென்றும், செய்யும், செய்மின், செய்யாமே என்பன மரியாதைப்பன்மை யென்றும், செய்யுங் கள், செய்மின்கள் என்பன முன்னிலைப்பன்மை யென்றும் கூறும். நன். 137, முன்னிலையொருமையைப் பொறுத்த வரை யில், வீரசோழியத்தைப் பின்பற்றுகிறது. நன். 337, முன்னிலை யேவற்பன்மைக்கு மின் விகுதியொன்றே கூறும். இன்றைய பேச்சு வழக்கில், செய்யாமே என்பதுதவிர, வீரசோழியத்தார் குறிப்பிட்டுள்ள வடிவங்கள் யாவும் வழங்குகின்றன. இங்கு கூட, வீரசோழியம் தன்காலப்பேச்சு வழங்கிலிருந்த வடிவங் கள் யாவற்றையும் குறிப்பிடுகிறதெனலாம். தொல்காப்பியர் காலத்திலிருந்து செய்யவேண்டும் என்ற சொற்றொடரும் **ஏவற்** பொருளில் வழங்கப்படுகிறது :—

> இது செயல் வேண்டும் என்னுங் கிளவி
> இருவயி னிலையும் பொருட்டா கும்மே
> தன்பா லானும் பிறன்பா லானும்
>
> —தொல். சொல். 243

இந்தச் சூத்திரம் தன்மை, படர்க்கையாகிய இடங்களில் ஏவற்பொருள் எவ்வாறு அமையும் என்று கூற எழுந்தது போலும் என்பர் டாக்டர் P. S. சுப்பிரமணிய சாஸ்திரி.

தொல்காப்பியம் பொருளதிகாரம் 146-ஆம் சூத்திரத்தில், அழியல், அஞ்சல் என்பன எதிர்மறை ஏவற் பொருளுடையன வாகக் காணப்படுகின்றன. இலக்கியங்களில், செய்யல், செய்யாய், செய்யாதி, செய்யேல் என்ற வாய்பாடுகள் ஒரு மையிலும் செய்யிர் என்பது பன்மையிலும் எதிர்மறை ஏவ லாகக் காணப்படுகின்றன. செய்யவேண்டா என்ற சொற் றொடரும் ஏவற் பொருளில் காணப்படுகிறது. இன்றைய பேச்சுத் தமிழில், செய்யாய், செய்யாதே வாய்பாடுகள் முன் னிலையொருமையிலும் செய்யாதேயும் மரியாதைப் பன்மை யிலும், செய்யாதீர், செய்யாதேயுங்கள் வாய்பாடுகள் பன்மை யிலும் எதிர்மறை ஏவலாகக் காணப்படுகின்றன.

தொல்காப்பியம் வியங்கோளையும் ஏவலையும் சேர்த்து வியங்கோளென்று பெயரிட, வீரசோழியம் இரண்டையும் சேர்த்து ஏவல்வினையென்று வழங்குவதைக் கிரியாபதப்படலம் 9-ஆம் செய்யுளில் காண்கிறோம். தமிழில் ஒரே அமைப்பு ஏவலாகவும் வியங்கோளாகவும் வருகிறது. வியங்கோளினை மரியாதை ஏவல் என்றும் குறிப்பர். ஏவல் முன்னிலையாருக்கு இடும் கட்டளையாகவோ வேண்டுகோளாகவோ அமைய, வியங்கோள் வாழ்த்தல், வைதல், விரும்பல் முதலிய பொருள் களில் வரும். ஏவல் முன்னிலையிடத்தில் மாத்திரம் வர, வியங் கோள் இருதிணை ஐம்பால் மூவிடங்களிலும் வரும். நன்னூ லார் ஏவல்வினையையும் வியங்கோள் வினையையும் இந்த அடிப்படைகளிலேயே வேறுபடுத்தி, வெவ்வேறாகக் கூறுவர்.

வியங்கோள்வினை பற்றிய தொல்காப்பியச் சூத்திரங்கள் வருமாறு :—

> எஞ்சிய கிளவி யிடத்தொடு சிவணி
> ஐம்பாற்கும் உரிய தோன்ற லாறே
>
> தொல். சொல்.—225

அவற்றுள்,

> முன்னிலை தன்மை ஆயீ ரிடத்தொடு
> மன்னா தாகும் வியங்கோள் கிளவி
>
> தொல். சொல். 226

வியங்கோள் ஐம்பாலிலும் ஒரே வடிவம் கொள்ளும் என்று கூறுகிறார். ஆனால், வியங்கோள்வினை வாய்பாடுகள் எவை யென்று தொல்காப்பியர் கூறவில்லை. அறிதல், காட்டல் என்ற சொற்களைத் தொல்காப்பியர் சொல்லதிகாரம் 458-ஆம், 463-ஆம் சூத்திரங்களில் வியங்கோளாகப் பயன்படுத்தி யிருக்கிறார்.

வியங்கோள் படர்க்கையிடத்துக்கே உரியதென்பர் தொல்காப்பியர். சங்க காலத்தில், தன்மையிலும் முன்னிலை யிலும் வியங்கோள் வழங்கியதற்கு உதாரணம் காட்டலாம்.

யர், இய என்பன சேர்ந்து சங்க காலத்தில் வியங்கோளாக வந்துள்ளன :—

> யான் ஆகியர் நின் நெஞ்சு நேர்பவள்—தன்மை—
> மன்னிய பெரும நீ நிலமிசை யானே—முன்னிலை.

வினையடிக்குக் க என்பதைச் சேர்த்து வியங்கோளுண்டாக் கலாம் என்பர் வீரசோழியத்தார்.

நன்னூல் சூத்திரம் 338 பின்வருமாறு :—

> க ய வொடு ரவ்வொற் றீற்ற வியங்கோள்
> இயலும் இடம்பால் எங்கு மென்ப.

வியங்கோள் எல்லா இடங்களுக்கும் திணைபால்களுக்கும் பொதுவானது என்று கொண்டனர். இதனால், திணைபால் இடம் உணர்த்தும் விகுதி வியங்கோளில் இல்லையென்பது தெளிவு. இலக்கண விளக்கம் சூத்திரம் 239, நன்னூல் கூறு வதை ஏற்று, வியங்கோள் விகுதிகள் சில கூட்டிக் கூறுகிறது.

> யவொடு கரவ்வொற் றல்ஆல் உம் மார்
> ஐ கானீற்ற வியங்கோண் முற்றவை
> எய்து மிடம் பாலெங்கு மென்ப.

அல், ஆல், உம், மார், ஐ என்ற விகுதிகளை, இலக்கண விளக் கம் புதியனவாகக் கூறுகிறது. ‘நான் மறையங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க’, ‘மக்கட் பதடி யெனல்’, ‘மனத்துக் கண் மாசிலனுதல்’ என அ, அல், தல் என்பன வியங்கோள் விகுதிகளாக வருகின்றன என்பர் நன்னூற் காண்டிகை யுரைகாரர்.

> வாழ்த்துதற்பொருள் :—செல்க தீயன சிறக்க நின் புகழே.
>
> விதித்தற்பொருள் :—நடக்க, உண்க.
>
> வேண்டிக் கோடல் :—போற்றியருளுக நின்னுதியாம் பாதமலர்.
>
> வைதற்பொருள் :—பரந்து கெடுக உலகியற்றியான்.

செய்யாய் என்ற வாய்பாட்டில் காவாய் கோவே எனவரும். வாழிய என்பது ஆவாழி, அந்தணர் வாழி எனப் பெரும்பாலும் ஈற்றுயிர்மெய் கெட்டுவரும்.

பேச்சுவழக்கில், வாழட்டும், வாழக்கடவன், வாழக் கடவள் என்பன வருமென்பர் டாக்டர் P. S. சுப்பிரமணிய சாஸ்திரி. சிறுபான்மை, இவை இக்காலத்து உலக வழக் கிலே, நடக்கக்கடவன், நடக்கக்கடவள், நடக்கக்கடவர் என்றும் நடப்பானாக, நடப்பாளாக, நடப்பாராக என்றும் பாலிடங்களுள் ஒன்றற்குரியவாய் வருமெனவுங் கொள்க என் கிறது ஆறுமுக நாவலரின் இலக்கணச் சுருக்கம். ஆறுமுக நாவலர் கூறிய அனைத்தையுமாவது, ஏன் சுப்பிரமணிய சாஸ்திரி கூறவில்லை என்று தெரியவில்லை. ஆனால் ஆறுமுக நாவலரும், பால் என்று கூறி மூன்று பால்களுக்கே உதாரணந் தருகிறார். இடம் என்று கூறிப் படர்க்கைக்கே உதாரணம் கொடுக்கிறார். ஆனால், இடைக்காலச் சாசனங்களிலேயே, ஐம்பாலுக்கும் உதாரணமுண்டு. நடக்கக்கடவது, நடக்கக் கடவன என்ற வாய்பாடுகளும் நடப்பதாக, நடப்பனவாக என்ற வாய்பாடுகளும் ஒன்றன்பாலுக்கும் பலவின்பாலுக்கும் காணப்படுகின்றன. தன்மையிடத்திலும் நடக்தக்கடவேன், நடக்கக்கடவோம் என்ற வாய்பாடுகளும் நடப்பேனாக, நடப்போமாக என்ற வாய்பாடுகளும் காணப்படுகின்றன.

எதிர்மறை வியங்கோளாகப் புறநானூற்றில், பெயரல் என்பது காணப்படுகிறது. செய்யாய் என்பது செய் ஆனது போல, பெயராய் அல்லாய் என்பது பெயரல் எனத் திரிந்திருக்கலாம் என்பர் டாக்டர் P. S. சுப்பிரமணிய சாஸ்தரி. பேச்சுவழக்கில், வாழா யாக என்பது வருகிறது. எதிர்மறை வியங்கோள் வினைமுற்றுக்கள் மறவற்க, உண் ணற்க எனப் பகுதிக்கும் ககர விகுதிக்கும் இடையே எதிர் மறை அல் இடைநிலைபெற்று வரும். அன்றியும் மகனெனல் என்னுமிடத்து மகனென்று சொல்லற்க எனவும் மரீஇய தொருவற்க எனவும் பொருள்பட நிற்றலால், அல், ஆல் இரண்டும் எதிர்மறை வியங்கோள் விகுதிகளாய் வரும்.

இடைக்காலத்திற்குரிய சாசனங்களில், செய்யப்பெருதோமாக, செய்யப்பெருதாராக, செய்யப்பெருததாக என்ற வாய்பாடுகளும் காணப்படுகின்றன.

5. நிபந்தனைவினையும் காரணவினையும்

நிபந்தனைவினை :

வினையடியோடு இல் விகுதி சேர்வதால் உண்டாகின்றன :—

சுருங்கில்; முட்டில்; செய்யிள்; ஏறில்; குத்துக்காற்படில்.

நெய் நிசதி இருநாழியும் முட்டில் முட்டிரட்டி; இப்பரிசு செலுத்தாது குத்துக்காற்படில், இத்தேவர்க்கே இருபத்தைந்து காசு தண்டமும் பட்டு; இது இறங்க ஊரோமுங் குடிமை செய்யில் ஏழா நரகத்து கீழா நரகம் புகுவோம். சில நிபந்தனைவினைகள், வினைமுற்ருேடு ஆகில்/ஆயில்/ஆயிற் என்பது சேர்வதால், உண்டாகின்றன. ஆகு அல்லது ஆ என்ற வினைப்பகுதியோடு இல் அல்லது இற் சேர்வதால் உருவாகும் ஆகில்/ஆயில்/ஆயிற் துணைவினையாகப் பயன்படுகிறது :—

கொடோமாகில்; கொடோமாயில்; அஞ்சாஞயில்; உண்டாகில். இப்படி ஆராயோமாயில் கங்கையிடைக் குமரியிடைச் செய்தார் செய்த பாவங் கொள்வோ மாஞேம்; இது செய்யோமாயில் அன்ருள் கோவுக்கு நிசதி காற்பொன் தண்டப்படுவோமாஞேம்; அளவோமாயில், முட்டிரட்டி பன்மாகேசுவரர் தண்டிக்கொள்ள, ஒட்டிக் கொடுத்தோம்.

இன், ஆல், கால், ஏல் என்பன சேர்ந்தும் இவ்வினை அமைகிறது :—

இன் :—தரின் கொள்வேன்.

ஆல் :—தந்தால் நல்லது.

கால் :—தருங்கால்.

ஏல் :—தருவாயேல்; நடப்பாயேல்.

காரணவினை :

காரணவினை தொழிற்பெயருக்கு இல் அல்லது ஆல்/ஆற் சேர்த்தலினால் உருவாகிறது :—

–இல் :—

கொண்டமையில்; கொள்ளாதமையில்; வருகையில்; கொடுக்கையில்; கழிக்கையில்; ஒண்ணுமையில்.

திருமுகம் வருகையில் நாங்களும் இப்படிக்கு இசைந்து; இந்நாயனார்க்கு இறையிலி பிடிபாடு பண்ணிக் கொடுக்கையில்; கல்லில் வெட்ட ஒண்ணுமையில்.

–ஆல்/-ஆற் :—

1. து ஈற்றுத் தொழிற்பெயர் :—
   முட்டியதனாற்.
2. மையீற்றுத் தொழிற்பெயர் :—
   மாட்டாமையாற்.
3. கையீற்றுத் தொழிற்பெயர் :—
   வருகையால்; கொடுக்கையால்; கிடைக்கையால்.

முட்டியதனாற் காற் பலிசை ஏற்றி; ங்கமாட்டாமையாற் பிறரால் எழுதுவித்து; இறையிலியாகக் கழித்துக் கொடுக்கையால்.

இல், ஆல், இன், ஆன் என்பனவே நிபந்தனை வினைகளிலும் காரணவினைகளிலும் வந்தமையும் இடைச் சொற்களாம். இல், இன் ஐந்தாம் வேற்றுமை யுருபுகள் போலவும் ஆல் ஆன் மூன்றும் வேற்றுமை யுருபுகள் போலவும் காணப்படுகின்றன. தொல்காப்பியம் இன் ஐந்தாம் வேற்றுமை யுருபென, வீரசோழியம் இல் ஐந்தாம் வேற்றுமை யுருபென், நன்னூல், இரண்டையும் சேர்த்து ஐந்தாம் வேற்றுமை யுருபுகளென்னும். அதேபோல, தொல்காப்பியம் ஆன் என்பதை மூன்றும் வேற்றுமைக்குரிய உருபாகக் கொள்ள, வீரசோழியம் ஆல் மூன்றும் வேற்றுமை யுருபென, நன்னூல் இரண்டையும் சேர்த்து மூன்றும் வேற்றுமை யுருபுகளென்னும்.

நிலைமொழியிற்று னகரம் லகர என்பன, வருமொழி முதலில் வல்லெழுத்து வரும்பொழுது ரகமாகத் திரிதலுண்டு. பண்டைய தமிழில் இன், ஆன் என்ற வடிவங்கள் வழங்கினவென்றும் இடைக்காலத் தமிழில் இல், ஆல் வடிவங்கள் செல்வாக்குப் பெற்றன வென்றும் இன்றைய தமிழில் பின்னவையே வழங்கப்படுகின்றன வென்றும் கூறலாம்.

6. செயவென் எச்சம்

ஐரோப்பிய மொழிகளில் உள்ளவாறு செயவென் எச்சத்தைத் தனிவகையாகக் கொள்ளல் திராவிட மொழிகளில் இல்லை. இதனை வினையெச்சங்களுள் ஒன்ருகக் கூறுதலே மரபு. இவை அ, இய, இயர் என்ற ஈறுகள் சேர்ந்து அமைவன எனலாம். இய, இயர் சங்ககால இலக்கியத்தில் ஓரளவு பயின்று வழங்கிப் பிற்கால இலக்கியங்களில் அருகிய வழக்காக வந்திருக்கின்றன. சங்ககால இலக்கியத்திலும் பயின்று வழங்கும் அகர வீற்றுச் செயவென் எச்சமே பிற்கால இலக்கியங்களில் பெருவழக்காகவும் பேச்சு வழக்கில் ஒரே வழக்காகவும் இருந்து வருகிறது. சங்க காலத்தில், இவ்வெச்சம் கொண்ட வடிவங்களுக்குச் சீனிவாசன் உதாரணம் தருவர் :-

இய :—வறுங்கை காட்டிய வாயல் கனவின் - அகம். 39.
இயர் :—தொல்கவின் பெரீ இயர் உவக்கும் தோழி—குறுந்தொகை. 367.
அ :—ஒசிய, துமிய, மடிய.

தொழிற்பெயர் ஈற்றுமெய் கெட்டுச் செயவெனச்சமாக நிற்கின்றன என்று ஒரு கருத்துண்டு. வரல், புகழல், பாடல் என்பன வர, புகழ, பாட என அமைகிறபொழுது, இருவகை வடிவங்களுக்கும் பொருளில் வேறுபாடில்லை யென்பர். பாடற்குத் தொடங்கினுன் என்பது போலத் தொழிற் பெயரோடு, நான்கனுருபு சேர்ந்தும் அப்பொருளில் வருதலுண்டு. செயவென்னும் வாய்பாட்டுச் சொற்கள், நீவாழ, ஓங்க என நின்றும் அல்லது லகரம் பெற்று நீவாழல், ஓங்கல் என நின்றும் வியங்கோளாக வருதலுமுண்டென்பர்.

பழந் தமிழிலக்கியத்தில், செயவென் எச்சம் -அ, -ப, -ப்ப என்ற ஈறுகளைக் கொள்கிறது. இடைக்காலத் தமிழில், இந்த ஈறுகளில் ஒரு மாற்றத்தை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. சாசனங்களில், -ப, -ப்ப என்று முடியும் வடிவங்களுக்குப் பதிலாக, -க, -க்க என்று முடியும் வடிவங்கள் பயின்று வழங்குகின்றன.

வடிவங்களின் அமைப்பு :—

(அ) எதிர்கால மெல்வினை வடிவம்பெற வகரமெய் கொள்ளும் வினையடிகள் அகர ஈறு கொண்டு செயவென் எச்சமாகின்றன. இகர அல்லது ஐகார ஈற்று வினையடிகள் அகரம் சேரும்போது, யகர உடம்படுமெய் கொள்கின்றன :—

விளங்க; அட்ட; இறைஞ்ச; கட்ட, வணங்க; ஆட; அடைய; எரிய; அழிய; அறிய; அமைய.

குறிலை முதலாகவுடைய ஓரசை வினையடியில் ஈற்று மெய்யெழுத்து இரட்டுதல் :—செய்ய; உண்ண; சொல்ல; கொள்ள.

(ஆ) எதிர்கால மெல்வினை வடிவம்பெறப் பகரமெய் அல்லது ககரமெய் கொள்ளும் வினையடிகளில், ணகர ஈற்று வினைப் பகுதிகள் தவிர்ந்தவை, பகர உயிர்மெய் அல்லது ககர உயிர்மெய் கொண்டு செயவென் எச்சமாகும் :—

நிற்க; நிற்ப.

(இ) எதிர்கால மெல்வினை வடிவங்கள் அமையும்போது, -ப்ப-/-க்க்-என்பன கொள்ளும் வினைப் பகுதிகள், -ப்பு-/-க்க- என்பன சேரச் செயவென் எச்சமாகும் :

குளிப்ப; பிழைக்க; இறைக்க; துமிக்க; பொரிக்க; எரிக்க.

செயவென் எச்சத்தின் பயன்பாடு :

1. காரியப்பொருளில், எதிர்கால வினையெச்சமாக வழங்கும்:— நிசதி ஐங்கழஞ்சு பொன் மன்ற வொட்டிக் கொடுத்

தோம்; விளக்கு ஒன்று உலகுஞ் சந்திராதித்தரும் உள்ள அளவும் எரிக்க வைத்தான்; எதிர்ந்த வீரர் கவந்தம் ஆடக் கண்சிவந்து.

2. உடனிகழ்ச்சிப் பொருளில், நிகழ்கால வினையெச்சமாக வரும் :—

பல்லவன் நடுங்கப் பல்போராடி; குரைகழற்கால் அரசு இறைஞ்சக் குவலயதலந்தன தாக்கின.

3. இறந்தகால வினையெச்சமாகக் காரணப் பொருளில் வரும் :—

ஏரிவாரியப் பெருமக்கள் பணிக்க எழுதினேன்; கலி துடன் முக்கன் அணியன் தொறு கொளத் தொறு மீட்டுப்பட்டான்.

4. இரண்டு வாக்கியங்களைத் தொடர்பு படுத்தும் இடைச் சொல்லாக, ஆக என்ற செயவெனெச்சம் வரும் :—

எண்ணை விளக்கே யெரிவதாக வைத்தோம் சபையோம்; குடியில் நாயகஞ் செய்வார் இயற்று வாராக அமைந்தோம்.

5. வினையடைபோல வருமாறு, பண்புப் பெயருடன் 'ஆக' சேர்ந்து வழங்கும் :—

நன்ருகப் படித்தாள்.

6. பல செயல்களை ஒரு காலத்தில் நிகழ்ந்தனவாகக் கூறும் போது, பலவினைகள் இவ்வாய்பாட்டால் அடுக்கி வரும் :—

தலைவர் அழைக்கப் பேச்சாளர் எழ மக்கள் ஆரவாரிக்க.

7. செயப்பாட்டுவினை

இலக்கணச்சுருக்கம் வினைகளைச் செய்வினை, செயப்பாட்டு வினையெனப் பாகுபாடு செய்கிறது. செய்வினையாவது, படு விகுதி புணராத முதனிலையடியாகத் தோன்றி, எழுவாய்க் கருத்தாவைக் கொண்டுவரும் வினையாம். சாத்தன் கட்டி

னுன், சாத்தன் கட்டுவித்தான் என்பன உதாரணங்கள். செயப்பாட்டுவினையாவது, படு விகுதிபுணர்ந்த முதனிலை அடியாகத் தோன்றி, வினைமுதல் மூன்றும் வேற்றுமையிலும் செயப்படுபொருள் எழுவாயிலும் வரப்பெறும் வினையாம். பிறவினை முதனிலைகளும் செயப்படுபொருள் குன்றாத தன் வினை முதனிலைகளும் படு விகுதியோடும் இடையே அகரச் சாரியையேனும் குச் சாரியையும் அகரச் சாரியையுமேனும் பெற்றுச் செயப்பாட்டுவினை முதனிலைகளாக வரும். சாத்தனால் இம் மாடு நடப்பிக்கப்பட்டது, கொற்றனால் இச் சோறு உண்ணப்பட்டது என்பன உதாரணங்கள். செய்வினைக்கும் செயப்பாட்டு வினைக்கும் இடையிலுள்ள அடிப்படையான பொருள் வேறுபாடும் வடிவ வேறுபாடும் இங்கு உணர்த்தப் படுகின்றன எனலாம். செய்வினையில், வினை செய்பவனே எழுவாய். செயப்பாட்டுவினையில், செய்பொருளே எழுவாய். மேலும் செயப்பாட்டுவினையில், வினைசெய்பவன் மூன்றும் வேற்றுமையிற் குறிக்கப்படுவன். செய்வினையில், செய் பொருள் செயப்படுபொருளாக வரும். செயப்பாட்டுவினை வடிவமும், பெரும்பாலும், உண்ணப்பட்டது அல்லது நடப் பிக்கப்பட்டது என்பவற்றில் உள்ளமாதிரி, –அப்படு– அல்லது –க்கப்படு– என்பதை இடையிற் பெற்றுவரும்.

கன்னடமொழி எழுத்து வழக்கில் செயப்பாட்டுவினை ஓரளவு காணப்படுகிறபொழுதிலும் தற்கால இலக்கியத்தில் இது அருகியே காணப்படுகின்றதென்றும் பேச்சுமொழியில் இது தவிர்க்கப்படுகிறதென்றும் கிற்றல் (Kittel–A Grammar of the Kannada Language) கூறுவர். தமிழில் செயப்பாட்டு வினையில்லையென்றும், அதனிடத்தைப் பலவகையிலும் எடுக்கவல்ல ஒரு தொடர்வினை யமைக்கக்கூடுமாயினும், அவ் வினைவடிவம் அருகியே வழங்கப்பட வேண்டுமென்றும் போப் (G. U. Pope–A Handbook of the Ordinary Dialect of the Tamil Language) பேச்சுத் தமிழுக்கு ஒரு கைநூல் என்ற நூலில் கூறுவர். செயப்பாட்டுவினை, இந்தோ-ஐரோப் பிய மொழிகளில் இருக்கிறமாதிரித் தமிழில் இல்லை. அதனாலே தான், இலக்கணக்கொத்து காலம் வரையில், செயப்பாட்டு

வினை, பழந்தமிழிலக்கணகாரரால் சிறப்பாக எடுத்துக்கூறப் படவில்லை.

செயப்படு பொருளுக்குச் சிறப்புத்தரு நோக்கத்தாலும், கருத்தா தெரியாத நிலையிலும், கருத்தாவை அறிவிக்க வேண்டாத நிலையிலும் செயப்பாட்டுவினை யமைப்புக்களே மொழியில் இடம்பெறுகின்றன. செய்வினை வடிவமே செயப் பாட்டுவினைப் பொருளைத் தருதலே, பழந்தமிழில் பெருகிய வழக்கு.

> செயப்படு பொருளைச் செய்தது போலத்
> தொழிற்படக் கிளத்தலும் வழக்கியல் மரபே
>
> —தொல். சொல். 246

நன், சூ. 400-ம் இதே கருத்தை எடுத்துக் கூறுகிறது. இச் சோறு யான் கொடுத்தது என்பது எடுத்துக்காட்டு.

செயப்பாட்டு வினைப்பொருள், தமிழில் பலவகையாக உணர்த்தப்படுகிறதெனலாம்.

1. தமிழில் சில துணைவினைகள் வினைகளுக்குப் பின்னால் நிற் பதாலும் செயப்பாட்டு வினைப்பொருளை யுணர்த்தமுடிகிறது; தொழிற்பெயர்களுக்குப் பின்னும் இத்துணைவினைகள் நின்று இப்பொருளைத் தருகின்றன :—

வந்து ஆயிற்று; முடிந்து போயிற்று; கட்டல் முடிந்தது.

2. தமிழில் 'ஆல்' என்ற உருபு சேர்ந்து செயப்பாட்டுப் பொருள் புலப்படுகிறது :—

அது என்னால் உடைந்தது; அது அவனால் முடிந்தது.

3. துணைவினைகளின்றியே, பெயரெச்சமும் வினையாலணை யும் பெயரும் செயப்பாட்டுவினைப் பொருளையுணர்த்து கின்றன :—

உண்ட சோறு; காந்தி என்பவர்.

4. உண் என்ற பொருளையுடைய துணைவினை பெயரோடு சேர்வதால், இச் செயப்பாட்டுப் பொருள் அமைகிறது :—

கொலையுண்டான்; அடியுண்டான்.

செயவென் எச்சத்திற்குப் படு என்ற துணைவினையைச் சேர்த்து அமைக்கப்படும் வடிவம் செயப்பாட்டு வினையிடத்தைப் பலவகையிலும் எடுக்கவல்லது என்பர் போப். சொல்லப்பட்ட, சுட்டப்பட்ட, கூவப்பட்ட, பேசப்பட்ட, கூறப்பட்ட என்பன இடைக்காலத் தமிழ்ச் சாசனங்களிற் காணப்படும் செயப்பாட்டுவினை வடிவங்களிற் சில.

இந்தப் படு என்ற வழக்கு மிகப் பிற்காலத்து வழக்கு என்றும் முற்காலத்தில் இது வழக்குப் பெறவில்லையென்றும் கூறுவர். இக்கருத்து அவ்வளவு பொருந்துவதாக இல்லை. படு என்பது சேர்ந்து செயப்பாட்டு வினைப்பொருள் தருவது பழைய வழக்கேயாகும். தொல்காப்பியம் எழுத்ததிகாரம் முதலாம் சூத்திரமே, 'எனப்படுப' என்கிறது. எனவே, படு என்ற துணைவினை சேர்ந்து செயப்பாட்டுப்பொருள் தருதல் பழைய வழக்கேயாம்.

தொல்காப்பியம் செய்ப்பாட்டுவினை என்ற வகைபற்றி எதுவும் கூறவில்லை. மூன்றும் வேற்றுமையுருபு கருத்தாப் பொருளில் வரும் என்று அவர் கூறுவதால், செயப்பாட்டுவினை அவர்காலத்தில் இருந்திருக்கவேண்டும் என்பர் டாக்டர் P.S. சுப்பிரமணிய சாஸ்திரி. வீரசோழியம் செயப்பாட்டுவினையைக் கருமகாரகம் என்ற வடமொழிப் பெயரால் குறிப்பிடும். வினைப்பகுதியோடு அகரம் சேர்ந்து நிற்க, அதனைத் தொடர்ந்து படு வர, ஈற்றில் பாலறிகிளவி அமைவது கருமகாரகம் என வீரசோழியம்செப்பும். தொல்காப்பியம் நன்னூல் என்பன செயப்பாட்டுவினையைப்பற்றி எதுவுமே கூறாததை நோக்கும்போது, இங்குகூடப் பழைய தமிழின் நிலையை உணர வீரசோழியம் பெருமளவு உதவுவது புலனாகிறது. வீரசோழிய உரையில், பெருந்தேவனார் தகு என்பதும் படு என்பதுபோல வரும் என எடுத்துக்காட்டுவர் ; அறியத்

தகுவன் என உதாரணமுந் தருவர். இடைக்காலச் சாசன மொன்றில், பெறு என்பதும் இழித்தப் பெறுகுவதாகவும் என் பதில் படு என்பதுபோலச் செயப்பாட்டுப் பொருளைத் தரு கிறது. பிரயோக விவேகத்தார், இவ்வினையை உரையில் குறிப்பிடுவர். இலக்கணக் கொத்தே 78–ஆம் சூத்திரத்தில் முதன்முதல் செயப்பாட்டுவினையென்ற பெயரை வழங்கு கிறது. நன்னூலார் இந்த வினையை ஏன் குறிக்கவில்லை என்ற கேள்வி எழுகிறது. அறியப்பட்டான், அறியத் தகுவன் என்பன இரு சொற்கள் சேர்ந்து நிற்பன என்று அவர் கொண்டிருக்கலாம்.

8. எதிர்மறைவினை

தமிழில் எதிர்மறை என்பது ஒரு தனி வகையன்று. எல்லாவினைகளுமே உடன்பாடு எதிர்மறை என அமையலாம். அதனால் எதிர்மறையென்பது வினையின் ஒருபிரிவு என்று கொள்வதைவிட, அது வினையின் ஒருவகை அமைப்பு என்று கொள்ளலாம். உடன்பாட்டு வினைகளுக்கு, ஏவல், வியங் கோள், நிபந்தனை முதலிய வடிவங்கள் இருப்பதுபோலவே, எதிர்மறைக்கும் உண்டு. உடன்பாட்டுவினையோடு எதிர் மறையுணர்த்தும் இடைச்சொல் சேர, எதிர்மறைவினை யுண்டாகிறது.

தொல்காப்பியர் எதிர்மறைவினை பற்றி எடுத்துக்கூற வில்லை. ஆயின், அவர் காலத்தில் எதிர்மறை வழங்கிய தென்பது, பின்வரும் தொல்காப்பியச் சூத்திரங்களால் புல னாகும் :

எதிர்மறுத்து மொழியினுந் தத்தம் மரபின்
பொருள்நிலை திரியா வேற்றுமைச் சொல்லே

—தொல். சொல். 107

வன்புற வரூஉம் வினாவுடை வினைச்சொல்
எதிர்மறுத் துணர்த்தற் குரிமையு முடைத்தே

—தொல். சொல். 244

எச்ச உம்மையும் எதிர்மறை உம்மையுந்
தத்தமுள் மயங்கும் உடனிலை யிலவே

—தொல். சொல். 283

மேலும், தொல்காப்பியர், எழுத்ததிகாரத்தில் ஆகா, நவிலா, மிகா முதலிய எதிர்மறை வினைகளை வழங்குகிருர்.

எதிர்மறைப் பொருளசைகள் ஆ, அல், இல் என்பன. 'ஆவே எதிர்மறைக் கண்ணதாகும்' என்பர் நன்னூலார். இந்த ஆகாரம் அமைவதாலேயே எதிர்மறைப்பொருள் உண்டாகிறது. செய்வன்-உடன்பாடு; செய்யான்-எதிர் மறை. இவற்றுள் அன்சேரும் பொழுது உடன்பாட்டுப் பொருளும் ஆன்சேரும் பொழுது எதிர்மறைப்பொருளும் உண்டாகின்றன. சில வினைச் சொற்களில், எதிர்மறை விகுதியாகிய ஆகாரமும் பாலறிகிளவியின் உயிரும் ஒன்றி ஒருயிராய் நிற்றலுமுண்டு என்பர்.

$$\text{கொள்} + \text{ஆ} + \frac{\text{அன்}}{\text{ஆன்}} = \text{கொள்ளான்.}$$

$$\text{கொள்} + \text{ஆ} + \frac{\text{எம்}}{\text{ஏம்}} = \text{கொள்ளேம்.}$$

இந்த எதிர்மறை ஆகாரத்தை அகரம் என்றும் கொள்வர். தெலுங்கிலும் கன்னடத்திலும் அகரம் எதிர்மறை விகுதியாக வழங்குகிறது. அவ்வாறு கொண்டால், ஆகெட்டது என்று கூறத் தேவையில்லை. இத்தகைய உதாரணங்களில், எதிர் மறை விகுதியில்லையென்பர் அல்பிரட் மாஸ்ரர் முதலிய ஒரு சாரார். எதிர்மறை விகுதியின்றியே, எதிர்மறையுணர்த் துவது திராவிடமொழிகளின் இயல்பு என்பர் அவர்.

இந்த ஆகார விகுதிபெறும் எதிர்மறை வினைவடிவங்கள் காலம் உணர்த்துவதில்லை. எதிர்மறை ஆகாரம், காலங் காட்டு மிடைநிலையில்லா வினையோடு இயைவதால், வாரான், போகான் என்ற வடிவங்களைத் தோற்றுவித்து நிற்கும். இன்று வாரான், நாளை போகான் எனக்

காலம் உணர்த்தும் சொற்களை முன்பெற்றுவே, இவை காலம் புலப்படுத்த வல்லவையாகும். அதனால், எதிர்மறைவினை முக்காலத்திற்கும் பொது என்பர் சேனுவரையர், சங்கர நமச்சிவாயர் முதலிய இலக்கணகாரர். கால இடைநிலை பெருமல் எதிர்மறையிடைநிலை பெற்ற வினைகளையே அவ்வாறு குறிப்பர். கால இடைநிலையில்லாக் காரணத்தினுல், இவை முக்காலத்துக்கும் பொது எனக் குறிப்பினும், பெரும்பாலும் எதிர்காலத்திற்குரியவாய் வழங்குகின்றன. ஏனைய இறந்த கால, நிகழ் காலங்களுக்குரிய எதிர்மறை வினைகளில் கால இடைநிலைகளும் எதிர்மறைப் பொருளசைகளும் ஒருங்கேயுள்ளன. செய்திலன், உண்கின்றிலன் என்பன உதாரணங்கள். எதிர்கால வினைச் சொற்களில் மட்டும் இவை இவ்வாறு நிற்றலில்லை என்று போப் (G. U. Pope-A Grammar of the Ordinary Dialect of the Tamil Language) கூறுவர். எனவே, கால இடைநிலையில்லாத எதிர்மறை வினைவடிவங்கள், எதிர்காலத்தைக் குறிக்கும் வழக்கு வளர்ந்து வந்தது. ஆ விகுதிசேரும் எதிர்மறை வினைகள் முற்றுகவும் வரும்; எச்சமாகவும் வரும். பண்புச் சொற்களோடு வாராமை, போகாமை எனவரும். அல் விகுதி வினை முற்றிலேயே அமையும். இது அன், அள், அர், அ முதலிய குறுகிய முதலுடைய பாலறிகிளவிகளோடேயே சேர்கின்றன. அல், ஆ என்பன வினையடிகளோடு நேரே சேர்வதால், காலங்காட்டுமியல்பு இவற்றுக்கில்லை. இல் என்பது கால இடைகள் சேர்ந்துள்ள வினையமைப்போடு சேர்கின்றது. இல் என்பதைத் தொடர்ந்து, வினை முற்றில் பாலறிகிளவியமைகிறது.

சென்று + இல் + அன் = சென்றிலன்.
செல்கின்று + இல் + அன் = செல்கின்றிலன்.

மாட்டு என்ற துணைவினை, எதிர்மறைப் பொருளுணர்த்துமிடத்தில் பயின்று வழங்குவதை, இன்று காணலாம். சிலப்பதிகாரத்தில் கானல் வரியில், இது முதன் முதல் 'நம்மை மறந்தாரை நாம் மறக்கமாட்டேமால்' என்பதில்

காணப்படுகிறதெனலாம். இத் துணைவினை அப்பர் முதலி யோருடைய தேவாரங்களில் மாட்டேன், மாட்டீர் எனப் பலவாறு வழங்குகிறது. இடைக்காலத்தில் மாட்டுகின்றிலன் முதலிய கால இடைநிலை பெற்ற வடிவங்களும் காணப்படு கின்றன என்பர். கால இடைநிலை பெற்ற இத்தகைய வடிவங்கள் இன்று வழக்கிலில்லை. இடைக்காலத் தமிழில், இயலாமை அல்லது ஆற்றாமையைக் குறித்து நின்ற இவ் வடிவங்கள், இன்று வெறுமனே எதிர்மறையைக் குறிக்க மாட்டேன், மாட்டாய் முதலியனவாக வருகின்றன.

வீர சோழியத்தார் காலத்திற்கு முன்புள்ள தமிழ்ச் சாசனங்களிற் காணப்படும் எதிர்மறை வடிவங்கள் சில வருமாறு :—

1. எதிர்மறை எச்சங்கள்:

(அ) பெயரெச்சம் :—

வினைப் பகுதிக்குப் பின்வரும் விகுதிகளைச் சேர்த்த லினால் உண்டாகிறது:—

(i) ஆ:—
முட்டா; குறையா; மூவா; சாவா; கொள்ளா; பிழையா; எழா.

(ii) ஆத:—
வாடாத; கோடாத.

(ஆ) வினையெச்சம் :—

வினைப்பகுதிக்குப் பின்வரும் விகுதிகளைச் சேர்த்த லினால் அமைகிறது.

(i) ஆ:—
தளரா.

(ii) ஆது:—
வழுக்காது; செலுத்தாது; காட்டாது.

(iii) ஆமல்:—
முட்டாமல்.

(iv) ஆமை:—
கெடாமை; முட்டாமை; வழுவாமை.

(v) ஆமே:
ஊட்டாமே; வழுவாமே; கெடாமே; முட்டாமே.

2. எதிர்மறை வினைமுற்றுக்கள் :

அவை பின்வருமாறு அமைகின்றன:—

(i) வினைப்பகுதியோடு எதிர்மறை விகுதியாகிய ஆகாரம் சேர்தல்:—
செல்லா. இவை விலையும் ஒற்றியும் செல்லா.

(ii) பாலறிகிளவி வினைப்பகுதியோடு சேர்ந்து நிற்றல்:—
கொடோம்; அளவோம்; செய்யோம்; ஆராயோம் என்பன தன்மைப்பன்மை; அஞ்சான் என்பது படர்க்கை ஆண்பால்.

3. எதிர்றை வினையாலணையும் பெயர்கள் :

அவை பின்வருமாறு அமைகின்றன:—

(i) எதிர்மறை வினையெச்சத்தோடு பாலறிகிளவி சேர்தலினல் அமைகின்றன:—

படர்க்கை ஒன்றன்பால்:—
இருதது.

தன்மைப் பன்மை:—
கொடாதோம்; காட்டாதோம்.

படர்க்கை ஆண்பால்:—
இறக்காதான்.

படர்க்கைப் பலர்பால்:—
கருதாதவர்.

(ii) செய. என்ற வாய்பாட்டைத் தொடர்ந்து, துணைவினை, எதிர்மறை, பாலறிகிளவி என்பன வருதல்:—

தன்மைப் பன்மை :—

காட்டப்பெருதோம்; புள்ளி குத்துவிக்கப் பெருதோம்.

படர்க்கைப் பலர்பால்:—

ஏறப்பெருதார்.

படர்க்கை ஒன்றன்பால்:—

புள்ளி குத்துவிக்கப் பெருததது; தடுக்கப்பெருததது.

வீர சோழியத்தார் ஆன், ஆள், ஆர் ஆர்கள், ஆது, ஆ, இலன், இலள், இலர், இலர்கள், இலது, இல, ஆதொழி என்பன வினைக்குப்பின் தடைப்பொருளைக் குறிக்கச் சேர்க்கப்படுமென்பர். தன்மை முன்னிலை விகுதிகளையும் அலேன், அலை, அலன், அலர் முதலியவற்றையும் அவர் ஏன் கூறிற்றில ரென்பது விளங்கவில்லை. அந்நூல் உரைகாரர் ஆன் முதலிய ஆறும் எதிர்காலத்து வருமெனவும், ஏனை யாறும் தகரத்தின் பின்வரின் இறந்த காலத்தும் ககரத்தின் பின்வரின் நிகழ்காலத்தும் வருமெனவும் கூறுவர். அவர் காட்டும் உதாரணங்கள்:— நடவான், நடவாள், நடவார், நடவார்கள்; நடவாது, நடவா எனவும் நடந்திலன், நடந்திலள், நடந்திலர், நடந்திலர்கள், நடந்திலது, நடந்தில எனவும் நடக்கிலன், நடக்கிலள், நடக்கிலர், நடக்கிலர்கள், நடக்கில்து, நடக்கில என்றும் வரும். அவர் பின் வருந் தொடர்மொழிகளையும் உதாரணங்களாகத் தருவர் :— நடவாதொழி; நில்லாவழி; மாயாப் புகழ் என்றும் நடக்குதில்லை; நடப்பன வன்று என்றும், நில்லாதே போனன், வாராதேயிருந்தான் என்றும் வரும்.

வினையடிக்கு நேரில் பாலறிகிளவியைச் சேர்த்தும் ஒன்றன்பாலில் ஆது என்பதைச் சேர்த்தும் எதிர்மறைவினை யாக்கப்படும் என்று முதன் முதல் கூறியவர் வீரமாமுனிவரே.

இக்காலத்து, செய்யாய், செய்யீர் முதலிய முன்னிலை முற்றுக்களும் செய்யா, உண்ணு முதலிய எச்சங்களும் உடன்

பாட்டுவினை, எதிர்மறைவினை ஆகிய இரண்டிடத்தும் ஒரே உருவத்துடன் இருக்கின்றன. இலக்கணக் கொத்தாசிரியர், 'வல்லார் திறை கொடுப்பர்' முதலிய இடங்களில், வல்லார் முதலியன உடன்பாட்டுப் பொருளிலும் எதிர்மறைப் பொருளிலும் வருமென்பர். இவற்றை ஆழ்ந்து நோக்கின், இவை உடன்பாட்டு வினையா எதிர்மறைவினையா என்றது வழங்குமிடத்தாலும் ஒலிக்குறிப்பு வகையாலுமே அறியப்பட வேண்டும் என்பது புலப்படும்.

ஆறுமுக நாவலரின் இலக்கணச் சுருக்கம் எதிர்மறை வினைப்பற்றி விளக்கமாக கூறுகிறது. எதிர்மறைக் குறிப்பு முற்றுக்கள் அல், இல் என்னும் எதிர்மறைப் பண்படியாகத் தோன்றிப் பால்காட்டும் விகுதிகளைப் பெற்று வருவனவாம்.

படர்க்கை :—அல்லன், அல்லள், அல்லர், அன்று, அல்ல, அல்லன; இலன், இலள், இலர், இன்று, இல, இல்லன.

தன்மை :— அல்லேன்; அல்லேம்; இலேன்; இலேம்.

முன்னிலை :—அல்லாய்: அல்லிர்; இலாய்; இலீர்.

இன்மை என்பது ஒரு பொருளினது உண்மைக்கும் ஒரு பொருளை உடைமைக்கும் மறுதலை. உண்மை உளதாதல். அன்மையென்பது ஒரு பொருள் சுட்டியதொரு பொருளா தற்கு மறுதலை; பிறிது பொருளாதலைக் காட்டும்.

முன்னிலையேவலொருமைத் தெரிநிலைவினை முற்றுக்களில் அல், ஏல், ஆல் என்னும் மூன்று விகுதிகளும் எதிர்மறை யிடத்துவரும்:—உண்ணல், உண்ணேல், மருல் என்பன எடுத்துக்காட்டுகள். எதிர்மறையேவலொருமை வினைமுற்றுக் கள் உண்ணாதே, உண்ணாதி என எதிர்மறை ஆகார இடைநிலையின்முன் தகரவெழுத்துப்பேற்றோடு ஏகார விகுதி இகர விகுதிகளுள் ஒன்று பெற்றும் வரும். எதிர்மறையேவற் பன்மை வினை முற்றுக்கள் உண்ணன்மின், நடவன்மின் எனப் பகுதிக்கும் மின் விகுதிக்குமிடையே எதிர்மறை அல் இடைநிலை பெற்றுவரும்.

எதிர்மறை வியங்கோள் வினைமுற்றுக்கள் மறவற்க, உண்ணற்க எனப் பகுதிக்குங் ககர விகுதிக்கும் இடையே எதிர்மறைஅல் இடைநிலை பெற்றுவரும். அன்றியும் மகனெனல் என்னுமிடத்து மகனென்றும் சொல்லற்க எனவும் மரீஇய தொரால் என்னுமிடத்து மரீஇய தொருவற்க என்றும் பொருள்பட நிற்றலால், அல், ஆல் இரண்டும் எதிர்மறை வியங்கோள் விகுதிகளாய் வரும் எனத் தெரியவருகிறது.

எதிர்மறைத் தெரிநிலைவினைப் பெயரெச்சங்கள் எதிர்மறை ஆகார இடைநிலையுந் தகர எழுத்துப்பேற்ருேடு கூடிய அகர விகுதியும் பெற்று வருவனவாம். செய்யாத என்பது செய்த, செய்கின்ற, செய்யும் என்னும் மூன்றற்கும் எதிர்மறையாம். இவ்வெதிர்மறைப் பெயரெச்சம் செய்கலாத, செய்கிலாத என அல், இல் என்னும் இடைநிலைகளை ஆகாரச் சாரியையோடு பெற்றுவரும்:— உண்ணுத குதிரை, நடவாத குதிரை. உண்ணுக் குதிரை, நடவாக் குதிரை என ஈற்றுயிர் மெய்கெட்டும் வரும். எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சங்கள் அல், இல் என்னும் பண்படியாகத் தோன்றி, ஆகாரச் சாரியையுந் தகர வெழுத்துப்பேற்ருேடு கூடிய அகர விகுதியும் பெற்று வருவனவாம்:—அல்லாத குதிரை, இல்லாத பொருள். அல்லாக் குதிரை, இல்லாப் பொருள் என ஈற்றுயிர் மெய் கெட்டும் வரும்.

எதிர்மறைத் தெரிநிலை வினையெச்சங்கள் எதிர்மறை ஆகார இடைநிலையோடு உ, மல், மே, மை, மைக்கு, கால், கடை, வழி, இடத்து என்னும் விகுதிகளைப் பெற்றுவருவன. செய்யாது என்பது செய்து, செய்பு, செய்யா, செய்யூ என்பனவற்றிற்கு எதிர்மறை. செய்யாது என்பது செய்கலாது, செய்கிலாது என அல், இல் என்னும் விகுதிகளை ஆகாரச் சாரியையோடு பெற்றும்வரும். செய்யாமல் என்பது செய என்பதற்கு எதிர்மறையாம். செய்யாமல், செய்யாமே, செய்யாமை, செய்யாமைக்கு என்னும் நான்கும் செயற்கு, செய்யிய, செய்யியர் என்பனவற்றிற்கும் செயற்கு என்பதுபட வரும் செயவெனச்சத்திற்கும் எதிர்மறை. செய்யாக்கால்,

செய்யாக்கடை, செய்யாவழி, செய்யாவிடத்து என்னும் நான்கும் செயின் என்பதற்கும் அப்பொருள்பட வருவன வாகிய செய்தால், செய்தக்கால், செய்தக்கடை, செய்தவழி, செய்தவிடத்து என்பனவற்றிற்கும் எதிர்மறையாம். எதிர் மறைக் குறிப்பெச்சங்கள் அல், இல் என்னும் எதிர்மறைப் பண்படியாகத் தோன்றி றி, து, மல், மே, மை, ஆல், கால், கடை, வழி, இடத்து என்னும் விகுதிகளைப்பெற்று வருவன.

உடன்பாட்டுத் தெரிநிலை வினைமுற்றுக்களே, அல் என்னும் பண்படியாகத் தோன்றிய எதிர்மறைக் குறிப்பு வினையோடாயினும் இல்லையென்னும் எதிர்மறைவினைக் குறிப் போடாயினுங்கூடி, ஒரு சொல்லின் தன்மை எய்தி, எதிர் மறைத் தெரிநிலை வினைமுற்றுக்களாக வருகின்றன. முயங்கி னேன் அல்லேன் என்ற வடிவம் சங்க காலத்திலேயே காணப்படுகிறது. சங்க காலத்திற் காணப்படும் பெயரல் என்ற வடிவம், பெயர்வாய் அல்லாய் என்ற வடிவத்திலிருந்து செய்யாய் என்பதிலிருந்து செய் வந்ததுபோல, வந்திருக்க லாம் என்பர் டாக்டர் P. S. சுப்பிரமணிய சாஸ்திரி. உண்டா யல்லை, வந்தானில்லை, வந்தாயில்லை என்பனவும் எதிர்மறை யுணர்த்தும் வடிவங்களே.

இன்றைய பேச்சுத் தமிழில், வரவில்லை, வீரமாட்டான் முதலிய வடிவங்களே, பெரும்பாலும் எதிர்மறையை உணர்த்துகின்றன. சிலப்பதிகாரத்திலுள்ள மறக்கமாட்டேம், வீரசோழிய உரையிலுள்ள நடக்குதில்லை என்ற வடிவங்கள் இவற்றுக்கு முன்னேடியாக அமைந்தபோதிலும், இக்காலத் திலேயே, இம்முறை செல்வாக்குப் பெற்று விளங்குகிற தெனலாம். கன்னட மொழியிலும், பழைய எதிர்மறை வினைகள் வழங்குதலொழிந்து, புதிய முறையாக, இத்தகைய தொடர்கள் பேச்சு வழக்கிலிடம் பெற்றுள்ளன என்று கிற்றல் (Kittel-A Grammar of the Kannada Language) கூறுவர்.

9. செயப்படுபொருள் குன்றிய வினையும் செயப்படுபொருள் குன்றாவினையும்

செயப்படுபொருள் குன்றியவினை, செயப்படுபொருள் குன்றாவினை என்ற பாகுபாடு இலக்கணச் சுருக்கத்திற் பின் வருமாறு விளக்கப்படுகிறது. செயப்படுபொருள் குன்றிய வினையாவது, செயப்படுபொருளை வேண்டாது வரு முதனிலை அடியாகத் தோன்றிய வினையாம். நடந்தான், வந்தான் என்பன உதாரணங்கள். இவை, இதை நடந்தான், இதை வந்தான் எனச் செயப்படுபொருளேற்று வரா. செயப்படு பொருள் குன்றாவினையாவது, செயப்படுபொருளை வேண்டி நிற்கு முதனிலை அடியாகத் தோன்றிய வினையாம். உண்டான், கொடுத்தான் என்பன உதாரணங்கள். இவை, சோற்றையுண்டான், பொருளைக் கொடுத்தான் எனச் செயப்படுபொருளேற்று வரும்.

செயப்படுபொருள் குன்றிய வினையிலிருந்து செயப்படு பொருள் குன்றாவினையை வேறுபடுத்துதற்கான விதிகள் வகுப்பது சுலபமல்ல. வினைச்சொல்லின் அமைப்பையும் அது வழங்கும் சந்தர்ப்பத்தையும் ஒட்டியே, அதன் தன்மையை உணரலாம்.

முதலாம் வினையாக்கமுறையைச் சேர்ந்த வினையடிகள் :

முதலாம் பிரிவு :

இப்பிரிவைச் சேர்ந்த வினையடிகள், இறந்தகாலத்துக்கு -ந்த்- என்பதையும் எதிர்காலத்திற்கு -வ்- என்பதையும் கொள்கின்றன. நிகழ்பு-எதிர்வுக்கு, வினையடியோடு பிற சேர்வதில்லை.

அடிச்சொல்	இறந்தகால வடிவம்	எதிர்கால வடிவம்	நிகழ்பு-எதிர்வு

செயப்படுபொருள் குன்றியவினை

செல்	சென்ற்–	செல்வ்–	செல்–
புரை	புரைந்த்-	புரைவ்-	புரை-
நிமிர்	நிமிர்ந்த்–	நிமிர்வ்–	நிமிர்-
புகு	புகுந்த்-	புகுவ்-	புகு–
வாழ்	வாழ்ந்த்-	வாழ்வ்-	வாழ்–

செயப்படுபொருள் குன்றாவினை

எறி	எறிந்த்-	எறிவ்-	எறி-
கொள்	கொண்ட்-	கொள்வ்-	கொள்-
வரை	வரைந்த்-	வரைவ்-	வரை-
கடை	கடைந்த்-	கடைவ்-	கடை-
சூழ்	சூழ்ந்த்-	சூழ்வ்-	சூழ்-

இரண்டாம் பிரிவு :

இப்பிரிவைச் சேர்ந்த வினையடிகளை மூன்றாக வகுக்கலாம்:-

(அ) இவ் வகையைச் சேர்ந்த வினையடிகள் மெல்வினை வடிவங்களே கொள்கின்றன. முதலாம் பிரிவைச் சேர்ந்த வினையடிகள், -ந்த்- என்பது கொண்டு இறந்தகாலங்காட்ட, இவ்வகையின –த்– கொண்டு இறந்தகாலங் காட்டுவன. இவை பெரும்பாலும் செயப்படுபொருள் குன்றிய வினைகளே:-

செய்	செய்த்–	செய்வ்–	செய்-
உய்	உய்த்-	உய்வ்-	உய்-

(ஆ) இவ் வகையைச் சேர்ந்த வினையடிகள் எதிர் காலத்தைக் காட்ட வகரத்திற்குப் பதில் பகரம் கொள்ளு கின்றன. இந்த வினையடிகளிற் சில, நிகழ்பு–எதிர்வைக் காட்டுவதற்கு -க்- கொள்ளுகின்றன. முதலாம் வகையைச் சேர்ந்த வினையடிகளைப்போல, இவையும் இறந்தகாலத்தைக் காட்டத் தகரமெய்யே பெறுகின்றன. ஆனால், இத்தகரம்

டகரம் அல்லது றகரமாகப் புணர்ச்சி விகாரம் பெற்றே காணப்படுகிறது. அமைப்பில், மெல்வினை வடிவங்களாக இருந்தபோதும், இவை பெரும்பாலும் செயப்படுபொருள் குன்றுவினைகளாகவே காணப்படுகின்றன :-

பூண்	பூண்ட்-	பூண்ப்-	பூண்-
காண்	கண்ட்-	காண்ப்-	காண்-
வில்	விற்ற்-	விற்ப்-	விற்க்-
என்	என்ற்-	என்ப்-	என்-

நில் என்ற வினையடி இறந்த காலத்தைக்காட்ட -ந்த்- பெறுகிறது :-

நில்	நின்ற்-	நிற்ப்-	நிற்க்-

(இ) இவ் வகையைச் சேர்ந்த வினையடிகள் ஈற்றொற் றிரட்டி, இறந்தகாலங் காட்டுவன. இந்த மெல்வினை வடிவங் கள் பெரும்பாலும் செயப்படுபொருள் குன்றிய வினைகளாகும்:-

படு	பட்ட்-	படுவ்-	[illegible]
சுடு	சுட்ட்-	சுடுவ்-	சுடு-
உறு	உற்ற்-	உறுவ்-	உறு-
பெறு	பெற்ற்-	பெறுவ்-	பெறு-
விடு	விட்ட்-	விடுவ்-	விடு-

மூன்றும் பிரிவு :

இப்பிரிவு வினையடிகள் இறந்தகாலத்திற்கு -ந்த்-, எதிர் காலத்திற்கு -ப்ப்-, நிகழ்பெதிர்வுக்கு -க்க்- என்பன கொள் ளும். எனவே, இறந்தகாலந் தவிர, ஏனையவை யாவும் வல் வினை வடிவங்களாக இருக்கின்றன :-

செயப்படுபொருள் குன்றியவினை

பிற	பிறந்த்-	பிறப்ப்-	பிறக்க்-
இரு	இருந்த்-	இருப்ப்-	இருக்க்-

செயப்படுபொருள் குன்றுவினை

இக	இகந்த்-	இகப்ப்-	இகக்க்-
இற	இறந்த்-	இறப்ப்-	இறக்க்-

பய	பயந்த்-	பயப்ப்-	பயக்க்-
அள	அளந்த்-	அளப்ப்-	அளக்க்-

நான்காம் பிரிவு :

இப்பிரிவைச் சேர்ந்த வினைவடிவங்களிற் பெரும்பாலன செயப்படுபொருள் குன்றுவினைகளாம். இந்தச் செயப்படு பொருள் குன்றுவினைகளிற் சில, இயக்கு வினைகளாகவும் வரும். இறந்தகாலம் -த்த்-; எதிர்காலம் -ப்ப்-; நிகழ்பு-எதிர்வு -க்க்-. இவை யாவும் வல்வினை வடிவங்களே.

வை	வைத்த்-	வைப்ப்-	வைக்க்-
கொடு	கொடுத்த்	கொடுப்ப்-	கொடுக்க்-
குறி	குறித்த்-	குறிப்ப்-	குறிக்க்-
எடு	எடுத்த்-	எடுப்ப்-	எடுக்க்-
வகு	வகுத்த்-	வகுப்ப்-	வகுக்க்-
விழி	விழித்த்-	விழிப்ப்-	விழிக்க்-
பிழை	பிழைத்த்-	பிழைப்ப்-	பிழைக்க்-

இங்கு ஒவ்வொரு வினையடியும் மெல்வினை வடிவம் வல்வினை வடிவம் இரண்டும் கொள்கின்றன. மெல்வினை வடிவம் செயப்படுபொருள் குன்றிய வினையாகவும் வல்வினை வடிவம் செயப்படுபொருள் குன்றுவினையாகவும் பொதுவாகக் காணப் படுகின்றன.

எரி	எரித்த்-	எரிப்ப்-	எரிக்க்-
	எரிந்த்-	எரிவ்-	எரி-
தீர்	தீர்த்த்-	தீர்ப்ப்-	தீர்க்க்-
	தீர்ந்த்-	தீர்வ்-	தீர்-
அறு	அறுத்த்-	அறுப்ப்-	அறுக்க்-
	அறுந்த்-	அறுவ்-	அறு-
உய்	உய்த்த்-	உய்ப்ப்-	உய்க்க்-
	உய்ந்த்-	உய்வ்-	உய்-
பணி	பணித்த்-	பணிப்ப்-	பணிக்க்-
	பணிந்த்-	பணிவ்-	பணி-.

நின என்ற வினையடி தனது மெல்வினை வடிவம் வல்வினை வடிவம் இரண்டிலும் செயப்படுபொருள் குன்றுவினையாக இருக்கிறது.

இரண்டாம் வினையாக்கமுறையைச் சேர்ந்த வினையடிகள் :

இவ்வினையாக்க முறையைச் சேர்ந்த வினையடிகள் இறந்தகாலங் காட்ட இகரமும் எதிர்காலங் காட்ட வகரமும் கொள்கின்றன. வினையடியின் பொருள் கொண்டே, வினை செயப்படுபொருள் குன்றியவினையா செயப்படுபொருள் குன்று வினையா என்ற முடிவுக்கு வரலாம்.

கு, டு, று, என்ற ஈறுகளையுடைய வினையடிகள் ஈற்றெற்றிரட்டி செயப்படுபொருள் குன்று-இயக்கு வினைகளாகின்றன :-

ஆகு—ஆக்கு; ஓடு—ஓட்டு; போகு—போக்கு;
ஏறு—ஏற்று; கூடு—கூட்டு.

பின்வரும் வினையடிகள் ஈற்றெழுத்துக்கு அயலெழுத்தான மெல்லெழுத்தை வல்லெழுத்தாக்கிச் செயப்படுபொருள் குன்று-இயக்கு வினைகளாகின்றன :-

நீங்கு—நீக்கு; இறங்கு—இறக்கு;
சுருங்கு—சுருக்கு; திருந்து—திருத்து;
முழங்கு—முழக்கு.

10. இயக்குவினைகள்

இயக்குவினைகள் இரண்டுவிதமாக அமைகின்றன :—

1. செயப்படுபொருள்-குன்று-இயக்குவினை வடிவம்.
2. தனி இயக்குவினை வடிவம்.

இயக்குவினை பிறவினையென்றும் பெயர் பெறும். தன்வினை ஆத்மனேபதத்திற்கும் பிறவினை பரஸ்மைபதத்திற்கும் நேரிடையானவையென்று கால்டுவெல் கூறுவது பொருந்தாது. வினையடியால் உணர்த்தப்படும் செயலைத் தான் செய்

தல் தன்வினை, பிறர் செய்தல் பிறவினையெனலாம். சங்கதத்தில் ஒரே வினையடி ஆத்மனேபதம் பரஸ்மைபதம் ஆகிய இரண்டினது விகுதிகளையும் கொள்ளும். செயலின் பயன் செய்தவரை யடையும்போது ஆத்மனேபதமும், செயலின் பயன் செய்தவர் தவிர்ந்த பிறரையடையும்போது பரஸ்மைபதமும் வருகின்றன. செயப்படுபொருள் கொள்கிறதா அல்லவா என்பதைப் பொறுத்துத் தன்வினை செயப்படுபொருள் குன்றிய வினையாகவும் செயப்படுபொருள் குன்றாவினையாகவும் அமையும். வறுமை நோக்கின்று என்பதில், நோக்கின்று என்ற தன்வினை செயப்படுபொருள் குன்றாவினையாக வருகிறது. செல்லாமோதில் சில்வளை விறலி என்பதில் செல்லாமோ என்ற தன்வினை செயப்படுபொருள் குன்றிய வினையாக வருகிறது. தன்வினை-பிறவினை என்ற தமிழிலக்கணகாரர் பாகுபாடு செயப்படுபொருள் குன்றியவினை-செயப்படுபொருள் குன்றாவினைக்கு நேரிடையானது என்ற கால்டுவெல் கருத்து ஏற்றுக்கொள்ளக் கூடியதன்று என்பதற்கு, டாக்டர் P. S. சுப்பிரமணிய சாஸ்திரி இந்த விளக்கம் தருவர்.

தன்வினை-பிறவினை என்ற சொற்களின் தோற்றுவாய், தொல்கார்ப்பியர் தன்பாலானும் பிறன்பாலானும் என்று கூறுவதில் அமைந்திருக்கிறதெனலாம்.

> இதுசெயல் வேண்டும் என்னுங் கிளவி
> இருவயி னிலையும் பொருட்டா கும்மே
> தன் பாலானும் பிறன் பாலானும்
>
> தொல். சொல். சூ. 243

வீரசோழியம் தாதுப்படலம் 6-ன் உரையில், பெருந்தேவனார், தன்வினைக்குக் கேவல தாது என்றும் பிறவினைக்குக் காரித தாது என்றும் பெயரிட்டழைப்பர். காரித தாது என்ற சங்கதப் பெயரை விரும்பாததனாற்போலும், நன். சூ. 138, பிறவினையை ஏவல்வினையென்கிறது. எனவே, ஏவல்வினையென்று, இவற்றை வகுத்துப் பெயரிட்டவர்களில் முதல்வர்

வீரமாமுனிவரே என்ற கால்டுவெல்லின் கூற்றும் தவறுனது என டாக்டர் P. S. சுப்பிரமணிய சாஸ்திரி எடுத்துக் காட்டுவர்.

பணிவித்தால், செய்வித்தான், அறுப்பிப்பான் என்னுஞ் சொற்களில், வி, பி என்பன வினையடியோடு நேரே சேர்கின்றன. ஆக்குவித்தால், அட்டுவித்தால் முதலிய சொற்களில், வி, பி என்பன ஆகு, அடு முதலிய வினையடிகள் திரிந்த ஆக்கு, அட்டு முதலிய பிறவினைப்பகுதிகளோடு சேர்கின்றன. எனவே, ஆக்குவித்தால், அட்டுவித்தால் என்பன இரட்டைப் பிறவினைகளெனலாம். இத்தகைய உதாரணங்களைக் கவனித்ததனுற்போலும், வீரசோழியம் தாதுப்படலம் 6-வது செய்யுள், ஆக்கு, அட்டு முதலியவை காரிதம் என்றும் அவற்றைத் தொடர்ந்து வி, பி, சேர்ந்தால், அவை காரிதக் காரிதம் என்றும், வி, பி, இருமுறை சேர்ந்தால், அவை காரிதக் காரிதக் காரிதம் என்றும் கூறும். ஆனுல், வினையடியோடு நேரே வி, பி சேர்ந்து பிறவினையமைவதை அவர் அவதானித்ததாகத் தெரியவில்லை.

இக்குறையை நீக்குவதற்காகப் போலும் நன்னூல்,

செய்யென் வினைவழி விப்பி தனிவரிற்
செய்வியென் னேவ லிணையி னீரேவல்

(நன். சூ. 138) என்கிறது.

காரிதக் காரிதக் காரிதம் பற்றி நன்னூலார் கூறவில்லை. இலக்கணவிளக்கம் 44-ஆம் சூத்திரத்தில், வி, பி, சேர்ந்து ஏவல் அமைவதுபற்றி நன்னூலாருடன் உடன்பட்டு, அதே சூத்திர உரையில், ஈரேவல் என்று ஒன்று கொள்வது அவசியமில்லையென்கிறது. பிரயோக விவேகம் 35-வது சூத்திரம் காரிதம் என்றே பிறவினைக்குப் பெயரிட்டு, அச்சூத்திர உரையில் வினைப்பகுதியின் ஈற்றெற்றிரட்டியும் காரிதம் தோன்றுமென்கிறிது.

தன்வினை-பிறவினையென்ற பெயர்களும், பாகுபாடும் விளக்கமும் முதன்முதல் இலக்கணக்கொத்திலேயே காணப்

படுகின்றன. நச்சினார்க்கினியர் தொல். சொல். 226-ன் உரையில், பிறவினைவிகுதி வி, பி, என்பனவல்ல, இகரமே என்கிறார். பிற திராவிட மொழிகளுடன் தமிழை ஒப்பிட்டு ஆராய்ந்த கால்டுவெல்லும் இகரமே பிறவினைவிகுதியென்ற முடிவுக்கு வந்திருக்கிறார். இன்றைய பேச்சுத் தமிழில், பாடுவித்தேன், கட்டுவித்தேன் என்பனவற்றுக்குப்பதிலாகப் பாடச்செய்தேன், கட்டப்பண்ணினேன் என்பன வழங்குகின்றன.

வீரசோழியத்தார் காலத்திற்கு முந்திய தமிழ்ச் சாசனங்களிற் காணப்படும் இயக்குவினை வடிவங்கள் சில வருமாறு :-

செயப்படுபொருள்குன்ற—இயக்குவினைகள்

ஒரே வினைச்சொல், ஒரு சந்தர்ப்பத்தில் செயப்படு பொருள் குன்றுவினையாகவும் இன்னொரு சந்தர்ப்பத்தில் இயக்குவினையாகவும் வழங்கவல்லதாயின், அது செயப்படு பொருள் குன்ற-இயக்குவினையெனப்படும். அவை பின் வருமாறு அமைவன :—

(அ) காலங்காட்டும் -த்-, -க்-, -ப்- என்பனவற்றை இரட்டுவதன் மூலம், இந்த வடிவம் அமைகிறது. முதலாம் வினையாக்க முறையிலுள்ள ஐந்தாம் பிரிவு இத்தன்மை யானது. முதலாம் வினையாக்க முறையின் முதலாம் வகையைச் சேர்ந்த பின்வரும் வடிவங்கள், அவ்வகைக்கு இயல்பான வடிவங்களிலிருந்து வேறுபட்டு இயக்குவினைப் பொருளை வற்புறுத்துவன. தகரமெய்யை இரட்டிப்பதால் மாத்திரமன்றி, ஈற்றொற்றிரட்டியும் இறந்தகாலங் காட்டுவது இவ்வினையடிகளின் இயல்பாகும்.

உகு—உகுத்த்-; படு—படுத்த்-;
அறு—அறுத்த்-; கெடு—கெடுத்த்-.

(ஆ) முதலாம் வினையாக்க முறையைச் சேர்ந்த வினையடிகளுக்கு -த்த்- என்பதைச் சேர்க்கச் செயப்படுபொருள் குன்ற-இயக்குவினை வடிவங்கள் தோன்றுகின்றன. இவை

இரண்டாம் வினையாக்க முறையைச் சேர்ந்த இயக்குவினைப் பகுதிகளாக அமைகின்றன.

சார்—சார்த்த்–; செல்—செலுத்த்–.

இரண்டாவது உதாரணத்தில், வினையடிக்கும் இயக்கு வினை விகுதியாகிய –த்த்– என்பதற்கு மிடையில் உகரம் தோன்றுகிறது.

பின்வரும் வடிவங்களில் –த்த்–, –ற்ற்- ஆக மாறுகிறது :—

அகல்+த்த்=அகற்ற்-

இயல்+த்த்=இயற்ற்-

(இ) வினையடியின் ஈற்றெழுத்திரட்டுவதால், செயப்படு பொருள் குன்றா—இயக்குவினைகள் அமைகின்றன.

(ஈ) வினைப்பகுதியின் ஈற்றெழுத்துக்கு அயலிலுள்ள மெல் லெழுத்தை வல்லெழுத்தாக்குவதால், செயப்படுபொருள் குன்றா—இயக்குவினைகள் அமைகின்றன.

தனி இயக்குவினைகள்

வினையடிக்கு, வி, பி, ப்பி என்பவற்றைச் சேர்க்கத் தனி இயக்குவினைகள் அமைகின்றன. வ், ப், ப்ப் என்பவற்றை முறையே சேர்த்து எதிர்காலங் காட்டும் வினையடிகள் முறையே, வி, பி, ப்பி என்பவற்றைச் சேர்த்து இயக்குவினை களாகின்றன. ண, ன முன்-பியும் உயிர் இடை முன்-வியும் -ப்பியும் வருகின்றன. கொடுப்பித்து எனப் பதிற்றுப்பத் திலும், கற்பித்தான் எனக் கலித்தொகையிலும் பிறப்பித் தோன் எனப் பரிபாடலிலும் வருகின்றன.

முதலாம் வினையாக்க முறையைச் சேர்ந்த வினையடிகள் போலப் பல்வேறு காலங்காட்டும் வடிவம்பெறும் வினையடிகள் வல்வினைவடிவங்கள் கொள்கின்றன :—

வி :—

செய்வி	செய்வித்த்-	செய்விப்ப்-	செய்விக்க்-
ஊட்டுவி	ஊட்டுவித்த்-	ஊட்டுவிப்ப்-	ஊட்டுவிக்க்-

அட்டுவி	அட்டுவித்த்-	அட்டுவிப்ப்-	அட்டுவிக்க்-
குடைவி	குடைவித்த்-	குடைவிப்ப்-	குடைவிக்க்-

-பி :—

நிற்பி	நிற்பித்த்-	நிற்பிப்ப்-	நிற்பிக்க்-
தின்பி	தின்பித்த்-	தின்பிப்ப்-	தின்பிக்க்-
கற்பி	கற்பித்த்-	கற்பிப்ப்-	கற்பிக்க்-
உண்பி	உண்பித்த்-	உண்பிப்ப்-	உண்பிக்க்-

-ப்பி :—

எடுப்பி	எடுப்பித்த்-	எடுப்பிப்ப்-	எடுப்பிக்க்-
அமைப்பி	அமைப்பித்த்-	அமைப்பிப்ப்-	அமைப்பிக்க்-
வைப்பி	வைப்பித்த்-	வைப்பிப்ப்-	வைப்பிக்க்-
எரிப்பி	எரிப்பித்த்-	எரிப்பிப்ப்-	எரிப்பிக்க்-

இறந்தகால வினையெச்சங்கள் :

செய்வித்து; எடுப்பித்து; அமைப்பித்து; புதுக்குவித்து.

திருநந்தவனஞ் செய்வித்து; திருக்கோயில் எடுப்பித்து; கோயில் புதுக்குவித்து.

இறந்தகாலப் பெயரெச்சங்கள் :

செய்வித்த; எழுந்தருளிவித்த; குடைவித்த; எடுப்பித்த.

செல்வநாராயணன் செய்வித்த முகமண்டபம்; தேவச் சானி தான் எடுப்பித்த தளிக்கு; சாத்தன் பழியிலி குடைவித்த கோயில்.

செயவெனெச்சம் :

அட்டுவிக்க; ஊட்டுவிக்க.

பெருமக்களே அட்டுவிக்கக் கடவர்; இப்பள்ளி ஆள் வாரே ஊட்டுவிக்க வைத்தோம்.

வினைமுற்றுக்கள் :

இந்தகாலம் :

தன்மை ஒருமை : செய்வித்தேன்.

படர்க்கை ஆண்பால் : செய்வித்தான்.

பெண்பால் : செய்வித்தாள்.

மரியாதைப் பன்மை : புதுக்குவித்தார்.

பலர்பால் : எடுப்பித்தார்.

ஒன்றன்பால் : செய்வித்தது.

எதிர்காலம் :

தன்மைப்பன்மை : ஊட்டுவிப்போம் ; வைப்பிப்போம் ; எரிப்பிப்போம்.

படர்க்கை பலர்பால் : ஊட்டுவிப்பார்; அட்டுவிப்பார்கள்.

ஒன்றன்பால் : ஊட்டுவிப்பது; எரிப்பிப்பது.

11. கூட்டுவினையும் துணைவினையும்

இரண்டு அடிச்சொற்கள் சேர்ந்து அல்லது பெயரும் வினையடியும் சேர்ந்து கூட்டுவினை அமைகின்றது. முன் நிற்கும் சொல் எவ்வித வேறுபாடுமற்றுப் பின் நிற்குஞ் சொல்லோடு பிணைந்து நிற்பதால், உச்சரிப்பிலும் பொருளிலும் கூட்டுவினை ஒருமைத்தன்மை பெறுகின்றது. பெயர்வழிக் கூட்டுவினை, வினைவழிக் கூட்டுவினை என அதை இரண்டாக வகுக்கலாம்.

வினைவழிக் கூட்டுவினை :

முன் நிற்குஞ் சொல் செயலைக் குறிக்கும் வினையடியாக இருக்கும் :—

இறந்தகாலப் பெயரெச்சம் :—

விடுதந்த.

செயவெனெச்சம் :—

போதர.

பெயர்வழிக் கூட்டுவினை :

முன் நிற்குஞ் சொல் பெயரடியாக அல்லது சாதாரண பெயராக இருக்கும். பெயராகவும் வினையாகவும் வழங்க வல்ல அடிச்சொல் பெயரடியெனப்படுகிறது. பெயருக்கு வினையடியைச் சேர்க்கும் நோக்கம் பெயர்த்தன்மையை மாற்றி வினைத்தன்மையை ஏற்படுத்துவதே. சில இடங்களில், பெயர்ச்சொல்லின் பொருள் வேறுபடுதல் அல்லது பலப்படுதலும் உண்டு.

செய் :

இறந்தகால வினையெச்சம் :—
வலஞ்செய்து; இறையிலிசெய்து; தேவதானஞ்செய்து; ஏரிப்பட்டிசெய்து; சிலாலேகைசெய்து.

இறந்தகாலப் பெயரெச்சம் :—
தேவபோகஞ் செய்த.

நிகழ்காலப் பெயரெச்சம் :—
வாரியஞ் செய்கின்ற.

எதிர்மறை வினையெச்சம் :—
வினியோகஞ் செய்யாது.

செயவெனெச்சம் :—
விண்ணப்பஞ்செய.

அஃறிணை ஒன்றன்பால் இறந்தகால வினைமுற்று :—
ஏரிப்பட்டி செய்தது.

பலர்பால் இறந்தகால வினையாலணையும் பெயர்கள் :—
விரோதஞ் செய்தார்; வினியோகஞ் செய்தார்.

பலர்பால் எதிர்கால வினையாலணையும் பெயர் :—
பணிசெய்வார்.

இடு :

செயவெனெச்சம் :—
தண்டம் இட.

இறந்தகால வினையெச்சம் :—
தண்டம் இட்டு; பெயரிட்டு; உள்ளிட்டு.

இறந்தகாலப் பெயரெச்சம் :—
உள்ளிட்ட.

படு :

இறந்தகால வினையெச்சம் :—
தண்டப்பட்டு; தமிழ்ப்படுத்தி.

இறந்தகாலப் பெயரெச்சம் :—
முற்பட்ட; அகப்பட்ட; மேற்பட்ட; உட்பட்ட; துணை பட்ட.

சில இடங்களில் பெயர்ச்சொல்லுக்கு முன்னால், வினா வடியாகிய எகரம் அல்லது சுட்டடியாகிய இகரம் வருகிறது :—

எப்பேர்ப்பட்ட; எவ்வகைப்பட்ட; இவ்வகைப்பட்ட.

தன்வினை செயவெனெச்சம் :—
கனற்பட; உட்பட; அகப்பட; தண்டப்பட.

பிறவினைச் செயவெனெச்சம் :—
அடிப்படுத்த; பள்ளிப்படுத்த.

நிகழ்பு-எதிர்வு :—
வழிபடும்.

தன்மைப்பன்மை எதிர்கால வினைமுற்று :—
தண்டப்படுவோம்.

ஆண்பால் எதிர்கால வினைமுற்று :—
தண்டப்படுவான்.

பலர்பால் எதிர்கால வினைமுற்று :—
தண்டப்படுவார்.

ஒன்றன்பால் எதிர்கால வினைமுற்று :—
தண்டப்படுவது.

தன்மைப்பன்மை இறந்தகால வினைமுற்று :—
வாரிகப்பட்டோம்.

ஒன்றன்பால் இறந்தகால வினைமுற்று :—
அகப்பட்டது ; வெளிப்பட்டது ; எவ்வகைப்பட்டது ; எப்பேர்ப்பட்டது.

நிபந்தனைவினை :—
குத்துக்காற்படில்.

கொடு :

இறந்தகால வினையெச்சம் :—
கைகொடுத்து.

கொள் :

இறந்தகால வினையெச்சம் :—
விலைகொண்டு; கைக்கொண்டு.

இறந்தகாலப் பெயரெச்சம் :—
விலைகொண்ட.

காண் :

இறந்தகால வினையெச்சம் :—
கரைகண்டு.

இறந்தகாலப் பெயரெச்சம் :—
புறங்கண்ட.

பெறு :

செயவெனெச்சம் :—
விலைபெற.

கூட்டுவினை சங்ககால இலக்கியத்திலேயே காணப்படுகிறது. காமரு, கொணர் என்பன இரண்டு அடிச்சொற்கள் சேர்ந்து கூட்டுவினையாயவை யென்பர் சீனிவாசன். காண்தர, புறம் தரு, கைப்படு, காண்வர, உரையாடு, கார் செய்தல் முதலியவாகப் பெயரும் வினையும் சேர்ந்தமைந்த பழந்தமிழ்க் கூட்டுவினைகளையும் அவர் குறிப்பிடுவர்.

துணைவினை :

வினையடிகள் சேர்ந்தே, இங்கு தொடர் அமையும். வினையடிகள் இரண்டும் காலம் காட்டும். இறந்தகால வினையெச்சம் அல்லது செயவெனெச்சத்தோடு துணைவினை சேர்க்கப்படுகிறது.

(i) இறந்தகால வினையெச்சமும் துணைவினையும் :

வா :

இறந்தகால வினையெச்சம் :—
கொண்டுவந்து.

இறந்தகாலப் பெயரெச்சம் :—
கொண்டுவந்த.

நிகழ்காலப் பெயரெச்சம் :—
இறுத்து வருகின்ற.

கொள் :

இறந்தகால வினையெச்சம் :—
விற்றுக்கொண்டு; அழைப்பித்துக்கொண்டு.

செயவெனெச்சம் :—
தண்டிக்கொள்ள.

தன்மையொருமை இறந்தகால வினைமுற்று :—
விற்றுக்கொண்டேன்.

அருள் :

இறந்தகாலப் பெயரெச்சம் :—
நின்றருளின.

இறந்தகால வினையெச்சம் :—
இருந்தருளி; கண்டருளி.

செயவெனெச்சம் :—
ஆடியருள; பூசியருள.

படர்க்கையாண்பால் இறந்தகால வினைமுற்று :—
கொடுத்தருளினன்.

இரு :

இறந்தகாலப் பெயரெச்சம் :—
வீற்றிருந்த.

கொடு :

இறந்தகால வினையெச்சம் :—
விற்றுக்கொடுத்து.

இறந்தகாலப் பெயரெச்சம் :—
விற்றுக்கொடுத்த.

தன்மையொருமை இறந்தகால வினைமுற்று :—
விற்றுக்கொடுத்தேன்.

தன்மைப்பன்மை இறந்தகால வினைமுற்று :—
விற்றுக்கொடுத்தோம்.

செல் :

கொண்டுசென்று.

(ii) செயவெனெச்சமும் துணைவினையும் :—

பெறு :

எதிர்மறை வினையெச்சம் :—
கொள்ளப்பெறாது.

ஒன்றன்பால் எதிர்கால வினைமுற்று :—
கொள்ளப்பெறுவது; மன்றப்பெறுவது; எடுக்கப்பெறுவது; நடப்பெறுவது; இடப்பெறுவது.

ஒன்றன்பால் எதிர்மறை வினையாலணையும் பெயர் :—
தடுக்கப் பெறாதது.

தன்மைப்பன்மை எதிர்மறை இயக்குவினை வினையாலணையும் பெயர் :—

புள்ளிகுத்துவிக்கப் பெறாதோம்.

படர்க்கை பலர்பால் எதிர்மறை வினையாலணையும் பெயர்:—
ஏறப்பெறாதார்.

ஒன்றன்பால் எதிர்மறை இயக்குவினை வினையாலணையும் பெயர் :—

புள்ளி குத்துவிக்கப் பெருதது.

எழு என்பது தன்னிலும் இழிந்தவர்க்கும் குறைந்தவர்க்கும் ஒத்தவர் சிலருக்கும் உரிய ஏவலாக வழங்க, எழுந்திரு என்பது அவையல்லாதாருக்கு உரியதாக வேண்டுகோட் பொருள் உணர்த்துகிறது. செய் என்பதில் இல்லாத துணிவுப்பொருள் செய்துவிடு என்பதில் காணப்படுகிறது. இவ்வாறு துணைவினைகள் பொருள் வேறுபாடுகளையுணர்த்தப் பயன்படுகின்றன.: துணைவினைபற்றி, S. A. பிள்ளை அவர்கள், Tamil Culture, XI, No. 3, 1964–ல், நன்கு ஆராய்ந்துள்ளார். இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்ற முக்காலங்களிலிருந்து பல வேறுபாடுகளுடன் தோன்றிய காலங்களை உணர்த்துவதில், தமிழ் துணைவினைகளைப் பயன்படுத்துகிறது. நுட்பமான பல் வேறு பொருள் வேறுபாடுகளும் காலவேறுபாடுகளும் அமையக்கூடிய முறையிலே, வெவ்வேறு மொழிகள் தமிழை வளம்படுத்தியுள்ளன என்பர் யூல்ஸ் புளோக் (Jules Bloch)˚ இரு என்ற துணைவினையை முதல்வினையின் இறந்தகாலவினையெச்சத்தோடு சேர்த்தலினுல், எத்தனையோ காலவேறுபாடு தோன்றுகின்றன :—வந்து இருந்தேன், வந்து இருக்கிறேன், வந்து இருப்பென், வந்து இருக்க, வந்து இருந்து, வந்து இருந்த, வந்து இருக்கிற, வந்து இருக்கும், வந்து இருக்க வேண்டும், வந்து இருக்கலாம்.

முதல்வினையின் எதிர்மறை வினையெச்சத்தோடும், -இரு- சேர்தலுண்டு :—

வராமல் / வராது } இருந்தால் ; வராமல் / வராது } இருக்க.

வராமல் / வராது } இருக்கலாம்.

உள்ளது என்னும் குறிப்பின் அடியாகிய உள், வினையெச்சத்தைத் தொடர்ந்து வருதலுண்டு :—வந்து உள்ளது.

வினை தொடர்ந்து நடப்பதைக் குறிக்கப் பழைய தமிழில், வினையமைப்பு இல்லை. முதல்வினை வினையெச்சத்தைத் தொடர்ந்து 'கொண்டு', அதன்பின் 'இரு' என்பன வந்து தற்காலத் தமிழில் வினைத்தொடர்ச்சியைக் குறிக்கின்றன.

படித்துக்கொண்டிருந்தான்; படித்துக்கொண்டிருப்பான்;
படித்துக்கொண்டிருக்கிறான்; படித்துக்கொண்டிருக்க;
படித்துக்கொண்டிருந்து; படித்துக்கொண்டிருந்த;

முதலியன.

கொள்- என்ற துணைவினை முதல்வினை வினையெச்சத்தோடு சேரும்போது, தற்சுட்டுப்பொருள் தருகிறது :—

புகழ்ந்துகொண்டான்; பேசிக்கொண்டான்.

வினையெச்சத்தைத் தொடர்ந்து வரும் -கொண்டே- என்பதன்பின் இன்னொரு வினைவரின், -கொண்டே- என்பது சமகால நிகழ்ச்சியைக் குறிக்கும் :—நடந்துகொண்டே படித்தேன்.

நடந்துகொண்டே படித்தேன், நடந்துகொண்டு படித்தேன் என்பவற்றிற் கிடையிலுள்ள வேறுபாடு தெள்ளிதிற் புலப்படும்.

-விடு-என்ற துணைவினை, வினையெச்சத்தோடு சேரும்போது, துணிவுப்பொருளைத் தருகிறது :—கண்டுவிட்டான்; கண்டுவிடுகிறான்; கண்டுவிடுவான். -விடு- என்பது எதிர்மறை நிபந்தனைப் பொருளிலும் வழங்குகிறது :—காணாவிட்டால். விட்டால் என்பது இங்கே நிபந்தனைக் குறியாகவே வழங்குகிறது. வினையெச்சத்தைத் தொடர்ந்து வரும் -போடு- என்ற துணைவினையும் துணிவுப்பொருளைத் தருகிறது :—அடித்துப்போட்டான். வா என்பது வினையெச்சத்தைத் தொடர்ந்து வரும்போது, தொடர்நிகழ்ச்சியைக் குறிக்கிறது:- வாழ்ந்து வந்தான்; வாழ்ந்து வருகிறான்; வாழ்ந்து வருவான். முதல்வினையின் செயவெனெச்சத்தைத் தொடர்ந்து வரும் -வை- என்ற துணைவினை, இயக்குவினைப் பொருளைத் தருகிறது :—செய்ய வைத்தான்.

துணைவினை சேராத தமிழ் வினையின் அமைப்பு மிக எளிமையானது. பொதுவாக நோக்குமிடத்து, வினைப்பகுதி +காலங்காட்டுமிடைநிலை அல்லது எதிர்மறைவிகுதி+பால், எண், இடம் குறிக்கும் விகுதி, இவையே அதன் அமைப்பு எனலாம். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வினையடிகள் சேர்ந்து தொடர்வினைகளமையும்போது, அமைப்பு சிக்கலாகுகிறது.

போப் (G. u. Pope—A Hand-book of the Ordinary Dialect of the Tamil Language) துணைவினை பற்றிக் கூறுவதாவது :-'இன்றைய தமிழில் துணைவினைகள் பெருகிக்கொண்டிருக்கின்றன. அவை இன்னும் பெருகும். மொழி வளர வளர, நுட்பமான கருத்துவேறுபாடுகளைப் புலப்படுத்துவதற்கு அவை தேவைப்படுகின்றன'.

12. காலமயக்கம்

ஒருகாலத்திற்குரிய வினைவடிவம் இன்னொரு காலத்தைக் குறித்தல் கால வழு. தமிழில் அத்தகைய வழக்காறுகள் உண்டு. அவற்றுள் சிலவற்றை வழுவமைதியாகக் கொண்டு, தொல்காப்பியர், சில சூத்திரங்கள் கூறுவர்.

இறப்பே எதிர்வே ஆயிரு காலமுஞ்
சிறப்பத் தோன்றும் மயங்குமொழிக் கிளவி
—தொல். சொல். 247

ஏனைக் காலமும் மயங்குதல் வரையார்
—தொல். சொல். 248

எவ்வெப் பொருளில் இத்தகைய மயக்கம் ஏற்படலாம் என்றும் தொல்காப்பியர் சில சூத்திரங்களில் விதந்து கூறுவர்.

நன்னூலார் காலத்திற்கு முந்திய தமிழ்ச் சாசனங்களில் ஏற்பட்ட சில கால வழுமைதிகள் வருமாறு :—

1. எதிர்கால வடிவம் நிகழ்காலத்தை உணர்த்துகிறது :—
இன்னும் இப்படி அறிவோம்.

2. இறந்தகால வினையாலணையும்பெயர் வடிவங்கள் எதிர் காலத்தை உணர்த்துகின்றன :—

இதன்றென்றும் கங்கையிடைக் குமரியிடைச் செய்தார் செய்தபாவங் கொள்வாம்; இது அழித்தான் கடிகை எழா இருவரையும் கொன்ற பாவத்துப் படுவான்; இதுகாத்தார் அடி என் முடிமேலன; காவலனுக்குப் பிழைத்தார் ஆவர்.

3. இறந்தகால வினைமுற்றுக்கள் நிகழ்காலத்தைச் சுட்டு கின்றன :—

விளக்கு எரிக்கப்போமானோம் இத்தளி அர்ச்சிப்போம்; இதின் பொலிசையால் நிசதி உழக்கு முட்டாமை அட்டுவேனுனேன்; இத் தண்டம்பட்டும் இப்பரிசே செய்வோமானோம்.

———

VII இடையியல்

தமிழிலுள்ள இடைச்சொற்கள் சில, பெயர்ச்சொல், வினைச்சொல்லின் அங்கங்களாக வரும்; சில, பெயர்ச்சொல் வினைச்சொல்லின் முன்னும் பின்னும் வரும். காலங்காட்டும் இடைநிலை, விகுதியென்பன, சொல்லின் உறுப்பாக, உரிச்சொல்லைத் தொடர்ந்து அமைந்திருக்கும். பெயர்ச்சொற்கள் வேற்றுமையுருபுகளைத் தங்கள் ஈறுகளில் கொள்ளும். சாரியைகளைத் தொல்காப்பியர் குறிக்கும்பொழுது, 'புணரியல் நிலையிடைப் பொருணிலைக் குதந' என்பர். சேனாவரையர், அதைப் பின்வருமாறு விளக்குவர் : 'ஆண்டுப் பொருணிலைக் குதவுதலாவது எல்லாவற்றையும் என்புழி அற்றுச் சாரியை நிலைமொழிப் பொருள் அஃறிணைப் பொருளென்பதுபட வருதலும், எல்லா நம்மையும் என்புழி நம்முச் சாரியை அப்பொருள் தன்மைப்பன்மை யென்பதுபட வருதலுமாம். அல்லனவும் தாஞ்சார்ந்து வரும் மொழிப்பொருட்கு உபகாரமுடையவாய் வருமாறு ஓர்ந்து கொள்ளப்படும். அல்லாக்கால், சாரியை மொழியாகா என்பது'.

அசைநிலை, இசைநிறை, தத்தங் குறிப்பிற் பொருள் செய்குந, ஒப்பில் வழியாற் பொருள் செய்குந என்பவற்றையும் இடைச்சொற்களின் வகைகளெனத் தொல்காப்பியர் கூறுவர். அசைத்தல் சார்த்துதல். பொருள் உணர்த்தாது, பெயரோடும் வினையோடும் சார்த்திச் சொல்லப்பட்டு நிற்றலின், அசைநிலையாயிற்று. அவை அந்தில் முதலாயின. 'புகழ்ந்திகு மல்லரோ பெரிதே', 'உரைத்திசினோரே' எனச் சார்ந்த மொழியை வேறுபடுத்து நிற்றலின், தத்தங் குறிப்பினென்றார். ஒருவன் ஒன்றுரைத்தவழி அதற்கு மேவாதான், நன்றே நன்றே என அடுக்கலும் வரும்; அது மேவாமைக் குறிப்பு விளக்கும். ஒக்கும் என்னுஞ் சொல் ஒப்புமையுணர்த்துவது; அச்சொல் அங்கு இன்மையால் ஒப்புமை

தோன்றுமையால், ஒப்பில் வழியால் என்றுர். ஒப்பில் வழியாற் பொருள் செய்வனவாவன, அன்ன, ஏய்ப்ப, உறழ, ஒப்ப என்பன முதலாகத் தொல்காப்பியர் பொருளதிகாரத்துக் கூறப்பட்ட முப்பத்தாறனுள், ஒக்கும் என்பது ஒழிய ஏனையவாம்.

தொல்காப்பியரின் இடைச்சொற் பாகுபாடு ஏழனேடு, நன்னூலார் குறிப்பு என்பதைச் சேர்த்து எட்டாக்குவர். அம்மென, இம்மென, சோவென, துடுமென, சுஃறென என்று வருவன ஒலிக்குறிப்புப் பொருளைத் தருவன. கடகடென, திடுதிடென, படபடென என ஒலி இரட்டிவரும் அமைப்புக்களும் ஒலிக்குறிப்புப் பொருளைத் தருவனவே. துண்ணென, திடுக்கென என்றுற் போல்வன அச்சக்குறிப்புப் பொருளைக் கொடுப்பன. பொள்ளென, சரேலென என்பன விரைவுப் பொருளை யுணர்த்துவன.

இடைக்காலத் தமிழ்ச் சாசனங்களில் வந்துள்ள இடைச்சொற்களிற் சிலவும், அவை பயன்பட்டிருக்குமாறும் கீழே காணப்படுகின்றன :

1. இயல்பான இடைச்சொற்கள்

(க) உம்

(அ) எச்சப்பொருள் :—

இத் தண்டம்பட்டும் நெய் முட்டாமை அட்டுவோமானேம்; இத் தண்டப்பட்டும் இவ் வோலை மேற்பட்ட பொலிசை வழுவாமே செலுத்துவோமானேம்.

(ஆ) சிறப்பு :—

நிசதி இருவர் பிராமணரை நிலமும் ஞாயிறும் உள்ளளவும் ஊட்டுவோமானேம்; இவர்களுக்குத் திருப்தியாமளவும் ஆசந்திரதாரமும் ஊட்டுவது.

(இ) முற்று :—

நான்கு காலமும்; நான்கெல்லையுள்ளும். வினவுடன் சேர்ந்துவரும் உம்மை, அதை முற்றுப் பொருளதாக்குகிறது :—எவ்வகைப்பட்டதும்; எப்பேர்ப்பட்டதும். வினு,

பெயரை விசேடித்து நிற்கும்பொழுது, பெயருடன் சேரும் உம்மை முற்றுப்பொருளைத் தருகிறது :—எப்பேர்ப்பட்ட மன்றுபாடும்; எப்பேர்ப்பட்ட இறையும்.

(ஈ) கட்டளை :—

சபையார் இருப்பாராகவும்; காவு தெங்கிடப் பெறுவதாகவும்; நிசதம் ஐங்கழஞ்சு பொன் பன்மாகேசுவரரே மன்றப் பெறுவதாகவும்.

(உ) எண் :—

திருவோடுந் தெள்ளமிர்தத்தோடுஞ் செங்கதிர் ஒளிக் கௌஸ்துபத்தோடும் அருவி மதக் களிறென்றோடும் தோன்றி; இவை விலையும் ஒற்றியும் செல்லா.

ஒரே செயப்படுபொருள் உள்ள இரண்டு செயவெனச் சங்களை உம்மை சேர்த்துநிற்கிறது :—

கறி துமிக்கவும் பொரிக்கவும் பசுவின் நறு நெய்...

ஒரே எழுவாயின் செயல்களை யுணர்த்தும் இறந்தகால வினையெச்சங்கள் உம்மையால் தொடுக்கப்படுகின்றன :—

அலைக்கடல் கடைந் தமிர்து கொண்டும் நானிலத்தோர் விஸ்மபப்பட நாற்கடல் ஒரு பகல் ஆடியும் மறுகில் ஒளிமணி முடியொடு சங்க வெள்வளை தரித்தும் நிலவுலகம் வலஞ் செய்தும் நிகரில்வென்றி அமரர்க்குப் பலமுறையுந் தூதுய்த்தும் பாகசாசனன் ஆரம் வவ்வியும் செம்மணிப் பூணோடு தோன்றித் தென்றமிழின் கரைகண்டும் வெம்முனை வேலொன்று விட்டும் விரைவரவிற்கடல் மீட்டும் பூழியனெனப் பெயரெய்தியும் பொற்குன்றுயிரம் வீசியும் பாழியம் பாயலி னிமிர்ந்தும் பஞ்சவ னெனும் பெயர் நிறீஇயும் வள மதுரை நகர்கண்டும் மற்றதற்கு மதில் வகுத்தும் உளமிக்க மதி அதனால் ஒண்டமிழும் வடமொழியும் பழுதறந்தான் ஆராய்ந்து பண்டிதரில் மேந்தோன்றியும்...

உம்மை இடைச்சொல் எவ்வெப் பொருளில் வருமென்று, தொல். சொல். சூ. 255 கூறும் :—

> எச்சம் சிறப்பே ஐயம் எதிர்மறை
> முற்றே எண்ணே தெரிநிலை யாக்க மென்று
> அப்பால் எட்டே உம்மைச் சொல்லே.

உதாரணங்கள் கொடுக்கப்பட்டுள்ள இடைக்காலச் சாசன வழக்குகளுக்கு நன்னூலார் பிந்தியவரே யாயினும், அவர் தொல்காப்பியர் கூறியவற்றையே திருப்பிக் கூறுகிறார்.

(உ) ஏ :

(அ) பிரிநிலை :—

இறையுங் காட்டாதே, நாங்களே இறுத்து; எண்ணெய் விளக்கே யெரிவதாக வைத்தோம்; காட்டினாரே, பேர்பேர் இருபத்தைங் கழஞ்சு பொன்மன்ற வொட்டிக் கொடுத்தோம்.

ஏகாரம் உம்மையைத் தொடர்ந்து வருதலுண்டு :—

இப் பொன்னின் விருத்தியாலுமே... நிசதி பன்னிருவர்... உண்பதாகவும்.

வேற்றுமையுருபுகளைத் தொடர்ந்து உம்மை வருதலு முண்டு :—

இத் தேவர்க்கே யிருபத்தைந்து காசு தண்டமும் பட்டு; எப்பேர்ப்பட்ட மன்றுபாடும் ஏரிக்கே கொடுத்தேன்.

(ஆ) அசைநிலை :—

1. நிறை, அளவுப்பெயர்கள் புணரும்போது, அவற்றினிடையில் :—

ஆழாக்கே முச்செவிட்டு; கழஞ்சே அரைக்காற்பொன்; பத்தொன்பதின் கலனே முக்குறுணி.

2. சொற்றொடர்களின் முடிவில் :—

இரண்டு திறமும் முட்டினபொழுதே யிக்கற்றாண்மேல் பட்டபடி எடுத்துக்கொண்டு; நான் கொண்ட பரிசே திருமழபாடி மகாதேவர்க்கு தேவதானமாகச் செய்து கொடுத்தேன்.

3. வேற்றுமையுருபுகளைத் தொடர்ந்து :—

எம்மில் இசைந்த விலைப்பொருள் கையிலே அறக் கொண்டு; முட்டில் தன்மாசனத்திலே நிசதம் ஐங்கழஞ்சு பொன் பன்மாகேசுவரரே மன்றப்பெறுவதாகவும்.

(i) மற்று/மற்றும்—'அதுதவிர' என்ற பொருளில் :—

மற்றும் எப்பேர்ப்பட்டதும் அடங்க இப்பரிசு ஊட்டுவது; மற்றதற்கு மதில்வகுத்து; மற்றவனுக்கு இளையன்; மற்றும் கிடந்து விற்பன குவாலால் நாழி கொள்ளப் பெறுவதாகவும்.

(ii) தோறும்—'ஒவ்வொன்றும்' என்ற பொருளில் :—

வாரியரே மாசந்தோறும் குழிகுத்துவதாகவும்; ஊழிஊழி தோறும் உள்ளது.

(iii) மட்டு—'வரை' என்ற பொருளில் :—

பகல் இரண்டு விளக்கு ஞாயிறு மட்டு ஒரு சாமத்தளவும் எரிப்போமாகவும்.

(iv) உடன்—'கூட' என்ற பொருளில் :—

இவை கொண்டு படாரர் பணிமக்களும் இளங்கோக் குடிச்சவை வாரியரும் உடனின்று; சோழப் பெருமானடிகள் திரு உடப்பிறந்தார் நங்கை வரகுணபெருமானார்.

(v) இன்னும்—'இதனோடு' என்னும் பொருளில் :—

அப்பனார் குண்டிலுக்கு வடக்கும் இன்னும் மாம்பாக் கிழார் குண்டிலின் வடக்கும் இன்னும் புழலூர் போசர் பூமிக் கும் இவர்கள் புரிக்கிணற்று வடகரையின் வடக்கும் இக் கிணற்று மேலைக்கரையின் மேற்கும் இன்னும் இக்கிணற்றின் கரையின் றெற்கு.

II. இடைச் சொல்லாக வழங்கப்படும் வினைவடிவங்கள்.

(i) பலபொருள்களைக்கூறி அவற்றைக் கூட்டிச் சொல்லும் போது, ஆக என்பது பயன்படுத்தப்படுகிறது :—

நான்கு மாக்காணியும்......மூன்று மாக்காணியும்...... இரண்டுமாவும்...அரைமாவும் ஆகத்தடி இரண்டினால் நிலம்

அரையும்...இநிலம் பத்துச்செய்; இரண்டாயிரங் குழியும்... இரண்டாயிரங் குழியுமாக நாலாயிரங்குழி.

(ii) ஆய், ஆக என்பன வினையடையாக்க இடைச் சொற்களாகப் பயன்படுகின்றன :—

நிசதியாக; தனியாய்.

(iii) ஆவது என்னும் வினை விளக்கம் தொடர்கிறது என் பதைக் குறிக்கும் இடைச் சொல்லாக வழங்குகிறது :—

ஊரார் வைத்த பரிசாவது; பெருமானடிகளுக்கு திரு விளக்கினுக்கு விற்றுக் கொடுத்த நிலம்மாவது.

III. உவமையிடைச் சொற்கள் :—

ஒலிகடல்போல் ஒருங்கு முன்னந்தான் அமைத்த வலி ராசசிங்கப் பெருகுளக்கீழ்; பகீரதிபோல் துய்ய புகட்படர; உதைய வெற்பனை...சிங்காசனமிசை.

IV. எதிர்மறை யிடைச்சொற்கள் :—

(i) இல :—

அசைவில் கீர்த்தி அபராசிதபருமர்க்கு; மறுகில் ஒளி மணி முடியொடு; நிகரில் வென்றி அமரர்க்கு; வசையில் மாக்கயல் புலிசிலை வடவரை நெற்றியில் வரைந்து.

(ii) இன்றி (குறிப்பு எச்சம்) :—

நிலம் அரையும் உள்நிலம் ஒழிவின்றி...இறையிலியாக விற்று; தெங்கும் பனையும் இவர்கள் மனமின்றி ஈழவர் ஏறப் பெறுதாராகவும்.

(iii) அல்லது (குறிப்பு எச்சம்) :—

அல்லது இத்தர்மத்தினை இரட்சிக்கின்ற திருத்தணியில் சபையார் ஸ்ரீபாதம் என் தலைமேலனவாகவும்.

(iv) அன்றி (குறிப்பு எச்சம்) :—

எண்ணெய் உள்ளிட்டன்றி.

(v) அன்று (குறிப்பு முற்று) :—

இதன்றென்றுர் கங்கையிடைக் குமரியிடைச் செய்தார் செய்தபாவம் படுவார்.

V. மரியாதை யிடைச்சொற்கள்:—

(i) முதனிலைகள் : ஸ்ரீ, சி, திரு, அடிகள் :—

(அ) கோவில்களுக்கும் கோவில்களோடு தொடர்புள்ளவை களுக்கும் :—

ஸ்ரீகோயில்; ஸ்ரீமடைப்பள்ளி; ஸ்ரீபலி; ஸ்ரீகற்பக்கிரகத்து; ஸ்ரீவிமானம்; ஸ்ரீபோந்தைப் பெருமானடிகள்; திரு அமுதுக்கு; திருநந்தாவிளக்கு; திருவிளக்கினுக்கு; திருமஞ்சனம்; திருபலிக்கு; திருவீரட்டானத்து; திருவொற்றியூர்; திருத்தவத்துறை.

(ஆ) அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும் பெரியார் களுக்கும் :—

திரு உடப்பிறந்தார்; அடிகள் கண்டன் மாறம்பாவையார்; ஸ்ரீபாதம்; ஸ்ரீபராந்தகன் ஸ்ரீவீரநாராயணன்; சிவல்லுவதேவர்; திருக்குலம்.

(இ) குளத்தின் பெயருக்கு :—

ஸ்ரீகுழுவாணையேரியால்.

(உ) இறுதிநிலைகள் :—அடிகள், அமிது; அருள்.

பெருமானடிகள்; விழுப்பேரரையர் ஐயக்குட்டியடிகள்; மகாதேவியடிகள்; புகழ்த்துணையடிகள்.

கடவுளர்க்கு வழங்கப்படும் நைவேத்தியத்திற்கும் நைவேத்தியத்தோடு தொடர்புடைய பொருள்களுக்கும் அமிது என்ற சொல் பிற்சேர்க்கப்படுகிறது :—

இலை அமிர்து; நூற்றமிது; அடைக்காயமிது; நெய்யமிது; தயிரமிது; கறிஅமிது; சற்கரையமிது.

கடவுளர் அல்லது பெரியோரின் செயலைக் குறிக்கும் போது, அருள் என்ற வினையடி மரியாதைப் பொருளைத்தரும் துணைவினையாக வழங்குகிறது :—

கடவுளர் :—

திருமஞ்சனம் ஆடியருள்; கோயில் நின்றருளின கூத்தப் பெருமானடிகளுக்கு; மகாதேவர்க்குச் சந்திராத்திவற் பூண்டருள; விஷ்னுகிரகத்து நின்றருளுகின்ற பெருமானடிகளுக்கு.

பெரியோர் :—

சூழநகர் இருந்தருளி; காராண்மை மீயாட்சி உள்ளடங்கக் கண்டருளி ஏகபோக பிரமதேயமாக நன்குகொடுத்தருளினன்.

———

VIII தொடரியல்

சொற்கள் தொடர்ந்து வரும் அமைப்பைத் தொடரியல் எனலாம். உரிச்சொற்கள் இடைச்சொற்களோடு இயைந்து சொல்லாகும் இயல்பைச் சொல்லிலக்கணத்தில் விளக்குவர். முழுச்சொற்கள் தொடர்ந்து நடக்குமாற்றைத் தொடரிலக் கணத்தில் ஆராய்வர். தொடர் அமைப்பு (construction), தொடர்முறை (word-order), தொடர் இயைபு (concord) என மூன்று வகையாகத் தொடரியலைப் பிரிப்பதுண்டு.

1. தொடர் அமைப்பு

சொல் தனியே நின்றும் பொருள் உணர்த்தவல்ல தாயினும், சொல்லை அடுத்துவரும் அண்மைச்சொல், அப் பொருளைத் தெளிவாக்கப் பெரிதும் உதவுகிறது. அண்மைச் சொல்லே, சொல்லின் தொடரிலக்கணத்தைச் சுட்டவும் பயன்படுகிறது. தொடரியல் அமைப்பால், இலக்கணச் சிறப்பு உண்டாகிப் பொருள் விளக்கம் ஏற்படுகிறதெனலாம்.

அண்மைச் சொற்களோடு இயையும் அமைப்பைத் தொடர் அமைப்பு என்பர். 'நெடுங்கிள்ளி யரசன் சபதம் செய்தான்' என்ற தொடரில், நெடுங்கிள்ளி என்பது அரசன் என்பதைத் தழுவியும் சபதம் என்பது செய்தான் என்பதைத் தழுவியும் ஒருசொல்லின் தன்மைகொண்டு நின்று மீண்டும் அவையொன்றை யொன்று தழுவிப் பொருள் தருகின்றன. இவ்வாறு தழுவப் பொருந்தும் அண்மைச்சொல்லை அண்மை நிலையென்பர். நெடுங்கிள்ளி என்பதன் அண்மைநிலை அரசன் என்பதாகும். சபதம் என்பதன் அண்மைநிலை செய்தான் என்பதாகும். நெடுங்கிள்ளி யரசன் என்பது ஒரு சொல் போல அமைய, சபதம் செய்தான் என்பது இன்னொரு சொல் போல அமைய, ஒன்றிற்கு மற்றது அண்மைநிலையாகின்றது.

எந்த நீண்ட தொடரின் அமைப்பும், அண்மைநிலை கொண்டு விளக்கத் தக்கவாறே யமைவதைக் காணலாம். அண்மைத் தொகுதிகளாக அமையும் சொற்கள் பெரும்பான்மையும் அடுத்து நிற்குமாயினும், சிறுபான்மை கொண்டு கூட்டாகக் கொள்ளவேண்டிய நிலையிலிருக்கும்.

சீனிவாசன் தன்னுடைய மொழியியலில், தொடரியல் என்ற பகுதியில் பின்வருமாறு கூறுவர் :—'வேற்றுமைப் பொருள்பற்றித் தொடரும் தொடர்களை வேற்றுமைத் தொட ரென்றும் ஏனையவற்றை அல்வழித் தொடரென்றும் கூறுவர். தமிழ் மொழியின் தொடரியலில் இவ்விரு பிரிவுகள் அடிப் படையானவை. அதனால்தான் தொல்காப்பியனார் கிளவி யாக்கத்தில், அல்வழித் தொடரையும் அதனை அடுத்துவரும் வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு ஆகிய இயல்களில் வேற்றுமைத் தொடரையும் ஆராயக் காண் கிறோம்'. இவ்வாறு அவர் கூறுவதற்கான காரணம், வேற் றுமைத் தொடரென்ற பகுதியில், அவர் எடுத்துக்காட்டும் பின்வரும் தெய்வச்சிலையார் உரையாக வேண்டும் : 'அல் வழித் தொடர் கிளவியாக்கத்துள்ளும் வேற்றுமைத் தொடர் வேற்றுமையோத்துள்ளும் வேற்றுமை மயங்கியல் விளிமரபு என்பனவற்றுள்ளும்......உணர்த்தினர் என்று கொள்க' (தொல். சொல். சூ. 1 உரை). சீனிவாசனே, வேற்றுமைத் தொடர், அல்வழித் தொடர் என்பவற்றின் நன்னூலார் விளக்கத்தை எடுத்துக் காட்டுவர்.

> 'வேற்றுமை ஐம்முத லாறும் அல்வழி
> தொழில் பண்பு உவமை உம்மை அன்மொழி
> எழுவாய் விளி ஈர்எச்சம் முற்றுஇடை உரி
> தழுவு தொடர் அடுக்கு என ஈரேழே'

—நன். சூ. 152

இவற்றைச் சேர்த்துப் பார்க்கும்பொழுது, தெய்வச்சிலையார் கருத்து வலிந்து கொள்ளப்பட்டதுபோலக் காணப்படுகிறது. கிளவியாக்கம் வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல்,

விளிமரபு என்பன தொடரியல் இலக்கணம் கூறுகின்றன என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியது. விளிமரபிற் கூறப்படும் விளித்தொடர் பற்றிய இலக்கணம் அல்வழித் தொடரைச் சேர்ந்ததாதலால், அதுவும் வேற்றுமைத் தொடரை யுணர்த்துகிறதெனத் தெய்வச்சிலையார் ஏன் கூறினுரென்று தெரியவில்லை. 'வேற்றுமை தாமே ஏழென மொழிப' எனப் பிறர் மதங் கூறிய தொல்காப்பியர், 'விளிகொள்வதன்கண் விளியோடெட்டே' எனத் தன் மதங் கூறினுர் எனச் சேனு வரையர் கூறுவது உண்மையானுல், விளித்தொடரை அல் வழித் தொடருள் சேர்த்துக் கூறத்தக்க சந்தர்ப்பத்தைத் தொல்காப்பியர் ஏன் நழுவ விட்டார் என்று புரிந்துகொள்ள முடியவில்லை. முதலாம் வேற்றுமையை ஒரு வேற்றுமை யாகக் கொள்ளலாகாது என்பர் இன்றைய திராவிடமொழி அறிஞர் சிலர். எழுவாய்த் தொடரைக் கூறும் முதலாம் வேற்றுமை அல்வழித் தொடரைச் சேர்ந்தது என்பது பழைய தமிழிலக்கணகாரருக்கும் உடன்பாடு. முதலாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை யென்பன, வேற்றுமையிலிருந்து தொல் காப்பியரால் பிரித்தெடுக்கப்பட்டமையாலும், அல்வழித் தொடரின் ஏனைய பிரிவுகள் பெயரியல், வினையியல், இடை யியல், உரியியல், எச்சவியல் என்பவற்றிலே கூறப்படுதலா லும், வேற்றுமைத்தொகை கூட எச்சவியலிலே இடம் பெறு தலாலும், தொல்காப்பியர் வேற்றுமைத் தொடர், அல்வழித் தொடர் என்பனவற்றையே, சொல்லதிகாரத்தின் முதல் நான்கு இயல்களிலும் வகுத்துக் கூறுகிருரென்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை.

௨. தொடர்முறை

சொற்கள் தொடர்ந்து அமையும் முறையே தொடர் முறையாகும். சொற்கள் தொடர்வதில், ஒவ்வொரு மொழிக் கும் ஒவ்வொருவகை ஒழுங்குமுறை காணப்படுகிறது. அந்த ஒழுங்குமுறையில், சில அம்சங்கள் வருமாறு :—

1. எழுவாய் முதலிலும் முற்று முடிவிலும் வருதல் :—

கலியிராமன் பட்டான்; தீங்குநினைத்தார் பாவங்கொள்வார்.

2. எழுவாய் முற்றுக்குப்பின் நிற்றலும், பழைய சாசனங்களில் காணப்படுகிறது :—

விளக்கு எரிப்போமானோம் திருக்கோவலூர் நகரத்தோம்; எப்பேர்ப்பட்ட மன்றுபாடும் ஏரிக்கே கொடுத்தேன் நம்பியமல்லனேன்.

3. பயனிலை பெரும்பாலும் வினைமுற்றாக இருக்கும். சிறுபான்மை, பெயராக இருக்கும் :—

விளக்கு இரண்டுக்கு நித்த முட்டாமல் அளக்கக் கடவ எண்ணெய் உரி.

4. செயப்படுபொருள் எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடையில் நிற்கும் :—

கலியன் மாணிக்கம் நுந்தாவிளக்கொன்று வைத்தான். சிறுபான்மைமாறி நிற்றலுமுண்டு :—

தூம்பு புதுக்குவித்தார் கொங்கரையர் நின்ற பெருமான், வினை, எச்சமாக நிற்கும்பொழுது செயப்படுபொருள் தவறாமல் வினைக்கு முன் நிற்கும் :—

மதுரை கொண்ட; ஆவணஞ்செய்து; பொலிகொண்டு.

5. பெயரடை பெயர்க்குமுன்னும் வினையடை வினைக்கு முன்னும் அமைகின்றன :—

பெருமக்கள்; அட்டு அழியவைத்த அரிசி.

6. வேற்றுமையுருபேற்கும் பெயர்ச்சொற்கள், வினைக்கு முன் வருதல் :—

ஆறும்வேற்றுமையுருபும் எல்லைப்பொருளை யுணர்த்தும் ஐந்தாம் வேற்றுமையுருபும் பெயர் கொண்டு முடிவன. நான்காம் வேற்றுமையில் சில இடங்களில், உருபு பெயர்கொண்டு முடிதலுமுண்டு. ஏனைய இடங்களில், வேற்றுமையுருபேற்கும் பெயர்கள், வினைகள் கொண்டே முடியும்.

இயக்கியவ்வைகளையும் புதுக்கி
—இரண்டாம் வேற்றுமை.

பிறரால் எழுதுவித்து—மூன்றும் வேற்றுமை.

காவலனது கரிதுரகபதாதி—ஆறும்வேற்றுமை.

பாண்டி நாட்டின் வடகிழக்குச் சோழநாடு
—ஐந்தாவது—எல்லை.

படாரி கோயிலுக்குத் தெற்கு—நான்காம் வேற்றுமை.

7. இணைத்தற்கு வரும் உம்மையிடைச்சொல், ஓரிடத்தில் வருதல் போதாது; இணைக்கப்படும் பல சொற்களோடும் வரும் :—

வேந்தழியச் சுரம் போக்கியும் வசையில் மாக்கயல் புலி சிலை வடவரை நெற்றியில் வரைந்தும் தடம்பூதம் பணி கொண்டு தடாகங்கள் பல திருத்தியும்......

8. இத்தனையென்று வரையறுத் துணர்த்தப்பட்டவற்றின் பெயரைத் தொடர்ந்து வினைவரும்போது, அத்தொகுதிப் பெயருக்கு உம்மை கொடுத்துக் கூறவேண்டும் (தொல். சொல். 33) :—

நான்கெல்லையுள்ளும் அகப்பட்ட நிலம்.

9. சுட்டுப்பெயர், இயற்பெயர்ப் பின்னர்வரல் (தொல். சொல். 38) :—

சாத்தன் வந்தான்; அவனுக்கு விருந்திடுக.

3. தொடர்இயைபு

ஒருவினைச்சொல் அல்லது பெயரடை இன்னொரு பெயர்ச் சொல் அல்லது வினைமுற்றோடு தொடரும்போது, இரண்டுக் கும் திணைபால் இயைபு எதிர்பார்க்கப்படுதலுண்டு. தமிழ் மொழியில், எழுவாய்த்தொடர், விளித்தொடர் ஆகிய இவற்றி லேயே எழுவாய்க்கும் பயனிலைக்கும் இயைபு எதிர்பார்க்கப் படுகிறது.

'வினையில் தோன்றும் பாலறி கிளவியும்
பெயரில் தோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல் கூடா தம் மரபினவே'

—தொல். சொல், சூ. 11

இவ்வாறு திணைபால் இயைபு வேண்டப்படுவதால், சிலவழுக்கள் ஏற்படுவது எதிர்பார்க்கக் கூடியதே. சிலவழுக்களுக்கு, வழுவற்க எனத் தடைவிதித்தலும் வேறு சிலவற்றை வழுவமைதியாகக் கொள்ளுதலும் தமிழிலக்கணகாரர் காட்டும் நெறிகள் எனலாம். உயர்திணையும் அஃறிணையும் கலந்து வரும்பொழுது, முடிக்கும் வினையமைப்பதில் பிரச்சினை உண்டாகிறது; அப்பிரச்சினையைச் சமாளிக்கச் சிலவழிகள் கூறப்படுகின்றன.

1. அஃறிணையும் உயர்திணையும் கலந்துவர, வியங்கோள் பயனிலையாக வரலாம் :—

ஆவும் ஆயனும் செல்க.

2. தன்மைப் பெயர்ச்சொல்லும் அஃறிணைப் பெயர்ச்சொல்லும், எண்ணுமிடத்தில், கலந்து வரலாம் :—

யானும் என் எஃகமும் சாறும்.

3. செய்யுளில், திணை, கலந்து வருமிடத்துப் பெரும்பான்மையும், அஃறிணை முடிபின :—

கோலஞ்சி வாழுங் குடியுங் குடிதழீஇ
ஆலம்வீழ் போலும் அமைச்சனும்—வேலின்
கடைமணிபோற் றிண்ணியான் காப்புமிம் மூன்றும்
படைவேந்தன் பற்று விடல்.

இது திணைவிரவி எண்ணி அஃறிணையால் முடிந்தது.

'அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்குந்
திங்களுஞ் சான்றோரும் ஒப்பர்'

எனச் சிறுபான்மை உயர்திணையால் முடியவும் பெறும்.

மொழியில் பயின்று வரும் வேறு, இல்லை, உண்டு என்ற சொற்களில் திணைபால் இயைபு எதிர்பார்க்கப் படுவதில்லை. ‘வேறு இல்லை உண்டு ஐம்பால் மூவிடத்தன’ என்னும் நன். சூ. 339. வியங்கோள்வினையும் நன்னூலார் காலத்தில் எல்லா இடத்துக்கும் பாலுக்கும் பொதுவாக அமைந்தது. இருதிணைப் பொதுவினைகளென நன்னூலார் கூறும் தன்மை முன்னிலைவினைகள், ஒருமை பன்மை வேறுபாடு மாத்திரம் வேண்டி நிற்கின்றன. திணை துணிந்து பால் துணியாத ஐயப் பொருள் இன்னொரு பிரச்சினை. அதை, அவ்வத் திணைப் பன்மையாற் கூறும்படி தொல். சொல். சூ. 23 கூறும். உருபு என்ற சொல்லும் அத்தகைய ஐயப்பொருளில் வரும். அஃறிணைப்பால் ஐயத்திற்குப் பால்பகா அஃறிணை வடிவமும் வழங்கலாம்.

4. வாக்கியம்

எழுவாய்த் தொடர், விளித்தொடர், வினைமுற்றுத்தொடர் எனத் தமிழிலக்கணகாரர் கொள்பவை வாக்கியமெனலாம். இவற்றுள் பயின்று வழங்குவது எழுவாய்த்தொடரே. எழுவாயில்லாமலும் வாக்கியம் அமையும்; பயனிலையின்றி எத்தொடரும் முடிவுபெறாது. தொல். சொல். சூ. 66, பெயர்ப் பயனிலைகளை எடுத்துக் கூறும் :—

> பொருண்மை சுட்டல் வியங்கொள வருதல்
> வினைநிலை யுரைத்தல் வினாவிற் கேற்றல்
> பண்புகொள வருதல் பெயர்கொள வருதலென்று
> அன்றி யனைத்தும் பெயர்ப்பயனிலையே.

பொருண்மை சுட்டல்	—ஆ உண்டு.
வியங்கொள வருதல்	—ஆ செல்க.
வினைநிலையுரைத்தல்	—ஆ கிடந்தது.
வினாவிற் கேற்றல்	—அஃது யாது.
பண்புகொள வருதல்	—ஆ கரிது.
பெயர்கொள வருதல்	—ஆ பல.

இப்பயனிலையமைப்புக்களைக் கொண்டு, எழுவாய்த்தொடரை வினவாக்கியம், செப்புவாக்கியம், விருப்புவாக்கியம், வியப்பு வாக்கியம் எனப் பலவாருகப் பிரித்துணரலாம்.

தொல்காப்பியர் எடுத்துக் காட்டும் தமிழ்வாக்கிய அமைப்பின் இயல்புகளிற் சில :—

1. செப்பையும் வினவையும் வழுவாமற் கூறுக.

2. வினவும் செப்பாம் நிலையைப் பெறும், வினவப்பட்ட சொல், தானே வந்து பொருந்துமாயின். சாத்தா உண்டியோ என்ற வழி, உண்பன் என்பதை உண்ணேனே என்று வினவாய்பாட்டாற் கூறுதல்.

3. செப்பு வழுவானலும் நீக்கப்படாது, அச் செப்புப் பொருண்மையைப் பொருந்திய சொல்லின்கண்.

உண்ணையோ சாத்தா என்ற வழி, நீ யுண் எனவும் வயிறு குத்திற்று எனவும் இவ்வாறு வருவன.

4. ஒரு பொருட்கு இனச்சுட்டில்லாத பண்புகொள் பெயரைக் கொடுத்தல் வழக்கு நெறியல்ல; செய்யுள் நெறி.

செஞ்ஞாயிறு என்ருற் போல்வன.

5. இயற்கைப் பொருளை இத்தன்மையது எனக் கூறுக :—

தீ வெய்து; ஆகாயம் நிற்கும்.

6. செயற்கைப் பொருளை, ஆக்கச் சொல்லோடு கூறுக. ஆக்கக் கிளவி காரணத்தை முதலாகவுடையது :—

நீர் கலத்தலால், நிலம் மெலிதாயிற்று.

வழக்கினுள், ஆக்கச்சொல் காரணமின்றியும் வரும் :—

ஆடை நன்ருயிருந்தது.

7. வண்ணம் பெற்ற சினையையுடைய பெயர்ச்சொல் முற்பட அமையும், அதன்பின் சினையும் அதன்பின் முதலுமாகி அம்முறை மயங்காமை வழக்குப் பெற்றியலும் :—

செங்கால் நாரை.

8. தருதல், வருதல் என்ற சொற்கள் தன்மை முன்னிலையையே சார்வன. கொடுத்தல், செல்லுதல் என்ற சொற்கள் படர்க்கையிடத்தையே சார்வன :—

எனக்குத் தா; உன்னிடம் வருவேன்; அவனுக்குக் கொடு; இவரிடம் செல்.

5. வேற்றுமைப் பாகுபாடு

சொற்கள் ஒன்றனோடொன்று தொடரும்பொழுதே, வேற்றுமைப் பொருள் உண்டாகிறது. அதனால், வேற்றுமை பற்றிய ஆராய்ச்சி தொடர்மொழிக்கண் செய்யப் படும் ஆராய்ச்சியாகும். சொற்கள் வேற்றுமைப் பொருள் பெறுவதற்குக் காரணம் அவற்றைத் தொடரும் அண்மை நிலைகளே எனலாம். இந்த அண்மைநிலைகளின் விளக்கத்தைத் தனிச் சொற்களாலும் வாய்பாடுகளாலும் தொல்காப்பியர் காட்டுகின்றாரெனலாம் என்பர் சீனிவாசன்.

தொல்காப்பியம் சொல்லதிகாரத்தில், வேற்றுமை மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. சொல்லிலக்கணத்தில் ஒன்பது இயல்கள் வகுத்த தொல்காப்பியம் வேற்றுமைக்கு மாத்திரம் மூன்று இயல்கள் ஒதுக்கியிருக்கிறது. வாக்கிய அமைப்பில், திணை, பால், எண், இடம் என்பன மரபு தவறாமல் வர வேண்டியதன் அவசியத்தைப் பற்றிக் கிளவியாக்கம் என்ற முதலாவது இயலில் கூறிய தொல்காப்பியம் அடுத்து வரும் மூன்று இயல்களிலும் சொற்கள் ஒன்றுடன் ஒன்று தொடரும் போது, அவற்றின் தொடர்பைப் பல்வேறு விதமாக வேறு படுத்தி வரும் வேற்றுமையை எடுத்துக் கூறுவர். வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு என்பனவே அந்த இயல்கள். நன்னூலார், பெயரியலின் இறுதியிலேயே, வேற்றுமையை எடுத்துக் கூறுவர். வேற்றுமை கொள்வது பெயர்ச் சொல்லேயாதலின், நன்னூலார் இவ்வாறு கூறியிருக்கிறார் போலத் தெரிகிறது. ஆயின், எழுத்தியல், சொல்லியல், தொடரியல் என்று கொள்ளும்போது, தொடரியலில்

வேற்றுமைபெறும் முக்கியத்துவத்தை நன்னூலார் உணர வில்லைப் போலத் தெரிகிறது.

வேற்றுமை என்ருல் என்னவென்றும் அது எத்துணைய வென்றும் நன்னூல் பின்வருமாறு வரையறை செய்யும் :—

ஏற்கு மெவ்வகைப் பெயர்க்குமீ ருய்ப்பொருள்
வேற்றுமை செய்வன வெட்டே வேற்றுமை

—நன். சூ. 291

இதற்கு நன்னூல் விருத்தி தரும் விளக்கம் :—'எல்லாப் பெயரும் எல்லா வேற்றுமையும் ஏலாதென்பார் ஏற்கும் என்றும், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொற்களுள் பெயர்பட நின்றனவுந் தழீஇக் கோடற்கு எவ்வகையென்றும், வினை முதலிய மூன்றும் வேற்றுமை கொள்ளா தென்பார் பெயர் என்றும், ஏற்கு மெவ்வகைப் பெயர்க்கு மீருய் என எய்தியதனை விலக்கி 'எழுவா யுருபு திரிபில் பெயரே' எனப் பிறிதுவிதி வகுத்தலின் பெயர் முழுவதூஉம் உருபாம் எழுவா யுருபினை யொழித்து விளியுருபிற்குப் பெயரிறுதியாகிய அகப் பாட்டெல்லையினையும் தழீஇக் கோடற்குப் பொதுமையின் ஈருய் என்றும், பொருளையே யன்றிச் சொல்லையும் ஓரோவழி வேறுபடுப்பது ஐம் முதலிய ஏழுருபிற்குமேயன்றி எழு வாய்க்கு ஒவ்வாமையானும் பொருளொன்றையும் வேறு படுத்தல் எட்டுருபிற்கும் ஒப்ப முடிந்தமையானும் சொல்லை யும் உடன்கூருது பொருள் என்றும், வேற்றுமை என்னுங் காரியத்தைச் செய்யுங் கருத்தா வாகிய எட்டு வேற்றுமை யுருபிற்கும் வேற்றுமையெனவும் பெயர் போந்தது காரியவாகு பெயராகிய காரணக்குறியென்பார் வேற்றுமை செய்வன வேற்றுமை என்றும் கூறினர்'.

தொல்காப்பியர் வேற்றுமையென்ருல் இன்னது என்று கூறவில்லை. 'வேற்றுமை தாமே ஏழென மொழிப' என் கிறது தொல். சொல். சூ. 62. ஆனல், அடுத்த சூத்திரம், 'விளி கொள்வதன்கண் விளியோ டெட்டே' என்கிறது. 'வேற்றுமைதாமே ஏழென மொழிப எனப் பிறர்மதங்கூறி,

இச்சூத்திரத்தால், தந்துணிபுரைத்தார்' என்பர் சேனுவரையர். "வடநூலொடு மாறு கொள்ளாமைக் கூறல் ஆசிரியர்க்கு மேற்கோளாயின், விளி வேற்றுமையை எழுவாய் வேற்றுமைக்கண் அடக்கற் பாலராவர், அவ்வாறடக்கலில ரெனின் :—அற்றன்று : விளி வேற்றுமையை எழுவாய் வேற்றுமைக்கண் அடக்கல் ஆண்டு எல்லார்க்கும் ஒப்ப முடிந்ததன்று;

'ஏழியன் முறைய தெதிர்முக வேற்றுமை
வேறென விளம்பான் பெயரது விகாரமென்
ரேுதிய புலவனு முளனொரு வகையா
னிந்திர னெட்டாம் வேற்றுமை யென்றனன்,'

என்பவாகலின் ஐந்திர நூலார் விளி வேற்றுமையை எட்டாம் வேற்றுமையாக நேர்ந்தாரென்பது பெறப்படும்; ஆசிரியர் அவர் மதம்பற்றிக் கூறினராகலின் அதனோடு மாறு கொள்ளா தென்பது, இக் கருத்து விளக்கியவன்றே, பாயிரத்துள், 'ஐந்திர நிறைந்த தொல்காப்பியன்' எனக் கூறிற் றென்க" (தொல். சொல். 74 சூ. சேனு. உரை).

பெரும்பான்மையும் பெயர்ச்சொல் திரியாது நின்று வேற்றுமைப் பொருள் உணர்த்தும். வேற்றுமை உருபு ஏற்கும்போதும் பெயரும் உருபும் இயல்பாகப் புணர்ந்து நிற்கும். ஆனால் மூவிடப்பெயர்களில் அவ்வாறு அன்றித் திரிபு உண்டு. எழுவாய் வேற்றுமையில் உயிர் நீண்டும் ஏனை வேற்றுமையில் உயிர் குறுகியும் காணப்படும் :—

தன்மை	—நான், யான், நாம்	—என்னை, நம்மை
முன்னிலை	—நீ, நீர்	—நின்னை, உன்னை, நும்மை, உம்மை.
படர்க்கை	—தான், தாம்	—தன்னை, தம்மை.

சில பெயர்ச்சொற்களில், வேறுவகையான திரிபு உண்டு; டகர றகர மெய்கள் சில பெயர்களில் இரட்டும்.

நெட்டெ ழுத்திம்ப ரொற்று மிகத் தோன்றும்
அப்பான் மொழிகள் அல்வழி யான

—தொல். எழு. சூ. 196

நாடு+ஐ=நாட்டை ; மாறு+கு=மாற்றுக்கு ;
பேறு+கு=பேற்றுக்கு ; பிடிபாடு+இன்=பிடிபாட்டின்

தமிழிலக்கணகாரர் இத்தகைய திரிபை உருபு எனக் கொள்வதில்லை. ஆனால், இச்சொற்கள் இவ்வாறு திரிந்த பின்பே உருபு ஏற்கும். வேற்றுமைத் தொகைகளிற் கூட, இச்சொற்கள் இவ்வாறு திரிந்தாலே வேற்றுமைப் பொருள் ஏற்கும். எனவே, இத்திரிபு வேற்றுமைப் பொருளை உணர்த்துவதற்கு இன்றியமையாதது எனலாம். சில சொற்கள் உருபேற்கும் பொழுது அவற்றுக்கிடையே சாரியைகள் தோன்றுதலுண்டு :—

(1) இன் :—

பலவினால்; தோளின்மிசை; மண்ணின்மேல்; காணியினால்; வேலியினால்.

எண்ணுப்பெயர்களும் இந்தச்சாரியையை ஏற்கின்றன :—
ஒன்றினால்; இரண்டினால்; நாலினால்.

(2) அத்து :—

மகரஈற்று அஃறிணைப்பெயர்கள் மகரம் கெட்டு அத்துச் சாரியை பெறுதல் :

அத்தே வற்றே யாயிரு மொழிமேல்
ஒற்றுமெய் கெடுதல் தெற்றென் றற்றே

—தொல். எழு. சூ. 133

மஃகான் புள்ளிமுன் அத்தே சாரியை

—தொல். எழு. 185

திருநாமத்தால்; நிலத்தால்; பணத்துக்கு; குளத்தில்; மாணிக்கத்தின்.

மணியதை என்பதில் அத்து என்பதன் திரிந்த வடிவமாகிய அது இடம் பெற்றிருக்கிறது.

(3) அன் :—

இதற்கு; இதனுல்; இயற்றுவதற்கு; பெற்றதற்கு; காட்டுவதற்கு.

சிலவற்றில் என்பதில் அற்று என்னும் சாரியை வருகிறது. இற்று என்னும் சாரியை, உட்பட்டவையிற்றில், இவையிற்றுக்கு, உள்ளனவயிற்றுக்கு என்பனவற்றில் வருகிறது.

(4) அ :—

உனக்கு, எமக்கு, தமக்கு.

(5) உ :—

பொருளுக்கு; கோயிலுக்கு; திருப்பணிகளுக்கு.

இரண்டு சாரியைகள், ஒன்றையடுத்து ஒன்று, வருதலுமுண்டு :—

வளாகத்திற்கு; விண்ணப்பத்திஞல்; காயத்தினுக்கு; நிலத்திற்கு; பழத்தினுக்கு; தூபத்திற்கு.

தொல்காப்பியர் வேற்றுமையின் பெயர் முறையைக் கூறும்பொழுது, அவைதாம்

பெயர் ஐ ஒடு கு
இன் அது கண் விளியென்னும் ஈற்ற

—தொல். சொல். 64.

நன்னூலாரும் 292-ஆம் சூத்திரத்தில்,

'பெயரே ஐ ஆல் கு இன் அது கண்
விளி யென்ருகு மவற்றின் பெயர்முறை' என்பர்.

தொல்காப்பியர் ஒடு வேற்றுமைகூற, நன்னூலார் அதற்குப் பதிலாக, ஆல் வேற்றுமை கூறுகிருர். அதுதவிர, இருவருக்

குள்ளும், வேற்றுமையின் பெயர்முறைபற்றி வேறுபாடில்லை. தமிழிலுள்ள வேற்றுமைப் பாகுபாடுபற்றிக் கால்டுவெல் குறை கூறுவார். தமிழ் வேற்றுமைகளை வடமொழி இலக்கணப்படி வகுத்தனரென்றும் பொருள் நோக்கி வேற்றுமைகளை வகுத்தல், உருபுகள் நோக்கி வகுத்தல் ஆகிய இவ்விருவகையிலும் தமிழ் வேற்றுமைப் பாகுபாடு பொருந்தவில்லையென்றும் அவர் கூறுவர். தமிழ், தெலுங்கு முதலான மொழிகளில் உள்ள வேற்றுமைகள் எட்டுக்கு மேற்பட்டன, கணக்கற்றன என்பது அவர் கருத்து. பேசுவோன் கருத்தை விளக்கும் முறைகளும் கருத்துவகைகளும் மிகப்பல ஆதலின், அவ்வாறு வேற்றுமைப் பொருள்கள் பல ஆதல் இயல்பே. பல்வேறு இடங்களிலும் காலங்களிலும் வளர்ச்சியை ஒட்டியும் அவற்றை உணர்த்தும் தேவையை ஒட்டியும் வேற்றுமைகள் பெருகுதல் இயற்கை; வேற்றுமையுருகள் பலவாதலும் திரிதலும் இயற்கையே. இந்த வகையில் நோக்கும்போதும், வடமொழியைப் பின்பற்றி அமைத்த பாகுபாடு பொருந்தாது போகிறது. வடமொழிமுறையைப் பின்பற்றி, வேற்றுமைகளுக்கு முதல்வேற்றுமை இரண்டாம் வேற்றுமை என்பது முதலாகப் பெயரிட்டதும் தவறு என்கிறார் கால்டுவெல். தமிழிலுள்ள எழுவாய் வேற்றுமை, வேற்றுமை யென்ற பெயருக்குத் தகுதியுடையதல்ல என்றும் அதை வெறும் பெயர்ச் சொல்லாகவே கொள்ளலாம் என்றும் அவர் கூறுவர்.

ஒரு மொழியில் எத்தனை வேற்றுமைகள் உள்ளன என்பதை அந்த மொழியின் அக்கால நிலைமையுணர்ந்தே கூற வேண்டும். ஒரே மொழிக் குடும்பத்திலுள்ள வெவ்வேறு மொழிகளில், வேற்றுமைகளின் தொகை வேறுபடுகின்றன. வடமொழியில் வேற்றுமை எட்டு; லத்தீன் மொழியில் ஆறு; கிரேக்க மொழியில் ஐந்து. இது இவ்வாறுனல், இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த வடமொழி வேற்றுமைப் பாகுபாட்டைப் பின்பற்றித் திராவிடமொழிக் குடும்பத்தைச் சேர்ந்த தமிழுக்கு வேற்றுமை வகுத்தல் பொருந்தாமற் போவதில் வியப்பில்லை.

மூன்றும் வேற்றுமை என்று நன்னூலார் கொள்வதில், ஆல், ஆன் என்னும் உருபுகள் கருத்தா, கருவியென்னும் பொருள்களையும் ஒடு, ஓடு என்னும் உருபுகள் உடனிகழ்ச்சிப் பொருளையும் உணர்த்துவதைக் கால்டுவெல் எடுத்துக்காட்டி, அது இரண்டு வேற்றுமைகளாகப் பிரிக்கப்படவேண்டு மென்பர். இடைக்காலத் தமிழையும் பிற்காலத் தமிழையும் நோக்கும்போது, நன்னூலார் இந்த வேற்றுமையை இரண்டாக வகுக்காதது தவறு என்று கால்டுவெல் கூறுவது ஏற்கக் கூடியதாகத்தான் காணப்படுகிறது. ஆனால், தொல்காப்பியர் காலத்தில் ஒடு என்ற உருபு உடனிகழ்ச்சியை மாத்திரம் குறிக்கவில்லை. ஆன் என்பதைப் போலக் கருவியையும் குறித்தது. கொடியொடு துவக்குண்டான் என்பது எடுத்துக்காட்டு. தொல்காப்பியர் இந்த வேற்றுமைக்கு ஒடு வேற்றுமை என்றே பெயர் வழங்கி, அது கருவிகருத்தாவாதியாம் பொருள்களில் வரும் என்பர். புறநானூறு 22-ஆம் பாட்டில், ஆன் உருபு உடனிகழ்ச்சிப் பொருளில் வருகிறது :- தூங்குகையா னோங்கு நடைய. எனவே, பழைய தமிழில், ஒடு, ஆன் என்னும் இரண்டும் கருவிப் பொருளிலும் உடனிகழ்ச்சிப் பொருளிலும் வந்திருக்கலாம். சேனாவரையர் தொல். சொல். 74. சூ. உரையில் கூறுவது கவனிக்கத்தக்கது; 'ஒடுவும் ஆனும் இரண்டு வேற்றுமையாகற் பாலவெனின் :— அற்றன்று. வேற்றுமை மயக்கமாவது ஒரு வேற்றுமையது ஒரு பொருட்கண்ணாக, சில பொருட்கண்ணாக ஏனை வேற்றுமையுஞ் சேறலன்றே; அவ்வாறன்றிச் சிறிதொழித்து எல்லாப் பொருட்கண்ணும் இரண்டுருபுஞ் சேறலானும், வடநூலுள் பொருள் வேற்றுமையல்லது உருபு வேற்றுமையான் ஒரு வேற்றுமையாய ஓதப்படாமையானும், ஈண்டெல்லா வாசிரியரும் ஒரு வேற்றுமையாகவே யோதினாரென்க'.

நன்னூலார் ஐந்தாம் வேற்றுமைக்கும் ஏழாம் வேற்றுமைக்கும் இல் உருபு கூறியிருக்கிறார். ஐந்தாம் வேற்றுமைக்குரிய மற்ற உருபாகிய இன்னும் ஏழாம் வேற்றுமையுருபைப் பெயரேற்கும்போது ஊரின்கண் என்று வருவதிலுள்ள இன்னும் ஒன்றேயென்று கால்டுவெல் கருதியிருக்கிறார். அதனால்,

ஐந்தாம் வேற்றுமையுருபுகள் இடப்பொருளுக்குரிய உருபுகளாக இடப்பொருளே தருகின்றன. நீங்கல் ஒப்பு எல்லை முதலிய பொருள்களை, அந்த உருபுகளைத் தொடர்ந்துவரும் சொற்களே தருகின்றன என்று அவர் கொள்கிறார். ஐந்தாம் வேற்றுமைக்குரிய மற்றப் பொருளான ஏது, மூன்றாம் வேற்றுமைக் கருவிப் பொருளில் அடங்கலாமென்றும், அதனாலேயே, தொல்காப்பியர் 'இன் ஆன் ஏது' என்று கூறியிருக்கலாமென்றும் சிலர் கூறுவர். தொல்காப்பியர் காலத்தில் இல் உருபு இருக்கவில்லை. ஐந்தாம் வேற்றுமையில்வரும் இன் வேற்றுமை உருபு, ஏழாம்வேற்றுமையில்வரும் இன் சாரியை. எனவே, தொல்காப்பியர் காலத்தில், ஐந்தாம் வேற்றுமை தனி வேற்றுமையாக அமைய இடம் இருந்தது.

தொல்காப்பியர் வகுத்திருக்கும் வேற்றுமைப் பாகுபாடு, இன்றைய மொழி நூலார் கூறும் குறைபாடுகள் பல கொண்டிருக்கவில்லையெனலாம். முதலாம்வேற்றுமையை எழுவாய் வேற்றுமையென்றும் எட்டாவது வேற்றுமையை விளி வேற்றுமையென்றும் பெயரிட்ட தொல்காப்பியர், ஏனைய வேற்றுமைகள் யாவற்றுக்கும் ஒவ்வொரு உருபு கொண்டே பெயரிட்டிருத்தல் கவனித்தற்குரியது. ஒவ்வொரு உருபே யுடைய இரண்டாம் வேற்றுமையை ஐயென் வேற்றுமையென்றும் நான்காம் வேற்றுமையைக் கு வென் வேற்றுமையென்றும் ஐந்தாம் வேற்றுமையை இன்னென் வேற்றுமையென்றும் பெயரிட்டிருக்கிறார். மூன்றாம் வேற்றுமைக்கு ஒடுவென் வேற்றுமையென்று கூறிப் பின் வேறொரு இடத்தில் ஆன் உருபுங் கூறுகிறார். ஆறாம் வேற்றுமை, உயர்திணையில், கு வென்னுருபு பெறும் என்று வேற்றுமை மயங்கியலில் கூறும் தொல்காப்பியர், அதுவென் வேற்றுமையென்று, அந்த வேற்றுமையை எடுத்துக் கூறும்போது ஒரு உருபே கூறுகிறார். ஏழாம் வேற்றுமைப் பொருளைப் பல சொற்கள் உணர்த்திய போதிலும் கண்ணெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி யென்று, ஒரு சொல்லையே உருபாகக் கொள்கிறார். இரண்டாவதிலிருந்து ஏழாவது வேற்றுமை வரையுள்ள தொல்

காப்பியர் கூற்றுக்களை நோக்கும்போது, பெயர்ச்சொல் உருபு ஒவ்வொன்ருலும் அடையும் மாற்றத்தையும் அந்த மாற்றம் எத்தகைய இடங்களில் நடைபெறுகிறதென்பதையும் எடுத்துக்காட்டுவதே, அவர் முயற்சி போலத் தெரிகிறது. வேற்றுமைகளின் தொகையை எடுத்துக் கூறும்போது, தொல்காப்பியர் வடமொழியை மீறிச் செல்லவில்லை. தொல்காப்பியர் வகுத்த எட்டுவேற்றுமைகளும் கிட்டத்தட்ட வடமொழியிலுள்ள எட்டுவேற்றுமைகளுக்கு நிகரானவையே. இந்தக் கட்டுப்பாடுகளுக்குள் அடங்கிய தொல்காப்பியர், இன்றையவரையில், இன்னெரு மொழியில் வேற்றுமை யமையும்போது, அம்மொழியில் அதற்கான அடிப்படை காணப்படவேண்டும் என்பதை மனத்திலிருத்தி, உருபு நோக்கி வேற்றுமைகளை வகுக்க முயன்றிருக்கிருர்.

ஆனல், இரண்டாம் வேற்மையிலிருந்து ஏழாம் வேற்றுமைவரை, தொல்காப்பியர் ' இரண்டாகுவதே, ' ' மூன்ருகுவதே, ' ' நான்காகுவதே ' முதலிய தொடர்களால் வேற்றுமைகளை எடுத்தோதியது பிற்கால இலக்கணசிரியர் இரண்டாம் வேற்றுமை, மூன்ரும் வேற்றுமை, நாலாம் வேற்றுமை என்றற் ெருடக்கத்தனவாகப் பெயர்வைக்க வழி காட்டியிருக்கலாம். நன்னூலார் விளிவேற்றுமையை எட்டாம் வேற்றுமை என்பர். வீரமாமுனிவர் எழுவாய் வேற்றுமையை முதலாம்வேற்றுமை என்பர்.

ஒவ்வொரு வேற்றுமைக்கும் ஒவ்வொரு உருபு கூறும் தொல்காப்பியர், ஒவ்வொரு வேற்றுமைக்கும் ஒரே பொருள் அல்லது ஒரே வாய்பாட்டில் பொருள் கூற முயல்கிருர். ஒடுவென் வேற்றுமைக்குப் பொருள் கூறும்பொழுது வினைமுதல், கருவி பொருளென்பர். இவை இரண்டு பொருள்கள் போலத் தோன்றினும், இரண்டும் மிக நெருங்கிய தொடர்புடையன. இரண்டையும் சேர்த்துக் கருவிப் பொருளென்றுங் கூறலாம். பொருளின் விரிவு கூறுவதற்காக, இன்னெரு சூத்திரம் அமைத்து அங்கேயே, உடனிகழ்ச்சிப் பொருளையுங் கூறுவர்.

குவென் வேற்றுமையிலும் ‘ எப்பொருளாயினுங் கொள்ளும் அதுவே ’ என்று பொதுவாக ஒரே பொருளைக்கூறிப் பின் மற்றச் சூத்திரத்திலேயே, அதன் விரிவு எடுத்துரைப்பர். இன்னென் வேற்றுமைகூட, ‘ இதனின் இற்று இது ’ என்று பொருள் அமையவேண்டிய ஒரே வாய்பாடு கூறிப்பின்பே, அடுத்த சூத்திரத்தில் அதன் விரிவு உரைப்பர்.

நன்னூலார் முதலிய பிற்கால இலக்கணுசிரியர், தொல் காப்பியர் விரிவாகக் கூறியதைத் தாம் சுருக்கிக் கூறவேண் டும் என்ற எண்ணத்தில், இந்த நுட்பங்களைக் கவனிக்க வில்லை. இரண்டாம் வேற்றுமை, மூன்றும் வேற்றுமை முதலியனவாகப் பெயரை வழங்கிப் பல வேற்றுமைகள் பல உருபுகளும் பலபொருள்களுமுடையன என்று சூத்திரஞ் செய்ததைக் கண்ட மேனுட்டறிஞர், சிறப்பாகக் கால்டுவெல், இந்தப் பிற்கால இலக்கணுசிரியர்களைக் குறை கூறியதில் தவறில்லை. இலக்கணக் கொத்திலுள்ள 22–ஆம், 23-ஆம் சூத்திரங்கள் வேற்றுமைப் பாகுபாட்டின் அடிப்படை மங்கி மடிந்து விட்டதைக் காட்டுகின்றன :—

ஒருவேற் றுமைக்கோ ருருபே வருதலு
மொருவேற் றுமைக்குப் பலவுருபு வருதலு
மெனவிரு கூருய் வருமுரு புகளே
யைகுவ் வொன்றே யல்லன பலவே.

ஒருரு பிற்கே பலபொருள் வருதலு
மொருபொருட் கேபல வுருபுகள் வருதலு
மெனவி ரண்டாகும் வேற்றுமை யியல்பே
யவ்விரண் டனையு முறையே யறைகுவன்.

இந்தக் கூற்றுக்களை வைத்துக்கொண்டு பார்க்கும்பொழுது, கால்டுவெல் தமிழிலக்கண ஆசிரியர்களின் வேற்றுமைப் பாகுபாடு பற்றிக் கூறியுள்ள குறைகள் பொருத்தமானவை யென்றே கூறலாம். பிரயோக விவேக நூலார் இன்னும் ஒரு படி மேலே போய், வேற்றுமைகளுக்குத் திருதியை, சதுர்த்தி, பஞ்சமி முதலிய வடமொழிப் பெயர்களையே கையாள்வர்.

வீரசோழியம் வினையின் இலக்கணம் கூறும்பொழுது, விகுதியையும் காலங்காட்டு மிடைநிலையையும் சேர்த்து ஒரே உறுப்பாகக் கூறுவதுபோல, இங்கும் பன்மை குறிக்கும் உறுப்பையும் வேற்றுமையுருபையும் சேர்த்து ஒரே உறுப்புப் போலக் கூறும். வடமொழியில், ஒரே உருபு வேற்றுமையை யும் ஒருமை-பன்மையையும் உணர்த்துவதால், அதைப் பின் பற்றித் தமிழ்மொழிக்குப் பொருந்தாவகையில், இங்கு வீர சோழியத்தார் இலக்கணங் கூறுகிறார். வீரசோழியம் வேற் றுமைப்படலம் 2–ஆம் செய்யுள் உரை, ‘ஒருவனைக் கருதின சொல்லும் ஒருத்தியைக் கருதின சொல்லும் பலரைக் கருதின சொல்லும் ஒன்றை கருதின சொல்லும் பலவைக் கருதின சொல்லும் ஒருவனைச் சிறப்பித்த சொல்லும் ஒருத்தியைச் சிறப்பித்த சொல்லும் ஒன்றைச் சிறப்பித்த சொல்லுமெனப் பெயர்ச் சொல்லெல்லாம் எட்டுவகைப்பட்ட பிரகிருதியாம். அவற்றுள் சுவ்வும் அர்ரும் ஆரும் அர்களும் ஆர்களும் கள்ளும் மாரும் என இவையேழும் முதல் வேற்றுமைக்குருபு களாம். இவை எட்டாம் வேற்றுமை யொழித்து ஒழிந்த வேற் றுமையாறின் முன்பு நிற்கவும் பெறும் ஒரோவிடத்து. எங்கு மென்ற உம்மை யான், விளிவேற்றுமைக்கு முன்னும் சிறு பான்மை வரப்பெறும்’. அதே படலத்தில், 5–ஆம் செய்யுள் உரை, ‘முன்சொன்ன எட்டுப் பிரகிருதிக்கும் பின்னாகச் சொல் லின் பொருள் மாத்திரத்தை விளக்குதற் பொருட்டாகச் சு, அர், ஆர், அர்கள், ஆர்கள், கள், மார் என்று சொல்லப்பட்ட எழுவாய் வேற்றுமைப் பிரத்திய மேழும் வரும். வருமிடத்து, ஒருவனைக் கருதின சொல்லின் பின்னும் ஒருத்தியைக் கருதின சொல்லின் பின்னும் ஒன்றைக் கருதின சொல்லின் பின்னும் சு என்னும் பிரத்திய மொன்றே வரும். பலவைக் கருதின சொல்லின் பின்பு சு-கள் என்னும் பிரத்தியம் இரண் டும் வரும். எல்லாவிடத்தும் சு என்னும் பிரத்தியம் அழிந்தே வரும். எல்லாவிடத்தும் அழியுமாயின் வருதற்குக் காரண மென்னெனின் வடமொழியுடையான் வாரியென்னுஞ் சொல்லை வைத்து முதல் வேற்றுமை ஏக வசனத்தைப் பொருள் விளக்குதல் பொருட்டு எவ் வண்ணம் இட்டழித்

தான் இவனும் அதுபோல ஆக்கியழித்தானல்லது பதமாகா தென்று இட்டழித்தானென்க’.

		ஒருமை	மரியாதைப்பன்மை, பன்மை
ஒராம் வேற்றுமை		சு	அர், ஆர், அர்கள், ஆர்கள், கள், மார்.
இரண்டாம் வேற்றுமை		சு+ஐ	அர், ஆர், அர்கள், ஆர்கள், கள், மார். என்பவற்ேறாடு வரும் ஐ. அஃறிணையில் சு+ஐ.
	முதலியன.		முதலியன.

விரசோழியம் வடமொழி யிலக்கணத்தை அளவிறந்து பின் பற்றச் சென்றதால், ஏற்பட்ட தவறு இது.

வீரசோழியத்தாரின் ஆரும் வேற்றுமையுருபு பற்றிய கூற்றும் கண்டனத்துக்குள்ளாகிறது. ‘ஆரும் வேற்றுமைக்கு ஆன், ஆள், ஆர், ஆர்கள், அது, இன என்னுஞ் சொற்களின் முன் உடையென்னும் ஆரும் வேற்றுமை பெற்று உடையான் உடையாள் உடையார் உடையார்கள் உடையது உடையன வென்னும் ஆறு பிரத்தியமும் முன் சொல்லப்பட்ட எட்டுப் பிரகிருதிகளின் முன்பு மரபு பிழையாமல் வரும்’. இவை யாவும் பெயர்ச்சொற்கள்; உருபுகள் என்று இவற்றைக் கொள்வதற்கில்லை என்பர் டாக்டர் P. S. சுப்பிரமணிய சாஸ் திரி. உடைய என்பதை இவ் வேற்றுமைக்குரிய உருபாகக் கூறுவது பொருத்தமாயிருந்திருக்கும். வீரசோழியத்துக்கு முந்திய தமிழ்ச் சாசனங்களில் உடைய என்பது ஆரும் வேற்றுமைப் பொருளில் பரந்து வருகிறது. கொண்ட நாடுடைய வேட்டுவதரையன், சேரநாடுடைய குமாரநந்தை குறும்பராதித்தன், திருப்புறம்பியமுடைய பட்டாலகர்க்கு என்பன எடுத்துக் காட்டுக்கள்.

ஆனால், மொழியின் இலக்கணம் அவ்வக்கால மொழி நிலைக் கேற்பதாக அமைய வேண்டும் என்பதை வீரசோழி யத்தார் உணர்ந்திருக்கிறார் போலத் தெரிகிறது. மூன்றும் வேற்றுமைக் குரியதாகத் தொல்காப்பியர் கூறிய ஆன் உரு பிற்குப் பதிலாக, வீரசோழியத்தார் ஆல் உருபே கூறுகிறார். ன, ல என்பன வல்லின மெல்லின எழுத்துக்கள் பலவற்றின் முன் புணர்ச்சியில் ஒரே எழுத்தாக மாற்றம் பெறுகின்றன. அரிசியாற்றிருவமுது, தொல்காப்பியர்கால இலக்கணப்படி, அரிசியான் திருவமுது என்பவற்றின் புணர்ச்சியால் வந் திருக்கவேண்டும். இத்தொடர் அரிசியால் திருவமுது என்று பிரிப்பதற்கும் இடங்கொடுத்து நிற்கிறது. சிலர், ஆல் என்பதே உருபு என்று கொண்டிருக்கலாம். இவ்வாறு வழக் கில் வந்த ஆல் உருபு ஆன் உருபின் இடத்தை எடுத்து வருவதை, வீரசோழியத்தாருக்கு முந்திய தமிழிலக்கியங்களி லும் சாசனங்களிலும் காணலாம். சாசனங்களில் ஆன் உரு பிலும் பார்க்க ஆல் உருபே பரவலாகப் பயன்படுத்தப் படு கிறது. நன்னூலார் ஆல், ஆன் இரண்டுங் கூறுவர். ஐந்தாம் வேற்றுமை யுருபாகத் தொல்காப்பியர் இன்னைக் கூற, வீர சோழியத்தார் இல்லைக் கூறுவார். ஆன் உருபு ஆல் உருபாக மாறியது போலவே, இன் உருபு இல் உருபாக மாறியிருக்க வேண்டும். கொலை வாளிற் றலைதுமித்து என்று வருவது கொலை வாளின் தலை துமித்து என்று தொல்காப்பியர் கால இலக்கணப்படி யிருந்திருக்கலாம். இது கொலை வாளில் தலை துமித்து என்று பிரிப்பதற்கும் இடங்கொடுத்திருக்கிறது. இவ் வாறு வழக்கிற்கு வந்திருக்கக் கூடிய இல் உருபு இன் உரு பின் இடத்தை எடுத்து வந்தது. இதனால் வீரசோழியத்தார் ஐந்தாம் வேற்றுமை உருபு இல்லென்றே கொண்டார். நன் னூலார் இருவர் கூறுவதையும் சேர்த்து, இல், இன் ஐந்தாம் வேற்றுமை யுருபுகளென்பர். இன், இல்; ஆன், ஆல் என் பன மாற்றுவடிவங்களே. ஆனால், இடைக்காலத்திலிருந்து, இல் உருபு ஏழாம் வேற்றுமைக்கும் வருவதால், இல் உருபு எல்லா இடங்களிலும் இன் உருபின் மாற்று வடிவம் என்று கொள்ள முடியாது.

வீரசோழிய உரைகாரராகிய பெருந்தேவனூர், வேற்றுமைப் படலம் 3-வது செய்யுளில், பெயர்ச்சொல் எட்டு வேற்றுமையுடனும் வருவதற்கான வாய்பாடு கூறுகையில், சாத்தன், சாத்தனை, சாத்தனால், சாத்தனுக்கு, சாத்தன் பக்கலினின்று, சாத்தனுடைய, சாத்தன்பக்கல், சாத்தனே என்பர். ஏழாம் வேற்றுமை இடப்பொருளைக் குறிப்பதற்குச் சாத்தன்பக்கல் என்ற வாய்பாடு குறித்தது நோக்கற்குரியது. வீரசோழியத்துக்கு முந்திய தமிழ்ச் சாசனங்களில், பக்கல் என்பதே ஏழாம் வேற்றுமையைக் குறிக்கப் பரந்து வழங்குகிறது. 'சடையன் பக்கல் ஆயிரக்காடி நெல் கொண்டோம், மாதேவனார்பக்கல் பொன்கொண்டு, காடவன் மாதேவியார் பக்கல் சபையார் கொண்ட தன்மக் கட்டளையால்' என்பன எடுத்துக்காட்டுக்கள். சாசனங்கள் பெரும்பாலும் பேச்சு வழக்கோடு ஒத்தியல்பவை. பக்கல் என்ற உருபு இலக்கிய வழக்கில் சிறப்பிடம் பெறவில்லை. அதனாற்போலும், வீரசோழியத்தின் பின்வந்த நன்னூல் கூட, இதனை எடுத்தோதவில்லை. இடைக்காலத் தமிழில், நன்னூலார் காலத்திற்குமுன்பே, ஐந்தாம் வேற்றுமையும் ஏழாம் வேற்றுமையும் ஒரே உருபு கொண்டு மயங்கத் தொடங்கி விட்டமையும் வீரசோழியத்திலிருந்து தெரிகிறது. சாத்தன் பக்கலினின்று என்பது ஐந்தாம் வேற்றுமை; சாத்தன் பக்கல் என்பது ஏழாம் வேற்றுமை. இங்கும் இரண்டு வேற்றுமையும் பக்கல் என்று ஒரே உருபு கொள்கின்றன. இடைக்காலத் தமிழில் வேற்றுமையிடம் பெற்றவாற்றை யறிவதற்கு வீரசோழியமும் அதன் உரையும் அதிக அளவு உதவுகின்றன.

மூன்றும் வேற்றுமைக்குரிய ஒடு வென்பதும் இடைக் காலத் தமிழில் ஓடு வென்னும் மாற்று வடிவத்தைப் பெற்றது. ஒ, ஓ என்பவற்றுக்குப் பழைய தமிழ் வரிவடிவில் வேறுபாடு புள்ளியிட்டு எழுதுதலும் புள்ளியிடாது எழுதுதலுமாம். இடைக்காலத்தில், பனையோலைகளில் எழுதும்போது, புள்ளியிடும் வழக்கம் வேண்டியஅளவு போற்றப்படவில்லை. எனவே, ஒடு வென்பது ஓடு வென்றும் உச்சரிக்கப்பட்டு வழங்கியிருக்

கலாம். கருவிப் பொருளிலிருந்தே உடனிகழ்ச்சிப்பொருள் வளர்ச்சியடைந்தது போலக் காணப்படுகிறது. 'அதனொடியைந்த ஒருவினைக் கிளவி' (தொல். சொல். 74) என்ற பகுதிக்குச் சேனாவரையர் தரும் உதாரணம் 'ஆசிரியனொடு வந்த மாணாக்கன்' என்பது. 'ஒரு வினை யொடுச்சொல் உயர்பின் வழித்தே' (தொல். சொல். 91) என்னுமிடத்தில், ஒடு உயர்பொருளை யுணர்த்தும் வழித்தோன்றும் என்பர். ஒருவர் வருகைக்கு மற்றவர் காரணம் என்ற பொருளிலேயே ஒடு உருபு வழங்கியிருக்கிறது போலத் தெரிகிறது. இந்தக் காரணம் கருவிப்பொருளில் அடங்கும். இருவரும் வந்தார் என்பதை மாத்திரம் குறிக்கும் நிலை ஏற்பட்டபோது, உடனிகழ்ச்சிப் பொருள் தோன்றியிருக்கும். ஒடு உருபு இன்றைய பேச்சுவழக்கில் மறைந்துவிட்டதெனலாம், உடன் என்ற சொல்லுருபு உடனிகழ்ச்சிப் பொருளிலும் கொண்டு என்ற சொல்லுருபு கருவிப்பொருளிலும் இன்று பெரு வழக்கின.

சொல்லுருபுகள் சங்க காலத்திலிருந்தே வழங்கிவருகின்றன. கண்ணென் வேற்றுமையில் கால், திசை என்பன சங்க இலக்கியங்களில் வழங்கியுள்ளன. பொருட்டு, நிமித்தம் என்பன ஆக என்பதுடன் சேர்ந்து, நான்காம் வேற்றுமைக்கு வழங்கியுள்ளன. ஐந்தாம் வேற்றுமையில், நின்று இருந்து, விட, காட்டிலும், பார்க்கிலும் என்பன பயன்படுத்தப்படுகின்றன. ஏழாம் வேற்றுமையில், கண் உருபு இன்று வழங்குவதில்லை. ஏழாம் வேற்றுமை பற்றிய தொல்காப்பியம் சொல்லதிகாரச் சூத்திரங்கள் 81, 82 பற்றி, உரையாசிரியரிடையே கருத்து வேறுபாடு காணப்படுகிறது.

ஏழாகுவதே

கண்ணெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினைசெய் இடத்தின் நிலத்தின் காலத்தின்
அனைவகைக் குறிப்பின் தோன்றும் அதுவே

—தொல். சொல். 81

கண்கால் புறமகம் உள்ளுழை கீழ்மேல்
பின்சார் அயல்புடை தேவகை யெனாஅ
முன்னிடை கடைதலை வலமிட மெனாஅ
அன்ன பிறவும் அதன்பால என்மனார்

—தொல். சொல். 82

இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் இரண்டாம் சூத்திரத்தில் குறிப்பிடப்படுவன யாவும் கண்ணெனப் படுவதற்குப் பதிலாக வரும் வேறு உருபுகளென்பர். சேனாவரையர், கண்ணென்னும் உருபின் பல்வேறு பொருள்களே அச் சூத்திரத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பர். நன்னூலாரும் பிற்கால இலக்கணாசிரியர்களும் இளம்பூரணரின் கருத்தையே கொள்வர். ஆயின், சேனாவரையர் எடுத்துக்காட்டும் பின்வரும் வாதங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியனவே, 'கண்முதலாயின வெல்லாம் உருபென்றாரால் உரையாசிரியரெனின் :— உருபாயின், ஏழாவதற்குக் கண்ணென்பது உருபாதல் மேலே பெறப்பட்டமையாற் பெயர்த்துங் கண்காலென்றல் கூறியது கூறிற்றுமாகலானும் ஊர்ப்புறத்திருந்தான், ஊரகத்திருந்தான், கைவலத்துள்ளது கொடுக்கும் எனப்புறம், அகம், வலமென்னவற்றுவழி அத்துச்சாரியை கொடுத்து உதாரணங் காட்டினமையானும் அவர்க்கது கருத்தன்றென்க. உருபல்லவேல், என்னுழை, என்முன் என நிலைமொழி உருபிற்கோதிய செய்கை பெற்றவா றென்னையெனின் :—அதற் பொருட்டாகலின் (சொல்–76) எனவும் தம்முடைய தண்ணளியுந்தாமும் எனவும் உருபின் பொருள்பட வரும் பிறமொழி வந்துழியும் நிலைமொழி அச்செய்கை பெற்று நிற்றலின், அச்செய்கை உருபு புணர்ச்சிக்கே யென்னும் யாப்புற வின்றென்க'. கண், கால் முதலியன பொருட்டு, உடைய என்பன போலச் சொல்லுருபுகள் என்பது சேனாவரையர் கருத்து. தொல்காப்பியர் குறிப்பிட்டவற்றில், நன்னூலார் தேவகை அயல் என்பன குறிப்பிடவில்லை. வாய், திசை, வயின், முதல், பாடு, அளை, தேம், வழி, உழி, உளி, இல் என்பன, நன்னூலார் புதிதாகக் கூறுபவை. இவருக்கு முந்திய காலத்

தமிழ்ச் சாசனங்களில், இவற்றுள் சில, இப்பொருளில் வருவதைக் காணலாம்.

வழி :—ஆடு இடையர்வழி அடுத்து; நகரத்தார் கைவழி வைத்தது.

வாய் :—காசின்வாய் இருகலமாக; சிலைவாய்க் கணை சிதறி.

முதல் :—கார்த்திகை முதல் ஆறுறு திங்களில்; அவிட்டமுதல் பெருமானடிகளுக்கு விளக்கெரிப்பதாக.

நன்னூலார் குறிப்பிடும் இல்லுருபு இன்று பயின்று வழங்குகிறது ; இடத்தில் என்பதே இன்று இந்த வேற்றுமைப் பொருளைச் சாதாரணமாக உணர்த்தும் சொல். நன்னூலாருக்கு முந்திய சாசனங்களில் வரையென்னும் சொல்லுருபும் வருகிறது. ஆண்டுவரை சவையார் அளக்கும் பொலி நெல், வானவெல்லைவரைத் தாண்டும் அலைகடல் என்பன எடுத்துக்காட்டுக்கள். நன்னூலாருக்குச் சிறிது பிந்திய தமிழ்ச் சாசனங்களில், மிசையென்னும் சொல்லுருபு வருகிறது :—சிங்காசன மிசைக் கலையென மகிழ்ந் தினிதேறி; திறன்மடந்தை திருத்தோளின் மிசை வாழ.

தமிழிலக்கணசிரியர் கூறும் ஆறும் வேற்றுமை தனிரகமானது.

ஆறுகுவதே

அதுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
தன்னினும் பிறிதினும் இதனது இதுவெனும்
அன்ன கிளவிக் கிழமைத் தததுவே

—தொல். சொல். 79

வேற்றுமையியலில், தொல்காப்பியர் அதுவென்னும் ஒரு உருபே கூறுகிறர். ஆனல், வேற்றுமை மயங்கியலில், வரும் சூத்திரம்,

அதுவென் வேற்றுமை உயர்திணைத் தொகைவயின்
அதுவென் உருபுகெடக் குகரம் வருமே

—தொல். சொல். 94

எனவே, தொல்காப்பியர் ஆறும் வேற்றுமையுருபு உயர்திணையில் கு என்றும் அஃறிணையில் அது என்றும் கொள்ளுகிறார். ‘ஆறனொருமைக் கதுவு மாதுவும் பன்மைக் கவ்வு முருபாம்’ என்கிறது நன். சூ. 300. ஆறும் வேற்றுமையுருபு அஃறிணை ஒன்றன்பாலில் அது, ஆது என்றும் பலவின்பாலில் அ என்றும் நன்னூல் கூறுகிறது. ஆறும் வேற்றுமை உயர்திணை என்ன உருபு கொள்ளும் என்று நன்னூலார் கூறவில்லை. ஆயின் நன்னூலார் ஒன்றன்பாலுக்கும் பலவின்பாலுக்கும் வெவ்வேறு உருபுகள் கூறுவர். வேறு எந்தத் தமிழ் வேற்றுமையும் திணைபால் வேறுபாடு காரணமாக, வெவ்வேறு உருபுகள் கொள்ளவில்லை. டாக்டர் P. S. சுப்பிரமணிய சாஸ்திரி இதற்குக் கொடுக்கும் விளக்கமாவது :—கை எனது, கைகள் என என்னும் உதாரணங்கள் பெயர்களாகவும் குறிப்பு முற்றுக்களாகவும் முன்பு வழங்கியிருக்கும். வினை முற்று விகுதி பெயர்ச்சொல்லின் திணைபாலுக்கேற்ப அமைய வேண்டுவதே. ஆறும் வேற்றுமை யுதாரணங்களாக, எனது கை, எனது கைகள் அக்காலத்தில் வழங்கியிருக்க வேண்டும். கைகள் என என்ற வாக்கியத்தைக் கண்டவர்கள் எனது கைகள் என்பதிலுள்ள வேற்றுமையுருபை, அஃறிணை ஒன்றன்பால் விகுதியாகிய அது என்பதுடன் மயங்கி, வேற்றுமைத் தொடரையும் என கைகள் என்று மாற்றியிருக்க வேண்டும். அ வென்னும் உருபு மிகவும் அருகிய வழக்கினது. நுன சீறடி என்ற உதாரணம் சீவக சிந்தாமணியில் வருகிறது. ஆது, அ என்னும் உருபுகள், இன்றைய தமிழில் இறந்துவிட்டன வென்றே கூறலாம். அது வுருபு கூட, அருகிய வழக்கினதாகக் காணப்படுகிறது. உயிர் குறுகிய மூவிடப்பெயர்கள் தமிழில் உருபின்றியே, ஆறும் வேற்மைைப் பொருளை யுணர்த்தவல்லன. என் கண், உன் முகம், தன் படம் என்பன எடுத்துக்காட்டுக்கள். இன் சாரியை சேர்த்து

உருபின்றி ஆறும் வேற்றுமையை உணர்த்தும் இடங்கள் பல :—மரத்தின் கிளை, புலியின் நகம். இன் சாரியையுமின்றி வேற்றுமை யுணர்த்தும் தொகையும் உண்டு :—மரக்கிளை, புலிநகம். இன் சாரியைக்குப் பின்பு உருபு நிற்றலுமுண்டு:— மரத்தினது கிளை, புலியினது நகம். உடைய என்ற சொல் லுருபே இன்றைய தமிழில் பயின்று வழங்குகிறது.

தொல்காப்பியனுர் வேற்றுமை உருபுகளைக் குறியீடாக வழங்கினுலும், அவைபற்றி வேற்றுமைப் பொருளை வகைப் படுத்தியதாகத் தெரியவில்லை. பொருளே, வேற்றுமைக்கு அடிப்படை என்பதை,

யாத னுருபிற் கூறிற் றுயினும்
பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்
—தொல். சொல். 106

என்று கூறுவர். வேற்றுமையுருபுகள் வெறும் அடையாளங் கள் எனலாம். தமிழில் வெறும். உருபுகளாக நிற்பவை சில; சொல்லுருபுகளாக நிற்பவை சில எனலாம். ஐ, கு, ஆல், இன் முதலியன சொல்லின் தன்மையிழந்து வெறும் உருபு களாக நிற்பவை; உடன், கொண்டு, உடைய, இருந்து, உள் என்பன பொருள் தரவல்ல சொல்லுருபுகள். பொருள் தர வல்ல சொற்களே, காலப்போக்கில், பொருள் தன்மையிழந்து உருபுகளாக அமைந்துவிட்டன என்பர்.

6. பெயரடைகள்

திராவிட மொழிகளின் இலக்கணத்தில் பெயரடைகள் என ஒரு தனிப்பிரிவு இடம்பெறுகிறதா என்பது பற்றித் திராவிடமொழி யறிஞரிடையே இன்னும் கருத்தொருமைப் பாடு இல்லை. இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தமிழிலக்கண ஆராய்ச்சி நடைபெற்றுவந்த போதிலும், தொல்காப்பிய நெறியும் வீரசோழிய நெறியும் பல வேறுபாடுகளையுடையன வாயிருந்த போதிலும், பெயரடையென்று ஒரு தனி இலக்

கணப் பிரிவு வகுக்காமையில், பழைய மரபுத் தமிழ் இலக்கணங்கள் யாவும் ஒற்றுமையுடையனவாகக் காணப்படுகின்றன. சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பு, ஜூல்ஸ் புளோக் என்னும் பிரெஞ்சு நாட்டறிஞர் வெளியிட்ட திராவிட மொழிகளின் இலக்கண அமைப்பு (Jules Block–The Grammatical Structure of the Dravidian Languages) என்ற நூலில், திராவிடமொழிகளில் பெயரடைகள் இல்லையென்று கூறப்படுகிறது. அல்பிரெட் மாஸ்ரர் (Alfred Master), தோமஸ் பரோ (Thomas Burrow), கமீல் சுவெலிபில் (Kamil Zvelebil) முதலிய திராவிடமொழி யறிஞர், திராவிடமொழி களில் பெயரடைகள் காணப்படுகின்றன என்கின்றனர்.

பல்வேறு திராவிடமொழிகளில், பெயரடைகள் என்ற ஒரு பிரிவு உண்டு என்ற கருத்து, அவ்வத் திராவிடமொழிக்கு இலக்கணம் வரைந்த ஆதி ஐரோப்பிய அறிஞர்களாலேயே முதன்முதல் வெளியிடப்பட்டது. பெயரடையென்பதற்கு நேரான வகுப்பு யாதையும் பழைய மரபுத் தமிழிலக்கணங் களில் காணாத இந்த அறிஞர், குறிப்பு வினையாலணையும் பெயர்களைப் பெயரடைகளென்றனர் என்பர் கால்டுவெல். ஆன என்ற பெயரெச்ச வடிவத்தை, நல்லவன், நல்லவள், நல்லது என்னும் குறிப்பு வினையாலணையும் பெயர்களோடு கூட்டத் தோன்றும் அமைப்புகள் பெயரடைகள் போல இயங்குவன என்பர் கால்டுவெல். டாக்டர் F. கிற்றல் (Dr. Kittel–A Grammar of the Kannada Language) பெயரடைகளெனக் கூறும் குணவசனங்கள் இத்தகைய பெயர்ச் சொற்களே. A. H. ஆர்டன் (A. H. Arden-A Progressive Grammar of the Tamil Language) என்ற அறிஞரும் பெயர்ச் சொற்கள் ஆன என்பதுடன் கூடிப் பெயரடைகளாக ஆகின்றன என்பர். ஆகிய என்பதும் தமிழில் ஆன என்பது மாதிரி வழங்குகிறது. இந்த ஆரம்பகால ஐரோப்பிய அறிஞர் பெயரடையாகக் கொண்ட வடிவங்கள் தவறாயினும், பெயரடைகள் இம்மொழிகளில் உள்ளன என்ற கருத்து வீழ்ந்து விடவில்லை. இன்றைய அறிவியல் முறையில் ஆராய்ச்சி

செய்யும் மொழியியல் அறிஞர் பலர், இக்கருத்தை ஏற்கின்றனர். திராவிடமொழிகளில், விசேடமாகத் தமிழில், பெயரடைகள் இருக்கின்றன என்று கால்டுவெல் காட்டியுள்ளார். தெலுங்கு மொழியிலுள்ள பெயரடைகளை, அல்பிரட் மாஸ்ரர் (Introduction to Telugu Language) எடுத்துக்காட்டுகிறார். திருந்தாத திராவிடமொழிகளில் ஒன்றான பார்ஜி மொழியில் பெயரடைகள் இருப்பதைத் தோமஸ் பரோவும் பட்டாச்சாரியாவும் (Thomas Burrow and S. Bhattacharya-The Parji Language) குறிக்கின்றனர். ஜி. எஸ். காயும் டாக்டர் ஆர். சி. கயர்மத்தும் கன்னட மொழிக்கு வரைந்த இலக்கணங்களில் (G. S. Gai–Historical Grammar of Old Kannada; Dr. R. C. Hiremath–The Structure of Kannada), பெயரடைகளுக்குத் தனிப்பிரிவு அமைக்கின்றனர். பழைய மலையாள மொழிச் சாசனங்களை ஆராய்ந்த ஏ.சி. சேகர் (A.C. Sekhar–Education of Malayalam) பெயரடைகளை விரிவாக எடுத்துக் கூறுகிறார்.

பெயர்ச்சொற்களுக்குக் காலமுன்னாகத் தொடரும் பண்புப்பெயர் முதலிய பெயர்கள், தொடர்ந்துவரும் இயல்பாலேயே, திராவிடமொழிகளின் தொடரிலக்கணத்தில் பெயரடைபோல இயங்குகின்றன. தமிழிலக்கண ஆசிரியர் கூறும் உரிச்சொல் அத்தகையது என்பர் கால்டுவெல். உரிச்சொல் பெயரடையாகவோ, வினையடையாகவோ இருக்கவேண்டும் என்பர் ஜி. யு. போப். கமீல் சுவெலிபிலும் உரிச்சொல் பெயரடையென்பர். டாக்டர் P. S. சுப்பிரமணிய சாஸ்திரி, பெயர்ச்சொற்களதும் வினைச்சொற்களதும் அடிச்சொற்களே உரிச்சொல்லென்று வாதிப்பர். இசை, குறிப்பு, பண்பு முதலியன குறித்துவரும் சொற்களே உரிச்சொல் என்பர் பேராசிரியர் வரதராசனார். தொல்காப்பியர் உரிச்சொல் என்பதனால் எதைக் கருதியிருக்கிறார் என்று இன்று நிச்சயிப்பது கஷ்டம் என்பதே இவர்களுடைய குறிப்புக்களாலும் வாதங்களாலும் புலனாகிறது. உரிச்சொல் பற்றிய ஆராய்ச்சியை இப்போதைக்கு நிறுத்திக்கொண்டு பார்க்கிறபோதிலும், பெய

ரடைகள் போலச் சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் மாத்திரம் வழங்கும் பண்புப்பெயர் முதலியனவற்றைப் பெயரடையாகக் கொள்ள, இலக்கணுசிரியர் பலர் தயங்கவே செய்வர். பொன்வளையல், மதிமுகம், சாரைப்பாம்பு, இவ்வாறு வருவனவற்றை வேற்றுமைத்தொகை, உவமைத்தொகை, இருபெயரொட்டுப் பண்புத்தொகை என்று அவை பொருள் புலப்படுக்கும் இயல்புக்கேற்பக் கொள்வர். எனவே, இத்தகைய பெயர்ச்சொற்களைப் பெயரடைகளாகக் கொள்ளவேண்டியதில்லை.

திராவிடமொழிகள் யாவற்றிலும் பெயரெச்சங்கள் பெயரடைகளாகப் பயன்படுத்தப்படுகின்றன என்பர் கால்டுவெல். டாக்டர் F. கிற்றல், தன்னுடைய கன்னடமொழியிலக்கணத்தில், பெயரெச்சங்களாகக் கொள்ளப்படுபவை பெயரடைகளென அழைக்கப்படுகின்றன என்பர். வா/வர் என்ற வினையடியிலிருந்து வந்த, வருகின்ற, வரும் என முக்காலப் பெயரெச்சங்கள் தோன்றுகின்றன. இவற்றைத் தொடர்ந்து பெயர்ச்சொற்களே வருதலினுல், இவை இவ்வாறு கொள்ளப்படுகின்றன. இந்த வடிவங்கள் தொழிலையும் காலத்தையும் உணர்த்துவதால், இவற்றை வினையின் ஒரு பகுதியென்றே கொள்ளலாம்; பெயரடைகளெனக் கொள்ளத் தேவையில்லை.

சில பெயர்ச்சொற்கள் வேறு பெயர்ச்சொற்களை விசேடித்து நிற்கும்பொழுது அடையும் வடிவ வேறுபாடுகளைக் கால்டுவெல் எடுத்துக்காட்டுவார். மூவிடப்பெயர்களும் முன்னின்று பெயரடைகளாக நிற்கும். இவை நெடுமுதல் குறுகுகின்றன. என்முகம், உன்கண், தன் நோக்கு என்பன எடுத்துக்காட்டுக்கள். சுட்டின் அடியாகப் பிறக்கும் படர்க்கைப்பெயர்களும் பெயரடைகளாக வரும். இவை ஒருவித மாறுதலும் அடைவதில்லை :—இவன் மகள், அவன் காதலி. இவைபோல, வேரும் ஆரும் வேற்றுமைத் தொகைகள் பல, பெயரடைகளாக அமைகின்றன :—மரக்கிளை. அடைகளாக அமையும் ஆரும் வேற்றுமைத் தொகைகள் இரட்டிப்பைப்

பெறுகின்றன :—நாட்டு மக்கள், ஆற்று மணல், செப்புக்காசு, ஆட்டாண்டு. புறத்துவழக்கம், புளியம்வேர் என்னும் உதாரணங்களில் அத்து, அம் என்னும் சாரியைகள் பெயர்ச்சொற்களுக்கு விசேடித்து நிற்கும் தன்மையைக் கொடுக்கின்றன. ஆனால் இத்தகைய மாற்றங்கள் ஒரு சில பெயர்ச்சொற்களிலேயே நிகழ்கின்றன. வேற்றுமை பற்றிய பகுதியில் இந்த மாற்றங்களை அடக்கலாம்.

சொற்களை அடிச்சொற்களான பொருளசைகளும் விகுதிகளும் என்று பிரித்து ஆராய்கிறபொழுது, சில அடிச்சொற்கள் உருமாறிய பின்பே விகுதிபெற்றுப் பெயர்ச்சொற்களாகின்றன (பெர்–உ–மை) என்றும், மொழியின் தொடரிலக்கணத்தில் தனியே நின்று அல்லது பகுதியாகி வேறு சொற்களை விசேடிக்கின்றன (நல்-தமிழ்> நற்றமிழ்; பெர்–உ–நாள்> பெருநாள், சில்/சிற்இல்> சிற்றில்) என்றும் தெரியவருகின்றன என்பர். பெர், நல், சில் என்னும் பெயரடை அடிச்சொற்களோ அல்லது பெரு, சிறு என்ற பெயரடைப் பகுதிகளோ, பெயர்ச்சொற்கள் வேற்றுமையுருபு ஏற்பதுபோல ஏற்கா என்பர். பழைய மரபுத் தமிழிலக்கண ஆசிரியர்களுள், நன்னூலார் சொற்களைப் பகுதி, இடைநிலை, விகுதி முதலியனவாகத் தன்னுடைய நூலில் பதவியலில் பிரித்துக் காட்ட முயல்கிறார். கமீல் சுவெலிபில் இன்று பெயரடைகளில் ஒரு பகுதியாகக் கொள்ளும் சொற்களை, எப்படி விளக்குவது என்ற பிரச்சினை, நன்னூலாரை உடனே எதிர்நோக்குகிறது. 'தத்தம் பகாப்பதங்களே பகுதியாகும்' என்று பகுதிக்கு இலக்கணம் கூறித் தொடங்கிய நன்னூலார், அடுத்த சூத்திரத்திலேயே, பண்புப்பெயர்கள் சிலவற்றை எடுத்துக்கூறுவர் :—

செம்மை சிறுமை சேய்மை தீமை
வெம்மை புதுமை மென்மை மேன்மை
திண்மை யுண்மை நுண்மை யிவற்றெதிர்
இன்னவும் பண்பிற் பகாநிலைப் பதமே

நன். சூ. 135

இப்பெயர்கள் யாவற்றையும் பகுதிகள் என்று முடிவு கட்டிய நன்னூலார், விகுதியில்லாத சிறிய வடிவங்கள், இவற்றிலிருந்து எப்படி உண்டாகின்றன என்பதை அடுத்த சூத்திரத்தில் கூறுகிறார்.

ஈறுபோத லிடையுகர மிய்யாதல்
ஆதிநீடல் அடியகரம் ஐயாதல்
தன்னொற்றிரட்டல் முன்னின்ற மெய்திரிதல்
இனமிக லினையவும் பண்பிற் கியல்பே.

பெயர்ச்சொற்களின் மை விகுதி முதலியன கெட்டே, பெயரடைப் பாகங்கள் தோன்றின என்று கொள்வது இயற்கைக்கு மாறானது; மொழி வளரும் முறைக்கு எதிரிடையானது. பெயரடை அடிச்சொற்களும் பெயரடைப் பகுதிகளும் உள்ளன என்பது ஏற்றுக் கொள்ளப்படவேண்டும்; அவற்றிலிருந்தே பண்புப்பெயர்கள் தோன்றின என்று கொள்ளவேண்டும்.

திசைப்பெயர்களையும் அவற்றின் பெயரடைப் பகுதிகளையும் விளக்கும்போதும், தொல்காப்பியர் காலத்திலிருந்து தமிழிலக்கணகாரர் சுற்றிவளைத்தே கூறுகின்றனர். இந்தப் போக்கு, நன்னூலார் கூறுவதில் தெளிவாகக் காணப்படுகிறது :—

திசையொடு திசையும் பிறவுஞ் சேரின்
நிலையீற் றுயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்
றகரம் னலவாத் திரிதலு மாம்பிற

நன். சூ. 186

வடக்கு என்ற பெயர்ச்சொல், குற்றியலுகர ஈற்றுப் புணரியலில், ஈறுகெட்டு, வட என்ற வடிவம் கொள்கிறது என்பது நன்னூலார் கூற்று. திசை யுணர்த்தும் பெயரடை -கு/-க்கு என்ற விகுதி பெற்றுத் திசைப் பெயராகிறது என்று கொள்வதே பொருத்தம்.

எண்ணுப்பெயர்களுக்கும் எண்ணுப் பெயரடைகளுக்கும் இடையேயுள்ள உறவுகூட, இதே ரீதியில் விளக்கப்படுகிறது. எண்ணுப்பெயர்கள் யாவுமே பெயரடைகளெனக் கொள்ளப்படுவதற்கு இடமிருக்கிற பொழுதிலும், ஒரு, இரு முதலிய சிறிய வடிவங்கள் அந்தப் பெயருக்குக் கூடிய அளவு தகுதியுள்ளன. ஆயின் தொல்காப்பியரும் நன்னூலாரும் ஒன்று, இரண்டு என்னும் எண்ணுப்பெயர்கள் குற்றியலுகரப் புணரியலில், ஒரு, இரு எனத் திரிந்து வருகின்றன என்பர்.

தொல்காப்பியர் அ, இ, உ என்னும் சுட்டுக்களையும் எ என்னும் வினவையும் குறிப்பர். நன்னூற் காண்டிகையுரையில், ஆறுமுகநாவலர், இவற்றை இடைச்சொற்களென்பர். இவற்றைச் சுட்டுவினப் பெயரடை யடிச்சொற்களெனவும், பேச்சு மொழியில் பெருவழக்கான அந்த, இந்த, உந்த, எந்த என்பன, இவற்றிலிருந்து தோன்றிய பெயரடைகளென்றும் கூறலாம். தமிழில் உள்ள அந்த, இந்த என்பவை, அது, இது என்பவற்றிலிருந்து பிறந்திருக்கலாம். ஈறு பெயரெச்ச விகுதியாகிய அகர மெனலாம். அத, இத என்பவை மூக்கொலிபெற்று, அந்த, இந்த எனத் திரிந்திருக்கலாம். அனைத்து, இனைத்து, எனைத்து என்னும் சுட்டுவின அடியாகப் பிறந்த தொகைச்சொற் பெயரடைகளும் தமிழில் வழங்குகின்றன. ஆயின், மூவிடப்பெயர்பற்றிய ஆராய்ச்சியில், இவற்றை வைத்துக் கொள்ளலாம்.

திராவிடமொழிப் பெயரடைகள் பல, பண்பு அடிச்சொற்களுக்குப் பெயரெச்ச விகுதிகளைச் சேர்ப்பதால், தோன்றுகின்றன என்பர் கால்டுவெல். இத்தகைய சொற்களில், காலங்காட்டு மிடைநிலையிருப்பதில்லை; இருப்பினும் அவை காலத்தைக் காட்டுவதில்லை. தமிழ்ப் பெயரடைகள் பல, அடிச்சொல்லுக்கு - இய என்பது சேர்ப்பதால் உண்டாகின்றன :—பெர் - இய; சிற் - இய, காலங்காட்டுமிடைநிலை எதுவுமின்றிப் பெயரெச்சத்தை உணர்த்திநிற்கும் அகரம் மாத்திரம் சேர்வதாலும் பெயரடைகள் தோன்றுகின்றன :— நல்ல, உடைய. முக்காலத்தையு முணர்த்தவல்ல செய்யு

மென்னும் பெயரெச்ச வாய்பாட்டில் வரும் உம்மீறு கொண்டும் பெயரடைகள் அமைகின்றன :—பெர்-உம். இத்தகைய பெயரடைகளைக் குறிப்புவினைப் பெயரெச்ச மென்னும் மரபு வழிவந்த தமிழிலக்கணம். பெயர்ச்சொற்களோடு பாலறி கிளவிகள் சேர்த்தமைந்த பெயர்கள் பயனிலையாக வரும் போது, அவை குறிப்பு வினையெனக் கொண்ட பழந்தமிழிலக்கண ஆசிரியர், அகரஈறு, உம்மீறு பெற்றுவந்த பெயரடைகளை அவ்வினையின் பெயரெச்சமாகக் கருதினர். இறந்த காலத்தையுணர்த்தப் பயன்படும் -இய என்பதிலும் பார்க்க, முக்காலத்தையு முணர்த்தவல்ல உம்மீறு பெயரடையாக வருவதற்குப் பெரிதும் தகுதியுடையது. ஆறுமுகநாவலரும் வரதராசனும் அ வொன்றே, பெயரடையின் ஈறு என்கின்றனர். உம் எதிர்காலம் உணர்த்துவதால், அது குறிப்பு வினைப் பெயரெச்சமாக வருவதற்குத் தகுதியுடையதல்ல என்பர் ஆறுமுகநாவலர். உம்மீற்றுத் தெரிநிலை வினைப் பெயரெச்ச வடிவங்களைப் பார்த்துத் தவருன முறையில் அமைக்கப்பட்டனவே பெரும், வெறும் முதலிய பெயரடைகள் என்பர் வரதராசன். செய்யும் என்னும் வாய்பாடு நிகழ் காலத்தை உணர்த்துமெனவும், நிகழ்கால வினைகள் முக்காலத்தையு முணர்த்தப் பயன்படலாமென்றும் தொல்காப்பியரே கூறுவதனுல், உம்மீறு பெயரடை ஈருவதற்குத் தகுதியானதே.

முந்நிலைக் காலமுந் தோன்று மியற்கை
எம்முறைச் சொல்லும் நிகழுங் காலத்து
மெய்ந்நிலை பொதுச்சொற் கிளத்தல் வேண்டும்

—தொல். சொல். 240

ஜி. எஸ். காய், ஆர். சி. கயர்மத், ஏ. சி. சேகர் என்னும் இலக்கண ஆசிரியர்களிடையே, பெயரடை என்ருல் என்ன என்பதுபற்றி, அபிப்பிராய பேதமிருப்பதாகத் தெரிகிறது. பெயர்ச்சொல்லை விசேடித்து நிற்குஞ் சொல் பெயரடையென்று சேகர் கொண்டிருக்கிருர். எனவே, வேறு இலக்கணப் பிரிவுகளில், ஆராயப்படக் கூடிய வடிவங்கள் பல

வற்றை, இவர் பெயரடையாகக் கொள்வர். எண்ணுப் பெயரடைகள் என்று இவர் குறிப்பிடுபவை, எண்ணுப்பெயர்கள் பற்றி இவர் விளக்கியதில் குறிப்பிட்டிருக்கலாம். பெயரெச்சம் பற்றிய பகுதி, வினையியலுடன் நின்றிருக்கலாம். பெயரடைபோல வழங்கும் பெயர்ச்சொற்கள் பற்றிய பகுதி, பெயர்ச்சொல், வேற்றுமை என்னும் பிரிவுகளுக்குரியது. ஜி. எஸ். காயின்படி, பெயரடைகளாவன, பண்பு அல்லது அளவு குறித்துவரும் சொற்கள், பெயர்ச்சொற்களை விசேடித்து, ஆனால் பெயர்ச்சொற்களுக்கேற்பத் திணை, பால், எண், வேற்றுமை என்பன பெறாமல் நிற்பன. விசேடித்து நிற்பனவும் பயனிலையாக வருவனவுமான பெயரடைகளுமுண்டென்றும் அவை விசேடிக்கப்படும் பெயர்ச்சொல்லுக்கேற்பத் திணை, பால், எண் முதலியன பெற்று வருமென்றும் ஜி. எஸ். காய் கூறுவர். பாலறிகிளவி பெற்ற பெயர்ச்சொற்கள் பயனிலையாக வருவனவற்றையும் இவர் பெயரடையாகக் கொண்டிருக்கிறாரென்பது தெரிகிறது. கயர்மத், பின்வரும் சொற்களால் பெயரடையைக் குறிப்பர், 'கன்னடமொழியிலுள்ள ஒரு சொற்றொகுதி வேற்றுமையுருபேற்பதோ பாலறிகிளவி கொள்வதோ இல்லை. அவற்றில் ஒரு பகுதி, பெயர்ச்சொற்களுக்கு முன் வருகின்றன. அவை, பெயரடையெனப்படுகின்றன'. மொழியில் தனிப்பகுப்பு வேண்டிநிற்கும் பெயரடைகளை, இவருடைய வரையறையிலக்கணம் கிட்டத்தட்டச் சுட்டுகிறதெனலாம். இங்குகூட, வினைப்பகுதியும் ஈறுகளும் சேர்ந்த வினைவடிவங்களை, வினையியலில் குறிப்பிட்டிருக்கலாம்.

பெயரடைகளை மூன்றாக வகுக்கலாம் :—

1. வினைப்பகுதி/வினைக்கும் பெயருக்கும் பொதுவான பகுதி, அது தோன்றும் குறிப்பிட்ட சூழ்நிலையில், பெயரடையாக விளங்கல், 2. பெயரடைகள், 3. ஈறுகளுடன் கூடிய பெயரடைகள்.

1. வினைப்பகுதி/வினைக்கும் பெயருக்கும் பொதுவான பகுதி, பெயரடையாக அமைதல். வினைப்பகுதி அடையாகத்

தொடரும் அமைப்பை வினைத்தொகை என்னும் தமிழ் இலக்கணம். விரிபொழில்; விளைநிலம்; ஒலிகடல்; குரைகழல்; புகழ்நிரது. இந்தப் பகுதிகளின் செயலை விளக்கும் பெயர்ச் சொற்கள், இவற்றுக்கு முன்னதாக வரும் :—

சேவல் உயர்கொடி; நீர் ஓடுகால்; மாகந்தோய் குடை.

2. பெயரடைகள் :

(i) பண்பை உணர்த்தும் பகுதிகள் :—

இவை பெயரோடு தொடரும் அமைப்பைப் பண்புத் தொகையென்னும் தமிழ் இலக்கணம்.

ஒண்டமிழ்; நல்விளக்கு; பெருநான்கெல்லை; தண்புனல். இந்தப் பெயரடைகள் தொடரும்பொழுது வண்ணம், சினை, முதல் என்ற அமைப்பில் தொடருதல் மிகுதியாக உள்ளன :—

'அடைசினை முதலென முறை மூன்றும் மயங்காமை நடைபெற்றியலும் வண்ணச் சினைச்சொல்' என்னும் தொல். சொல். சூ. 26.

கோழ் இலை வாழை; புக முக வேழம்.

(ii) திசை உணர்த்தும் பகுதிகள் :—

கீழ் எல்லை; தென்கரை; மேற்றளி; வடபீற்கு? குட திசை.

3. ஈறுகளுடைய பெயரடைகள் :

(i) பண்புப் பெயரடைகள் :—

அ :—

பழவரிசி; பெரிய ஏரி; உள்ள அளவு.

உம் :—

பெரும் புகழ்; நெடுந்தோள்; நறும்பூ; வெம்முனை.

(ii) அளவுப் பெயரடைகள் :—

பலமுறை; சிலதரம்; பல்யானை.

தொல்காப்பியர் பெயரடை அல்லது வினையடை என்று ஒரு பகுதி கூறவில்லை. ஆனால், உரிச்சொல் கூறியிருக்கிறார். தொல்காப்பியத்திலுள்ள உரியியலும் அதன் உரைகளும் உரிச்சொல் பற்றிய ஒவ்வொரு கொள்கைக்கும் சார்பாக, இங்குமங்குமாக எடுத்துக்காட்டத் தக்க நிலையிலுள்ளன. உரிச்சொல், அதன் உரைகள் முழுவதையும் ஒன்றாக நோக்கும்போது, எல்லா அடிச்சொற்கள் அல்லது பகுதிகளையும் தொல்காப்பியர் உரிச்சொல்லாகக் கூறுகிறார் போலத் தெரிகிறது. பெயரடையாகவேயுள்ள அடிச்சொற்கள்/பகுதிகள், இவற்றில் ஒரு பகுதியே. ஆனால். மிகுதியில் பெரும்பாலன, பெயரடையாகப் பயன்படுத்தக் கூடியனவே.

7. வினையடைகள்

வினையடையாக வரும் சொற்களைத் தனியே சொல்வகையுள் ஒருவகையாகப் பிரித்தலும், தமிழில் இல்லை. ஆனால், பெயரடைபோல, வினையடையென்று கொள்ளத் தக்க சொற்களும் தமிழில் உண்டு.

பெயர்ச்சொற்களுக்கு ஆக என்ற செயவெனெச்சம் அல்லது ஆகி/ஆய் என்ற இறந்தகால வினையெச்சத்தைச் சேர்க்க, வினையடை தோன்றும் :—

செலுத்திவேனாகி; பொலிசையாக, தனியாய்.

பண்புப்பெயர்ச்சொற்கள் இவ்வாறு வினையடையாக அமைதல் மிகுதி :—

வெறுப்பாக நோக்கினான்.

பண்பு அடியாகத் தோன்றும் குறிப்பு வினையடையாதலுண்டு :—

சிறிது கடிந்தாய்.

முன், பின், மேல், கீழ், முன்பு, பின்பு, அங்கு, இங்கு, உங்கு, ஆங்கு, ஈங்கு, ஆண்டு, ஈண்டு, எங்கு, யாண்டு,

அம்பர், இம்பர், உம்பர் என்பன இடத்தைச் சுட்டும் வினை யடைகளாக வழங்குகின்றன.

முன், பின், முன்பு, பின்பு, முன்னம், பின்னை, அன்று, இன்று, என்று, என்றும், அற்றை, இற்றை என்பன காலத்தைச் சுட்டும் வினையடைகளாக வழங்குகின்றன.

அற, மிக, நேர என்பன செயவெனெச்சமாகத் தோன்றி, இன்று பெரும்பாலும் வினையடையாக வழங்கப்படுபவை.

இனிது, நன்கு, முற்றும், ஒருங்கு என்பனவும் வினையடைகளே யெனலாம்.

———

IX பொருளிலக்கணம்

1. சொல்லும் பொருளும்

மொழி பொருளைப் புலப்படுத்தும் கருவி. சொல் தன்னையும் வெளிப்படுத்திப் பொருளையும் வெளிப்படுத்தி நிற்கும். எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், தொடரியல் என்பன சொல்லின் தன்மையை வெளிப்படுப்பன. சொற்களும் தொடர்களும் பொருளை உணர்த்தி நிற்பது பொருளிலக்கணத்தின் பாற்படும். 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்கிறது தொல். சொல். சூ. 155. அடுத்த சூத்திரம் :—

பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லி னாகு மென்மனார் புலவர்.

சொற்கள் தனியாக இருக்கும்பொழுது, அவற்றுக்குப் பொருளை வெளிப்படுத்தும் ஆற்றல், முழுவதாக இல்லை. பல சூழ்நிலைகளிலும் கருத்துக்களிலும் பொதுவாக வரக்கூடிய சொற்கள் சந்தர்ப்பத்தைப் பொறுத்தே, பொருளை உணர்த்துவன. எனவே சொல் அமைப்பு, தொடர் அமைப்பு, அவை காணப்படும் சூழ்நிலை என்பன பொருள் வெளிப்பாட்டுக்குக் காரணமாகின்றன எனலாம். சில சொற்களே சந்தர்ப்பம் நோக்கிப் பலவகைப்பட்ட பொருள் நுட்பங்களைப் புலப்படுத்துகின்றன. எனவே சூழ்நிலையே, பொருளைத் தெளிவாக்குகிற தெனலாம்.

பொருண்மை சுட்டல் வெளிப்படையாகவும் அமையலாம்; சூழ்நிலையைப் பொறுத்துக் குறிப்பாகவும் அமையலாம்.

'தெரிபுவேறு நிலையலுங் குறிப்பில் தோன்றலும்
இருபாற் றென்ப பொருண்மை நிலையே

—தொல். சொல். சூ. 157

இதை விளக்கவந்த சேனுவரையர், 'மேற்கூறப்பட்ட பொருண்மை தெரிதல், சொன்மாத்திரத்தால் விளங்கி வேறு நிற்றலுஞ், சொன்மாத்திரத்தாற் றேன்ருது சொல்லொடு கூடிய குறிப்பாற் றேன்றலுமென இரண்டு கூற்றையுடைத் தென்று கூறுவர் ஆசிரியர்' என்பர். தெய்வச்சிலையார் எடுத்துக்காட்டுக்கள் தருமாறு :— 'தெரிபு வேறு நின்றன நிலம், நீர், தீ, வளி எனப் பொருள் உணர்த்துவனவும்; உண்டான், தின்ருன் எனத் தொழில் உணர்த்துவனவும். குறிப்பிற் றேன்றின — இவன் நெருப்பு, இவன் பசு எனக் குணம் பற்றியும், தீமைசெய்தாரை நன்மை செய்தீர் எனவும்; கொடுமை செய்தாரை வாழ்வீராக எனவும் அப்பொருள் பயவாது பிறபொருள் பயப்ப வருவன'. பிறிது மொழிதலணியொன்றைச் சேனுவரையர் குறிப்புப் பொருள் தரும் உதாரணமாக எடுத்துக் காட்டுவர்.

'இளைதாக முண்மரங் கொல்க களையுநர்
கைகொல்லுங் காழ்த்த இடத்து'

என்னுந் தொடர்மொழியால், நிலைபெற்றபின் களையலுறிற் களையலுற்ருரை அவர்தாங் கொல்வர் அதனுற் றியாரை அவர் நிலைபெருக்காலத்தே களைக என்னும் பொருள் விளங்குதலும் குறிப்பிற்றேன்றலாம் என்பர் சேனுவரையர். உருவகம், வேற்றுப்பொருள் வைப்பணி, சிலேடை என்பனவும் குறிப்புப் பொருளுணர்த்துகின்றன என்பர் சீனிவாசன்.

உவமையாம் பொருளையும் உவமிக்கப்படும் பொருளையும், வேறுபாடொழிவித்து ஒன்றென்பதோ ருள்ளுணர்வு தோன்ற ஒன்றும்படியமைத்தால், அது உருவக மென்னும் அலங்காரம். கண்வண்டு என்பதில் கண்ணே வண்டாகக் காட்சியளிக்கிறது.

முன் ஒரு பொருட்டிறந் தொடங்கிப் பின்னர் அது முடித் தற்கு வலியுடைய பிறிதொரு பொருளை உலகறி பெற்றியான் வைத்து மொழிவது வேற்றுப் பொருள் வைப்பென்னும் அலங்காரமாம். 'இருளையகற்றி ஒளியை வளர்க்கும் சூரியன்

மறைந்தான்; புறத்தே கடலாற் சூழப்பட்ட உலகில் இறவாமல் வாழ்பவர் யார்?' என்றாற்போல்வன இவ்வணிக்குரியன. உலகில் தோன்றுவன யாவும் அழியும் என்பது குறிப்பாக உணர்த்தப்படுகிறது.

ஒருவகையா நின்ற தொடர்சொல் பல பொருள்களது தன்மை தெரியவருவது சிலேடையென்னும் அலங்காரமாம். 'சிறைபடுவ புட்குலமே தீம்புனலு மன்ன' என்பதில் சிறை படுவ என்பது சிறகையுடையன எனவும் அணையையுடையன என்றும் புட்குலத்துக்கும் தீம்புனலுக்கும் ஏற்பப் பொருள் மாறுபடும்.

சிலர் சுவையும் புதுமையும் தோன்றக் குறுமொழியால் பேசுவர். உருவக அமைப்போடு விளங்கும் இவையும் குறிப்புப் பொருண்மையவே. ஏமாற்றுதல் என்ற கருத்தைத் தெரிவிக்க எல்லா மொழிகளிலும் குறுமொழி வழக்குகள் அதிகம் உள்ளன என்பர். தமிழில் குல்லாப்போடுகிறான், காதுகுத்துகிறான் முதலிய பல தொடர்கள் வழங்குகின்றன.

சொல்லின் பொருள் அதன் வழக்கைப்பற்றி அமைவது. வழக்கையும் இரண்டாக வகுப்பர் தொல்காப்பியர்.

தகுதியும் வழக்கும் தழீஇன ஒழுகும்
பகுதிக் கிளவி வரைநிலை யிலவே

—தொல். சொல். 17.

வழக்கு என்பது காரணமின்றி வழங்கற்பாடேபற்றி வருவதென்றும், தகுதி யென்பது அப் பொருட்குரிய சொல்லாற் சொல்லுதல் நீர்மை யன்று என்று அது களைந்து தக்கதோர் வாய்பாட்டாற் கூறுதலென்றும் சேனாவரையர் குறிப்பிடுவர். நன்னூலார் வழக்குக்கு இயல்பு வழக்கென்று பெயரிட்டுத் தகுதிக்குத் தகுதி வழக்கென்று குறியிடுவர். தகுதி வழக்குக் குறிப்புப் பொருளுணர்த்துவதெனலாம். இலக்கண முடையது, இலக்கணப்போலி, மரூஉ ஆகியவற்றை இயல்பு வழக்கென்றும் இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி ஆகிய

வற்றைத் தகுதி வழக்கென்றும் நன்னூலார் 267-ஆம் சூத்திரத்தில் பிரித்துக்காட்டுவர்.

தொல்காப்பியர் இடக்கர் என்பதனை 'அவையல் கிளவி' எனவும், அவையல் கிளவியாவது இழிந்தோர் சொல்லும் இழிந்த சொல்லாதலான் அதனை நன்மக்களிடை மறைத்துக் கூறுக வென்பார் 'அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்' (தொல். சொல். சூ. 442) எனவும் கூறியுள்ளார். கண்கழீஇ வருதும், கால்கழீஇ வருதும், ஆமுன் பகரவீ என்றற் றொடக்கத்தன இடக்கரடக்கல்.

இடக்கர்போலக் கூறத்தகாத தன்றேனும், மங்கலமில்லதை ஒழித்து மங்கலமாகக் கூறுவதை மங்கலம் என்பர். செத்தாரைத் துஞ்சினார் எனவும், ஓலையைத் திருமுகம் எனவும் இடுகாட்டை நன்காடு என்றும் வழங்கும் இத்தொடக்கத்தன மங்கலம்.

ஒவ்வொரு குழுவினுள்ளளோர் யாதானும் ஒருகாரணத்தால், ஒரு பொருளினது சொற்குறியை யொழித்து வேறோர் சொற்குறியாற் கூறுவதைக் குழூஉக்குறி என்பர். பொற்கொல்லர் பொன்னைப் பறி என்றும் யானைப்பாகர் ஆடையைக் காரை என்றும் வேடர் கள்ளைச் சொல்விளம்பி என்றும் வழங்கும் இத் தொடக்கத்தன குழூஉக்குறி.

இலக்கிய வழக்கிலும் பேச்சு வழக்கிலும் சொற்கள் உணர்ச்சிக் கலப்புடையனவாயுள்ளன. உணர்ச்சிப் பொருளை வெளிப்படுத்துவதற்குத் தமிழ் சில வழிகளைக் கையாளுகிறது. சொல் தொடரும் முறையை மாற்றுவதால், உணர்ச்சி தோன்றுகிறது. 'தமிழரும் இலங்கையை ஆண்டனர்' என்பதில் இல்லாத 'உணர்ச்சி 'தமிழரும் ஆண்டனர் இலங்கையை' என்பதில் காணப்படுகிறது. அதே சொற்களை மீண்டும் மீண்டும் சொல்வதாலும் அவைகளை மிகுதியாகக் கூறுவதாலும் உணர்ச்சி மிகுதியாகிற தெனலாம். 'ஓஒ பெரியன்' என்பது பெருமை மிகுதியுணர்த்துகிறது. 'ஒகோ' என்பது வியப்புப் பொருளைத் தருகிறது. 'சீச்சி' என்பது

இகழ்ச்சிப் பொருளைத் தருகிறது. அடையடுக்கி வருவதால், பெருமை அல்லது இழிவுப் பொருளைத் தருகிறது. 'மிகமிக உயர்ந்தது', 'மிகமிகக் கேவலம்' என்பன எடுத்துக் காட்டுக்கள்.

2. ஆகுபெயரும் அன்மொழித் தொகையும்

ஒன்றன் பெயரால், அதனோடு இயைபுடைய பிறிதொன்றைக் குறிக்க வழங்கும் ஆகுபெயர், அன்மொழித் தொகை என்பனவும் குறிப்புப் பொருள் தருவன எனலாம்.

பொருள்முத லாறோ டளவை சொற்றொனி
கருவி காரியங் கருத்த னாதியுள்
ஒன்றன் பெயரா னதற்கியை பிறிதைத்
தொன்முறை யுரைப்பன ஆகுபெயரே

—நன். சூ. 290

ஆகுபெயர் பற்றிய இந்த நன்னூற் சூத்திரம் ஆகு பெயரென்றால் என்ன என்று கூறி அதன் வகைகளையும் தெரிவிக்கிறது. தொல்காப்பியர் பின்வரும் மூன்று சூத்திரங்களில் ஆகுபெயர் பற்றிக் கூறுவர்.

முதலிற் கூறுஞ் சினையறி கிளவியும்
சினையிற் கூறும் முதலறி கிளவியும்
பிறந்தவழிக் கூறலும் பண்புகொள் பெயரும்
இயன்றது மொழிதலும் இருபெய ரொட்டும்
வினைமுத லுரைக்குங் கிளவியொடு தொகைஇ
அனையமர பினவே ஆகுபெயர்க் கிளவி

—தொல். சொல். 114

அளவும் நிறையும் அவற்றொடு கொள்வழி
உளவென மொழிப உணர்ந்திசி னோரே

—தொல். சொல். 116

அவைதாம்

தத்தம் பொருள்வயின் தம்மொடு சிவணலும்
ஒப்பில் வழியான் பிறிதுபொருள் சுட்டலும்
அப்பண் பினவே நுவலுங் காலை
வேற்றுமை மருங்கின் போற்றல் வேண்டும்

—தொல். சொல். 115.

இருவருடைய சூத்திரங்களையும் ஒப்பிட்டு நோக்கும்பொழுது, தொல்காப்பியர் கூறியதிலும் நன்னூலார் கூடக் கூறியிருப்பது தெரிகிறது. காலவாகு பெயர், தொழிலாகு பெயர், சொல்லாகு பெயர், தானியாகு பெயர் முதலியன தொல்காப்பியர் குறிப்பிடாததாய், நன்னூலார் குறிப்பிட்டிருக்கும் ஆகுபெயர் வகைகள். அறுவகைப் பெயர்களையும் அடிப்படையாகக் கொண்டு ஆகுபெயர் தோன்றுமென, நன்னூலார் கூறியிருக்கிறார். பெயர்கள் யாவும் அறுவகைப் பெயர்களுள் அடங்கக் கூடுமாதலால், நன்னூலார் குறிப்பிட்ட ஏனைய ஆகுபெயர் வகைகளை எடுத்துக் கூறாமலும் விட்டிருக்கலாம். தொல்காப்பியர் காலத்திலும் பார்க்க, நன்னூலார் காலத்தில் ஆகுபெயர்கள் கூடிய அளவு வழங்குவது வரலாற்று முறையிற் புரிந்துகொள்ளக் கூடியதே.

தொல்காப்பியர் ஆகுபெயரென்றால் என்னவென்று கூறவில்லை. ஆகுபெயரென்ற சொல்லே, அதன் பொருளை விளக்கும் என்று அவர் கருதியிருக்கிறார் போலத் தெரிகிறது. நன்னூலார் ஆகுபெயரென்றால் என்னவென்று வரையறையிலக்கணம் செய்ய முயல்கிறார். ஆகுபெயரென்றால், ஆகிவரும் பெயர், அதாவது ஒன்றன்பெயர் இன்னொன்றற்கு ஆகிவரும் பெயரென்று நன்னூலார் கொள்ளவில்லை. அதற்குக் காரணம், அன்மொழித் தொகையென்று ஒன்று கூறும் தொல்காப்பியர் அன்மொழித் தொகைக்கும் ஆகுபெயருக்கும் உள்ள தொடர்பு என்னவென்று தெளிவாகக் கூறவில்லை. வேற்றுமை மயங்கியலில் ஆகுபெயர் பற்றிக் கூறும் தொல்காப்பியர், சொல்லதிகாரத்தின் ஈற்றிலுள்ள எச்சவியலில், அன்மொழித் தொகையைப் பின்வருமாறு கூறுவர்.

பண்புதொக வரூஉங் கிளவி யானும்
உம்மை தொக்க பெயர்வயி னானும்
வேற்றுமை தொக்க பெயர்வயி னானும்
ஈற்றுநின் றியலும் அன்மொழித் தொகையே
—தொல். சொல். 418.

சேனாவரையர் இச் சூத்திரத்துக்கு எழுதிய விளக்கவுரையில், சிறுபான்மை உவமைத்தொகை, நிலைக்களத்தும் வினைத் தொகை நிலைக்களத்தும் அன்மொழித்தொகை பிறக்குமென்பர். நன்னூலாரும் இதே கருத்தினர் என்பது பின்வரும் சூத்திரத்தால் தெரிகிறது.

ஐந்தொகை மொழிமேற் பிறதொக லன்மொழி
—நன். சூ. 369.

ஆகுபெயரையும் அன்மொழித் தொகையையும் வேறு படுத்தற்காகவே, நன்னூலார் ஆகுபெயருக்கு வரையறை கூற முயன்றிருக்கிறார். சங்கர நமச்சிவாயப் புலவர், நன்னூல் விருத்தியுரையில், ஆகுபெயருக்கும் அன்மொழித் தொகைக்குமுள்ள வேறுபாட்டை எடுத்துக் கூறுவதிலிருந்து இது புலனாகிறது.

"அறுபத முதலியனவற்றைப் பொற்றொடி முதலியன போல அன்மொழித் தொகைப் பெயரென்றால் என்னை யெனின் :—அன்மொழித் தொகைப்பெயர் செய்யுள் இயற்று வோன் ஒருவரை வியப்பு முதலியவற்றால் தன் கூற்றாயும் பிறர் கூற்றாயும் உரைப்புழி ஆங்காங்கு வருவதன்றி, இது போல நியதிப் பெயராய் வருவதன்றென்க'. இவ்வாறு கூறுவதற்கு வசதியாகத்தான், நன்னூலார் தம் சூத்திரத்தில் 'தொன்முறையுரைப்பன' என்று கூறியிருக்கிறார்.

சிவஞானமுனிவர் இதே சூத்திரத்திற்குத் தரும் விளக்கம் : 'ஆகுபெயரும் அன்மொழித் தொகையுந் தம் பொருள் உணர்த்தாது, பிறிது பொருள் உணர்த்துதலால் ஒக்குமாகலின் அவை தம்முள் வேற்றுமையாதோ எனின் :—

ஆகுபெயர் ஒன்றன் பெயரான் அதனேடியையபு பற்றிய பிறி தொன்றனை யுணர்த்தி ஒரு மொழிக் கண்ணதாம்; அன் மொழித்தொகை இயைபு வேண்டாது இருமொழியுந் தொக்க தொகையாற்றலாற் பிறிது பொருளுணர்த்தி இருமொழிக் கண்ணதாம் ; இவை தம்முள் வேற்றுமையென்க'. இத்தகைய வேறுபாட்டுக்கு வழி செய்வதற்குத்தான், நன் னூலார் 'ஒன்றன் பெயரானதற்கியை பிறிதை' என்று சூத் திரம் செய்திருக்கிருர். அன்றியும், நன்னூலாரின் இந்தச் சூத்திரப் பகுதி தொல்காப்பியச் சொல்லதிகாரம் 115-ஆம் சூத்திரத்துக்கு மாறுபாடாக அமைந்திருத்தலும் கவனித்தற் குரியது. ஆகுபெயர் இயைந்த பொருளையும் உணர்த்தலாம் பிறிது பொருளையும் உணர்த்தலாம் என்று தொல்காப்பியர் சூத்திரம் செய்திருக்கிருர்.

ஆகுபெயர் ஒருமொழிக் கண்ணது, அன்மொழித்தொகை இருமொழிக் கண்ணது என்ற வேறுபாடு, தொல்காப்பியரோ, நன்னூலாரோ சொல்லவில்லை. ஆகுபெயர் உதாரணங்கள் பெரும்பாலன ஒருமொழியாகவே காணப்படுகின்றன. அன் மொழித் தொகை, இரண்டுக்குக் குறையாமல், சொற்கள் தொக்கே வரலாம். ஆயின், ஆகுபெயர் வகையொன்ருக, 'இருபெயரொட்டு' என்பதைத் தொல்காப்பியர் கூறுகிருர். சேனவரையர் இதனை அன்மொழித் தொகையாகக் கொள் கிருர். நன்னூல் உரையாசிரியர்கள், இதனை இருபெயரொட் டாகு பெயராகக் கொள்வார்கள். சிவஞானமுனிவர், அன் மொழித் தொகையை இருபெயரொட்டாகு பெயரிலிருந்து பின்வருமாறு வேறுபடுப்பர்: 'இருபெயரொட்டாகு பெயர் இருமொழிக்கண் வந்ததன்ருே வெனின் அன்று: என்னை வகரக் கிளவி அதுவாகு கிளவி மக்கட் சுட்டு என்னும் இயற் பெயர்ப்பொருளை விசேடித்து நில்லாது எழுத்தும் சொற்பொரு ளும் பொருளுமாகிய ஆகுபெயர்ப்பொருளை விசேடித்து நிற்பக் கிளவி சுட்டு என்பனவே ஆகுபெயர்ப் பொருளை யுணர்த்த, இருபெயரும் ஒட்டிநிற்குமாகலின். இனிப் பொற்ருெடி என் னும் அன்மொழித் தொகையிற் பொன் என்பது அவ்வாறு

அன்மொழித் தொகைப் பொருளை விசேடித்து நில்லாது தொடியினையே விசேடித்து நிற்ப அவ்விரண்டன் தொகை யாற்றலான் அன்மொழித் தொகைப் பொருளை யுணர்த்து மாறும் அறிக. இக்கருத்தே பற்றி மக்கட்சுட்டு முதலிய வற்றைப் பின்மொழி யாகுபெயரென்பாரும் உளரென அறிக'. சிவஞானமுனிவரே, பின்மொழி யாகுபெயரென்று கொள்ளும் வகரக் கிளவி, மக்கட்சுட்டு என்பனவற்றுக்கும் பொற்றொடி முதலிய அன்மொழித் தொகைக்கும் வேறுபாடு காட்டுகிறார். ஆயின், அன்மொழித் தொகை ஏன் ஆகுபெயரில் ஒரு பகுதி யாகக் கூடாதென்பது விளக்கப்படவில்லை.

ஒன்றன்பெயர் இன்னொன்றற்கு ஆகிவருவதே ஆகு பெயர் என்று தொல்காப்பியரும் சேனாவரையரும் கருதுகிற படி கொள்ளாவிட்டால், சில பிரச்சினைகள் எழும். தொன் முறை யுரைப்பனவாக இல்லாமல், ஒன்றன்பெயர் இன் னொன்றற்காகி வருவதை எப்படிக் கூறுவது? தொன்முறை என்றால், அதற்கு எல்லை எங்கே? ஒன்றன்பெயர் அதனோடு இயைபில்லாத இன்னொன்றற்காகி ஒரு மொழிக்கண் வந் தால், அது ஆகுபெயரா அல்லவா? எனவே, சேனாவரையர் கருத்தே ஏற்கக் கூடியதாகத் தெரிகிறது. தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையத்தைப் பதிப்பித்த வித்துவான் கணேசையரும் இதே கருத்தினரே.

சிவஞானமுனிவர் ஒரு பேரறிஞர் என்பதை மறுக்க இய லாது. அவர் சேனாவரையரைப் பல இடங்களிலும் பாராட் டுவார். ஆனால், ஆகுபெயர்-அன்மொழித் தொகை விடயத் தில், சேனாவரையரைக் கண்டிக்கிறார். அவர் தொல்காப்பிய முதற் சூத்திர விருத்தியில், இது பற்றிக் கூறுவன :—'சேனா வரையர் ஆகுபெயரு மன்மொழித் தொகையு மொன்றே யெனவும் இயற்பெயர் ஆகுபெயரெனப் பெயரிரண்டா யடங் கும் வழிப் பொற்றொடி யென்பதொரு பெயர்ப்பட்டது அதுவே யன்மொழித் தொகையாதலு முடைமையான் எச்சவியலுள் ளுங் கூறப்பட்டதெனவுங் கூறினர். அது வடநூல் விதியோடு முரணுதலானும் வடநூலோடு மாறுகொள்ளாமற் கூறுதலே

ஆசிரியர் மேற்கோளென "அதனினியறல்" என்னுஞ் சூத்திரத்துத் தாமுங் கூறினாராகலானும் அவர்க்கது கருத்தன்றென்க'.

இது தக்க நியாயம் என்று கொள்ள முடியாது. வடநூல் இலக்கணக் கொள்கைகள் யாவும் தமிழிற்கும் ஏற்புடையன என்ற கருத்து ஏற்றுக்கொள்ளக் கூடியதன்று. சேனாவரையர் ஒருஇடத்தில் அவ்வாறு கூறியதைக் கொண்டு, சேனாவரையர் கருத்துப்படி, தொல்காப்பியம் கூறுபவை யாவும் வடநூலொடு பொருந்தியிருக்க வேண்டும் என்று முடிவு கட்டக் கூடாது. சிவஞானமுனிவருக்கே இந்த வாதம் பொருத்தமாகக் காணப்படவில்லை போலத் தெரிகிறது. வடமொழியிலக்கண ஆசிரியர்களிடையே கூட, சில சில இடங்களில் கருத்து வேற்றுமை காணப்படுகிறதே, அப்படியானால் சேனாவரையரும் சில இடங்களில் சில வடநூல்களிலிருந்து கருத்துவேறுபாடுடையவராக இருக்கலாமே என்று அவர் மனம் சொல்கிறது. அதனால், பின்வருமாறு எழுதுகிறார் :

'முக்குணங்களு மாறி மாறி வருதலின் அதுபற்றி எனைத்துணை நுண்ணறிவாளரு மொரோ வழி மயங்குதலியல்பென்க. 'இங்ஙன மாகலின் வடமொழியினும் ஆசிரியர் பாணினியார் தொல்லாசிரியர் சூத்திரங்களுட் சிலவற்றைத் தம்முடைய சூத்திரங்களா லெடுத்தோதி மறுத்து வேறு விதி கூறுவர். அவர் சூத்திரங்களுட் சிலவற்றை ஆசிரியர் வரருசியா ரெடுத்தோதி மறுத்து வேறு விதி கூறுவர். அவ்விருவரையு மோரோரிடங்களினாசிரியர் பதஞ்சலியா ரெடுத்தோதி மறுத்து வேறு விதி கூறுவர். அதுபற்றி யவரிகழப்படாரென்க. அஃதேல் ஆசிரிய ரகத்தியனார் தொல்காப்பியனார் பதஞ்சலியார் முதலாயினோரு மொரோவழி யவ்வாறு மயங்கிக் கூறுபவாலோவெனின் :—அவர் தவத்தான் மனந்தூயராய் முக்குணங்களையுங் கடந்து இறைவனருள் பெற்றுடையராகலின், அன்னரல்லரென வுணர்க'. தொல்காப்பியர் தமிழகம் கண்ட முதல்தர இலக்கண ஆசிரியரென்பதை மறுப்பதற்கில்லை. எனினும் அவரும் மனிதரென்

பதனுல், தெய்விக அருள்பெற்றவர், தவறி விடமாட்டார் என்ற வாதம் அறிவியல் யுகத்துக்கு ஒவ்வாதது. ஆனுல், ஆகுபெயர் பற்றிய விளக்கத்தில், தொல்காப்பியர் தவறிய தாகக் கொள்ள வேண்டியதில்லை.

3. சொற்பொருள் மாற்றம்

சொற்கள் பொதுவாகச் சூழ்நிலையை ஒட்டிப் பொருளுணர்த்துகின்றன. சில இடங்களில் ஒரு பொருளையும் வேறு சில இடங்களில் அப்பொருளோடு தொடர்புடைய இரண்டாவது பொருளையும் உணர்த்துகின்றன. இரண்டாவது பொருளுணர்த்தும் சூழ்நிலையில் சொற்கள் வரும்போது, இரண்டாவது பொருளே முதற் பொருள் என்ற எண்ணம் சிலருக்கு ஏற்படும். அதே சூழ்நிலையில், அச்சொல், அதே பொருளையுணர்த்திப் பயின்று வழங்குமாயின், இரண்டாவது பொருளே முதற் பொருள் என்று கருதும்நிலை பொதுவாக ஏற்பட்டுவிடுகிறது. இவ்வகையில் தோன்றும் பொருள் மாற்றங்களையே, சிறப்புப் பொருட்பேறு, பொதுப்பொருட்பேறு, உயர்பொருட்பேறு, இழிபொருட்பேறு, நுண்பொருட்பேறு, பருப்பொருட்பேறு என்றெல்லாம் வகைப்படுத்துவர்.

பொதுப் பொருளைக் குறித்த சொற்கள் சிறப்புப் பொருளைத்தரல் சிறப்புப்பொருட்பேறு எனலாம். அரண்மனை என்ருல், காவல் அமைந்த வீடு எனப் பொருள்படும். காவல் அமைந்த வீடுகள் யாவும் அரண்மனைகளேயாயினும், அத்தொடர் அரசனுடைய வீட்டை மாத்திரம் குறிக்கு மளவுக்குப் பொருள் சுருங்கிவிட்டது. இல்லான் என்ற சொல் கல்வி இல்லான், அறிவு இல்லான், புகழ் இல்லான், செல்வம் இல்லான் எனப் பலவற்றைக் குறிக்கவல்லதாயினும், செல்வம் இல்லாதவனைக் குறிக்கவே வழங்குகிறது. கல்லால் கட்டப்பட்ட அறையெல்லாம் கல்லறையென்ற பெயருக்குரியவை யானபோதும், இறந்தவரைப் புதைத்துக் கட்டப்பட்ட அறையையே அது குறிக்கிறது. திருத்தப்பட்ட பொரு

ளெல்லாம் திருத்து என்ற பெயருக்கு உரியவையாயினும், இடைக்காலச் சாசனங்களில், திருத்து என்ற சொல் காடாக இருந்து வயலாகத் திருத்தி எடுக்கப்பட்ட நிலத்தையே குறிக்கிறது. பொன் என்பது முன்பு உலோகம் எல்லாவற்றுக்கும் பொதுப்பெயர். இன்று அது ஒருவகை உலோகத்தையே உணர்த்துகிறது. இழவு, புல், நெய், பழையது என்னும் சொற்களும் இவ்வாறு சிறப்புப்பொருள் அமையப் பெற்றுள்ளன.

முன்பு ஒருவகைப் பொருளுக்கே உரியதாக வழங்கிய பெயர், பின்பு அதனோடு ஒத்த பலவற்றுக்கும் பொதுப்பெயராக வழங்குதல் பொதுப்பொருட்பேறு எனலாம். ஓலை என்ற சொல் முதலில் தென்னை, பனை முதலிய சிலவற்றின் இலையையே குறித்தது. எழுதுவதற்குப் பனையோலை பயன்பட்டதால், இடைக்காலத் தமிழில் திருமுகம், ஆவணம் என்பனவற்றைக் குறிக்கவும் இச்சொல் வழங்குகிறது. பழைய தமிழில் சந்திரனைக்குறிக்க வழங்கிய திங்கள் என்ற சொல், இடைக்காலத் தமிழில் மாதத்தைக் குறிக்கவும் வழங்குகிறது. சந்திரனைக் குறிக்கும் சொல் மாதத்தைக் குறிக்க வழங்குதல், வேறு மொழிகளிலும் உண்டு என்பர். ஆனால், சூரியனின் பழைய தமிழ்ப் பெயரான ஞாயிறு என்ற சொல், இடைக்காலத் தமிழில் மாதத்தைக் குறிக்க வழங்குதல் ஒரு புதுமை. கறி என்பது பழைய தமிழில் மிளகை உணர்த்திய சொல். பின்பு மிளகு சேர்த்து ஆக்கும் பொருள்களைக் குறித்தது. இன்று, மிளகு சேராமல் ஆக்கும் பல பொருட்களையும் உள்ளடக்கி மிகப்பரந்த பொருளில் வழங்குகிறது. எண்ணெய், மரம், மரக்கால், தண்ணீர், செம்பு என்பனவும் பொதுப் பொருள் பெற்றுள்ளன.

முன்பு இழிந்த பொருளைக்குறித்து வந்த சொல் இப்போது உயர்ந்த பொருளில் வழங்குதல் உயர்பொருட்பேறு எனலாம். நீறு என்பது தூள் என்று பொருள்படும். நெருப்பினால் தூளாவனயாவும் நீறு எனலாம். ஆனால், காலப் போக்கில், திருநீற்றையே அது குறிக்கத் தொடங்கிவிட்டது.

கள்ளுண்டு மகிழும் நிலையை உணர்த்திய களிப்பு, மகிழ்ச்சி என்ற சொற்கள், இன்று பொதுவான மனமகிழ்ச்சியைக் குறிக்கின்றன. பிள்ளை, பாப்பா, தொண்டர், கழகம் என்ற சொற்களும் உயர்பொருள் பெற்று வழங்குகின்றன.

முன்பு உயர்ந்த பொருளில் வழங்கி வந்தசொல், இப்போது இழிந்த பொருளைக் குறித்தல் இழிபொருட்பேறெனப் படும். குவியலாக இருக்கும் ஒன்றைக் குறித்துவந்த குப்பை என்ற சொல், இன்று உதவாத பொருள்களின் குவியலையே குறிக்கிறது. வாசனையைப் பழந்தமிழில் உணர்த்தி நின்ற நாற்றம் என்ற சொல், இன்று துர் நாற்றத்தையே உணர்த்து கிறது. பலர் சேர்ந்திருக்குமிடம் சேரி என்று வழங்கியது. பார்ப்பனச் சேரி என்ற வழக்கும் இருந்தது. தாழ்த்தப் பட்டோர் என்போர் வாழும் பகுதியையே, இச்சொல் இன்று குறிக்கிறது. காமம், அக்காள் என்ற சொற்களும் இழிபொருள் பெற்றுள்ளன.

ஆகுபெயர்களாக அமைபவை பல, நுண்பொருட்பேற் றினையடைந்து நுண்பொருட்பேறு பெறுகின்றன. தலை, அரை, கால், நோக்கம் என்பனவற்றைச் சீனிவாசன் எடுத்துக்காட்டுவர். அரை, கால் என்ற உறுப்புக்களை உணர்த்தும் சொற்கள் அளவுகளையும் உணர்த்துகின்றன. நோக்கம் பார்வையை உணர்த்தி, இன்று குறிக்கோளை உணர்த்து கிறது. தலை என்ற உறுப்புப் பெயர் சிறப்பு என்ற பொருளை யும் தருகிறது. செம்மை, தழுவல், சூழ்ச்சி என்பனவும் நுண்பொருள் உணர்த்தி நிற்கின்றன என்பர் வரதராசன்.

முதலில் நுண்மையான பொருளை யுணர்த்திவந்த சொல், பிறகு அது போன்ற பருப்பொருளையுணர்த்தல் பருப் பொருட்பேறெனப்படும். விருந்து என்பது புதுமை என்னும் பண்பை உணர்த்திவந்து, வீட்டிற்குப் புதியவராக வந்த வரை உணர்த்துகிறது. வறுவல், முறுக்கு என்னும் தொழிலை யுணர்த்தும் சொற்கள் இன்று பருப்பொருளை யுணர்த்து கின்றன.

பேச்சு மொழியில், ஒரு சொல் ஒரு பொருளை யுணர்த்தும். இருபொருளுணர்த்திவரின், அவற்றுள் ஒன்று நிற்க, மற்றென்று அழியும்; இன்றேல் அச்சொல் திரிபுற்று அல்லது அடையடுத்து இரண்டாம் பொருளையுணர்த்தும். கவலை யென்ற சொல் பிரிந்து செல்லும் வழியிடத்தையும் மனக் கவலையையும் உணர்த்தியது. இன்று மனக்கவலையை மற்றும் உணர்த்துகிறது. போர் என்ற சொல் வைக் கோற் போரையும் சண்டையையும் குறித்து வந்தது. வைக் கோற் போரைக் குறிக்க, முன்பு போர்வு என்று சிறிது திரிந்த வடிவம் வழங்க, இப்போது, வைக்கோற் போரென அடையடுத்த வடிவமே வழங்குகிறதென எடுத்துக்காட்டுவர் வரதராசனார். ஒரு பொருளையுணர்த்த இரு சொல் வழங் கின், ஒன்றுநிற்க மற்றென்று அழியும் அல்லது வேறு பொரு ளுணர்த்தத் தொடங்கும் என்பர். குடக்கு, மேற்கு என்ற இரு சொல்லும் ஒரே பொருளுணர்த்துவன. இன்று குடக்கு வழக்கற்றுப்போய்விட்டது. நடை, நடத்தல், நடக்கை என்பன ஒரே பொருளில் வழங்கியிருக்கக்கூடும். இன்று அவை ஒவ்வொன்றும் வெவ்வேறு பொருளில் வழங்கு கின்றன.

சில சொற்கள் பொருளில் அடையும் மாற்றம் விரிவு, சுருங்கல், உயர்பு, இழிவு முதலியனவின்றி, வெறும் மாற்ற மாக இருக்கும் என்று கூறிப் பழந்தமிழ் என்ற நூலில், இலக்குவனார் தரும் உதாரணங்களிற் சில :—

சொல்	பழம்பொருள்	புதுப்பொருள்
அகம்	உள்,மனம்	கருவம்.
அகலம்	மார்பு	இடத்தின் பரப்பு.
கிழவன்	உரியவன்	முதியவன்.
கோடை	மேல்காற்று	வெயிற்காலம்.
செத்தல்	கருதல்	சாதல்.
தஞ்சம்	எளிமை	அடைக்கலம்.
விருந்தினர்	புதியவர்	உறவினர்.

சொற்களுக்குப் புதுப்பொருள் உண்டாதல் ஒருவகை. பொருளைக் குறிக்கப் புதுச்சொற்கள் அமைதல் இன்னொரு வகை. பழைய சொற்கள் வழக்கு மிகுதியால் பல பொருளுக்கும் உரிமையாகிவிடுவதால், நுட்பமான கருத்துக்களை விளக்கப் புதுச்சொற்கள் தோன்றும். பழைய சொற்கள் வழக்கிறந்து போவதுமுண்டு. சொற்கள் நிலையானவையல்ல; அவ்வப் பொழுது தோன்றிக் கொண்டும் மறைந்து கொண்டும் வரும். புதிய சொற்கள் தோன்றுதல் மாத்திரமன்றிப் பழைய சொற்கள் புதிய வடிவோடு விளங்குதலுமுண்டு. பொழுது என்பது போது எனவும் உருண்டை என்பது உண்டை எனவும் மாறியுள்ளன என்பர் சீனிவாசன். சிறு சொற்கள் மறைந்து விடாமல் ஆக்க விகுதிகள் பெற்றுப் பிற்காலத்தில் வழங்குதல் தமிழ் மொழியில் காணப்படும் சிறப்பியல்பாகும்: ஆர் — ஆர்வம்; துயில் — தூக்கம்; வெண்மை — வெளுப்பு. மொழியில் சொற்களுக்குப் புதுப் பொருள் தோன்றுவதைப்போலவே, புதுச்சொற்களும் புதுச் சொல்லமைப்புகளும் மொழியில் மாறியமைதல் இயல்பாக உள்ளது.

★★★

மேற்கோள்

தமிழ் :

ஆறுமுக நாவலர் ... இலக்கணச் சுருக்கம்; நன்னூற் காண்டிகையுரை.

இலக்குவனர் ... பழந்தமிழ்.

இளம்பூரணர் ... தொல்காப்பியம் எழுத்ததிகார உரை.

குணவீர பண்டிதர் ... நேமிநாதம்.

சங்கர நமச்சிவாயர் ... நன்னூல் விருத்தியுரை.

சிவஞான முனிவர் ... நன்னூல் விருத்தி—புத்தம் புத்துரை ; தொல்காப்பியம் பாயிர விருத்தி, முதற் சூத்திர விருத்தி.

சீனிவாசன் ... மொழியியல்.

சேனாவரையர் ... தொல்காப்பியம் சொல்லதிகார உரை.

சுப்பிரமணிய தீட்சிதர் ... பிரயோக விவேகம்.

சுவாமிநாத தேசிகர் ... இலக்கணக் கொத்து.

சோம. இளவரசு ... இலக்கண வரலாறு.

தெய்வச் சிலையார் ... தொல்காப்பியம் சொல்லதிகார உரை.

தொல்காப்பியர் ... தொல்காப்பியம்.

நச்சினார்க்கினியர் ... தொல்காப்பியம் எழுத்ததிகார உரை, சொல்லதிகார உரை.

பவணந்தியார் ... நன்னூல்.

புத்தமித்திரனார் ... வீரசோழியம்.

பெருந்தேவனார் ... வீரசோழிய உரை.

மயிலைநாதர் ... நன்னூல் உரை.

வரதராசன் ... மொழிநூல்.

வீரமாமுனிவர் ... தொன்னூல் விளக்கம்.

வைத்தியநாத தேசிகர் ... இலக்கண விளக்கம்.

வையாபுரிப்பிள்ளை ... இலக்கணச் சிந்தனைகள் ; தமிழ்ச்சுடர்மணிகள் ; தமிழின் மறுமலர்ச்சி; திராவிட மொழிகளில் ஆராய்ச்சி.

ஆங்கிலம் :

Arden, A. H. ... A Progressive Grammar of Common Tamil.

Beschi, C. J. ... A Grammar of the Common Dialect of the Tamil Language.

Burrow and Bhattacharya ... The Parji Language.

Caldwell ... A Comparative Grammar of the Dravidian Languages.

Dani, A. H. ... Indian Palaeography.

Gai, G. S. ... Historical Grammar of Kannada.

Gopinatha Rao ... Travancore Archæological Series, Vol. I.

Hiremath, R. C. ... The Structure of Kannada.

Ilakkuvanar ... The Making of Tamil Grammar.

Kanapathippillai ... A Study of the Language of the Tamil Inscriptions of the 7th and 8th Centuries A. D.; Journal of the Annamalai University—Silver Jubilee—1955—A Note on Certain Tamil Words.

Kittel, F. ... A Grammar of the Kannada Language.

Meenaksisuntharanar, T.P. ... Turner Jubilee Volume—The so-called inflexions in Tamil

Pope, Rev. G. U. ... A Handbook of the Ordinary Dialect of the Tamil Language.

Sivaramamoorthy ... Indian Epigraphy and South Indian Scripts.

Subrahmanya Sastri, Dr. P. S. ... History of Grammatical Theories in Tamil.

Veluppillai ... A Study of the Language of Tamil Inscriptions of the period 800 to 920 A. D.; A Study of the Language of Tamil Inscriptions of the reigns of Catavarman Cuntara Pantiya and Maravarman Kulacekara.

Archiv Orientalini, Prague
Tamll Culture, Madras.
